24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள் - 40
விலை - 40 ரூபா


சுடர் 34 கதிர் 227 ஆனி 29 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை 14 ஜூலை 2019 வள்ளுவர் ஆண்டு 2050

## மீண்டும் காட்டாட்சியை தமிழர் விரும்பவில்லை

### அதனால் கூட்டமைப்பு எங்களை ஆதரித்தது என்கிறார் ரணில்

கொழும்பு, ஜூலை 14

இந்த நாட்டில் மீண்டுமொரு காட்டாட்சியை தமிழ் மக்கள் விரும்பவில்லை. அதனால்தான் அவர்களின் பிரதிநிதிகளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எம் மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு எதிராக வாக்களித்தார்கள். இவ்வாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். 37





## கடும் பாதுகாப்புடன் நாவற்குழி விகாரை திறந்து வைக்கப்பட்டது

யாழ்ப்பாணம், ஜூலை 14

இராணுவத்தினரின் மிகக் கடுமையான பாதுகாப்புக்கு மத்தியில், நாவற்குழியில் அமைக்கப்பட்ட 37

## வலி.வடக்கில் விடுவிக்கப்படாத காணியில் கட்டப்படுவது விகாரையா?

### மக்கள் சந்தேகம்

யாழ்ப்பாணம், ஜூலை 14

வலி.வடக்கில் இராணுவக் கட்டுப்பாட்டிலிருக்கும் தையிட்டிப் பகுதியில் ராணுவத்தினரால் கட்டடம் 37

## கூட்டமைப்பு உறுப்பினர்கள் ரணிலின் செல்லப்பிள்ளைகள்

### அவர்களைப் பிரிக்கவே முடியாது என்கிறார் மகிந்த

கொழும்பு, ஜூலை 14

சம்பந்தன் சுமந்திரன் மாவை சேனாதிராசா தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவின் செல்லப்பிள்ளைகளாக மாறியுள்ளனர். அவர்களை ரணிலிடம் இருந்து ஒருபோதும் பிரித்தெடுக்கவே முடி 37

## மக்களைக் கொறொழித்தவர்கள் ஆட்சிக்கு மீள வர இடமளிப்பதா?

### இதனைக் கருத்தில்கொண்டுதான் தீர்மானத்தை தோற்கடித்தோம் என்கிறார் சம்பந்தன்

யாழ்ப்பாணம், ஜூலை 14

தமிழ் மக்களை அடிமைப்படுத்தி - துன்புறுத்திக் கொடூரமானமுறையில்கொன்றொழித்தவர்கள் மீண்டும் ஆட்சிக்கு வரநாம்இடமளிப்பதா? மீண்டுமொரு சர்வாதிகார நாசகார - ஆட்சிக்கு நாம் ஒத்துழைப்பதா? இதனைக் கருத்தில்கொண்டுதான் தற்போதைய அரசுக்கு எதிரான நம் 37

## தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்களுக்கு ரூ. 50 மில்லியன் அபிவிருத்தி நிதி

### ரணில் அரசின் கைமாறு என்று சு.க. குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 14

தனியான கல்முனை பிரதேசசெயலகத்தைஅமைத்து தருவதாக அரசு கொடுத்த வாக்குறுதிக்கு அமையவே, அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவளிக்கவில்லை என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலர் தயாசிறி ஜயசேகர குற்றம்சாட்டியுள்ளார்.

'தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும், அபிவிருத்தி தேவைகளுக்கான நிதியாக 50 மில்லியன் ரூபாவை ஒதுக்குவதாகவும், அரசு வாக்குறுதி கொடுத்துள்ளது. தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் உதவியின்றி தற்போதைய அரசு செயற்பட முடியாது என்பது வெளிப்படையாகியுள்ளது. எனவே, இதனை ஐ.தே.க. - கூட்டமைப்பு அரசு 37

## சிவசக்தி ஆனந்தன் எம்.பிக்கும் அரசின் ரூ.50 மில்லியன் ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், ஜூலை 14

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு, நெடுஞ்சாலைகள் அமைச்சு ஊடாக ஒதுக்கப்பட்ட 50 மில்லியன் ரூபா, வன்னி மாவட்ட நாடா 37

## கிளிநொச்சி விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

கிளிநொச்சி, ஜூலை 14

கிளிநொச்சி பூநகரிப் பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற வாகன விபத்தில், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஜெ.சசிக்குமார் (வயது-33) என்பவர் உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.



பூநகரி பரந்தன் வீதியில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. டிப்பரும், சிறிய ரக வாகனமும் 37

## காங்கேசன்துறையில் கடற்படைச் சிப்பாய் மின்சாரம் தாக்கிச் சாவு


யாழ்ப்பாணம், ஜூலை 14

காங்கேசன்துறைக் கடற்பரப்பில் பணி முடிந்து நேற்று முன்தினம் கரைக்குத் திரும்பிய கடற்படைச் சிப்பாய், மின்சாரம் தாக்கி உயிரிழந்தார்.

ஹொரணையைச் சேர்ந்த சாமல்லசங்க வெந்தசிங்க (வயது 28) என்னும் சிப்பாயே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

காங்கேசன்துறைப் பகுதியில் கடற்படைக் கப்பலில் பணி முடித்து கடற்படையினர் கரைக்குத் திரும்பியுள்ளனர். கப்பலிருந்து படையினர் தரையிறங்கியுள்ளனர். உயிரிழந்த 37

யாழில் பிரமாண்டமான வளாகத்தில்
One year Top Up Degree
LINCOLN
UGC Recognized International Degree
www.blccampus.edu.lk
- Bachelor of Information Technology
- Bachelor of Business Administration
- BSc in Psychology
- Bachelor of Business in Banking & Finance
- B.Ed (Teaching of English as Second Language-TESL)
✔ தனித்துவமான உயர்கல்விச் சேவை.
✔ தேர்ச்சியும் அனுபவமும் மிக்க சிரேஷ்ட விரிவுரையாளர் குழாம்
For more information: 0777 174 443
BLC CAMPUS
Entry requirement
HND / any Equal Qualification in the similar study
4th Lane, Brown Road, Jaffna.
T - 021 493 5555, 021 437 4443 E - info@blccampus.edu.lk



# கூட்டுறவுத்துறை காலப்போக்கில் நிச்சயம் எழுச்சியைப் பெறும்

## ஆணையாளர் பிரணவநாதன் நம்பிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 14

அழிவடைந்துள்ள கூட்டுறவுத்துறையைப் பலப்படுத்துவதற்கான முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. கூட்டுறவுத்துறை காலப் போக்கில் வெற்றிபெறும் என்பது எனது நம்பிக்கை. இவ்வாறு யாழ்ப்பாண மாவட்ட கூட்டுறவுத்துறை ஆணையாளர் பிரணவநாதன் தெரிவித்தார்.

வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தன்னிறைவுப் பொருளாதாரத்தில் போட்டி காரணமாக, தனியார்களின் போட்டி காரணமாக கூட்டுறவு பாதிக்கப்பட்டுள்ளமை உண்மை. கூட்டுறவு கிளைகளைப் பலப்படுத்துவதன் ஊடாக வியாபாரத்தை ஊக்குவிப்பதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

போசணை வியாபாரத்துக்கு முன்னுரிமை அளித்து வருகின்றமையால், கூட்டுறவுத் துறை பாதிக்கப்பட்டுள்ளது. கூட்டுறவு துறை புத்தாக்கம் பெற வேண்டுமென்பதற்காக பல உத்திகளை கையாண்டு வருகின்றோம். கூட்டுறவுத் துறை காலப் போக்கில் வெற்றிபெறும் என்பது எமது நம்பிக்கை.

கூட்டுறவு மற்றும் மத்திய வங்கியின் ஆசீர்வாதத்துடன், பாதிக்கப்பட்ட மக்களுக்கு பல உதவிகள் செய்யப்பட்டு வருகின்றன. கடந்த ஆண்டு 500 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது. இந்த ஆண்டு 250 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது - என்றார். இந்தச் சந்திப்பில், யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர் மற்றும் செயலர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

(ஒ.5,106)

# சம்பந்தனின் கருத்து வேடிக்கையானதாம்

## நாமல் கூறுகின்றார்

கொழும்பு, ஜூலை 14

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனின் கருத்து வேடிக்கையானது என்று பொது எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

ரணில் அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் தொடர்பான வாக்கெடுப்பு கடந்த வியாழக்கிழமை நாடாளுமன்றத்தில் இடம்பெற்றிருந்தது. இதன்போது மேற்படி தீர்மானம் தோற்கடிக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பில் தனது உத்தியோகபூர்வ கீச்சகத் தளத்தில் இட்டுள்ள பதிவிலேயே நாமல் ராஜபக்ச மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்தப் பதிவில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

'தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்த மக்கள், புதிய வலுவான அரசைத் தேர்ந்தெடுப்பதற்காக அடுத்த தேர்தல் வாய்ப்புக்காகக் காத்திருக்கையில், இந்த ஊழல் அரசை சுயநல சலுகைகளுக்காகப் பாதுகாக்க வாக்களித்துவிட்டு எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச வலுவான ஓர் அரசை அமைப்பதைத் தடுப்பதற்காகவே தாம் வாக்களித்ததாக சம்பந்தன் ஐயா நாடாளுமன்றத்தில் பிரகடனப்படுத்தியது வேடிக்கையானது' என்று தமிழில் பதிவிட்டுள்ளார்.

(ஒ.5,22)

# ரிசாத்துக்கு மீள அமைச்சுப் பதவியா? நம்பிக்கையில்லாத் தீர்மானம் வரும்

## எச்சரிக்கின்றார் ரத்ன தேரர்

கொழும்பு, ஜூலை 14

அமைச்சுப் பதவியை ரிசாத் பதியுதீன் மீண்டும் பொறுப்பேற்கும் பட்சத்தில் அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்படும். இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கூட்டாகப் பதவி துறந்த முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நாடு திரும்பியதும் அமைச்சுப் பதவிகளை மீண்டும் பொறுப்பேற்கவுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏப்ரல் 21 தாக்குதலையடுத்து கடும் அரசியல் நெருக்கடியை எதிர்கொண்ட ரிசாத் பதியுதீனும் மீண்டும் அமைச்சராகப் பதவியேற்பார் என்று முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தகவல் வெளியிட்டார்.

இந்தநிலையிலேயே அத்துரலிய ரத்ன தேரர் மேற்கண்டவாறு எச்சரிக்கை விடுத்துள்ளார்.



அமைச்சுப் பதவியை ரிசாத் பதியுதீன் மற்றும் ஆளுநர் பதவிகளை வகித்த எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா, அஸாத் ஸாலி ஆகிய மூவரும் பதவி விலகவேண்டும் என்று வலியுறுத்தி அத்துரலிய ரத்ன தேரர் கண்டியில் தலதா மாளிகைக்கு முன்னால் உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தார்.

இதையடுத்து ஒட்டுமொத்த முஸ்லிம் அமைச்சர்களும் தமது பதவிகளைக் கூட்டாகத் துறந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஒ.5,22)

# மைத்திரிடம் தங்கத்துப்பாக்கி

கொழும்பு, ஜூலை 14

அரச தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் தங்க கைத்துப்பாக்கி இருப்பதாக செயலகத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

முழுமையாக தங்கத்தால் செய்யப்பட்ட இந்த கைத்துப்பாக்கி, இயங்கக் கூடிய நிலையில் உள்ளதாக அவர் கூறினார்.

தங்க துப்பாக்கி அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு பாகிஸ்தானின் முன்னாள் அரச தலைவரால் பரிசாக வழங்கப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக உலகின் பல நாடுகளை சேர்ந்த அரச தலைவர்கள் பெறுமதியான பல பரிசுகளை வழங்கியுள்ளனர். இந்தப் பரிசுப்பொருள்களை பொலன்னறுவையில் புதிதாக திறக்கப்பட்ட அருங்காட்சியகத்துக்கு வழங்க அரச தலைவர் தீர்மானித்துள்ளதாக செயலக உயர் அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார். (ஒ.5)

# காணாமல் ஆக்கப்பட்ட மகனை தேடியலைந்த தாய் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், ஜூலை 14

காணாமல் ஆக்கப்பட்ட தனது மகனை தேடியலைந்த தாயார் ஒருவர், மகனை காணாமலேயே உயிரிழந்துள்ளார். 1999ஆம் ஆண்டு எருக்கலம்பிட்டி பகுதியில் வைத்து காணாமல் ஆக்கப்பட்ட வேலுப்பிள்ளை தியாகராஜா (ரஞ்சன்) என்ற இளைஞரின் தாயாரான வேலுப்பிள்ளை வியாழம்மா முதுமை காரணமாக உயிரிழந்தார்.

காணாமல் ஆக்கப்பட்ட தனது மகனை தேடி கடந்த 29 வருடங்களாக பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டிருந்தார். மனித உரிமை ஆணைக்குழுக்கள், ஆணைக்குழுக்களில் தனது மகனை தேடி வாக்குமூலங்கள் வழங்கியிருந்தார். எனினும், தனது மகனை காணாமலேயே அவர் உயிரிழந்துள்ளார்.

(ஒ.5)

# பிரபாகரனின் செயற்பாடுகளின் மூலம் மகிந்த அணி பாடம் கற்க வேண்டும்

## அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல

கொழும்பு, ஜூலை 14

மகிந்த அணியினர் நாடாளுமன்றத்தில் நடந்து கொண்டதைப் போன்று பிரபாகரன் செயற்படவில்லை. பிரபாகரனை பிரதிநிதித்துவப்படுத்திய பிரதிநிதிகள் நாடாளுமன்றத்தில் இருந்தபோதும் அவர்களும் அவ்வாறு நடந்து கொள்ளவில்லை. அவர்கள் போன்று மகிந்த அணியினரும் நடந்து கொள்ளவேண்டும். இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரும் சபை முதல்வருமான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

முன்பு விஜேராஜசிங்க மன்னன் பௌத்தத்தை தழுவிய இலங்கையின் முதலாவது தமிழ் அரசனாக கருதப்பட்டான். அதே போல் மடு தேவாலயத்தை அமைக்க இடம்பெற்றுக் கொடுத்தவர் கண்டி அரசர் ஒருவர். இவற்றை மறந்து இன்று இனவாதத்தை தூண்ட எதிர்கட்சியினர் முயற்சிக்கின்றனர். இவர்களுக்கு மீண்டும் ஆட்சி அதிகாரம் கிடைத்தால் அன்று நாடாளுமன்றத்தில் நடத்துக் கொண்டதை போன்று சண்டையிட்டு, சொத்துகளுக்கு சேதம் விளைவித்து தம்மபத, பைபிள் ஆகிய புனித நூல்களை வீசி எறிந்து கலகம் செய்வார்கள். அதேபோன்று தான் அவர்களின் ஆட்சியும் அமையும் -என்றார்.

(ஒ.5)

# ரணிலும் கூட்டமைப்பினரும் நாட்டை அழிக்கின்றார்களாம்

## விமல் கண்டுபிடிப்பு

கொழும்பு, ஜூலை 14

தலைமை அமைச்சர் ரணில் விக்கிர மசிங்கவும் இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் சேர்ந்து இந்த நாட்டை அழிக்கின்றார்கள். இவர்களுக்கு எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் சிங்கள மக்களும் தமிழ் மக்களும் தக்க பாடம் புகட்ட வேண்டும். இவ்வாறு மகிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் மூலம் ரணில் அரசைக் கவிழ்க்க நல்லதொரு சந்தர்ப்பம் கிடைத்தது. ஆனால், அதைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இல்லாமலாக்கிவிட்டார்கள். கூட்டமைப்பின் 14 நாடாளுமன்ற உறுப்பினர்களும் தீர்மானத்தை எதிர்த்து வாக்களித்தபடியால் ரணில் அரசு மீண்டும் காப்பாற்றப்பட்டு ள்ளது.

உயிர்த்த ஞாயிறு தினமன்று இடம்பெற்ற குண்டுத் தாக்குதல்களுக்கு இந்த அரசு பொறுப்பேற்று ஆட்சியை எம்மிடம் ஒப்படைத்திருக்க வேண்டும். இந்த அரசு தொடர்ந்து ஆட்சியில் இருப்பது அவர்களுக்குத் தான் வெட்கக்கேடு.



தலைமை அமைச்சர் ரணில் விக்கிரம சிங்கவும் இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் சேர்ந்து இந்த நாட்டை அழிக்கின்றார்கள். இவர்களுக்கு எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் சிங்கள மக்களும் தமிழ் மக்களும் தக்க பாடம் புகட்ட வேண்டும்.

எதிர்வரும் தேர்தலில் மகிந்த ராஜபக்ச தலைமையிலான அணியே ஆட்சியமைக்கும். அழிவடைந்து கொண்டிருக்கும் இந்த நாட்டுக்கு நல்ல காலம் விரைவில் பிறக்கும் என்றார்.

(ஒ.5,22)

# ரணிலை தெரிவுக்குழுவுக்கு நாங்கள் அழைக்கவில்லை

## கூறுகிறார் பிரதி சபாநாயகர்

கொழும்பு, ஜூலை 14

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள் தொடர்பில் சாட்சியமளிப்பதற்கு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு உத்தியோகபூர்வ அழைப்போ அல்லது திகதியோ வழங்கப்படவில்லை. இவ்வாறு நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் தலைவரும் பிரதி சபாநாயகருமான ஆனந்த குமாரசிரி தெரிவித்துள்ளார்.

அத்தோடு, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும் சாட்சியம் வழங்குவதற்கு இது வரையில் அழைப்பு விடுக்க வில்லையென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, தெரிவுக்குழுவில் முன்னிலையாகி தனக்குத் தெரிந்த விடயங்களைக் கூறப்போவதாக அறிக்கை வெளியிட்டிருந்தார். இவ்வாறானதொரு பின்னணியில், தெரிவுக்குழுத் தலைவரும் பிரதி சபாநாயகருமான ஆனந்த குமாரசிரி மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

(ஒ.5)



## திட்டமிடல் குழுக்கூட்டம்

முல்லைத்தீவு, ஜூலை 14
ஒட்டுசுட்டான் பிரதேச செயலகப் பிரிவு பிரதேச மட்ட காணிப் பயன்பாட்டு திட்டமிடல் குழுக்கூட்டம் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. பிரதேச செயலர் த. அகிலன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் கிராம மட்டம் அமைப்பு பிரதிநிதிகள், புதுக்குடியிருப்பு பிரதேச சபைத் தவிசாளர் கிராமசேவைஅலுவலர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (ஐ-500)



## ஈருருளி கையளிப்பு

வவுனியா, ஜூலை 14
கற்றல் மற்றும் விளையாட்டு நிகழ்வில் திறமையாகச் செயற்பட்ட பூந்தோட்டம் மகாவித்தியாலய மாணவி செல்வி தமிழ்செல்வன் காயத்திரிக்கு ஈருருளி வழங்கிவைக்கப்பட்டது.
மறைந்த குழந்தைவேல் இராஜகோபாலின் 7ஆம் ஆண்டு நினைவை முன்னிட்டு இந்த உதவி வழங்கப்பட்டதுஎன்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-222)



செலிங்கோ லைப் நெல்லியடிக் கிளை 1 இனால் வாடிக்கையாளர் ஒருவரின் இறப்புக்கான இழப்பீட்டுத்தொகை அண்மையில் வழங்கி வைக்கப்பட்டுள்ளது. கரவெட்டி மத்தியைச் சேர்ந்த திருமதி யோகராணியின் இழப்புக்கே அவரது குடும்பத்துக்கு இழப்பீட்டுத் தொகை வழங்கிவைக்கப்பட்டது. (ஐ-422)

# வாட்டுகின்றது வறட்சி சுதாகரிப்பது அவசியம்

யாழ்ப்பாணம், ஜூலை 14
இலங்கையில் இப்போது பல மாவட்டங்கள் வறட்சியில் சிக்கித் தவிக்கின்றன. மக்கள் குடி தண்ணீருக்காகப் பல மைல்கள் அலைந்து திரியும் நிலைமையே உள்ளது. 17 மாவட்டங்கள் வறட்சியால் பெரியளவில் பாதிக்கப்பட்டுள்ளன. மொத்தமாக 5 லட்சத்து 65 ஆயிரத்து 173 பேர் வறட்சியால் பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ள நிலையில் வடக்கு மாகாணத்தில் மட்டும் ஒரு லட்சத்து 93 ஆயிரத்து 573 பேர் வறட்சியால் பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ளனர்.



**தொடரும் பிரச்சினை**

தற்போது ஒவ்வொரு ஆண்டும் வறட்சியால் பாதிப்புக்கள் ஏற்படுவது வழமையானதாக மாறியுள்ளது. இலங்கையில் மிகவும் பாரதூரமான வறட்சி ஒவ்வொரு 3 முதல் 4 வருடங்களில் ஏற்படுகின்றன. தேசிய ரீதியான பாதிப்பை ஏற்படுத்தும் மிகவும் கடுமையான வறட்சி சுமார் 10 வருடங்களுக்கொரு முறை நிகழ்கின்றது என்று அறிக்கைகள் குறிப்பிடுகின்றன. வடக்கைப் பொறுத்தவரையில் அனைத்து மாவட்டங்களும் வறட்சியால் அதிபாதிப்புக்களை எதிர்கொண்டுள்ளன. கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, யாழ்ப்பாணம், மன்னார் என அனைத்து மாவட்டங்களிலும் மக்களின் தேவைக்கேற்ப தண்ணீர் இல்லாது மக்கள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவிக்கின்றனர். அரச நிர்வாகத்தினரால் குடி தண்ணீர் அவர்களுக்கு வழங்கப்படுகின்றபோதும், அது அவர்களுக்குப் போதுமானவையாக இல்லை.

**ஏன் வறட்சி?**

1870ஆம் ஆண்டுகளில் இருந்த பூமியின் வெப்பநிலையைவிட ஒரு சதவிகிதம் அதிகமாகிவிட்ட வெப்பநிலையில் நாம் தற்போது வாழ்ந்து கொண்டிருக்கிறோம். உலக வெப்பமயமாதலும் அதனால் ஏற்படும் காலநிலை மாற்றமும் அதிகமான வறட்சி மற்றும் பஞ்சத்துக்கு வழிவகுக்கின்றன. இதன்விளைவுகள் எதிர்காலத்தில் இன்னும் மோசமாகும். வரலாற்றில் வறட்சி உருவாக்கிய அழிவுகள் பல. முறையான மழைநீர் சேகரிப்புத் திட்டங்கள் இன்மை, காடழிப்பு, நகர மயமாதல், அதிகளவு நிலத்தடி நீர் உறிஞ்சல் போன்றவையும் தற்போதைய தண்ணீர் தட்டுப்பாட்டுக்குக் காரணம் என்பதை மறுக்க முடியாது. வடக்கைப் பொறுத்தவரையில் முன்னர் இருந்த நீர்நிலைகளின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்துள்ளது. சிறிய சிறிய குளங்கள் திருத்தப்படாது, தூர்வாரப்படாது கைவிடப்பட்டுள்ளன. மழை காலங்களில் நீரைச் சேமித்து வைக்கக்கூடிய ஏற்பாடுகள் எவையும் இல்லாது, அவை கடலுடன் கலக்கின்றன அல்லது ஆவியாகின்றன. அதைவிடவும் வடக்கின் காடுகளும் பெருமளவில் அழிக்கப்பட்டுள்ளன. போரின் பின்னர் காடழிப்பு வேகம் அதிகரித்துள்ளதையும் அவதானிக்க முடிகின்றது. வறட்சியைச் சமாளிப்பதற்குத் தகுந்த பன்முனைச் செயற்பாடுகளை உள்ளடக்கிய நடைமுறைச் சாத்தியமான திட்டங்கள் அவசியமாகின்றன.

- இலங்கையில் வடக்கு மாகாணமே வறட்சியால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளது.
- குடிதண்ணீரும் விலை கொடுத்து வாங்கக்கூடிய ஒரு பொருளாகவே கையாளப்படுகிறது
- சுகாதாரமற்ற குடிநீரைப் பயன்படுத்த வேண்டிய இக்கட்டுக்கு மக்கள் தள்ளப்படுகின்றனர்.
- போதுமான பொருளாதார வசதியின்றி சுத்தமான குடி தண்ணீரைப் பெறமுடியாது

**பாதிப்புகள் அதிகம்**

வறட்சியானது பொருளாதாரம், சமூகம் சூழல் என்பவற்றில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. பொருளாதாரம் என நோக்கும்போது, விவசாயப் பயிர்கள் அழிதல், அறுவடை குறைவடைதல், பயிர்ச்செய்கைக்கான நீரின் அளவு குறைதல், கைத்தொழில், சுற்றுலா நீர்மின் உற்பத்தி குறைதல், நிதிப் பாதிப்புகளைக் குறிப்பிடலாம். மனஅழுத்தம், சத்தான உணவு குறைதல், மக்கள் உணவிலிருந்து பாதுகாப்பு குறைதல், கலாசார விழுமியங்களில் தாக்கம் என்பவற்றை சமூகத் தாக்கங்களாகவும், சூழலில் ஏற்படக்கூடிய பாதிப்புகளாக விலங்குகள், தாவரங்கள், மரம், செடி, கொடி இறத்தல், ஆறு, குளங்கள் வரண்டு போதல் மற்றும் மாசடைதல், குடிநீரின் அளவு குறைவடைவதோடு, நிலக்கீழ் நீர் மாசடைதல் அதன் தரம் குறைதல் என்பவற்றையும் குறிப்பிடலாம்.

**சுதாகரிப்பது அவசியம்**

இலங்கையில் வடக்கு மாகாணமே வறட்சியால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளது. வறட்சி இன்னும் தீவிரமடைந்தால் நிலமை மேலும் மோசமாகும். இது உள்நாட்டு இடப்பெயர்வுகளை அதிகப்படுத்தும். அண்மைய காலங்களில் குடி தண்ணீரும் விலை கொடுத்து வாங்கக்கூடிய ஒரு பொருளாகவே கையாளப்படுகிறது.
இந்தநிலையில் போதுமான பொருளாதார வசதியின்றி சுத்தமான குடிதண்ணீரைப் பெற முடியாது.
அதனால் சுகாதாரமற்ற குடி தண்ணீரைப் பயன்படுத்த வேண்டிய இக்கட்டுக்கு மக்கள் தள்ளப்படுவார்கள். அது பல நோய்களுக்கும் வழி வகுக்கும். சமூகமும் ஆரோக்கியக் குறைபாடுகளோடு வளரத் தொடங்கும்.
வறட்சியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிகளை வழங்குவதன் ஊடாக இந்தப் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ள முடியாது.
எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் ஊடாகவே இந்தப் பிரச்சினையை எதிர்கொண்டு வெற்றிபெற முடியும்.
மழைநீர் சேகரிப்புத் தொடர்பாக்க காத்திரமான திட்டங்களை முன்னெடுப்பது அவசியமாகின்றது.
கைவிடப்பட்ட குளங்களை சீராக்கி மழை நீரைச் சேகரிப்பதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுப்பதும் தண்ணீர்ப் பிரச்சினையை எதிர்கொள்வதற்கான சிறந்த திட்டமாக அமையும். வன அடர்த்தியை அதிகரிக்கும் செயற்பாடுகளை முன்னெடுப்பதும் ஆரோக்கியமானதாக இருக்கும். (ஏ)

### வடக்கு மாகாணத்தில்

# சுகாதாரக் கட்டமைப்புக்களை மேம்படுத்த ரூ. 9 பில். செலவில் சிறப்புத் திட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 14
இலங்கை அரசால் வடக்கு மாகாண சுகாதார சேவைக் கட்டமைப்புகளை அபிவிருத்திசெய்யும் நோக்குடன் முன்னெடுக்கப்படும் சிறப்புத் திட்டத்துக்கென 9 பில்லியன்கடன் வழங்கும் உடன்படிக்கையானது கடந்த புதன்கிழமை கொழும்பில் கைச்சாத்திடப்பட்டுள்ளது. இலங்கை அரசுக்கும் நெதர்லாந்தின் ஐ.என்.ஜி வங்கிக்கும் இடையில் மேற்கொள்ளப்பட்ட இந்த கடன்உடன்படிக்கையில் இலங்கை அரசின் சார்பில் நிதி அமைச்சின் செயலர் ஆர்.எச்.எஸ் சமரதுங்க கைச்சாத்திட்டுள்ளார்.
கிளிநொச்சி பொது மருத்துவமனையில் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவுடன் கூடிய, சிறப்பு மகப்பேற்றியல் மையம், வவுனியா பொது மருத்துவமனையில் சிறப்பு இதயவியல் மற்றும் நரம்பியல் மையம், மாங்குளம் ஆதார மருத்துவமனையில் உளநலப் பிரிவுடன் கூடிய சிறப்புத் தேவையுடையோருக்கான மறுவாழ்வு மையம் மற்றும் புருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்கான விபத்து மற்றும் அவசர சேவைப் பிரிவு உட்பட வெவ்வேறு சிறப்பு மருத்துவமனையங்களும் இந்த திட்டத்தின்கீழ் அமைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ஐ-106)





## போதையில் சாரத்தியம் கைதுகள் குவிகின்றன

கொழும்பு, ஜூலை 14
பொலிஸார் ஆரம்பித்துள்ள மதுபோதையில் வாகனம் செலுத்துபவர்களைக் கைது செய்யும் நடவடிக்கையில் நாள்தோறும் நூற்றுக் கணக்கானவர்கள் கைது செய்யப்பட்டு வருகின்றனர்.

நேற்றுமுன்தினம் காலை 6 மணி முதல் நேற்றுக் காலை 6 மணி வரையிலான 24 மணி நேர காலப் பகுதிக்குள் 260 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

இந்த நடவடிக்கை ஆரம்பமான கடந்த 5ஆம் திகதி முதல் இன்று வரை 2 ஆயிரத்து 540 வாகன சாரதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## போதைப் பொருள்களுடன் ஒன்பது பேர் கைதாகினர்

*அவர்களில் மூவர் பெண்கள்*

கொழும்பு, ஜூலை 14
பொரலஸ்கமுவ - அபேரத்ன மாவத்தையில் உள்ள வீடொன்றில் இடம்பெற்ற விருந்துபசார நிகழ்வொன்றின்போது போதைப் பொருளுடன் 9 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சந்தேக நபர்கள் 9 பேரும்,நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடமிருந்து ஐஸ் போதைப்பொருளும், அதனை அருந்துவதற்காக பயன்படுத்தப்படும் நவீன உபகரணங்கள் சிலவும் மீட்கப்பட்டதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இதன்போது ஆறு ஆண்களும் மூன்று பெண்களும் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர்கள் 20 முதல் 30 வயதிற்கு இடைப்பட்டவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம)

# அச்சுறுத்தும் போதைப்பொருள் அழிக்கப்படுதல் மிக அவசியம்

யாழ்ப்பாணம், ஜூலை 14

**போ**தைப் பொருள் பாவனை இலங்கையைப் பொறுத்தவரையில் இப்போது பெரியதொரு பிரச்சினையாக மாற்றம் பெற்றுள்ளது. இந்தப் பிரச்சினை வடக்கிலும் பூதாகாரமெடுத்துள்ளது. வடக்கில் தினம்தோறும் ஏதாவதொரு போதைப் பொருள் கைப்பற்றப்பட்டமை தொடர்பான தகவல்கள் வெளியாகும் நிலமையே இப்போது உள்ளது.



### குற்றத்துக்கு காரணம்

போதைப் பொருள் பாவனைக்குள் இளையோர்கள் சிக்கிக் கொள்வது ஆரோக்கியமான விடயமல்ல. இது நாட்டுக்கும், சமூகத்துக்கும் பேரும் கேடாகவே அமையும். நாட்டில் நடக்கும் குற்றச் செயல்களில் 90 வீதத்துக்கும் அதிகமானவை போதைப் பாவனையாலேயே நடக்கின்றன என்று புள்ளி விவரங்களும் சுட்டிக்காட்டுகின்றன. வடக்கைப் பொறுத்தவரையில் இளையோர்களிடம் போதைப்பொருள் பாவனை அதிகரித்துள்ளமை உணரப்படுகின்றது. பாடசாலை மாணவர்கள் முதல் கட்டிளமைப் பருவத்தினர் வரை போதைப் பொருள் பாவனைக்குள் சிக்கி யுள்ளனர். மது, புகைத்தல், கஞ்சா, ஹெறோய்ன், ஐஸ் எனப் வடக்கில் பல வகைப் போதைப் பொருள்கள் புழக்கத்தில் உள்ளமை அதிர்ச்சியளிக்கும் விடயமே.

### கடும் நடவடிக்கை

போதைப் பொருள் பாவனையைக் கட்டுப்படுத்தும் நோக்கில் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. பொலிஸார் ஒருபுறம் போதைப் பொருள் கடத்தல்களைத் தடுக்க பல முயற்சிகளை எடுத்துவருகின்றனர். அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன போதைப் பொருள் வர்த்தகத்துக்கு எதிராகக் கடும் நிலைப்பாட்டில் உள்ளார். போதைப் பொருள் கடத்தலுக்காகத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுச் சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டுள்ளவர்களுக்குத் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்படும் என்று அவர் அறிவித்துள்ளார்.

### வடக்கில் அதிகம்

வடக்கைப் பொறுத்தவரையில் தினமும் பெரும்தொகைப் போதைப் பொருள்கள் பொலிஸாராலும், கடற்படையினராலும் கைப்பற்றப்படுகின்றன. அந்தக் கடத்தல்கள் தொடர்பாகச் சிலர் கைது செய்யப்பட்டு சட்ட நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படுகின்றார்கள். ஆனால் போதைப்பொருள் கடத்தல்கள் குறைவன போன்று தென்படவில்லை. போதைப் பொருள் கடத்தல்கள் தொடர்பில் சிலர் கைது செய்யப்படுகின்றபோதும், அவற்றின் சூத்திரதாரிகள் கைது செய்யப்படுவதாகத் தெரியவில்லை.

போதைப்பொருள் கடத்தல்களின் மூன்றாம், நான்காம் நிலை நபர்களே கைது செய்யப்படும் நிலையில், போதைப்பொருள்கள் வேறு நபர்களைக் கொண்டு கடத்தப்படுகின்றன என்பதே நிதர்சனம். வடக்கில் போதைப் பொருள் கடத்தல்கள் அதிகரித்துள்ள நிலையில், அவற்றின் சூத்திரதாரி களை கண்டறிந்து கைது செய்வதே அவற்றைத் தடுப்பதற்கான ஒரு வழியாக இருக்க முடியும். அதைவிடுத்து கடத்தல் சம்பவங்களின்போது அகப்படுவர்களைக் கைது செய்வதன் மூலம் போதைப் பொருள் கடத்தல்களை தடுக்க முடியாது. கடத்தல்கள் தொடர்பில் பலரும் கைது செய்யப்படும் நிலையில் கடத்தல்களின் சூத்திரதாரிகளைப் பாதுகாப்புத் தரப்பினரால் இனங்காண முடியா துள்ளமை ஏன் என்ற கேள்வி எழுவதையும் தவிர்க்க முடியாது.

> **வடக்கில் போதைப் பொருள் கடத்தல்கள் அதிகரித்துள்ள நிலையில், அவற்றின் சூத்திரதாரிகளை கண்டறிந்து கைது செய்வதே அவற்றைத் தடுப்பதற்கான ஒரு வழியாக இருக்க முடியும்.**

### பயன் தருமா?

கடத்தல் சூத்திரதாரிகள் இனங்காணப்பட்டு அவர்கள் கைது செய்யப்படும் வரையில் போதைப் பொருள் கடத்தல்கள் குறையப் போவதில்லை. போதை ஒழிப்பு வாரம் கடைப்பிடிப்பதன் ஊடாகவோ அல்லது போதைப் பொருள் தொடர்பாக மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதன் ஊடாகவோ போதைப் பொருள் பாவனையைக் குறைக்க முடியும் என்பது நடைமுறைச் சாத்தியமற்ற விடயமே. அதேவேளை போதைப்பொருள் கடத்தல் குற்றங்களுக்கா கத் தூக்குத் தண்டனைவிதிக்கப்பட்டுள்ளகுற்றவாளிகளுக்குத் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்படும் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அறிவித்துள்ளார். மிக விரைவில் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்படும் என்றும் அவர் கூறியுள்ளார். அவரது முடிவுக்குப் பல தரப்புகளிடம் இருந்து எதிர்ப்புக்கள் கிளம்பியுள்ளன. தூக்குத்தண்டனையை நிறைவேற்றுவதன் ஊடாகப் போதைப் பொருள் வர்த்தகத்தில் ஈடுபடும் தரப்பை அச்சமூட்ட முடியும் என்று கூறப்படுகின்றபோதும், போதைப் பொருள் வர்த்தகம் அதனால் குறைவடையுமா என்பது சந்தேகத்துக்குரிய விடயமாகவே இருக்கின்றது.

### நடவடிக்கை அவசியம்

சில தினங்களுக்கு முன்னர் நிகழ்வொன்றில் கருத்துத் தெரிவித்திருந்த அமைச்சர் சஜித் பிரேமதாச, நவீன தொழில்நுட்ப உபகரணங்களை' பயன்படுத்தி போதைப்பொருள் கடத்தல் இடம்பெறுகின்றது. இந்தக் கடத்தல்கள் சிறைச்சாலைகளுக்குள் இருந்தே வழிநடத்தப்படுகின்றன என்று கூறியி ருக்கின்றார். அவ்வாறு நடப்பது உண்மையானால் அதிகாரிகள் உட்படப் பல தரப்பினரின் ஆதரவோடுதான் அவை நடைபெறுகின்றன என்பதை மறுக்க முடியாது. சிறைகளில் இப்படியான நிலமை எனில் சிறைக்கு வெளியே கடத்தல்களில் ஈடுவோருக்கு எத்தகைய ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் என்பது தொடர்பாகச் சிந்திக்க வேண்டியதும் அவசியமாகும்.

தூக்குத்தண்டனைக்கு எதிராக பேசுவோரிடம் நான் ஒரு விடயத்தை கேட்கின்றேன். போதைப்பொருள் கடத்தல் காரணமாக நாட்டில் பாதிக்கப்படும் 45 இலட்சம் பாடசாலை மாணவர்களை பாதுகாப்பதற்காக என்ன செய்ய போகின்றீர்கள்? என்றும் அமைச்சர் சஜித் பிரேமதாச கேள்வியெழுப்பியுள்ளார். வெறுமனே அகப்படும் போதைப்பொருள்களைக் கைப்பற்றி, சந்தேகநபர்களைச் சட்ட நடவடிக்கைக்கு உட்ப டுத்துவதன் ஊடாகப் போதைப் பொருள் கடத்தல்களைத் தடுப்பது இயலாத காரியம். அந்தக் கடத்தலுக்கான மூலகர்த்தாக்களை இனங்கண்டு அவர்களைத் தண்டிப்பதன் ஊடாகவே போதைப் பொருள் கடத்தல்களைக் குறைக்க முடியும் என்பதை உணர்ந்து செயற்படுவதே நாட்டினதும், சமூகத்தினதும் எதிர்காலத்துக்கு சிறப்பானதாக அமையும். (எ)

# இலவச சட்ட ஆலோசனை வழங்கும் நிகழ்வு

கிளிநொச்சி,ஜூலை 14
இலவச சட்ட ஆலோசனை மற்றும் சட்ட நுணுக்கங்கள் தொடர்பாக பொது மக்களுக்கு விளக்கங்களை வழங்கும் நிகழ்வு நேற்றுக் காலை இரணைமடு நெலும்பிளச மண்டபத்தில் ஆரம்பமானது.

கிளிநொச்சி இராணுவ தலைமையகத்தின் ஏற்பாட்டில் இலங்கை சட்ட உதவி ஆணைக்குழு மற்றும் பொலிஸார், படையினர் ஆகியோர் இணைந்து குறித்த நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளனர்.

பொதுமக்களிற்கு சட்டரீதியான பாதுகாப்பு மற்றும் குற்ற செயல்களை கட்டுப்படுத்துதல், சட்டரீதியான சிறந்த சேவையை மக்களுக்கு எவ்வாறு வழங்குவது என்பது தொடர்பிலும், புதிதாக நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள சட்டங்கள் தொடர்பான விளக்கங்களும் இதன்போது அவர்களிற்கு வழங்கப்பட்டன. இதேவேளை பொதுமக்கள் தமது பிரச்சினைகளுக்கான இலவச சட்ட ஆலோசனைகளை இன்று முற்பகல் 9 மணி தொடக்கம் 5 மணிவரை பெற்றுக்கொள்ள முடியும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த ஆரம்ப நிகழ்வில் கிளிநொச்சி இராணுவ கட்டளை அதிகாரி, சட்ட உதவி ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் செயலர், பொலிஸ் மற்றும் முப்படை களின் உயரதிகாரிகள் என பலர் கலந்து கொண்டனர். (ஐ-35)



## கணினி அன்பளிப்பு

வவுனியா, ஜூலை 14

வவுனியா பொது நூலகத்துக்குக் கணினி தொகுதி வழங்கப்பட்டுள்ளது. வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினரும், வவுனியா நகரசபை முன்னாள் தலைவருமான ஜி.ரி.லிங்கநாதன் நேற்று முன்தினம் வ்வுனியா பொது நூலகத்துக்குச் சென்றிருந்தார். தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் முகமாக வவுனியா நகரசபைத் தலைவர் கௌதமன் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அசங்க காஞ்சன, வவுனியா நகரசபையின் செயலர் தயாபரன் ஆகியோருக்கிடையில் நூலகத்தில் அடுத்த கட்டச் செயற்பாடுகளை மேற்கொள்ளும் முகமாக கலந்துரையாடல் இடம்பெற்றது. அதன் பின்னர் கணினியின்தேவை குறித்துக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. (த)

## விளையாட்டு போட்டி

யாழ்ப்பாணம், ஜூலை 14

யாழ்ப்பாணம் அண்ணா சனசமூக நிலைய முன்பள்ளி மாணவர்களின் விளையாட்டு போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை நிலைய முன்றலில் பிற்பகல் 2 மண்ிக்கு தலைவர் முருகையா புவீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்து கொள்ளவுள்ளார். (ஜ)

## இரு குளங்கள் தூர்வாரப்பட்டன

கொடிகாமம் ஜூலை 14

காரைநகரில் தூர்வாரப்பட்ட இரு குளங்கள் மக்களிடம் இன்று கையளிக்கப்படவுள்ளன.

காரைநகர் பிரதேச கருங்காலி கிராமத்தில் அமைந்துள்ள வேரக்குளம் மற்றும் சலவை குளம் ஆகியன பிரதேச மக்களின் கோரிக்கைக்கு அமைய தூர்வாரப்பட்டன. தூர்வாரப்பட்ட குளங்கள் மக்கள் பாவனைக்கு கையளிக்கும் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ஜ-159)

## 245 இந்து ஆலயங்களின் சீரமைப்புக்கு நிதியுதவி

யாழ்ப்பாணம், ஜூலை 14

வடக்கு மாகாணத்தில் உள்ள 245 இந்து ஆலயங்களின் சீரமைப்புக்கு நிதியுதவி வழங்கப்படவுள்ளது. இந்து சமய விவகார அமைச்சர் மனோ கணேசனின் வழிகாட்டலில் இந்து ஆலயங்கள், அறநெறிப் பாடசாலைகள் என்பனவற்றை வலுப்படுத்தும் "தெய்வீகச்சேவை" திட்டத்தின் கீழ் இந்த நிதி வழங்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் நீராவியடியில் அமைந்துள்ள இலங்கை வேந்தன் மண்டபத்தில் முற்பகல் 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது. நிகழ்வில் முதன்மை விருந்தினராக அமைச்சர் மனோ கணேசன் கலந்துகொண்டு 245 ஆலயங்களுக்கான நிதியை வழங்கவுள்ளார். (ஜ,9)

### அரச திணைக்களங்களால் தொடரும் நில ஆக்கிரமிப்புக்கள்

# முல்லையில் 150ஏக்கர் வயல்காணியை ஏப்பமிட்ட வனஉயிரிகள் திணைக்களம்

முல்லைத்தீவு, ஜூலை 14

போருக்குப் பின்னரான மகிந்த ராஜபக்சவுடைய ஆட்சிக்காலத்திலும், அதன்பின்னர் நல்லாட்சி அரசு என்று கூறிக்கொண்டு ஆட்சிப்பீடம் ஏறிய மைத்திரி, ரணில் கூட்டு அரசினுடைய காலத்திலும், தற் போதும் அரச திணைக்களங்கள் என்ற போர்வையில் தமிழர்களது பூர்வீக நிலங்கள் அபகரிக்கும் வேலைத்திட்டங்கள் தொடர்ந்துகொண்டே உள்ளன.

அரசதிணைக்கங்களின் ஆக்கிரமிப்பால் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ள முல்லைத்தீவு மாவட்டத்தில் மேலும்மேலும் மக்களுடைய காணிகள் அபகரிக்கப்பட்டுக்கொண்டே செல்கின்றன. முல்லைத்தீவு, கொக்குத்தொடுவாய் கமநலசேவை நிலயப் பிரிவுக்குட்பட்ட, தமிழ் மக்களின் 150 ஏக்கருக்கு மேற்பட்ட பூர்வீக விவசாய நிலங்கள் தற்போது முழுமையாகவே அபரிக்கப்பட்டுள்ளன. சரணாலயத்துக்கான காணி என்று பெயர்ப்பலகையை நட்ட வன உயிரிகள் திணைக்களம் அந்த நிலங்களை தற்போது முழுமையாகவேஅபகரித்துள்ளது. இதனால் இந்தமுறை மானாவரிச் செய்கையை மேற்கொள்ள முடியாது நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் பரிதவித்துள்ளன.

#### நான்காண்டு நடவடிக்கை

முல்லைத்தீவு கோட்டைக்கேணியிலிருந்து வெள்ளைக்கல்லடி வரையான சுமார் 150 ஏக்கருக்கும் மேற்பட்ட மக்களது விவசாய உறுதிக்காணிகளே இவ்வாறு முழுமையாக அபகரிக்கப்பட்டுள்ளது. மைத்திரி - ரணில் கூட்டு அரசு ஆட்சிக்கு வந்து ஒரு வருடத்தில் அதாவது கடந்த 2016ஆம் ஆண்டு அந்தக் காணிகள் சரணாலயத்துக்குரிய காணிகள் என்று வன உயிரிகள் திணைக்களம் அடையாளப்படுத்தியது. தொடர்ந்து அதே ஆண்டு அந்தக் காணிகளில் தமது பெயர்ப்பலகையை நட்டது. எனினும் காணிகளில் விவசாயிகள் தமது பயிர்ச் செய்கையை மேற்கொண்டுதான் இருந்தனர். கடந்த 2018ஆம் ஆண்டு முதன் முதலாகவிவசாயிகளைசெய்கை மேற்கொள்ள விடாது வன உயிரிகள் திணைக்களம் தடுத்தது. விவசாயிகள் திணைக்க ளத்துடன் முரண்பட்டனர். தமது உறுதிக்காணிகளை தமக்குத் தெரியாது அபகரித்தற்கு எதிராக குரலெழுப்பினர். பிரதேச செயலகம், மாவட்டச்செயலகம், மக்கள் பிரதிநிதிகள் என அனைவருக்கும் அறிவிக்கப்பட்டது. எனினும்



நடவக்கைகள் எடுக்கப்படவில்லை. விவசாயம் செய்யவே முடியாது என்று வன உயிரிகள் திணைக்களம் தடைபோட்டபோதும் வாழ்வாதாரத்தை ஈடு செய்ய முடியாததால் சில விவசாயிகள் தமது காணிகளில் பயிர் செய்தனர்.

ஆனால் இந்த காலபோகத்தின் போது அந்தக் காணிகளில் எவரும் விவசாயம் செய்யமுடியாத நிலையில் உள்ளதாக விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர். சுற்றிவர தூண்கள் நட்டுமுட்கம்பி வேலிகளைப் போட்டு காணிகளை முழுமையாகவே வன உயிரிகள் திணைக்களம் அபகரித்துள்ளது என்று விவசாயிகள் குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளனர்.

#### மக்களுடைய காணிகள் ஆக்கிரமிக்கப்படலாமா?

இது தொடர்பில் கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலரைத் தொடர்பு. கொண்டு கேட்டபோது: காணிகள் அபகரிக்கப்பட்டுள்ளன. அவை மக்களுடைய காணிகள். அவற்றை விடுவிக்குமாறு வன உயிரிகள் திணைக்களத்தைக் கோரியுள்ளோம். ஆனால் அவர்களிடமிருந்து எந்தப் பதிலும் வரவில்லை - என்றார்.

அரச திணைக்களங்களால் ஆக்கிரமிக்கப்படும் நிலங்களை மீளப்பெற்றுக்கொள்ளமுடியாத நிலையிலேயே அதிகாரிகளும், மக்களும் இதுநாள்வரையில் உள்ளனர். மகாவலி, வன உயிரிகள் திணைக்களம், வன இலாகா திணைக்களம், தொல்பொருள் திணைக்களம் என்று பல்வேறு திணைக்கங்கள் தமிழர்களின் காணிகளையே ஆக்கிரமித்துக்கொண்டுள்ளன. போரால் பாதிக்கப்பட்டு தமது சொந்த உழைப்பால் மீண்டெழத்துடிக்கும் மக்களை திட்டமிட்டு நசுக்குவதற்கே இந்தத் திணைக்களங்கள் முயல்கின்றன.

#### ஜெயபுரம் மக்களின் நிலை

கிளிநொச்சி ஜெயபுரம் மக்களுடைய காணிகள் வனஇலாகாத் திணைக்களத்தால் ஆக்கிரமிக்கப்பட்டு அந்தமக்கள் விவசாயம் செய்யமுடியாதுள்ள நிலையில் போராட்டங்களை நடத்தினர், மனிதஉரிமை ஆணைக்குழுவுக்குச் சென்றனர், மக்கள் பிரதிநிதிகளிடம் பேசினர், அரச உயர் அதிகாரிகளுடன் பேசினர் ஆனால் அவர்களுக்கு இதுவரை எந்தத் தீர்வும் கிடைக்கவில்லை. அதேபோன்று முல்லைத்தீவில் மீண்டும் இவ்வாறானதொரு ஆக்கிரமிப்பு இடம்பெற்றுள்ளது. இதற்குத் தீர்வுதான் என்ன என்று மக்கள் மத்தியில் கேள்விகள் எழுந்துள்ளன.

#### தமிழர்களிடம் இருந்து பறிபடுகிறதா முல்லை

முல்லைத்தீவில் ஏலவே இராணுவம், பௌத்த சிங்களத் தேசியவாதங்கள் மக்களுடைய காணிகளை ஆக்கிரமித்து அங்கு தமிழர்கள் போராட்டங்களில் ஈடுபட்டுள்ள நிலையில் அரச திணைக்களங்களும் மற்றுமொரு பகுதியால் மக்களுடைய காணிகளை ஏப்பமிடுகின்றன. முல்லைத்தீவை தமிழர்களிடமிருந்து முற்றுமுழுதாகப் பறிப்ப

**முல்லைத்தீவை தமிழர்களிடமிருந்து முற்றுமுழுதாகப் பறிப்பதற்கு அரசு முனைகிறது. வடக்கு கிழக்கு தமிழர் தாயகம் என்ற கோட்பாட்டை மாற்ற வேண்டுமானால் முல்லைத்தீவின் இனப் பரம்பலைக் குலைத்து, விகிதாசாரத்தை மாற்ற வேண்டும் என்று அரசு எத்தனிக்கிறது.**

தற்கு அரசு முனைகிறது. வடக்கு கிழக்கு தமிழர் தாயகம் என்ற கோட்பாட்டை மாற்ற வேண்டுமானால் முல்லைத்தீவின் இனப் பரம்பலைக் குலைத்து, விகிதாசாரத்தை மாற்ற வேண்டும் என்று அரசு எத்தனிக்கிறது என்று குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. இதற்கு தமிழ்த் தலைமைகளும் தங்களை அறியாமலேயே தலையசைக்கின்றன. இதுதான் மக்களின் கருத்து. அவர்களின் அதிருப்தியும்கூட. (ம-21,246)

# இலவசக் கண் பரிசோதனையும் மூக்குக் கண்ணாடி வழங்கலும்

சாவகச்சேரி, ஜூலை 14

இலவச கண் பரிசோதனையும், பார்வையில் குறைபாடு உள்ளவர்களுக்கு மூக்குக் கண்ணாடி வழங்கல் நிகழ்வும் நேற்று சாவகச்சேரி கச்சாய் வீதி சக்தியம்மன் தமிழ் வித்தியாலயத்தில் இடம்பெற்றன.

சாவகச்சேரி கோயிற்குடியிருப்பைச் சேர்ந்த அமரர் திருமதி பூங்கோதை சபாரத்தினத்தின் ஓராண்டு நிறைவை முன்னிட்டு அவரது குடும்பத்தினரால் இந்தப் பரிசோதனை முகாம் இடம்பெற்றது.

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற நிகழ்வில் கோயிற்குடியிருப்பு சாவகச்சேரி நகரம் சங்கத்தானை கல்வயல் மீசாலை நுணாவில் போன்ற கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த 150 க்கு மேற்பட்ட மக்கள் பரிசோதனைக்காக வருகை தந்திருந்தனர். பரிசோதனையின் போது 126 பேருக்கு பார்வையில் குறைபாடு உள்ளமை கண்டுபிடிக்கப்பட்டு இலவசமாக மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன.

சாவகச்சேரி லயன்ஸ் கழகத் தலைவர் லயன் து.இளங்குமரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கழக உறுப்பினர்கள் அமரரின் குடும்ப உறுப்பினர்கள் உட்பட பெருமளவு மக்கள் கலந்து கொண்டனர். (ஜ-9)

## கூட்டுறவு தினத்தை முன்னிட்டு வாடிக்கையாளர்களுக்கு பரிசில்கள் வழங்கல்

தென்மராட்சி, ஜூலை 14

97 ஆவது பன்னாட்டு கூட்டுறவு தினத்தை முன்னிட்டு தென்மராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினர் ஜூலை மாதத்தில் வாடிக்கையாளர்களுக்கு வாராந்தம் பரிசில்களை வழங்கவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

சங்கத்தின் கூட்டுறவு நகர் கிளையில் 2 ஆயிரம் ரூபாவுக்கு மேல் பொருள்களை கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களின் பெயர்கள் குலுக்கல் முறையில் அதிஷ்டம் பார்க்கப்பட்டு முதல் மூன்று இடங்களைப் பெறுபவருக்கு பணப்பரிசில்கள் வழங்கப்படுமென அறிவித்துள்ளனர். (ஜ-9)

# தட்டிப் பறிக்கப்படும் வேலைவாய்ப்புக்கள்




யாழ்ப்பாணம், ஜூலை 14

வடக்கு மாகாணத்தில் வேலையில்லாப் பிரச்சினை தலைவிரித்தாடுகின்றது. பட்டதாரிகளும், இளையோர்களும் வேலை வாய்ப்புக்கள் தேடித் திரிவது டன், அதற்காகப் போராட்டங்கள் மேற்கொண்டுவருகின்றனர். ஆனால் வடக்கில் காணப்படும் வெற்றிடங்களுக்கு தெற்கில் இருப்போருக்கு நியமனங்களை வழங்கும் கைங்கரியத்தை கொழும்பு அரசு இரகசியமாக மேற்கொண்டு வருகின்றமை தமிழ் மக்களிடையே பெரும் அதிருப்தியை ஏற்படுத்தி வருகின்றது.

**இரகசிய ஏற்பாடு**

யாழ்ப்பாணத்தில் உள்ள இலங்கை மின்சார சபையில் உள்ள பதவி வெற்றி டங்களுக்கு இரகசியமான முறையில் அண்மையில் தெற்கைச் சேர்ந்த 8 பேருக்கு நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்த நியமனங்கள் கடந்த ஒக்ரோபர் மாதம் மகிந்த ராஜபக்சவிடம் அதிகாரம் இருந்தபோது வழங்கப்பட்டுள்ளன.

மின்சார சபையில் உள்ள பதவி வெற்றிடங்களுக்கு தெற்கைச் சேர்ந்த 61 பேருக்கு முன்னரும் நியமனங்கள் வழங்கப்பட்டிருந்த நிலையில், மீண்டும் 8 பேருக்கு நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வாறான செயற்பாடுகள் முன்னரும் இடம்பெற்றிருந்தன.

இது தொடர்பாக கொழும்பு அரசுக்கு, தமிழ் அரசியல் தலைவர்கள் சுட்டிக் காட்டியிருந்தபோதும் அவை தொடர்ந்து நடைபெறுகின்றன. அண்மையில் யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் உள்ள பதவி வெற்றிடங்களுக்கான ஆள் தெரிவிலும் இவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன என்றும் குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது.

**இளையோர் விரக்தி**

வடக்கில் நிலவும் வேலையில்லாப் பிரச்சினையே, வடக்கில் நடக்கும் பல்வேறுபட்ட பிரச்சினைக்கு அடிப்படை என்று கணிக்கப்படுகின்றது. இளையோர்கள் சமூகப் பிறழ்வான காரியங்களில் ஈடுபடுவதற்கும் வேலையில்லாப் பிரச்சினையும் ஒரு காரணமாக அமைகின்றது.

வடக்கில் நிலவும் பதவி வெற்றிடங்களுக்கு வடக்கைச் சேர்ந்த வேலைதேடும் இளையோர்களை நிய மிப்பதன் ஊடாக வேலையற்றோர் எண்ணிக்கையைக் குறைக்க முடியும். ஆனால் கொழும்பு அரசு தெற்கைச் சேர்ந்தவர்களுக்கு வடக்கில் வேலை வாய்ப்புக்களை வழங்குதில் மும்முரமாக உள்ளதைக் காண முடிகின்றது.

இது தமிழ் மக்கள் மத்தியிலும், வடக்கில் வேலைதேடும் இளையோர் மத்தியிலும் விரக்தியை ஏற்படுத்தும் விதத்திலேயே உள்ளது. அவர்கள் மனதில் ஏற்படும் விரக்தி காலப்போக்கில் பல பிரச்சினைகளை உருவாக்கலாம்.

**வாக்கு வங்கி**

கொழும்பு அரசுகள் தமது வாக்கு வங்கியைத் தக்கவைத்துக் கொள்ளும் வகையிலேயே வேலை வாய்ப்புக்களை வழங்கி வருகின்றன.

அந்தவகையிலேயே வடக்கு மாகாணத்திலும், தமிழர் பிரதேசங்களிலும் தெற்கைச் சேர்ந்தவர்களுக்கு நியமனங்களை வழங்கும் இரகசிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

கொழும்பு அரசின் இவ்வாறான செயற்பாடுகளால் தமிழ் இளையோர்களின் வாய்ப்புக்கள் பறிக்கப்படுவதுடன், அவர்கள் தொடர்ந்தும் வீதிகளில் வேலை தேடி அலையும் நிலைமையே காணப்படுகின்றது.


**கவனம் தேவை**

வடக்கு இளையோர்களின் வேலை வாய்ப்புக்கள் தொடர்பாக தமிழ் அரசியல் தலைவர்களும் கவனம் எடுக்க வேண்டியது அவசியமாகின்றது.

தற்போதைய கொழும்பு அரசுடன் சுமுகமான உறவை வைத்துக் கொண்டுள்ள அவர்கள், தமிழ் இளையோர்களின் வேலை வாய்ப்புக்கள் தட்டிப் பறிக்கப்படுவது தொடர்பாகக் காத்திரமான நகர்வுகளை மேற்கொள்ள வேண்டும். வடக்கில் காணி அபகரிப்பு, பௌத்த மயமாக்கல் என்பன ஒருபுறம் மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருக்க, மறுபுறத்தில் இளையோரின் வாய்ப்புக்கள் தட்டிப்பறிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் இவ்வாறான செயற்பாடுகளால் விரும்பத்தகாத சம்பவங்கள் நடைபெறும் முன்னர், அதைத் தடுத்து நிறுத்துதவதற்குரிய நடவடிக்கை எடுப்பது அவசியம். (எ)

- ☒ **கொழும்பு அரசுகள் தமது வாக்கு வங்கியைத் தக்கவைத்துக் கொள்ளும் வகையிலேயே வேலை வாய்ப்புக்களை வழங்கி வருகின்றன.**
- ☒ **கொழும்பு அரசு தெற்கைச் சேர்ந்தவர்களுக்கு வடக்கில் வேலை வாய்ப்புக்களை வழங்குவதில் மும்முரமாக உள்ளதைக் காண முடிகின்றது.**
- ☒ **பதவி வெற்றிடங்களுக்கு வடக்கைச் சேர்ந்த வேலைதேடும் இளையோர்களை நியமிப்பதன் ஊடாக வேலையற்றோர் எண்ணிக்கையைக் குறைக்க முடியும்.**
- ☒ **வடக்கு இளையோர்களின் வேலை வாய்ப்புக்கள் தொடர்பாக தமிழ் அரசியல் தலைவர்களும் கவனம் எடுக்க வேண்டியது அவசியமாகின்றது.**








# 30ஆவது வீரமக்கள் தினம் வவுனியாவில் கடைப்பிடிப்பு!

வவுனியா,ஜூலை.14

தேசிய இன விடுதலை போராட்டத்தில் தமது இன்னுயிரை இழந்த போராளிகள் மற்றும் பொதுமக்களை நினைவு கூரும் வகையில் தமிழீழ மக்கள் விடுதலை கழகத்தால் வருடம் தோறும் வீர மக்கள்தினம் கடைப்பிடிக்கபட்டு வருகிறது.

அந்தவகையில் நேற்றுக் முற்பகல் 9 மணிக்கு வவுனியா கோவில்குளத்தில் அமைந்துள்ள உமாமகேஸ்வரன் நினைவு இல்லத்தில் நடைபெற்றது.

தமிழீழ மக்கள் விடுதலை கழகத்தின் உபதலைவரும் நகரசபை உறுப்பினருமான சந்திரகுலசிங்கம் மோகன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வடக்குமாகாண சபை முன்னாள் உறுப்பினர் ஜி.ரி. லிங்கநாதன், பிரதேசசபை உறுப்பினர்களான யோகன், உத்திரியநாதன், நந்தன்,ஜெகதீஸ்வரன், குகதாசன், நகரசபை உறுப்பினர் நா.சேனாதிராயா,மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

உமாமகேஸ்வரன் திருவுருவ படத்துக்கு மாலைஅணிவிக்கப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டதுடன்,கழகத்தின் கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டது.

தொடர்ந்து 1989 ஆம் ஆண்டு ஜூலை 13 ஆம் திகதி படுகொலை செய்யப்பட்ட அ. அமிர்தலிங்கத்தின் திருவுருவ படத்துக்கு ஒளிச்சுடர் ஏற்றப்பட்டு மலர் மாலை அணிவித்து அஞ்சலிக்கப்பட்டது. குறித்த நிகழ்வு இன்றிலிருந்து நாளைமறுதினம் 16 ஆம் திகதி வரை தொடர்ந்து நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ஜ-110)

## ஈரானியர்கள் 9 பேர் போதைப்பொருளுடன் வெள்ளியன்று கைது

கொழும்பு, ஜூலை 14

காலி துறைமுகத்தை அண்மித்த கடற்பரப்பில் படகொன்றை நேற்று முன்தினம் சோதனைக்கு உட்படுத்தியதில் போதைப் பொருளுடன் 9 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் எதிர்வரும் 19ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

காலி துறைமுகத்தை அண்மித்த கடற்பரப்பில் கொடி மற்றும் பதிவுக் குறிப்பு இல்லாத நிலையில் இந்தப்படகு நேற்றுமுன்தினம் இரவு சிறைபிடிக்கப்பட்டது. குறித்த படகிலிருந்து 70 கிலோகிராம் ஹெரோய்ன், 812 கிராம் அபீன் முதலான போதைப்பொருள்களு டன் 9 ஈரானியர்கள் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

# சிறப்பாக இடம்பெற்ற திருவாசகவிழா

கொடிகாமம், ஜூலை 14

நாவற்குழி சிவபூமி திருவாசக அரண்மனை உருவாக்கம் பெற்று ஓராண்டு நிறைவை முன்னிட்டு திருவாசகவிழா நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை கலாநிதி ஆறுதிருமுருகன் தலைமையில் ஆரம்பமாகி நேற்று குடமுழுக்கு தின நிகழ்வுடன் நிறைவுபெற்றது.

திருவாசக அரண்மணையில் எழுந்தருளியிருக்கும் சிவதெட்சணாமூர்த்திக்கும், இங்கு பிரதிஷ்டை செய்யப் பெற்றிருக்கும் நூற்றிஎட்டுசிவலிங்கங்களுக்கு குடமுழுக்கு நடைபெற்ற ஓராண்டுப் பூர்த்தியை முன்னிட்டு சிறப்பு நிகழ்வுகள் இடம் பெற்றன.

நல்லைஆதீன முதல்வர் சிறீல சிறி சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், இந்தியா திருமுருகன் திரு மட சுவாமி சுந்தரராஜ அடிகள், ஆஸ்திரேலியா மருத்துவ நிபுணர் வ.மனோமோகன், திருமதி மனோமோகன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் கலைப் பீடாதிபதி பேராசிரியர் அ.சண்முகதாஸ், திருமதி மனோன்மணி சண்முகதாஸ், இந்தியா மூத்த ஓதுவார் திருமுறைக் கலாநிதி திருத்தணி என். சுவாமிநாதன் நீதியரசர் ஸ்ரீபவன் ,இந்திய கொன்சியூலர் பாலச்சந்திரன் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

இந்தியா மூத்த ஓதுவார் திருமுறைக் கலாநிதி திருத்தணி என். சுவாமிநாதனின் திருவாசக சிறப்பு அரங்கமும், பொன்னாலை சந்திர பரத கலாலய மாணவர்களின் "கூத்தன் இவ்வானும் குவலயமும்" பரதநாட்டிய அரங்கமும் இடம் பெற்றன.





நல்லை ஆதீன சுவாமி இந்தியா சுந்தரராஜ அடிகள் இந்தியா திருத்தணிகை சுவாமிநாதன் ஆகியோருக்கு ஓராண்டு சிறப்பு தொடர்பாக தொகுக்கப்பட்ட மலரினை சிவபூமி பத்திரிகை ஆசிரியர் கனகசூரியன் வழங்கி வெளியிட்டு வைத்தார். (ஜ-159)

# பௌத்த தேசிய வாதத்தால் நல்லிணக்கத்துக்கு ஆபத்து

யாழ்ப்பாணம், ஜூலை 14

கடந்த ஏப்ரல் மாதம் நாட்டில் நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதல்களின் பின்னர் இலங்கை அரசியல் களம் பௌத்த தேரர்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. மதத்தைக் கையில் எடுத்துக் கொண்டு அவர்கள் அரசுக்கு நிர்ப்பந்தம் கொடுக்க முயல்வதை அவதானிக்க முடிகின்றது. இந்தப் பௌத்த தேசியவாதமே நாட்டின் இனப் பிரச்சினைக்கு அடித்தளமாக இருந்த நிலையில் மீண்டும் அது வெளித்தெரிய ஆரம்பித்துள்ளமை ஆரோக்கியமானதன்று.

**இனவாத கருத்து**

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களின் பின்னர் நாட்டின் அரசியல்நிலைமை அவ்வளவு ஆரோக்கியமானதாகக் காணப்படவில்லை. முஸ்லிம் மக்களுக்கு எதிரான இனவாதக் கருத்துக்கள் பௌத்த தேரர்களிடம் இருந்து கிளம்ப ஆரம்பித்துள்ளன. அத்துடன் முஸ்லிம் அரசியல் தலைவர்களுக்கு எதிராகவும் இனவாதச் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டன. சில முஸ்லிம் அரசியல் தலைவர்கள் பயங்கரவாதச் செயற்பாடுகளுடன் தொடர்புடையவர்கள் என்று குற்றஞ்சாட்டியதுடன், அவர்கள் பதவி விலக வேண்டும் என்று அத்துரெலிய ரத்ன தேரர் கண்டியில் போராட்டத்தை ஆரம்பித்தார். அதையடுத்து முஸ்லிம்கள் அரசியல் தலைவர்கள் தாம் வகித்த அமைச்சுப் பதவிகளில் இருந்து பதவி விலகினர். பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் ஞானசார தேரர் கண்டியில் மாநாடு நடத்தி இலங்கை பௌத்த நாடு என்று அறிவித்தார். சிங்கள இராச்சியம் உருவாக்கப்படும் என்று கூறினார். இவற்றையெல்லாம் அரசு கைகட்டி வேடிக்கை பார்த்தவாறே இருந்தது.

**சிறுபான்மையினரை மோத விட முயற்சி**

முன்னர் தமிழ் மக்கள் மீது பாய்ந்த பௌத்த தேசியவாதம் இப்போது முஸ்லிம் மக்கள் பக்கம் திரும்பியுள்ளது. ஒட்டுமொத்த இலங்கைத் தீவும் சிங்கள பௌத்தர்களுக்கே உரித்தானது என்ற கொள்கை கொண்ட அவர்களுக்குத் தமிழர்களின் போராட்டம் முன்னர் அச்சுறுத்தலாக இருந்தது. தமிழர்களின் போராட்டம் பயங்கரவாதம் என்று கூறி அதை பல நாடுகளின் உதவியுடன் அழித்த அவர்கள் இப்போது முஸ்லிம்களுடன் முரண்பாடு ஏற்பட்டுள்ள நிலையில் தமிழர்கள் உரிமைக்காகப் போராடினார்கள் என்ற கதைகளைக் கூறி வருகின்றனர். தமிழ் மக்களை முஸ்லிம் மக்களுக்கு எதிராகத் திருப்பித் தமது எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்ளவே அவர்கள் முயற்சிக்கின்றனர். இப்போது முஸ்லிம் மக்களுக்கு எதிராகக் கிளம்பியுள்ள பௌத்த தேசியவாதம் எதிர்காலத்தில் மீண்டும் தமிழ் மக்களின் பக்கம் திரும்பலாம் என்பதை கடந்த கால வரலாறுகள் உணர்த்துகின்றன.

**மூலகாரணம்**

பௌத்த தேசிய வாதமே இலங்கையின் இனப்பிரச்சினையின் மூல காரணம் என்பதை மறுக்க முடியாது. இந்த நாடு சிங்கள பௌத்தர்களுக்கே என்ற எண்ணத்தாலேயே தமிழ் இளைஞர்கள் போராட்டத்தை நோக்கி உந்தித் தள்ளப்பட்டனர். பௌத்த தேசியவாதச் சிந்தனையால் பௌத்த மக்களைத் தவிர இலங்கையில் உள்ள ஏனையோருக்கு எவ்வித நன்மையும் விளையப் போவதில்லை. பௌத்த தேசிய வாதம் எப்போது ஒழிக்கப்படுகின்றதோ அப்போதே இலங்கையில் சமாதானமும், நல்லிணக்கமும் உருவாகும்.

> பௌத்த மக்களைத் தவிர இலங்கையில் உள்ள ஏனையோருக்கு எவ்வித நன்மையும் விளையப் போவதில்லை. பௌத்த தேசிய வாதம் எப்போது ஒழிக்கப்படுகின்றதோ அப்போதே இலங்கையில் சமாதானமும், நல்லிணக்கமும் உருவாகும்.

பௌத்த தேரர்கள் அரசியலில் ஈடுபட்டு, அரசின் முடிவுகளில் ஆதிக்கம் செலுத்தும் வரையில் அது சாத்தியமாகப் போவதில்லை. நாடு முன்னேற்றமடைந்து, சுபீட்சமடைய வேண்டுமானால் தெற்கு அரசியல் தலைவர்களும், பௌத்த தேரர்களும் இதை உணர்ந்து செயற்பட வேண்டும். (எ)





## மக்கள் சந்திப்பை மேற்கொண்ட அமைச்சர் மனோ கணேசன்

வவுனியா, ஜூலை 14

அமைச்சர் மனோகணேசன் வவுனியாவில் உள்ள பல்வேறு கிராமங்களுக்குச் சென்று மக்கள் சந்திப்புகளை நேற்று மேற்கொண்டார்.

இதன்போது மக்களின் குறைகளை கேட்டறிந்துகொண்டதுடன், கிராமப்புறங்களில் அமைந்துள்ள இந்துஆலயங்களுக்கு பயணம் செய்து அவற்றை பார்வையிட்டிருந்ததுடன், மக்களின் தேவைகளுக்கிணங்க தமது அமைச்சின் ஊடாக மேற்கொள்ளப்படவுள்ள வேலைதிட்டங்கள் தொடர்பாகவும் பொதுமக்களுடன் கலந்துரையாடியிருந்தார்.

குறித்த பயணத்தின் போது வவுனியா சிவபுரம், கற்பகபுரம், புதிய கற்பகபுரம், பம்பைமடு, மடுக்குளம், கோவில் மோட்டை, ஆச்சிபுரம், ஆனந்தபுரம், தரணிக்குளம், சிதம்பரபுரம், கற்பகபுரம், மதுராநகர், ரம்பாவெட்டி, புதிய வேலவர் சின்னகுளம் ஆகிய கிராமங்களுக்கு சென்று பொதுமக்களுடன் சந்திப்புக்களை மேற்கொண்டார்.

இந்தச் சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமார், தேசிய அமைப்பு செயலர் விநாயகமூர்த்தி ஜனகன், கட்சியின் வடக்கு மாகாண அமைப்பாளர் விமல், ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரசார செயலர் பரனிதரன், வவுனியா மாவட்ட அமைப்பாளர் நடராஜா, மன்னார் மாவட்ட அமைப்பாளர் தீபன், ஆகியோரும் கலந்து கொண்டனர். (ஐ-110)

## கடும் காற்றால் 10 வீடுகள் சேதம்

வவுனியா, ஜூலை 14

வவுனியாவில் வீசிய கடும்காற்று காரணமாக 10 வீடுகள் சேதமடைந்துள்ளதாக மாவட்ட இடர்முகாமைத்துவ சேவைகள் நிலையம் தெரிவித்துள்ளது.

வவுனியாவின் பல பகுதிகளிலும் நேற்றுமுன்தினம் மாலை கடும் காற்று வீசியிருந்தது.

வவுனியா பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பம்பைமடு பகுதியில் 5 வீடுகளும், மாளிகை பகுதியில் ஒரு வீடும், ஆறுமுகத்தான்புதுக்குளம் பகுதியில் 3 வீடுகளும், வவுனியா தெற்கு சிங்கள பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பிரம்படு பகுதியில் ஒரு வீடும் என்று 10 வீடுகள் சேதமடைந்துள்ளன. 10 குடும்பங்களைச் சேர்ந்த 34 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். (ஒ.5)

## ப.நோ.கூ. சங்கங்களின் உந்துருளிப் பவனி பேரணி





சாவகச்சேரி, ஜூலை 14

பன்னாட்டு கூட்டுறவு அமைப்பின் 97 ஆவது ஆண்டு நிறைவையொட்டி யாழ்ப்பாண மாவட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களினால் உந்துருளி பவனி பேரணி நேற்று நடத்தப்பட்டது.

ஒவ்வொரு பிரதேசத்திலும் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஒன்றிணைந்து உந்துருளி பேரணிகளை யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபம் வரை நடத்தினர்.

தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த தென்மராட்சி கிழக்கு (கொடிகாமம்), தென்மராட்சி மேற்கு (கைதடி) ஆகிய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் இணைந்து நேற்று காலை 7.00 மணிக்கு கொடிகாமத்திலிருந்து ஏ 9 முதன்மைச் வீதியூடாக யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தை நோக்கி உந்துருளிகளில் பேரணியை மேற்கொண்டனர்

கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள், பணிப்பாளர் சபை உறுப்பினர்கள், சங்கப் பணியாளர்கள் ஆகியோர் உந்துருளி பவனி பேரணியில் கலந்து கொண்டனர். (ஐ-9-17)

## தமிழ்பேசும் மக்கள் அனைவரும் ஒன்றுசேர வேண்டியது அவசியம்

### அமைச்சர் மனோ அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 14

நாடு முழுவதும் வாழும் தமிழ் மக்கள் ஒன்று சேர வேண்டிய கட்டாயம் தற்போது ஏற்பட்டுள்ளது என்று தேசிய ஒருமைப்பாடு, அரச கரும மொழிகள், சமூகமேம்பாடுமற்றும் இந்து கலாசார அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்தார்.

வவுனியா - சிவபுரத்தில் நேற்றுச் சனிக்கிழமை இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் பின்னர், செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

நாட்டில் வடக்கு, கிழக்கு தமிழ் மக்களுடன் மலையகத் தமிழ் மக்களும் ஒன்று சேர வேண்டிய கட்டாயம் தற்போது ஏற்பட்டுள்ளது. அது தொடர்பான வேலைத் திட்டங்களையே நாடுமுழுவதும் நான் மேற்கொண்டு வருகின்றேன். ஒன்றுபடும் நாம், முஸ்லிம் மற்றும் சிங்கள மக்களிடத்தில் சகோதரத்துவத்தைப் பேணும் வகையில் இருக்க வேண்டும்.

ஐக்கியப் படுகின்றோம் எனும் பெயரில் எங்கள் தனித்துவங்களை இழந்து விடக் கூடாது என்பதில் உறுதியாக இருக்க வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம)



## கற்றல் உபகரணங்கள் கையளிப்பு

மன்னார்,ஜூலை 14
நானாட்டான் முசலி பிரதேசபாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.
இந்த நிகழ்வு நானாட்டான் மகாவித்தியாலயத்தில் நேற்றுமுன்தினம் முற்பகல் 9 மணிக்கு நடைபெற்றது.
நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தானால் இந்த உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.
நாடாளுமன்ற உறுப்பினரின் கடந்த வருட நிதி ஒதுக்கீட்டின் மூலம் பெறப்பட்ட சுமார் 10 லட்சம் ரூபா பெறுமதியில் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.
மன்னார் அல் அஸ்ஹர் தேசிய பாடசாலை, முசலி தேசிய பாடசாலை, நானாட்டான் மன்டிலாசேல் கல்லூரி ஆகிய இடங்களில் வைத்து மன்னார் கல்வி வலயத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களுக்கு இந்தக் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.
மன்னார் பகுதியில் 385 மாணவர்களுக்கும், முசலிப் பகுதியில் 205 மாணவர்களுக்கும் நானாட்டான் பகுதியில் 225 மாணவர்களுக்கும் மேற்படி உபகரணங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன.
நிகழ்வில் மன்னார் வலயக் கல்விப்பணிப்பாளர் ஜே.கே.பிரட்லி, மாந்தை மேற்கு பிரதேச சபை பிரதித் தவிசாளர் எம்.எச். தௌபீக், மன்னார் பிரதேச சபை உறுப்பினர் ஜனாப். சாபிர், நானாட்டான் பிரதேச சபை உறுப்பினர் ஜனாப். ராசிக் பரீட் ,முசலி தேசிய பாடசாலை பிரதி அதிபர் ஜனாப். சகாப்தீன் நானாட்டான் மன்டிலாசேல் கல்லூரி அதிபர் அருட் சகோதரர் விஜயதரன் உட்பட பலரும் கலந்து கொண்டனர். (ஐ-213)

## அலங்கார உற்சவம்

அளவெட்டி.ஜூலை.14
அளவெட்டிதெற்கு குருவழை அருள்மிகு நாகதம்பிரான் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாள்கள் நடைபெறவுள்ளன.
23 ஆம் திகதி எம்பெருமான் அளவெட்டி,கந்தரோடை,உடுவில்வீதிவழியாக மருதனார்மடம் ஆஞ்சநேயர் ஆலயத்தைச்சென்றடைந்து மீண்டும்அங்கிருந்துகாங்கேசன்துறை வீதி வழியாக சுன்னாகம், மல்லாகம்ஊடாக இருப்பிடத்தைவந்தடையும் என ஆலய பூசகர் தெரிவித்தார். (ஐ-36)

# பஞ்சம் போக்கும் பனைகளை இனியாவது பாதுகாப்பார்களா?

## மக்கள் அங்கலாய்ப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 14
அல்லைப்பிட்டி - மண்கும்பான் இடைப்பட்ட பகுதியில் பல பனைமரங்கள் அவ்வப்போது எரியூட்டப்படுகின்றன என்று அந்தப் பகுதி மக்கள் குற்றம் சுமத்துகின்றனர். பொதுவாக வார நாள்களிலேயே இவ்வாறு அதிகளவான பனைகள் எரியூட்டப்படுகின்றன என்றும் அவர்கள் குறிப்பிடுகின்றனர்.



பனை நமது தேசத்தின் பெரும் வளம் குறிப்பாக தமிழர்களின் அடையாளமாக பனை மரம் வர்ணிக்கப்படுகின்றது. வடமாகாணத்தில் எல்லா வளத்தையும் விட பனைவளம் சிறந்து விளங்கு கின்றது. எமது வாழ்க்கையின் பயன்பாட்டுக்கு பனை தேவையான பல பொருள்களைத் தரக்கூடியது. பனையில் இருந்து நூற்றுக்க ணக்கான உணவு மற்றும் உணவுசாரா பொருள்களை உற்பத்தி செய்யமுடியும். இதனால் தான் பனையினை கற்பகதரு, பஞ்சம் போக்கி மற்றும் கற்பகம் என்றெல்லாம் எம்மவர்கள் வர்ணித்தார்கள், வர்ணிக்கின்றார்கள். ஆனால், எமது முன்னோர்கள் தமது அன்றாட வாழ்க்கையிலும், சமூகத்திலும் பனைக்குக் கொடுத்திருந்த அந்தஸ்தை இன்று நாமும் கொடுப்பதில்லை என்று அவர்கள் குறைபட்டுக் கொள்கின்றனர். உணவு முதல் பல்வேறுபட்ட பயன்பாடுகளுக்கு அன்று பனை பிரதான இடத்தைப் பிடித்திருந்தது. இன்று உணவைத் தவிர்த்து ஏனைய விடயங்களில் பனையை பிளாஸ்டிக் பிரதியீடு செய்துவிட்டது.

**ஆச்சரியமான புள்ளிவிவரங்கள்**

உலக அளவில் 140 மில்லியன் பனை மரங்கள் இருப்பதாக ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன. அவற்றில் இலங்கையில் 11.1 மில்லியன் பனை மரங்கள் இருப்பதாக கண்டறியப்பட்டுள்ளது. வடமாகாணத்தில் குறிப்பாக யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி போன்ற மாவட்டங்களில் 0.6 மில்லியன்க ளும் ஏனைய மாவட்டங்களில் மிகுதியான பனை மரங்களும் பரந்து காணப்படுகின்றன.
போர்க்காலத்தில் நாம் இழந்த ஏகப்பட்ட அடையாளங்களில், எமக்குப் பலதையும் தந்த பனைகளும் உள்ளடங்குகின்றன. லட்சக்கணக்கான பனை மரங்கள் தலை வெட்டப்பட்ட முண்டங்களாக போரின் எச்சங்களை இன்றும் பிரதிபலித்து நிற்கின்றன. தற்போதும் கூட சட்டவிரோதமாக பல்லாயிரம் பனை மரங்கள் தறிக்கப்பட்டுக் கொண்டுதான் உள்ளன. அவ்வாறு வெட்டப்படும் பனைகள் வெறும் மரங்களாகப் பலருக்குத் தோன்றலாம். ஆனால் அது பலரின் வாழ்வாதாரம் என்பதையும் ஏற்கத்தான் வேண்டும். இதைக் கருத்தில் கொண்டு பனைகளின் இன அழிப்பை உடனடியாகத் தடை செய்யவேண்டும். பனை வளத்தை அதிகரிக்கச் செய்ய வேண்டும் என்பது மக்களின் குறிப்பாக தீவுப் பகுதி மக்களின் கோரிக்கையாக அமைகிறது.


**பிளாஸ்டிக் ஏன்?**

பனைகளை வெட்டாதவர்கள் அதைப் பாதுகாத்து விட்டார்கள் என்று அர்த்தமில்லை. எமது அன்றாடவாழ்க்கையில் பிளாஸ்டிக்குக்கு நாம் அதி உச்ச இடத்தைக் கொடுத்துள்ளோம். பிளாஸ்டிக் இல்லாமல் நாமில்லை என்றவாறாக எமது வாழ்க்கை சென்று கொண்டிருக்கிறது . உடை, அலங்காரம், ஆபரணம் என எங்கும் பிளாஸ்டிக், எதிலும் பிளாஸ்டிக். பனையைப்பின்தள்ளிப் பிரதியீடு செய்த பிளாஸ்டிக்கை நாம் முழுவதுமாகப் புறக்கணிக்க வேண்டும். மீண்டும் பனைக்கு முக்கிய இடத்தை வழங்க வேண்டும். வடக்கு, கிழக்கு மாகாணங்களில் 469 பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் பனையை நம்பி வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கின்றன. நாம் வேண்டும் ஒவ்வொரு பிளாஸ்டிக் பொருள்களும் எமது உறவுகள், சொந்தங்களின் பஞ்சத்துக்கும் பட்டினிக்கும் எம்மையும் காரணமாக்குகிறது என்பதை ஒவ்வொருவரும் உணர வேண்டும். அதுவே மக்களின் விருப்பமும் ஆகும். (ம)

# ஸஹ்ரானின் மனைவி நினைத்திருந்தால் ஈஸ்டர் தாக்குதலைத் தடுத்திருக்கலாம்

## சமாதான நீதிவான்கள் பேரவையினுடைய இலங்கைக்கான பணிப்பாளர் தெரிவித்தார்

கொழும்பு, ஜூலை 14
ஸஹ்ரானின் மனைவி நினைத்திருந்தால் ஈஸ்டர் தாக்குதலைத் தடுத்திருக்க முடியும் என நீதி மற்றும் மனித உரிமைகளைப் பாதுகாக்கும் சமாதான நீதிவான்கள் பேரவையின் இலங்கைக்கான பணிப்பாளர் கலாநிதி பஹத் ஏ.மஜீத் தெரிவித்தார்.
பெண்களுக்கான மனித உரிமை தொடர்பான விழிப்பூட்டல் கருத்தரங்கு நிந்தவூர்இமாம்ரூமிவித்தியாலயத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. அதில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
இஸ்லாம் என்பது மனித உரிமையை அங்கீகரித்த ஒரு மார்க்கம். ஒரு மனிதன் வாழ்வதற்கு எவையெல்லாம் அவசியமோ அவைகளை அடிப்படை உரிமைகள் எனலாம். அவற்றும் உணவு, நீர், உறைவிடம் மற்றும் மத சுதந்திரம் என்பவை உள்ளடக்கப்படும். வாழும் இடத்தில் மனிதன் தன் சுதந்திரம் பறிக்கப்பட்டால் அல்லது மேற்சொன்ன விடயங்கள் சூறையாடப்பட்டால் அதனை மனித உரிமை மீறல் எனலாம். அப்படியான மனித உரிமை மீறும் சம்பவங்கள் இலங்கை முஸ்லிம்களுக்கு எதிராக கடந்த சில நாள்களாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறன.
இதில் வழிபாட்டு இடங்கள் தாக்கப்படுதல், வியாபார இடங்கள் தாக்கப்படுதல், மத அடிப்படையிலான ஆடைகளுக்கு தடை விதிப்பு, ஏனைய மதத்தை பின்பற்றும் கடும்போக்குவாதிகளால் முஸ்லிம்கள் வஞ்சிக்கப்படுதல், என்பன நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இது குறித்து மனித உரிமைகள் ஆணையகம், ஹியுமன் றைட்ஸ் வொச் உள்ளிட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அமைப்புகள் இலங்கைக்கு அழுத்தம் கொடுத்த போதிலும் இவைகள் நிறுத்தப்படுவதாக இல்லை. இந்த செயற்பாடுகளை எமது பேரவை கண்டிக்கிறது.
அத்துடன் போதைப்பொருளை பாரிய அளவில் கடத்தும் நபர்களுக்கு எதிராக அதிக பட்ச தண்டனையாக சாவுத் தண்டனை வழங்க வேண்டும். அண்மையில் எமது நாட்டில் நடைபெற்ற குண்டுத்தாக்குதலை நினைத்தி ருந்தால் ஸஹ்ரானின் மனைவி தடுத்திருக்க முடியும். அதை அவர் செய்யவில்லை என்பது தான் இங்கு கேள்விக்குட்படுத்த வேண்டியதாகும். எனவே எமது கணவர்கள் பிள்ளைகள் என்ன செய்கின்றார்கள் என்பதை மனைவியாக, தாயாக, நாம் பொறுப்புணர்வுடன் அறிந்து நடக்க வேண்டும். அடிப்படை உரிமைகள் மீறப்படுவதை தடுக்க பெண்கள் முன்வர வேண்டும். அவ்வாறு நடந்தால் எதிர்காலத்தில் இடம்பெறவுள்ள பெரிய இடர்களை எம்மால் தடுக்க முடியும். தற்போது இலங்கையில் வாழும் சிறுபான்மை



மக்களாகிய முஸ்லிம்களின் அடிப்படை உரிமைகள் மீறப்படும் அதிக செயற்பாடுகள் எதிர்காலத்துக்கு உகந்தவையாக இருக்காது. அவை நல்லிணக்கத்துக்கு எதிரானதாகவே காணப்படும். எனவே இதுகுறித்து சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். வேண்டுமென்று ஒரு சமூகத்தின் மீது கட்டவிழ்த்து விடப்படும் விசம பரப்புரைகள் அந்தச் சமூகத்தின் உரிமைகளைப் பறிப்பதை எவரும் ஏற்கப் போவதில்லை. இதற்கான உடனடி தீர்வை சம்பந்தப்பட்ட அனைவரும் எடுக்க வேண்டும். மத அடிப்படையிலான ஆடை விடயத்துக்காக உரிய தீர்வு உடன் எடுக்கப்படவேண்டும். கடும்போக்குவாத மத அமைப்புகள் எதிர்காலத்தில் தடை செய்யப்பட வேண்டும். அவ்வமைப்புகள் பரப்புரை செய்வதை தடை செய்ய வேண்டும். இவ்வாறு செய்வோமானால் எமது மனித உரிமைகள் பாதூகாக்கப்பட்டு நீதி பேண உறுதுணையாக இருக்கும் - என்றார். (ம)

## பெருந்திருவிழா

யாழ்ப்பாணம்,ஜூலை 14
யாழ்ப்பாணம்அரியாலை பிரப்பங்குளம் மகாமாரி அம்மன் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் 20 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 நாள்கள் நடைபெறவுள்ளது.
எதிர்வரும் 2 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த் திருவிழாவும், மறுநாள் சனிக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும் என்று பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ஐ)

## முழு நிலா ஆன்மிக சொற்பொழிவு

யாழ்ப்பாணம்,ஜூலை 14
யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் ஏற்பாட்டில் முழு நிலா ஆன்மிகச் சொற்பொழிவு நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை சபையின் நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் முற்பகல் 10 மணிக்கு நடைபெறும்.
பிரம்மசிறி நவநீத கிருஷ்ண சர்மாவால் ஆன்மீகச் சொற்பொழிவு நிகழ்த்தப்படவுள்ளது. எனவே சைவ அன்பர்கள், ஆர்வலர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ஐ)

# ஜே.வி.பி. தோற்கவில்லை?

வி.அருணாசலம்

கடந்த மாதம் நாடாளுமன்றில் அமைச்சர் ரிசாத் பதியுதீன் மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டபோது அதற்குப் போட்டியாக ரணில் அரசு மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்தது ஜே.வி.பி. ரிசாத் பதியுதீன் மீதான தீர்மானத்தை நாடாளுமன்றத்துக்குக் கொண்டுவருவதற்கு முன்னர் தமது தீர்மானத்தைப் பரிசீலிக்க வேண்டும் என ஜே.வி.பி. வாதாடியது. அதன்படி இந்த மாதம் 10ஆம், 11ஆம் திகதிகள் இந்த விவாதத்துக்காக ஒதுக்கப்பட்டன. தற்போதைய சூழலில் இந்தத் தீர்மானத்தைக் கையிலெடுத்த ஜே.வி.பி. அதன் மூலம் எதை அடைய முயன்றதோ அந்த இலக்கை முற்றிலுமாக அடைந்திருக்கிறது. ரணில் விக்கிரமசிங்க - அனுர குமார ஆகியோரின் இணக்க அரசியலால் ஜே.வி.பி. ஆதரவாளர்கள் மத்தியில் மேலெழுந்திருந்த ஜே.வி.பி. மீதான மக்கள் செல்வாக்குச் சரிவைச் சீர் செய்யவே இந்தத் தீர்மானம் கொண்டு வரப்பட்டது. அது ஜே.வி.பிக்கு வெற்றியையே கொடுத்திருக்கிறது.







1971ஆம் ஆண்டில் ஜே.வி.பியானது ரோஹண விஜயவீர தலைமையில் போராட்டத்தை ஆரம்பித்தபோது சிறிமாவோ பண்டாரநாயக்க அதை இரும்புக் கரம் கொண்டு நசுக்கினார். 1989ஆம் ஆண்டில் ஜே.வி.பியின் 2ஆவது கிளர்ச்சியின்போது ஜே.ஆர். ஜெயவர்த்தன, பிரேமதாச ஆகியோரின் ஆட்சியில் உயிருடன் கைதான ரோஹண விஜயவீர கொல்லப்பட்டார். அதனால் இவ்விரு முதன்மைக் கட்சிகள் மீதும் ஜே.வி.பி. ஆதரவாளர்களுக்கு அதிருப்தி இருந்தது. இந்த இரண்டு கட்சிகளுடனும் இணைந்து அரசியல் நடத்துவதற்கு ஜே.வி.பியும் ஒருபோதும் தயாராக இருக்கவில்லை. 1965ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட ஜே.வி.பிக்கு 1989ஆம் ஆண்டு வரை காலகட்டம் வரை ரோஹண விஜயவீர தலைமை தாங்கினார். அவரின் படுகொலைக்குப் பின்னர் 1990 தொடக்கம் 2014ஆம் ஆண்டு வரை சோம வம்ச அமரசிங்க தலைமை தாங்கினார். அவரது தலைமையிலும் ஜே.வி.பி. மேற்குறித்த தனது நிலைப்பாட்டில் மாற்றத்தை ஏற்படுத்தவில்லை.

**அனுரகுமார - ரணில் இணக்கத்தால் ஜே.வி.பி மீது அதிருப்தி**

ஜே.வி.பியின் அரசியல் செயற்பாடு இவ்விரு முதன்மைக் கட்சிகளுக்கும் எதிர்முரணாகச் சென்றுகொண்டிருக்க, 2014ஆம் ஆண்டு மாசி மாதத்தில் அதன் தலைமைப் பொறுப்பை ஏற்ற அனுரகுமார திசாநாயக்க, ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து சில செயற்பாடுகளில் இறங்கினார். இந்த இணக்கம் இதுவரையான ஜே.வி.பியின் நிலைப்பாட்டில் அதிர்வை உண்டாக்கியது. இதுகுறித்து உட்பூசல்கள் அந்தக் கட்சிக்குள் நடந்தேறுகின்றன. இந்த நிலையில் ஜே.வி.பியில் இருந்து பிரிந்து சென்று முன்னிலைச் சோசலிசக் கட்சியைத் தோற்றுவித்துத் தமக்குச் சவாலாகச் செயற்படுகின்ற குமார் குண ரட்னத்தை முடக்குவதற்காகவே ரணில் விக்கிரமசிங்கவுடன் அனுரகுமார திசாநாயக்க இணங்கினார் என்று ஜே.வி.பி. ஆதரவாளர்களுக்குள் பேச்சுக்கள் நிலவின. பின்னர் குமார் குணரட்ணம் சிறையில் அடைக்கப்பட்டார். ரணில்-விக்கிரமசிங்கவின் இணக்கப்பட்டுடன் அனுரகுமாரவால் குணரட்னம் சிறைப்படுத்தப்பட்டதாகப் பேசப்பட்டது. மீண்டும் குமார் குணரட்ணத்தின் அணி அரசியலில் களமிறங்க ஜே.வி.பி. அமைப்பின் ஒரு பகுதியினர் குமார் குண ரட்னத்தின் அணிக்கு ஆதரவளித்தனர். அதற்கு முக்கிய காரணமாக அமைந்தது ரணில் அனுர குமார உறவாகும். குமார் குணரட்ணத்தின் செயற்பாடுகள் வடக்குக் கிழக்குத் தமிழர்களில் ஒரு பகுதியினரையும் இணைத்திருப்பது ஜே.வி.பியினருக் மேலும் தலையிடியைக் கொடுத்திருக்கலாம்.



**ரணில் அரசை வெறுக்க ஆரம்பித்த ஜே.வி.பி**

ரணில் - அனுரகுமார இணக்கத்தால் ஜே.வி.பி என்கிற கட்சியின் இதுவரை காலமுமான அரசியல் அணுகுமுறை வழிமாறியதால், ஜே.வி.பி. தனது வாக்கு வங்கியை இழக்கும் நிலையை எட்டியது. அதைத் தக்க வைத்துக் கொள்வதற்காகவும் ரணிலுடன் உண்மையான உறவு இல்லை என்பதைக் காட்டுவதற்காகவுமே கடந்த சில மாதங்களாக அது ரணில் அரசு மீதான ஊழல்கள், சட்ட ஒழுங்குப் பிரச்சினைகள், அமெரிக்காவுடான அரசின் ஒப்பந்தங்களை விமர்சித்தது. இவற்றைத் தனது நாடாளுமன்ற உரையில் வெளிப்படையாகக் கூறிவந்தார் அனுர குமார. மத்திய வங்கிப் பிணைமுறி விவகாரம், உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள் என மக்களின் கவனத்தை ஈர்க்கக் கூடிய விடயங்களில் நல்ல பேச்சுத் திறமையுள்ள அவர் இறங்கியிருந்தார். இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் நாடாளுமன்றில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட முன்னர் களுத்துறையில் இருந்து நுகேகொடை வரை இரண்டு நாள்கள் பாதயாத்திரபை; போராட்டம் ஒன்றை மேற்கொண்டு மக்களை அணி திரட்டுவதிலும், விழிப்ப டையச் செய்வதிலும் ஜே.வி.பி. கவனம் செலுத்தியது.

**வழி தவறிய ஜே.வி.பி. அரசியல்**

கொமினிசம், மார்க்ஸிசம், லெனினிசம் எனத் தாம் கடைப்பிடிக்கின்ற அரசியல் கோட்பாடுகளைக் கொண்டாடுகின்ற ஜே.வி.பியினர் இந்தச் சிந்தனைகளுக்கு வெகுதொலைவு வரை பயணித்து முதலாளித்துவச் சிந்தனையிலேயே அதிகம் ஈடுபாடு கொண்டுள்ளனர். ஜே.வி.பி. ஒரு கொமினிசக் கட்சி என்று கூறுவதற்குரிய எவ்வித பொருத்தப்பாடும் அந்தக் கட்சிக்கு இல்லை. இவர்கள் அணிகின்ற சிவப்புச் சட்டையும் தொப்பியும் தான் அதன் கொமினிசமாக இருக்கின்றன. ரோஹண விஜய வீரவின் வாழ்க்கை வரலாற்றை மையாமாக வைத்துத் தயாரிக்கப்பட்ட 'புறோசன் பயர்' (புறோசனின் நெருப்பு) திரைப்படம் அவரது போராட்ட வரலாற்றைச் சித்திரிக்கிறது. அதில் ரோஹண விஜயவீரவின் பாத்திரத்தைச் சிங்களத் திரைப்பட நடிகர்களில் ஒருவரான கமல் அத்தராரய்ச்சி என்பவர் ஏற்று நடித்தார். அந்தத் திரைப்படம் ரோஹணவின் சிந்தனைகள், அவரது நடவடிக்கைகள் என்பவற்றை எடுத்துக் காட்டுவதாகவுள்ளது. ஆனால், அதற்கு எதிரான நிலையில் இன்றைய தலைவர் அனுரகுமார சென்று கொண்டிருக்கிறார். அமெரிக்காவில் இருந்து வெளிவரும் போபெஸ் சஞ்சிகை இலங்கையின் அரசியல் வாதிகளில் முதல் பத்துப் பணக்காரர்களின் விவரத்தை 2018ஆம் ஆண்டு வெளியிட்டது.

மகிந்த ராஜபக்ச, அர்ஜூன ரணதுங்க, மைத்திரிபால சிறிசேன, ஆறுமுகம் தொண்டமான், கருணா அம்மான், ஏ. எச்.பௌசி, சந்திரிகா, அனுரகுமார திசாநாயக்க, ஏ.எல்.எம் அதாவுல்லா, ரணில் ஆகியோர் அதில் முறையே இடம்பெற்றனர். இந்தத் தரப்படுத்தலில் 8ஆம் இடத்தில் உள்ள அனுரவின் சொத்து 14இலட்சம் அமெரிக்க டொலர்கள் என மதிப்பிடப்பட்டது. இந்த நிலைக்கு ஒரு கொமினிசக் கட்சியின் தலைவரால் வர முடிந்திருக்கிறது. இது விடயத்தில் ரணிலின் ஆதரவு அவருக்கு இருந்ததும், ரணிலுடன் கூட்டுச் சேர்ந்ததன் மூலம் ஜே.வி.பி. பெரியளவில் கொள்கை ரீதியாகப் பின்னடைவைச் சந்தித்ததும் ஜே.வி.பி. ஆதரவாளர்களிடையே சல சலப்பை ஏற்படுத்தியது.

**விமோசனமே இந்தத் தீர்மானம்**

1989ஆம் ஆண்டில் ரோஹணவையும் 60ஆயிரத்துக்கு மேற்பட்ட இளைஞர்களையும் கொன்று குவித்த ஐ.தே.காவுடன் இணைந்து செயற்பட்ட அனுரகுமார என்கிற தற்போதைய தலைமையால் ஜே.வி.பிக்குரிய ஆதரவுத்தளம் அல்லாடியது. இதிலிருந்து பாவ விமோசனம் பெறுவதற்காகவும் மக்கள் மத்தியில் இழந்துவிட்ட அபிமானத்தை மீளப் பெறவுமே ரணில் அரசு மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஜே.வி.பி கொண்டுவந்தது.

கடந்த நான்கரை வருடங்களாக ரணில் அரசு டன் ஒட்டி உறவாடிவிட்டு மீதியாகவுள்ள ஒரு சில மாத காலப்பகுதிக்குள் அரசைக் கவிழ்த்து எதுவும் செய்துவிட முடியாது என்பது அனுர குமாரவுக்கு நன்கு தெரிந்த நிலையிலேயே அவர் இதைத் தனது கட்சியின் மீளெ முச்சிக்காகக் கையிலெடுத்தார். மிகவும் சிக்கலான நிலையிலி ருக்கும் முஸ்லிம் கட்சிகள் அமைச்சுப் பதவிகளை இழந்து நிற்கும் நிலையில் ரணிலுடன் தான் நிற்பார்கள் எனவும் தீர்வுத் திட்டம் தொடர்பாகவும், அபிவிருத்தி வேலைகள் தொடர்பிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பி னரும் ரணிலுடன் தான் நிற்பார்கள் என்பதும் அனுர குமாரவுக்குத் தெரியாததல்ல.

**கூட்டமைப்பினரின் பரிதாப நிலை**

வடக்குக் கிழக்கு மாகாணங்களை இணைக்ககூடாது என நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்த ஜே.வி.பிக்கு 2006ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் வடக்கையும் கிழக்கையும் இணைக்க முடியாது எனும் தீர்ப்பை நீதிமன்று வழங்கியது. தற்போதைய தீர்மானம் மீதான வாக்கெடுப்புக்குக் கல்முனை வடக்குப் பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்தும் விடயத்தைக் கையிலெடுத்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்.

1976 ஆம் ஆண்டில் வட்டுக் கோட்டைத் தீர்மானம் மூலம் தமிழீழம் ஒன்றே தமிழ் மக்களுக்கான தீர்வு என்று உறுதியாகக் கூறிய தமிழ் அரசுக் கட்சி 40 வருடங்களின் பின் வடக்குக் கிழக்கு இணைப்பு என்பதைக்கூட ஏற்படுத்த முடியாதுபோய் ஒரு பிரதேச செயலகமே தற்போதுள்ள தேவை என ரணில் அரசால் தரவிறக்கம் செய்யப்பட்டுள்ளமை தெரிகிறது.

அதேவேளை கூட்டமைப்பின் தலைவர் தன்து நாடாளுமன்ற உரையில் "தமிழ் மக்கள் இந்த அரசை நிராகரித்து விட்டார்கள்" எனக் குறிப்பிட்டதன் மூலம் தமிழ் மக்களின் விருப்பத்துக்க விரோதமாகக் கூட்டமைப்பு வாக்களித்திருப்பது தெரிய வருகிறது. தீர்வுத்திட்டங்கள், போர்க்குற்றங்கள், ஐ.நா தீர்மானங்கள், மக்களின் பிரச்சினைகள் எனப் பல பொறுப்புகள் கூட்டமைப்பின் தலையில் இருந்தாலும் கூட்டமைப்பின் மந்தமான செயற்பாடுகள் இதில் எந்த விடயத்துக்கும் முடிவு காண முடியாத பரிதாப நிலைக்குக் கூட்டமைப்பை உட்படுத்தியிருக்கின்றன.

**ஜே.வி.பிக்குக் கிடைத்த வெற்றி**

இந்தத் தீர்மானம் மூலம் ரணிலுடன் கூட்டுச் சேர்ந்து நிற்பவர்கள் மத்திய வங்கிப் பிணை முறி ஊழல், ஐ. எஸ்.ஐ.எஸ். தாக்குதல்கள் மற்றும் இஸ்லாமிய அடிப்படைவாதப் பிரச்சினைகள், அமெரிக்காவுடனான ஒப்பந்தங்கள் எனப் பல்வேறு முறைகேடான விடயங்களுக்குத் துணை நிற்பவர்கள் எனவும், அதற்கும் தமக்கும் தொடர்பில்லை என்பதையும் தமது ஆதரவாளர்களுக்குக் காட்டுவதில் ஜே.வி.பி. வெற்றியடைந்திருக்கிறது. ரணிலுக்குச் சார்பாக வாக்களித் அனைவரும் அமெரிக்காவின் நிகழ்ச்சி நிரலுக்குத் தலையசைக்க வேண்டிய நிர்ப்பந்தம் காணப்படுகிறது. எஞ்சியுள்ள இந்த அரசின் காலத்துக்குள் தமக்குத் தேவையான ஒப்பந்தங்களை அமெரிக்கா மேற்கொள்ளவிருப்பது தெரிகிறது. அடுத்து வரும் தேர்தல்கள் ரணில் தலைமையிலான கட்சிக்குச் சாதகமாக இருக்கப்போவதில்லை.

இதை முற்கூட்டியே உணர்ந்து, ரணிலிடமிருந்து நழுவி, இதற்கும் தமக்கும் தொடர்பில்லை எனும் நிலையை வெளிக்காட்டி ஒதுங்கியிருக்கிறது ஜே.வி.பி. ரணிலுடன் ஒட்டி நிற்கின்ற கூட்டமைப்பு உட்பட ஏனையவர்கள் இன்னமும் தமது எதிர்கால அரசியல் குறித்துச் சிந்திக்கவில்லை என்பதும் தெரிகிறது. இந்தத் தீர்மானம் ஜே.வி.பிக்கு வெற்றியளிக்காவிடினும் தோல்வியளிக்கவில்லை என்பதை எதிர்காலமே உணர்த்தும்.

அருண்பாக்யா

# தூக்குத் தண்டனையை விட வலியது இலஞ்சமும் ஊழலும்

34 வருடங்களின் பின்னர் இலங்கையில் தூக்குத் தண்டனை நிறைவேற்றப் படவிருப்பதான விவாதங்களும், விமர்சனங்களும் அதிகம் சிலா கிக்கப்படுகின்றன. அரச தலைவர் முன்னெடுத்திருக்கும் சாவுத்தண்டனையை நடைமுறைக்கிடுவதை எதிர்த்து மனித உரிமையாளர்கள் வழங்குத் தொடர்ந்திருக்கிறார்கள். அரச தலைவர் மைத்திரிபால அதை 'நிறைவேற்றியே தீருவேன்' என்று ஒற்றைக்காலில் நிற்கிறார். அதை 'நிறைவேற்ற அனுமதிக்கப்போவதில்லை'' என எதிர்த்தரப்பினரும் ஒற்றைக் காலில் நின்று வாதப் பிரதிவாதங்கள் புரிகின்றனர். நடைமுறைக்கு வரவிருக்கும் இந்தத் தூக்குத் தண்டனை போதைப் பொருள் கடத்தலுடன் சம்பந்தப்பட்டவர்களுக்கு முதலில் வழங்கப்படவிருப்பதாகவும் அவர்களில் ஒருவர் கொழும்பு - மட்டக்குளிப் பகுதியைச் சேர்ந்த சியாமன் பெரரோ என்ற பெண் என்றும் செய்திகள் அடிபடுகின்றன.


### தூக்கிலிடப்படவிருக்கும் போதை வர்த்தகர்கள்

பேதை வர்த்தகத்தில் ஈடுபட்டுத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட 20 பேர் குறித்த தகவல்கள் கசிகின்றன. இதில் 8பேர் தமிழர்கள், 8 பேர் முஸ்லிம்கள், 4பேர் சிங்களவர்கள் என்றும் கூறப்படுகிறது. அந்தப் பட்டியலில் மட்டக்குழியைச் சேர்ந்தவர் என்று குறிப்பிடப்படும் அந்தப் பெயர் உள்ளடக்கப்படவில்லை. போதைப் பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்ட சந்தேகத்தில் கைதாகின்றவர்களில் பலர் ஆடம்பரக் கார்களில் பயணம் செய்பவர்களாகவும், வசதி படைத்தவர்களாகவும், கைத்துப்பாக்கிகள் மற்றும் கொலை ஆயுதங்களை வைத்திருப்பவர்களாகவும் காணப்படுகின்றனர். இதன் உச்சத்தைத் தொட்டவர் அண்மையில் துபாயில் கைதான மாகந்துர மதுஷ். இவரிடம் ஆயிரம் கோடிக்கு மேல் சொத்துகள் உள்ளதாக விசாரணைகளில் கண்டறியப்பட்டது. பெண்களில் சிலரும் இந்தப் போதை வியாபா ரத்தில் ஈடுபடுது கண்டறியப்பட்டுள்ளது இவர்களில் பலர் கைது செய்யப்பட்டுமுள்ளனர்.



### போருக்குப் பின்னர் பிரபல்யம் அடைந்த இலங்கை

போருக்குப் பின்னர் போதைக் கடத்தலில் இலங்கை முக்கிய கேந்திர நிலையமாக மாறிவிட்டது. மிகப் பிரபல்யமான கடத்தல்காரர்கள் பலர் இலங்கையில் அடையாளம் காணப்பட்டுள்ளனர். மாகந்துர மதுஷ், கொஸ்கொட சாஜி, சியாம் நௌசல், புளுமென்றால் சங்க, றிஷ்வான், கஞ்சிப்பான இம்ரான், மொஹமட் நௌபர் அலீவ், ஜீபும்பா, வைன் கிரிபத்தே சுதா, அந்தரேவத்த சாமர, ஒளுமறா, ரத்மனலை ரேகா, போன்ற பலர் இந்தச் சந்தேகத்தில் கைதாகிச் சிறைப்படுத்தப்பட்டனர். இவர்களில் பலர் சிறையில் அடைக்கப்பட்டுள்ள போதும் சிறைக்குள் இருந்தவாறு தமது பேதை வியாபாரத்தை மேற்கொள்வது, கையாள்களை வைத்துத் தமக்கு எதிரானவர்களைச் சுட்டுத் தள்ளுவது போன்றவற்றில் ஈடுபடுவதாகவும் கூறப்படுகிறது. இவர்களைச் சிறைக்குள் அடைத்துள்ளபோதிலும் அவர்கள் மேற்கொள்ளும் போதை வர்த்தக வலைப் பின்னலைத் தடுத்து நிறுத்த முடியவில்லை என்பதே அரசுக்குப் பெரும் தலையிடியாகவுள்ளது. அதன் எதிரொலியாகவே தூக்குத் தண்டைனைக் கயிலெடுத்திருக்கிறார் அரச தலைவர். இந்தச் சந்தேக நபர்களின் குற்றங்களைத் தீர்த்துத் தூக்கிலிட்டுவிடுவதால் பிரச்சனை தீருமா? இது இந்தப் பிரச்சினைக்குத் தகுந்த நிரந்தரத் தீர்வா? என்பது பற்றிய வாதப் பிரதிவாதங்களைப் பலர் எழுப்புகின்றனர்.



### போதைக் கடத்தல்காரரின் இராச்சியம்

போதை வர்த்தகர்களின் வளர்ச்சி எதிர்காலத்தில் மிகவும் மோசமடைந்தால் நாட்டில் இயல்பு நிலை முற்றாகப் பாதிக்கப்பட வாய்ப்புண்டு. கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் மோட்டார் சைக்கிளில் வந்தவர்களால் சுட்டுக் கொல்லப்பட்ட பலரின் சாவுகள் தொடர்பில் இதுவரை எவரும் கைதாகவில்லை. இதை வைத்தே சிறைக்குள் இருக்கும் போதைக் கடத்தல்கார்களின் இராச்சியத்தைக் கட்டுப்படுத்த முடியாத நிலையில் அரசு இருக்கிறது என்பதைப் புரிந்துகொள்ள முடியும். இதைக் கட்டுப்படுத்துவத்கான வழிமுறைகளை அரசு கண்டுபிடிக்க வேண்டும். நடாளுமன்ற உறுப்பினராகவிருந்து தற்போது சிறைக் கைதியாகவிருக்கும் துமிந்த சில்வா (பிரபல போதைப் பொருள் கடத்தல் காரர்) சிறைக்குள் இருந்தவாறு தம்படம் எடுத்து வெளியிட்டிருந்தார். இது பாதாள உலகக் குழு மற்றும் போதைக் கடத்தல் காரர்கள் சிறைக்குள்ளும் செல்வாக்குடன் இருப்பதையே காட்டுகிறது.

### தனியான சிறை வேண்டும்

போதைக் கடத்தல்கார்களுக்கு என்று தனியான சிறை அமைக்கப்பட்டு அது கடுமையாகக் கண்காணிக்கப்பட வேண்டும். இறுக்கமான பல நடைமுறைகளைச் செயற்படுத்தி இந்தக் கைதிகளைக் கையாள வேண்டும். சிறை நிர்வாகத்துக்குள் இலஞ்சமும் ஊழலும் இல்லாத தன்மையைத் தொடர்ந்து மிக இறுக்கத்துடன் பேண வேண்டும். இவ்வாறாகப் போதைக் கடத்தல் கைதிகளைச் சரியாகக் கையாளும் பட்சத்திலேயே அவர்கள் சிறைக்குள் இருந்துகொண்டு வெளியே அரங்கேற்றும் அராஜகங்களைக் கட்டுப்படுத்த முடியும்.

போதை வர்த்தகம் நீளாமலும், தொடராமலும் கட்டுப்படுத்தவும் முற்றுப்புள்ளி வைக்கவும் முடியும். விடுத்துச் சிறைகளில் இலஞ்சமும் ஊழலும் தலைவிரித்தாடுவதைக் கட்டுக்குள் கொண்டுவராமல், அவை மிகுந்து கிடக்கின்ற சிறைகளில் அந்தக் க்திகளை அடைத்து, அவர்கள் வழங்கும் இலஞ்சத்தைப் பெற்றுக்கொண்டு அவர்களுக்கு வசதி வாய்ப்புக்களை வழங்கிப் போதை வர்த்தகம் வெளியே தொடரவும், தலைவிரித்தாடவும் வழிவகை ஏற்படுத்தி விட்டுத் தூக்குத் தண்டனை குறித்து யோசனை செய்வது சரியான தீர்வாக அமையாது.

போதைப் பாவனை மற்றும் அது சார்ந்த குற்றங்களைக் கட்டுப்படுத்தவும் முடிவுக்குக் கொண்டுவரவும் வேண்டுமானால், அதையொட்டிய அனைத்து நடவடிக்கைகளையும் இறுக்கமாக்கினாலே அது சாத்தியமாகிவிடும். இலஞ்சமும் ஊழலும் மலிந்து கிடக்கின்ற இன்றைய சிறைகளில் இந்தக் குற்றவாளிகளை அடைத்து வைப்பதால் மாத்திரம் குற்றச் செயல்கள் குறைந்து விடப்போதில்லை.

சிறைகளில் அலட்சியப் போக்குடன் அடைக்கப்பட்டிருக்கும் இத்தகையானவர்களால் சிறைக்குள் தம்படம் எடுப்பது மாத்திரமன்றி, கைபேசியைக் கையில் வைத்துக்கொண்டு சிறைக்குள்ளிருந்தவாறு வெளியேயும் தமது வலைப்பின்னலைச் செயற்படுத்த முடிவது ஆச்சரியத்துக்குரியதல்ல.

### அரசியல்வாதிகளும் தண்டிக்கப்படுவர்

போதைக் கடத்தல், வர்த்தகக் குற்றவாளிகளைத் தூக்கிலிடுகின்ற நடைமுறை ஆரம்பித்து விட்டால் அரசியல்வாதிகள், உயரதிகாரிகள் எனப் பல தலைகளையும் அது குறி வைப்பதாக இருக்கும்.

7 அரசியல்வாதிகள் போதைக் கடத்தலில் சம்மந்தப்பட்டிருப்பதாக (ஆளும் கட்சியில் 4பேர் எதிர்க்கட்சியில் 3பேர்) அண்மையில் தெரிவித்தார் அமைச்சர் ராஜித சேனாரத்ன. தமக்கு விரோதமான ஓர் இனத்தை அழிப்பதற்கும் இந்தப் போதைப் பொருள் குறிப்பட்ட மக்கள் மத்தியில் திணிக்கப்படலாம்.

### இலங்கையில் தூக்கு

1956ஆம் ஆண்டில் பண்டாரநாயக்கா தூக்குத் தண்டனையை நீக்கினார். அவர் புத்தரகித்தர தேரோவால் சுட்டுக் கொல்லப்பட்ட பின்பு 1959ஆம் ஆண்டில் சிறிமாவோ பண்டாரநாயக்கா மீண்டும் அதைக் கொண்டுவந்தார். இலங்கையில் குற்றவாளிகளைத் தூக்கிலிடும் வழக்கம் 1976 ஜுன் 23ஆம் திகதியுடன் நிறுத்தப்பட்டது. பெரும் குற்றங்களில் ஈடுபட்டுச் சாவுத் தண்டனைத் தீர்ப்பளிக்கப்பட்டாலும், அது ஆயுள் தண்டனையாக, வாழ் நாள் சிறையாகவே கடைப்பிடிக்கப்படுகிறது. 1999ஆம் ஆண்டு மார்ச் மதாத்தில் சந்திரிகா தூக்குத் தண்டனையை நடைமுறைப்படுத்த முயன்றபோது மக்களின் எதிர்ப்புக் காரணமாக அது கைவிடப்பட்டது. 2001 ஜனவரி மாதத்தில் தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டணையாக மாற்றப்பட்டது. 2004ஆம் ஆண்டு நவம்பர் 19ஆம் திகதி உயர் நீதிமன்ற நீதியராசன சரத் அம்பே பிட்டிய துப்பாக்கி தாரிகளால் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து அன்றைய அரச தலைவர் சந்திரிகா தூக்குத் தண்டப்யை நடைமுறைப்படுத்த முற்பட்டார்.

### மைத்திரிபாலவின் நகர்வு

தூக்குத் தண்டனையைத் தீர்மானிக்கும் அதிகாரம் நீதிபதிகள், சட்டமா அதிபர் நீதி அமைச்சர் ஆகியோருக்கு இருந்தபோதிலும் அதை நிறைவேற்றுவதற்கான இறுதி அதிகாரம் அரச தலைவருக்கு மட்டுமே உண்டு. "தூக்குத் தண்டனையை நான் தீர்மானிக்கவில்லை அவர்களது குற்றங்களை விசாரித்த நீதிபதிகளே தீர்மானி தித்தர்காள்'' என்று குறிப்பிடுகிறார் இன்றைய அரச தலைவர் மைத்திரிபால. போதைக் கடத்தலுக்காகத் தூக்குத் தண்டனை வழங்கிய நாடுகள் பலவற்றையும் அவர் உதாரணம் காட்டுகிறார். பிலிப்பைன்சில் போதைக் கடத்தல் காரர்கள் என்பதற்கு அப்பால் சென்று போதை பாவித்தவர்கள் என அடையாளம் காணப்பட்ட 28ஆயிரம் பேருக்குச் சாவுத் தண்டனை வழங்கப்பட்டதாகக் குறிப்பிடு கிறார். "ஒரு மனிதனைக் கொல்வதற்கு ஐக்கிய தேசியக் கட்சியில் இடமில்லை" எனக் கூறுகிறார் தலைமை அமைச்சர் ரணில். ஆனால், ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் தமிழருக்கு எதிராக 1956, 1977, 1983 ஆகிய காலப்பகுதிகளில் நடந்த இனப் படுகொலைகள், வடக்ககு கிழக்கில் நடந்த சுற்றி வளைப்புப் படுகொலைகள் என ஐக்கிய தேசியக் கட்சி நிகழ்த்தியவற்றைத் தவிர்த்து இந்த விடயத்தை அவர் அணுகிறார். எது எவ்வாறிருப்பினும் மனிதக் கொலைகளைத் தவிர்ப்பதால் மாத்திரமே தம்மை ஒரு நாகரீகமான மக்களாக நிலை நிறுத்த முடியும்.

ஆனால், அரச தலைவரின் இந்தத் தூக்குத் தண்டனைத் தீர்மானத்தை எதிர்ப்பவர்களில் பெரும்பாலானவர்கள் இந்த அர்த்தத்தில் அதை எதிர்க்காவில்லை. அத்தோடு பேதைப் பாவனையால் சீராழிந்தவர்களை விட, அதனால் செல்வந்தர் ஆனவர்களின் பலமே சமூகத்தில் அதிகம். இதனால், மைத்திரிபால சிறிசேன இந்த விடயத்தில் மிக எளிதாக ஓரம் கட்டப்படவும் வாய்ப்புண்டு. இலங்கையைப் பொறுத்தவரை இலஞ்சம், ஊழலைக் கட்டுப்படுத்தினால் ஏனைய பல சமூகப் பிரச்சினைகள் தவிர்க்கப்பட வாய்ப்புண்டு என்பதும் நிதர்சனமானதே.

டினேசன் றெமூந்துப்பிள்ளை

# சின்னமுத்து வியாதியிலிருந்து விடைபெறும் இலங்கை!



இலங்கையிலிருந்து சின்னமுத்து நோய் ஒழிக்கப்பட்டு விட்டதாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. உலக சுகாதார நிறுவனம் இது குறித்த அறிவிப்பைக் கடந்த செவ்வாய்க்கிழமை விடுத்திருக்கிறது. இதன் பிரகாரம், சின்னமுத்து நோயை ஒழித்த நாடுகளின் பட்டியலில் இலங்கையும் இணைக்கப்பட்டிருக்கிறது. தெற்காசியப் பிராந்தியத்தில் பூட்டான், மாலைதீவு மற்றும் கிழக்குத் தீமோர் ஆகிய நாடுகள் சின்னமுத்துவிலிருந்து ஏலவே விடுபட்ட நிலையில் சின்னமுத்துவை ஒழித்த நான்காவது தெற்காசிய நாடாக இலங்கை தன்னைப் பதிவு செய்திருக்கிறது.

**சுகாதாரப் பணிப்பாளரின் கருத்து**

மேற்படி சுகாதார அடைவு மட்டச் சாதனை தொடர்பில் கருத்து வெளியிட்டிருக்கும் உலக சுகாதார நிறுவனத்தின் தெற்காசியப் பிராந்தியப் பணிப்பாளர் பூனம் ஹேற்றபால் சிங், சின்னமுத்துத் தொற்றுக்குள்ளாகுபவர்கள்; உலகளாவிய ரீதியில் அதிகரிப்பைக் காட்டியிருக்கும் நிலையில், இலங்கை அதை ஒழிப்பதில் சாதித்திருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார். இந்த அடைவு மட்டத்தை எய்துவதற்கு இலங்கையின் சுகாதாரத்துறை கையாண்ட முயற்சிகளையும் அவர் பாராட்டியிருக்கிறார். சுயாதீனமான உறுதிப்படுத்தும் குழு ஒன்றினால் சின்னமுத்து நோயை ஒழிப்பது தொடர்பான தகவல்கள் ஆராயப்பட்டும் மற்றும் நோயைக் கட்டுப்படுத்துவதற்காக நடைமுறையில் உள்ள நடவடிக்கைகள் தொடர்பிலும் ஆராய்ந்தே இந்த அறிவிப்பு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. இலங்கையில் கடைசியாக 2016ஆம் ஆண்டு மே மாதத்தில் உள்நாட்டளவில் பரவக்கூடிய சின்னமுத்து நோயாளர் இனங்காணப்பட்டதாக குறிப்பிடும் உலக சுகாதார நிறுவனம், அதன் பின்னர் கடந்த மூன்றாண்டு காலப்பகுதியில் அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தொற்றுக்குள்ளான சிலர் காணப்பட்டதாகவும் அவர்கள் உடனடியாகவே இனங்காணப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டதாகவும் குறிப்பிடுகிறது.

**சின்னமுத்து நோய்**

அதிகளவில் சிறு பராயத்தினரை இலக்கு வைக்கும் சின்னமுத்து வியாதி, ஒரு வகை வைரஸினால் பரவுகிறது. பாதுகாப்பான வினைத்திறனான தடுப்பூசி மூலம் கட்டுப்படுத்தக்கூடிய சின்னமுத்து நோய் உலகளாவிய ரீதியில் பல சிறார்களின் சாவுக்குக் காரணமாக இருந்து வருகின்றது.

இந்த நோயிலிருந்து சிறுவர்கள் பூரணமாக குணமடைந்தாலும் சில சிறுவர்களில் பெரிய பின்விளைவு களை தோன்றுவிக்கிறது. நேரடித் தொடுகை மற்றும் சின்னமுத்து நோயாளிகளின் சளி மற்றும் தொண்டைச் சுரப்புக்களிலிருந்தோ அல்லது சுவாசப்பாதையூடாகவோ இந்த நோய் தொற்றலாம்.

சுவாசத்தொகுதியுடன் சார்ந்த நிணநீர் முடிச்சுக்கள் இந்த நோயினால் பாதிக்கப்பட்டு வைரீமியா நிலை தோற்றுவிக்கப்படும். காது சார்ந்த, சுவாசத்தொகுதி சார்ந்த மற்றும் மூளை சார்ந்த பாதிப்புக்களை இந்த நோய் உருவாக்கும். சின்னமுத்து நோயின் குணங்குறிகள் சாதாரண இன்புளுவன்சா காய்ச்சலுக்குரிய அடிப்படை அறிகுறிகளைக் கொண்டிருந்தாலும் தோலில் தோன்றும் மாகோபபியுலர் தழும்புகள் சின்னமுத்து நோய்க்குரிய சிறப்பு அறிகுறியாகும்.





**இலங்கையின் தேசிய நிர்ப்பீடனமாக்கல் நிகழ்ச்சித் திட்டம்**


2020ஆம் ஆண்டில் இலங்கையிலிருந்து சின்னமுத்து நோயை முற்றாக ஒழிப்பதை இலக்காகக் கொண்டு நடத்தப்பட்ட தேசிய நிர்ப்பீடன மாக்கல் நிகழ்ச்சித் திட்டத்தின் காரணமாக இந்த நோய்த் தொற்றுக் குறைவாகவே காணப்பட்டு வந்ததாகக் குறிப்பிடப்படுகிறது. 1984ஆம் ஆண்டில் இருந்து தடுப்பூசி அறிமுகப்படுத்தப்பட்டதன் பின் இந்த நோய்த்தொற்று குறைவ டைந்திருந்தது. எனினும் 19902000 ஆண்டு காலப்பகுதியிலும் பின்னர் 20132015 காலப்பகுதியிலும் தொற்றுக்கள் அதிகரித்திருந்தது. குறித்த காலப்பகுதியில் ஏற்பட்ட தொற்றுக்களை அடுத்து, தடுப்பூசி வழங்கும் திட்டமானது மாற்றியமைக்கப்பட்டது. நோயை ஒழிப்பது தொடர்பாகக் கையாளப்பட்ட உத்திகளில், தடுப்பூசிகளை வழங்குவதன் மூலம் சனத்தொகையில் உயர்ந்தளவு நிர்ப்பீ டனத்தினை ஏற்படுத்தியதுடன் அது தொடர்ந்தும் பேணப்பட்டது. இந்த நோய்த்தொற்று சந்தேகிக்கப்பட்ட எல்லா இடங்களிலும் நோய்க்கண்காணிப்பு பலப்படுத்தப்பட்டதுடன் ஆய்வுகூட உறுதிப்படுத்தலையும் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டது. நோய் தொடர்பில் பாதிக்கப்பட்டவர்களை இனங்காண்பதற்கும் துரித நடவடிக்கை எடுப்பதற்கும் சுகாதார மற்றும் பொதுச் சுகாதார அதிகாரிகள் இணைந்த செயல் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது.

**எம்.எம்.ஆர். தடுப்பு மருந்து**

சின்னமுத்து நோயைத் தடுப்பதற்காக வழங்கப்பட்டுவரும் எம்.எம்.ஆர். தடுப்பூசியானது இரண்டு மருந்து வழங்கல் தடவைகளைக் கொண்டிருக்கிறது. முதல் மருந்து வழங்கலானது குழந்தை பிறந்து 9ஆம் மாதத்தில் வழங்கப்படும். இரண்டாம் மருந்து வழங்கலானது, முன்பள்ளிப் பருவத்தில் 3 வயது பூர்த்தியடையும் போது வழங்கப்படுகிறது. குறித்த தடுப்பு மருந்தினைப் பெறாத குழந்தையானது குறித்த நோய்க்கு பாதுகாப்பற்ற நிலைக்குரியதாகக் காணப்படுவதுடன் இலகுவாக தொற்றுக்குள்ளாகும் அபாயத்தினையும் கொண்டிருக்கிறது.

இலங்கையில் அறிவிக்கப்படவேண்டிய நோயாக வகைப்படுத்தப்படும் சின்னமுத்து நோய்த் தொற்றுக் காணப்படுமிடத்து நோய்த்தடுப்பு தொடர்பான அரச அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட வேண்டியது சட்டத்தின் பிரகாரம் கட்டாயமானதாகும். உள்நாட்டளவில் நேரக்கூடிய சின்னமுத்து தொற்றுக்களுக்குச் சாத்தியம் குறைவான நிலையில், வெளிநாடுகளிலிருந்து குறிப்பாகச் சின்னமுத்து நோய்த்தொற்று காணப்படும் நாடுகளிலிருந்து வருவோர் தொடர்பில் அவதானமாக இருத்தல் வேண்டும். அரச மற்றும் தனியார் துறை சுகாதாரத் தரப்பின் அர்ப்பணிப்புடன் எட்டப்பட்டிருக்கும் இந்த சின்னமுத்து ஒழிக்கப்பட்ட நிலை, வரவேற்புக்குரியது. இந்த நிலைவரத்தைத் தக்க வைப்பதற்குச் சுகாதார அமைச்சு மற்றும் அதன் தொற்றுநோய் விஞ்ஞானப் பகுதியினர் எடுக்கும் முயற்சிகளுக்கு ஒத்துழைப்பது நம் அனைவரினதும் கடமை.

> **சின்னமுத்து நோயை தடுப்பதற்காக வழங்கப்பட்டு வரும் எம்.எம்.ஆர். தடுப்பூசியானது இரண்டு மருந்து வழங்கல் தடவைகளைக் கொண்டிருக்கிறது. முதல் மருந்து வழங்கலானது குழந்தை பிறந்து 9ஆம் மாதத்தில் வழங்கப்படும். இரண்டாம் மருந்து வழங்கலானது, முன்பள்ளிப் பருவத்தில் 3 வயது பூர்த்தியடையும் போது வழங்கப்படுகிறது.**



# முகப்புத்தக நிறுவனத்துக்கு ரூ.10 லட்சம் கோடி தண்டம்

பயனாளிகளின் இரகசியத் தகவல்களைத் திருடியமைக்காக முகப்புத்தக நிறுவனத்துக்கு இலங்கை மதிப்பில் சுமார் 10 லட்சம் கோடி ரூபா குற்றப்பணமாக விதிக்கப்பட்டது.

சமூக வலைத்தளங்களில் பயனாளர்கள் இன்றளவும் அதிகம் விரும்புவது முகப்புத்தகத்தைத்தான். இதன் மூலம் புதிய நண்பர்களை உருவாக்கவும், தங்கள் வர்த்தகத் தேவைகளை விரிவுப்படுத்தவும் உலகில் பலரும் முனைப்புக் காட்டுகின்றனர். இந்த நிலையில் 'கேம்பிரிட்ஜ் அனலெட்டிகா' எனும் அரசியல் ஆலோசனை நிறுவனத்துக்கு முகப்புத்தகப் பயனாளர்களின் இரகசியத் தகவல்களைத் திருடிக் கொடுத்ததாக முகப்புத்தக நிறுவனம் மீது முறைப்பாடு தெரிவிக்கப்பட்டது. இதை அந்த நிறுவனமும் ஏற்றுக்கொண்டதை அடுத்து இலங்கை மதிப்பில் சுமார் 10 லட்சம் கோடி ரூபா குற்றப்பணம் விதிக்கப்பட்டது.

ஒரு தொழில்நுட்ப நிறுவனத்துக்கு எதிராக இவ்வாறு பெரும்தொகை குற்றப்பணம் விதிக்கப்படுவது வரலாற்றில் இதுவே முதன்முறை. இந்தத் தொகை முகப்புத்தக நிறுவனத்தின் கடந்த ஆண்டு வருமானத்தில் வெறும் 9 வீதமேயாகும்.

'எனின் ஒட்டுமொத்த இலாபம்...'

# ஏவுகணைத் தடுப்புக்கவண் துருக்கியிடம் ஒப்படைப்பு

அமெரிக்காவின் கடும் எதிர்ப்பையும் மீறி ரஷ்யாவிடம் துருக்கி கொள்முதல் செய்த அதிநவீன ஏவுகணை தடுப்பு கவண் நேற்று முன்தினம் துருக்கித் தலைநகர் அங்காராவில் ஒப்படைக்கப்பட்டது.

துருக்கி நாட்டின் வான் எல்லையைப் பாதுகாக்கும் வகையில் ரஷ்யாவிடம் இருந்து அதிநவீன எஸ்400 ஏவுகணைத் தடுப்புக் கவணைக் கொள்முதல் செய்ய துருக்கி அரசு ஒப்பந்தம் செய்தது. இதற்கு அமெரிக்கா கடும் எதிர்ப்புத் தெரிவித்தது.


இந்த ஒப்பந்தத்தைத் தொடர்ந்தால் எப்35 ரக போர் வானூர்தித் தயாரிப்பில் துருக்கிக்கு அளித்துவரும் முன்னுரிமையைக் கைவிடுவோம் என்று அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் மிரட்டல் விடுத்திருந்தார். எனினும் அமெரிக்காவின் மிரட்டல்களைப் பொருட்படுத்தாமல் ஏவுகணைத் தடுப்புக் கவண்களைப் பெற்றது துருக்கி.

'இமாலய நடவடிக்கை...'



ரவுண்ட் த வேள்ட்

தொகுப்பு
பிரகாஸ்




# ட்ரம்ப் நேர்மையானவர் அல்லர்

## கருத்துக் கணிப்பில் தகவல்

அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தீர்க்கமான முடிவுகளை எடுப்பவர். ஆனால் நேர்மையானவர் அல்லர் என்று கருத்துக் கணிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குடியரசுக் கட்சியினர் மற்றும் ஜனநாயக் கட்சியினர் பங்கேற்ற இந்தக் கருத்துக் கணிப்பின் பொதுமைப்படுத்தப்பட்ட தகவலின்படி 66 வீதமானோர் ட்ரம்ப் நேர்மையானவர் அல்லர் என்கின்றனர்.

'ஏவ்வாறு நம்பும் வடகொரியா...'



காளைகளை அடக்கும் திருவிழா கடந்த சில நாள்களுக்கு முன்னர் ஸ்பெய்னின் தலைநகர் மட்ரிட்டில் இடம்பெற்றது. இந்தத் திருவிழா அந்த நாட்டின் பாரம்பரியப் பண்டிகைகளில் ஒன்றாகவும் கலாசாரமாகவும் கருதப்படுகிறது.

# பிரிட்டனின் எண்ணெய்க் கப்பலை கைப்பற்ற முயற்சித்ததா ஈரான்?

பிரிட்டன் எண்ணெய்க் கப்பல்களை ஈரான் இராணுவப் படகுகள் கைப்பற்ற முயற்சித்ததாக அமெரிக்கா வெளியிட்ட தகவலால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

இங்கிலாந்து நாட்டின் எண்ணெய்க் கப்பல் பிரிட்டிஷ் ஹெரிட்டேஜ். இந்தக் கப்பல் பாரசீக வளைகுடா பகுதியில், ஹோர்முஜ் ஜலசந்தி வழியாகச் சென்றபோது, அதை ஈரான் இராணுவத்துக்குச் சொந்தமான 5 படகுகள் கைப்பற்ற முயற்சி செய்தன என்று அமெரிக்க ஊடகங்களில் செய்தி வெளியாகி உள்ளது.

ஏற்கனவே பாரசீக வளைகுடாப் பிராந்தியத்தில் கடந்த மே மாதத்தில் இருந்து வெளிநாட்டு எண்ணெய் கப்பல்களை ஈரான் தாக்கியதாக அமெரிக்கா குற்றம் சாட்டிய நிலையில், இந்தச் செய்தி பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. ஆனால் பிரிட்டன் எண்ணெய் கப்பல்களைத் தங்கள் ராணுவப் படகுகள் கைப்பற்ற முயற்சித்ததாக வெளியாகி உள்ள செய்தியை ஈரான் திட்டவட்டமாக மறுத்துள்ளது.

'நாடகங்கள் அரங்கேற்றம்...'



# ஜெகத்கஸ்பார்


## ▶ வானலையில் தவழ்ந்தவர்
## ▶ ஈழத்தவர்கள் மனதில் வாழ்பவர்



■ தேவநாயகம் தேவானந்த்

## வானலையில் தமிழ் ஒலி- 9
## வெரித்தாஸ் வானொலி

வெரித்தாஸ் வானொலியின் முக்கியமான நிகழ்ச்சிகளில் ஒன்றாகக் கணிக்கப்படுவது 'உறவுப் பாலம்' என்கிற நிகழ்ச்சியாகும். போர்க் காலத்தில் தாயகத்தில் உள்ள மக்களுக்குத் தாயகத்துக்கு வெளியே உள்ள தமது உறவுகளுடன் எந்தத் தொடர்பும் இருக்கவில்லை. அவ்வாறான தொடர்புக்கான வாய்ப்புக்களும் இல்லை. இந்தச் சந்தர்ப்பத்தில் பிரிந்திருக்கும் உறவுகள் வெரித்தாஸ் வானொலிக்குத் தமது இருப்புத் தொடர்பாகக் கடிதம் எழுதுவார்கள். அந்தக் கடிதங்கள் வெரித்தாஸ் வானொலியில் வாசிக்கப்படும். அதனூடாக உறவு களுக்கிடையில் தகவல்கள் பரிமாறப்படும். இவ்வாறு உறவுகளுக்கிடையில் உறவை மீள ஏற்படுத்திக் கொடுத்த பெரும் பணியையும் வெரித்தாஸ் வானொலி செய்து வந்தது. இந்த நிகழ்ச்சி பின்னர் இலங்கை வானொலியாலும் மற்றும் பல தனியார் வானொலிகளாலும் பிரதி பண்ணப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.




### யாழ்ப்பாணத்தில் வானொலி நேயர் மன்றம்

இலங்கைத் தமிழர்கள் வெரித்தாஸ் வானொலியின் தமிழ்ச் சேவையை தங்கள் வாழ்வின் ஓர் அங்கமாகவே பார்த்தார்கள். புத்துணர்வூட்டுவதற்காகவும், தங்கள் தாய்நாட்டோடு தங்கள் உறவை நிலைநிறுத்துவதாகவும் உணர்ந்தார்கள். இதனால் வெரித்தாஸ் வானொலியுடன் கடிதத் தொடர்புகளை ஏற்படுத்தினார்கள்.

இந்தப் தொடர்பால் யாழ்ப்பாணத்தில் வானொலி நேயர் மன்றம் அமைக்கப் பட்டதையும் அறிய முடிகிறது. 1976ஆம் ஆண்டு முதல் பிலிப்பைன்ஸ் நாட்டி லிருந்து ஒலிபரப்பான வெரித்தாஸ் வானொலியின் தமிழ்ப்பணி நிகழ்ச்சியைத் தொடர்ந்து கேட்டுக் கடிதங்கள் எழுதியும், நிகழ்ச்சிக்கு ஆக்கங்கள் அனுப்பியும் வந்தவர் சண்முகநாத சர்மா உமாக்காந்தன்.

அவரது இந்தத் தொடர்பு காரணமாக வெரித்தாஸ் வானொலியின் தமிழ்ப் பணி ஒலிபரப்புக்குப் பொறுப்பாளராக இருந்த திரு. எம். ஏ. சுவாமியுடன் (மடலைமுத்து ஆரோக்கியசாமி) தொடர்பு கிடைக்கிறது. வெரித்தாஸ் தமிழ்ப்பணி ஒலிபரப்பை மக்கள் மத்தியில் பரவச் செய்யும் முயற்சியாகத் தமிழ் ஒலி வானொலி நேயர் மன்றத்தை ஆரம்பிக்கிறார். திரு. சுவாமி இந்த ஆயத்தக் கூட்டங்கள் பற்றி வெரித்தாஸ் வானொலியில் தமிழ்ப்பணி நிகழ்ச்சியில் அறிவிப்புச் செய்தார்.



தமிழ் ஒலி வானொலி நேயர் மன்றம் 1981 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டது. பொதுவாக வானொலி ஒலிபரப்புகளையும் சிறப்பாகத் தமிழ் வானொலி ஒலிபரப்புகளையும் மக்கள் மத்தியில் பரவச் செய்யும் நோக்கத்துடன் இந்த மன்றம் ஆரம்பிக்கப்பட்டது. மன்றத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் 1981ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 14ஆம் திகதி சனிக்கிழமை யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியிலுள்ள தனியார் நிறுவனமொன்றின் அலுவலகக் கட்டடத்தில் நடைபெற்றது. மன்றத்தின் அமைப்புச் செயலாளராக உமாகாந்தனும், தலைவராக திருமதி அமிர்தா மகிந்தாவும், துணைத் தலைவர்களாக ஏ. என். யோகநாதன் மற்றும் அருட்சகோதரி லில்லி ரீட்டா ஆகியோரும், பொருளாளராக திரு. ஜெயராமனும், துணைப் பொருளாளராக பட்ரிக் அந்தோனிபிள்ளையும் தெரிவு செய்யப்பட்டனர்.

### பரவலடைந்த செயற்பாடு

வானொலி நேயர் மன்றத்துக்குப் பத்து உறுப்பினர் கொண்ட செயற்குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது. மாதமொரு தடவை கூட்டங்கள் நடைபெற்றன. அந்தக் கூட்ட விவரங்களை உமாகாந்தன் வெரித்தாஸ் தமிழ்ப்பணிக்கு அனுப்ப, திரு எம்.ஏ. சுவாமி அதை ஒலிபரப்பினார் என்று அறிய முடிகிறது. அந்த அறிவிப்பைக்கேட்டு மேலும் பலர் தாங்களாகவே உறுப்பினராகச் சேர்ந்ததாகவும் அறியமுடிகிறது. இலங்கையின் பல பகுதிகளில் இருந்தும், தமிழ் நாட்டிலிருந்தும் பலர் கடிதங்கள் எழுதி தங்களை மன்றத்தில் இணைத்துக்கொள்ளுமாறு கேட்டனர். இந்த மன்றம் தமிழ் ஒலி என்ற வானொலிக்கான சஞ்சிகையையும் வெளியிட்டு வந்தது. தமிழ்ஒலி சஞ்சிகைக்கு பி.பி.சியின் சங்கரண்ணாவும் வெரித்தாஸ் வானொலியும் ஆதரவு நல்கியிருந்தனர்.

### மனதில் இடம்பிடித்த ஜெகத்கஸ்பார்

வெரித்தாஸ் வானொலியென்றதும் ஈழத்தவர் மனதில் வருபவர் அதன் தமிழ்ச் சேவைப் பொறுப்பாளராகவும் அறிவிப்பாளராகவும் இருந்த வண பிதா ஜெயத்கஸ்பார் எனலாம். அவர் உலகெங்கும் சென்று ஈழவிடுதலைக்காக ஆதரவு தேடியவர். துணிச்சலாக ஈழப்போராட்டம் பற்றி வானொலியிலும் நேரிலும்; பேசியர். வெளிப்படையாக ஈழ ஆதரவு நிலைப்பாட்டைக் கொண்டிருந்தவர். அவரது பணி அளப்பெரியது. ஈழத்தவர்கள் போர் நெருக்கடியில் வாழ்ந்த காலகட்டங்களில் வெரித்தாஸ் வானொலியில் பணியாற்றியவர் ஜெகத்கஸ்பார். பரந்த ஈழத்து நேயர் மத்தியிலும் உலகத் தமிழ் நேயர் மத்தியிலும் வானொலியூடாக மிகப்பிரபலமானவர். இதை அவரே குறிப்பிடுகிறார். அவர் வெரித்தாஸ் வானொலியில் ஏழு ஆண்டுகள் பணியாற்றிப் பின்னர் அதிலிருந்து வெளியேறிச் சென்னையில் தமிழுக்காகப் பணியாற்றினார். ; கருணாநிதி ஆட்சிக்காலத்தில் 'சென்னைச் சங்கமம்' என்ற பிரமாண்டமான நாட்டுப்புறக்கலை நிகழ்வை நடத்துவதற்குப் பொறுப்பாக இருந்தார். அதனூடாக தமிழக மக்கள் மத்தியில் பிரபலமாகியிருந்தார் எனலாம்.

### தமிழ்ப் பணியிலும் ஈடுபாடு

"வெரித்தாஸ் தமிழ்பணி என்னை உலகெங்கும் பரந்து வாழும் தமிழர்களுக்கு அறிமுகப்படுத்தியது. குறிப்பாகப் புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்களுக்கு எனக் கூறலாம். திருவாசகமும், சென்னைச் சங்கமமும் தமிழக மக்களுக்கு என்னை அறிமுகப்படுத்தின" என்று ஜெகத்கஸ்பார் செவ்வி ஒன்றில் குறிப்பிடுகிறார். ஜெகத்கஸ்பர் தமது இலங்கை நேயர்களின் கடிதங்களைக்கூட இன்றும் நினைவில் வைத்துக் குறிப்பிடு கிறார். "கழுவாஞ்சிக்குடி ஒந்தாச்சி மடம் காந்தகுமார் ஆகட்டும், அண்மையில் படுகொலைச் செய்யப்பட்ட தர்மரத்தினம், வவுனிக்குளத்தில் இருந்து எழுதிய பேதுரு பிள்ளை ஆகியோர் எழுதிய கடிதங்கள் இன்றும் எனது மனதில் நிழலாடுகின்றன." என்று குறிப்பிடுகிறார்.

வணபிதா ஜெகத்கஸ்பார் தனது வானொலிப் பணியை மனச்சாட்சியின் கடமையாகவும் வாழ்வுக் கடமையாகவும் மற்றும்; ஆன்மீகக் கடமையாகவும் செய்து வந்ததால் பலரது மனதிலும் உள்ளார் எனலாம். அவர், புலிகளுடன் நெருங்கிய தொடர்பையும் கொண்டிருந்தார். பின்னாளில் இறுதிப் போர்க் காலத்தில் போர் நிறுத்தம், சரணடைதல் தொடர்பான முன்னெடுப்புக்களுக்காக இந்திய அரசுடன் தொடர்புகொள்வதற்கு விடுதலைப்புலிகள் ஜெகத்கஸ்பார் ஊடாக முயற்சித்தார்கள் என்ற செய்திகளும் உண்டு. கருணாநிதி அரசுடனான நெருக்கம் காரணமாக இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டதாகவும் குறிப்பி டப்பட்டது.

இந்த முயற்சிகள் தோல்வியடைந்து ஈழப் போர் முடிவுக்கு வந்த பின்னர், ஜெகத்கஸ்பார் ஈழஆதரவாளர்களால் விமர்சிக்கப்பட்டார். எது எவ்வாறாயினும் வானலையில் ஒலித்த தமிழ் ஒலியூடாகச் சாதித்த சரித்திர நாயகனாகவே அவரைப் பார்க்கலாம்.

(தொடரும்)

கட்டுரையாளர் மக்கள் இதழியல் இயக்கம், யாழ்ப்பாணம் இலங்கை



வேலை வெட்டி இல்லாமல் நண்பர்களுடன் திரியும் நாயகன், காதலுக்காகப் பஞ்சாயத்துத் தலைவருக்கான தேர்தலில் வேட்பாளராக நின்று, களவாணித் தனத்தால் தலைவராக வெல்வதே 'களவாணி 2' என்று இந்தப் படத்தின் கதையை ஒருவரியிலும் சொல்லி விடலாம்.




**கதை**

கூடப் படித்த நண்பர்கள் லண்டன், அமெரிக்கா என்று வசதியான வாழ்வை மேற்கொள்ள, படிக்காமல், வேலையில்லாமல், அரசனூரை விட்டுப் போகமாட்டேன் என்று வெட்டியாய் ஊர் சுற்றித் திரிகிறார் நாயகன் விமல். ஓவியாவின் ஒற்றை வார்த்தை அவருக்குள் பஞ்சாயத்துத் தலைவர் ஆக வேண்டும் என்ற ஆர்வத்தை ஊட்டுகிறது. ஒரு பக்கம் ஓவியாவின் அப்பா வேட்பாளராகவும், இன்னொரு பக்கம் விமலின் மாமா வேட்பாளராகவும் களம் அந்தப் போட்டியில் இறங்குகின்றனர். இந்தச் சூழலில் விமலும் வேட்பாளராகப் போட்டியிடுகிறார். ஆனால், 4 வாக்குகளைத் தவிர வேறு எவரும் விமலுக்கு வாக்களிக்க மாட்டார்கள் என்கிற அளவுக்கு விமல் விமல் குழு அவமானப்படுகிறது. அசிங்கப்படுகிறது. இந்த நிலையில் விமல் இந்தப் போட்டியில் வெல்வதற்கு விமல் என்ன செய்கிறார், அவரின் காதல் என்ன ஆனது, தேர்தலில் வெற்றி பெற அவர் செய்யும் வியூகங்கள் யாவை? ஆகிய கேள்விகளுக்குப் பதில் சொல்கிறது மீதிக் கதை.

**முதற் பாகத்திலிருந்து சறுக்கல்**

'களவாணி' படத்தை இயக்கிய சற்குணமே இந்த இரண்டாம் பாகத்தையும் இயக்கியுள்ளார். ஆனால், முதல் பாகத்தில் இருந்த புதுமையும் திரைக்கதை நேர்த்தியும் இதில் இல்லை. கதாபாத்திரங்களின் வார்ப்பிலும் இயக்குநர் கோட்டை விட்டிருக்கிறார். 'கில்லி', 'கிரீடம்', 'குருவி' ஆகிய படங்களில் நடித்த விமல் 'பசங்க' படத்தின் மூலம் அறிமுக நாயகன் ஆனார். 'களவாணி' படம்தான் அவருக்கான அடையாளத்தைக் கொடுத்தது. தற்போது அதன் இரண்டாம் பாகம் விமலின் 25ஆவது படமாக அமைந்துள்ளது. அந்த வகையில் விமலுக்கு வாழ்த்துகள். ஒருவிதத்தில் பார்த்தால் இயக்குநர் சற்குணம், விமல், ஓவியாவுக்கு இது முக்கியமான படம். இன்னும் சொல்லப்போனால் மறு வருகைக்கான படம் என்றும் சொல்லலாம். ஆனால், அதை மூவருமே இன்னும் சரியாகப் பயன்படுத்தியிருக்கலாம் என்று கூறுமளவுக்கு இருக்கிறது நிலை. 'களவாணி' படத்தின் தொடர்ச்சியாக 'களவாணி 2' இல்லையென்றாலும் கூட, முதல் பாகத்தின் முக்கிய அம்சங்களை இயக்குநர் சற்குணம் இரண்டாம் பாகத்தில் பயன்படுத்தியுள்ளார்.

**பாத்திரங்கள்**

9 ஆண்டுகளுக்கு முன்னால் வந்த 'களவாணி' படத்தின் அறிக்கி என்ற அறிவழகன் கதாபாத்திரத்தில் விமல் அச்சு அசலாக இப்போதும் பொருந்துகிறார். அதே முகத்தோற்றம், களவாணித்தனம், பொய்யான வாக்குறுதி என்று அறிக்கி கதாபாத்திரத்துக்குப் பாதகம் இல்லாமல் நடித்திருக்கிறார். ஆனால், அதில் எந்தப் புதுமையும் வித்தியாசமும் இல்லாமல் முதல் பாகத்தின் பிரதியாகவே இருப்பதுதான் நெருடல். ஓவியாவுக்கு அதிகம் வேலையில்லை. அழகாக வருகிறார், போகிறார். காதலனைத் தவறாகப் புரிந்துகொள்வது பின் சேர்வது என வழக்கமான கதாநாயகிக்குரிய பங்களிப்பில் குறையில்லாமல் நடித்துள்ளார்.

'ஆனி போய் ஆடி போய் ஆவணி வந்தா என் மகன் அன்னபோஸ்ட் தலைவர்' என்பதையே அட்சரம் பிசகாமல் பேசுகிறார் சரண்யா பொன்வண்ணன். முதல் பாகத்தில் பெரும் வரவேற்பைப் பெற்ற அடுக்கு வசனம் என்பதால் அதையே தருணம் பார்த்துப் பயன்படுத்தியுள்ளனர். அதைத் தவிர சரண்யா பொன்வண்ணனுக்கும் இளவரசுவுக்கும் படத்தில் பெரிய முக்கியத்துவம் இல்லை. மகன் மீதான பிணைப்பையும், வெறுப்பையும் இருவருமே சரியாக வெளிப்படுத்தாத அளவுக்கு திரைக்கதை பலவீனமாக உள்ளது. மயில்சாமி, வினோதினி ஆகியோரும் படத்தில் இருக்கிறார்கள்.

**இசை, ஒளிப்பதிவு**

மாசானியின் ஒளிப்பதிவு அரசனூரின் வளத்தை அழகாகக் காட்சிப்படுத்தியுள்ளது. மணி அமுதவன், வி2, ரொனால்ட் ரீகன் ஆகியோர் இசையில் பாடல்கள் மனதில் தங்கவில்லை. நடராஜன் சங்கரனின் பின்னணி இசை காட்சிகளுடன் பொருந்துகிறது.

**பலம் - பலவீனம்**

முதல் பாகத்தின் தொடர்ச்சியாக இல்லாமல் சில சங்கதிகளை மட்டும் வைத்துப் புது அம்சங்களைச் சேர்த்த விதத்தில் இயக்குநர் சற்குணத்தின் புத்திசாலித்தனம் பாராட்டத்தக்கது. ஆனால், தேர்தல் என்கிற ஒற்றை விடயத்தை வைத்துக்கொண்டு எந்தச் சுவாரஸ்யமும் இல்லாமல் படத்தை நகர்த்தியிருப்பதுதான் சோகம். நகைச்சுவைக் காட்சிகள் எதுவும் எடுபடவில்லை. விக்னேஷ் காந்த், கஞ்சா கறுப்பு சம்பந்தப்பட்ட காட்சிகள் அயர்ச்சியையும் சோர்வையும் வரவழைக்கின்றன. வாக்குக் கேட்டுச் செல்லும்போது எதிரணியினர் கஞ்சா கறுப்பை அள்ளிக் கொண்டு செல்லும் காட்சியில் மட்டும் நகைச்சுவை தெரிகிறது.

தேர்தலில் வெல்வதற்கான விமலின் வியூகங்கள் ஏனோதானோவென்று இருக்கின்றனவே தவிர, புத்திசாலித்தனம் துளியும் இல்லை. தாயன்பனின் எழுத்தில் ஒரு கதையாக இருக்கும் படம் திரைக்கதையாக விரிவடையாமல் கதையின் போக்கிலும், கதாபாத்திர வார்ப்பிலும் மிகவும் சுருங்கிப் போவதால் தடம் தெரியாமல் திணறுகிறது.




# வரலாற்றுச் சந்திப்பு வரலாற்றுத் தீர்வை வழங்கட்டும்!

இரண்டு கொரிய நாடுகளையும் பிரிக்கும், இராணுவம் நீக்கப்பட்ட பகுதிக்குச் சென்ற அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் வரலாறு படைத்துவிட்டார். அமெரிக்க அரசுகளால் எதிரியாகப் பார்க்கப்படும் வடகொரியாவின் நிலத்தில் கால் பதித்த ஒரே அமெரிக்க அதிபர் ட்ரம்ப் என்பதே அந்த வரலாறு. ஒரு மணி நேரத்துக்கும் மேல் நீடித்த ட்ரம்ப் - கிம் ஜோங் உன் இடையேயான இந்தச் சந்திப்பு, பயனுள்ள விளைவுகளைத் தந்தால், கொரிய தீபகற்பத்தில் அமைதி தழுவ அது வழிவகுக்கும்.

**உடன்பாடற்ற பேச்சு**

கொரியத் தீபகற்பத்தில் அணு ஆயுதங்களே இல்லை யென்ற அளவுக்கு அவற்றை அகற்றிவிட நாங்களும் தயார்தான் என்று கொள்கையளவில் குறிப்பிட்டிருக்கிறார் கிம். இதுதான் அமெரிக்காவின் விருப்பமும். ஆனால் இது, எப்போது, எப்படிச் சாத்தியமாகும் என்பதுதான் விடை காணப்பட வேண்டிய கேள்வி. தங்கள் மீது பொருளாதாரத் தடை உட்படப் பல்வேறு தடைகள் விதிக்கப்படாமல் இருக்க, யோங்பியான் நகரில் உள்ள அணு எரிபொருள் உற்பத்திப் பிரிவை மூடிவிடுவதாக வடகொரியத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. அந்த ஓர் இடத்தில் மட்டும் என்றில்லாமல், வெவ்வேறு இடங்களிலும் அணுசக்தி தொடர்பான நிலையங்களை வடகொரியா வைத்திருப்பதால் ஓரிடத்தில் மட்டும் மூடுவதால் பயனில்லை என்று அமெரிக்கா கூறியது. இதனால், அந்தப் பேச்சில் உடன்பாடு ஏற்படவில்லை.



**பேச்சுக்குப் புதிய குழு என்கிற முடிவு**

ஹனோய் நகரில் இரு தரப்பும் சந்தித்துப் பேசியபோது, பேச்சுவார்த்தைகளை எந்த இடத்தில் நிறுத்தினார்களோ அந்த இடத்திலிருந்தே இரண்டு தரப்பும் தொடங்குவது என்ற முடிவை இப்போது இரு தலைவர்களும் எடுத்திருக்கின்றனர். முந்தைய பேச்சில் முன்னேற்றம் இல்லை என்றதும் வடகொரியர்கள் பதற்றம் அடைந்திருந்தனர். அமெரிக்கா வடகொரியப் பேச்சு முட்டுக்கட்டை நிலையை அடையக் காரணம் என்று அமெரிக்க அயலுறவுத் துறைச் செயலர், தென்கொரியத் தலைவர்கள் மீது குற்றஞ்சாட்டினர். இப்போது ட்ரம்பும் கிம்மும் இருதரப்புப் பேச்சுகளுக்குக் குழுவை நியமிக்க முடிவெடுத்திருப்பது நல்ல விடயம்.

இரண்டு தலைவர்களும் இணங்க வேண்டும்

அமெரிக்கா அறிவித்த தடைகளில் ஓரளவையாவது நிறுத்திவைக்க என்னென்ன செய்ய வேண்டும் என்று வடகொரியா மீண்டும் பேச வேண்டும். வடகொரியாவில் உள்ள எல்லா அணு நிலையங்களையும் மூடிவிட வேண்டும் என்று அமெரிக்காவும் விடாப்பிடியாக வற்புறுத்தினால் பேச்சில் தீர்வு ஏற்படுவது கடினம்.

நம்பகமான சூழலை அமெரிக்கா உருவாக்குவதன் வாயிலாகவே படிப்படியாக வடகொரியா அந்த இலக்கை நோக்கி நகர்வதற்கான இடத்தை உருவாக்க முடியும். இரண்டு தலைவர்களும் அப்படி ஒரு நிலையை உருவாக்க வேண்டும்.

நன்றி தி ஹிந்து




### கதை

கிராமம் ஒன்றின் அரச உயர் பாடசாலையின் புதிய தலைமை ஆசிரியராகப் பொறுப்பேற்கிறார் ஜோதிகா. ஒழுங்கில்லாத மாணவர்கள், பொறுப்பில்லாத ஆசிரியர்கள், பாதுகாப்பு இல்லாத பாடசாலைக் கட்டடங்கள் என அங்கு எல்லாமே தவறாக இருப்பதைக் கவனிக்கிறார். அங்கு பணி புரியும் சில ஆசிரியர்கள், உதவித் தலைமை ஆசிரியர் கவிதாபாரதி ஆகியோரின் அலட்சியப் போக்கே இதற்கெல்லாம் காரணம் என்பதை அறிகிறார். உடனடியாகக் கவிதாபாரதியை இடைநீக்கம் செய்துவிட்டு, பாடசாலையைச் சீரமைக்கும் பணியில் அதிரடியாக இறங்குகிறார். இதைத் தொடர்ந்து, உள்ளூர்க் கட்சிப் பிரமுகர், தனியார் பள்ளி தாளாளரால் ஏற்படும் பிரச்சினைகளை எதிர்கொள்கிறார். இந்தத் தரப்பின் சதி வலையில் ஜோதிகா சிக்கிச் சறுக்கு கிறாரா? அல்லது, தான் விரும்பியது போல அரசுப் பள்ளியையும், மாணவர்களையும் முன்னேற்றப் பாதைக்குக் கொண்டு சென்றாரா? இதுவே படத்தின் மீதிக் கதை.

### பாத்திரங்கள்

நேர் சீராக, மிடுக்குடன் புடவை உடுத்தியவாறு 'அறம்' நயன்தாராவை நினைவூட்டினாலும், பொறுப்புள்ள தலைமை ஆசிரியராக, நடிப்பில் உண்மையாகவே ராட்சசியாக மிரட்டியிருக்கிறார் ஜோதிகா. கோபம், பாசம் ஆகியவற்றைத் தேவையான இடத்தில் நன்கு வெளிப்படுத்துகிறார். படம் முழுவதும் விறைப்பாக வலம் வந்து, அத்தனை உணர்ச்சிகளையும் பார்வையிலேயே அநாயாசமாக வெளிக்காட்டி இரசிக்க வைக்கிறார். ஹரீஷ் பெராடி அலட்டல் இல்லாத நடிப்பால் கவனம் ஈர்க்கிறார். கவிதா பாரதி, அருள் தாஸ், பூர்ணிமா பாக்ய ராஜ், ஜோதிகாவின் தந்தையாக வரும் நாகிநீடு, முச்சக்கர வண்டிச் சாரதி மூர்த்தி உள்ளிட்டோரின் கதாபாத்திரத் தன்மையும், அவர்களது நடிப்பும் சிறப்பு. 2ஆம் வகுப்புப் படிக்கும் சுட்டிப் பையனின் சேஷ்;டைகள் ரசிக்க வைக்கின்றன.

### இசை, ஒளிப்பதிவு, வசனம்

ஷான் ரோல்டனின் பின்னணி இசை, மனதுக்கு இதம். சில இடங்களில் மான்டேஜ் பாடல்கள், தேவையற்ற இடைச் செருகல். கோகுல் பெனாய் ஒளிப்பதிவு சிறப்பு. பொறுப்பற்ற மனிதர்கள் சூழ்ந்த, சுகாதாரமற்ற ஒரு பள்ளி, நல்ல தலைமை ஆசிரியரின் வருகைக்குப் பிறகு புத்துயிர் பெறும் காட்சிகள் உயிரோட்டமாக உள்ளன. கதைக்குப் பெரும் அடித்தளம் வசனம். 'குற்ற வாளிகளையும், கூலித்தொழிலாளர் களையும் உருவாக்க பள்ளிக்கூடம் எதற்கு?', என்பது போன்ற இடங்களில் பாரதி தம்பி கவுதம்ராஜின் கூர்மையான வசனங்கள் படத்துக்கு வலுச் சேர்க்கின்றன.

ஜோதிகாவின் இராணுவத் துறை வாழ்க்கைப் பின்னணி, பூர்ணிமாவுக்கும் அவருக்குமான தொடர்பு, தந்தையின் இறுதிச் சடங்குகளை முடித்துவிட்டு அதே நாளில் பாடசாலைக்குப் புறப்பட்டுப் போவது எனச் சில இடங் களில் மட்டும் சினிமாத்தனம்! இந்தியக் கல்விமுறை சரியில்லை என்று குற்றம் சாட்டும் 'ராட்சசி' அதற்கான தீர்வாகத் தகுந்த தீர்வு, யோசனை எதையும் முன்வைக்கவில்லை. ஜோதிகா தவிர, மற்ற அனைத்து ஆசிரியர்களையும் விவரம் இல்லாதவர்களாகக் காட்டுவதும், ஒரே பாடசாலையைச் சுற்றி நாடகத் தனமாக காட்சிகள் நகர்வதும், ஒரு கட்டத்தில் சோர்வைத் தருகின்றன. மாணவ, மாணவியரின் நலனை கருத் தில்கொண்டு ஜோதிகா எடுக்கும் தைரியமான முடிவும், அதற்காகப் படத்தின் இறுதியில் அவர் எதிர்கொள்ளும் நிகழ்வும் வெகுவாகக் கவர்கிறது. பொறுப்பற்ற ஆசிரியர்களுக்கு எதிராகக் கொஞ்சம் மிகையாகவே கண்டிப்பை வெளிப்படுத்தியிருக்கிறார் ஜோதிகா.



## ரசனை

# 'பாஸ்ட் அண்ட் ப்யூரியஸ்: ஹோப்ஸ் ரூ ஷா'




கதாநாயகனைவிட வில்லனைப் பலம் மிக்கவராகச் சித்தரிப்பதில் ஹொலிவூட் சினிமாக்களின் வழக்கம். 'பாஸ்ட் அண்ட் ப்யூரியஸ்' திரைப்படங்களின் வரிசையில் வெளியாக உள்ள 'பாஸ்ட் அண்ட் ப்யூரியஸ்: ஹோப்ஸ் ரூ ஷா' படத்தில் நடுங்கவைக்கும் வில்லனைச் சித்திரிக்கிறார்கள். 'பாஸ்ட் அண்ட் ப்யூரியஸ்' நாயகர்களில் ஹோப்ஸ் (ட்வெய்ன் ஜோன்சன்), ஷா (ஜேசன் ஸ்டாதம்) ஆகிய இரட்டையரை மையமாகக் கொண்டது இந்தப் புதிய படம்.

இந்த வரிசைத் திரைப்படங்களுக்கே உரிய வழக்கமான வாகன விரட்டல்களுடன் விறுவிறுப்பும் நகைச்சுவையுயம் கலந்த புதுவிதமாய் 'ஹோப்ஸ் ரூ ஷா' உருவாகி உள்ளது. ஹாலிவுட் திரைப்படங்களின் பிரபலச் சண்டைக் காட்சி ஒருங்கிணைப்பாளரும் 'ஜோன் விக்' போன்ற சாகசத் திரைப்படங்களை இயக்கியவருமான டேவிட் லீச் இந்தத் திரைப்படத்தை இயக்கி உள்ளார்.





### கதை


கணினி, மரபணுத் தொழில்நுட்ப மாற்றங்களுடன் எவராலும் எதிர்கொள்ள முடியாத புதிய வில்லன் உருவாக்கப்படுகிறான். கொடிய வைரஸ் தொகுப்புடன் பன்னாட்டு அளவிலான மாபெரும் நாசவேலையை அவன் தொடங்குகிறான். அவனை முறியடிக்கும் பொறுப்பு ஹோப்ஸ், ஷா தலைமையிலான குழுவுக்கு வழங்கப்படுகிறது. தங்களுக்குள் ஏழாம் பொருத்தமாய் எப்போதும் முட்டிக்கொண்டிருக்கும் இந்த இரட்டையர்கள் வாய்ப்புக் கிடைக்கும்போதெல்லாம் தங்களுக்குள் வாரிக்கொள்வதும் வில்லனை அழிப்பதற்கான வாய்ப்புகளை இணைந்து உருவாக்குவதுமே கதை.

### பாத்திரங்கள்

வில்லனாக இட்ரிஸ் எல்பா தோன்றுகிறார். ஷாவின் சகோதரியாகவும் எம்16 உளவு அமைப்பின் அதிகாரியாகவும் வெனிசா கெபி வருகிறார். மல்யுத்த மேடைகளில் மல்லுக்கட்டுபவரும் ட்வெய்ன் ஜோன்சனின் உறவினருமான ரோமன் ரெய்ன்ஸ் இந்தப் படத்தில் அவரின் தம்பியாகத் தோன்றுகிறார். இந்தப் படம் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் வெளியாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.



# தென்கிழக்கு திசையில் இருந்து....



அனார்கலி




## பக்தர்கள் படையெடுப்பு

வரலாற்றுப் பிரசித்திபெற்ற கதிர்காம ஆடிவேல் நிகழ்வு இம்முறை வெகு சிறப்பாக ஆரம்பமாகி நடைபெற்றுவரும் நிலையில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் கலந்து கொண்டு வருகின்றனர். இந்த நிலையில் கடந்த ஜூன் 27ஆம் திகதி திறக்கப்பட்ட பாதயாத்திரை செல்வதற்கான குமண காட்டுப்பாதை கடந்த 9ஆம் திகதியுடன் மூடப்பட்டுள்ளது.


இம்முறை இந்தக் காட்டுப்பாதையூடாக 30 ஆயிரத்துக்கு மேற்பட்ட பக்தர்கள் பாதயாத்திரையாகப் பயணித்து உற்சவத்தில் கலந்து கொண்டுள்ளதாக குமண முன்னரங்க பாதுகாப்பு அலுவலகம் தெரிவித்துள்ளது.

மேலும் எதிர்வரும் 18ஆம் திகதி தீர்த்தோற்சவத்துடன் கதிர்காம உற்சவம் நிறைவடைய விருப்பதால் கிழக்கிலுள்ள பல போக்குவரத்துச் சபை பேருந்துச் சாலைகள் கதிர்காம உற்சவத்தக்காக தினசரி சிறப்புப் பேருந்துச் சேவைகளைத் தற்சமயம் அதிகரித்துள்ளன.

இந்தப் பேருந்துகள் மூலம் பெருந்தொகையான பக்தர்கள் கதிர்காமம் சென்றுவரும் அதேவேளை தனியார் வாகனங்களை வாடகைக்கு அமர்த்தியும் பெருந்தொகையானோர் கதிர்காமத்துக்குப் பயணித்து வருகின்றனர்.

**'அரோஹரா' கோசம் ஓங்கி ஒலிக்கட்டும்.**


## போர் அறிவிப்பு



"கண்டியில் பொதுபல சேன அமைப்பு நடத்திய பௌத்தமாநாட்டின்தீர்மானங்கள் சில முஸ்லிம் சமூகத்தினருக்குஎதிரான போர்அறிவிப்புக்கு ஒப்பானது" என ஐக்கிய சமாதானக்கூட்டமைப்பின்செயலர்நாயகமும்முன்னாள் இராஜாங்க அமைச்சருமான எம்.ரி.ஹஸனலி விசனம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில்ஹஸனலிவிடுத்துள்ளஊடகஅறிக்கையில்"நாட்டில்அவசரகாலச்சட்டம்நடைமுறையிலிருக்கும்போது இனவாத மாநாடொன்றுநடந்தேறியிருக்கின்றது" எனவும் கவலை வெளியிட்டுள்ளார்.

**பலமுனை ஆசிர்வாதங்களின் பரிமாணம்**

## ஆடித் திருவிழா

அம்பாறைமாவட்டத்தைச்சேர்ந்தகாரைதீவு மாவடி ஸ்ரீ கந்தசுவாமி ஆலய வருடாந்த ஆடி உற்சவம் மிக விமர்சையாக இடம்பெற்று வருகின்றது.

கடந்த 3ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமான இந்த ஆடி உற்சவம் எதிர்வரும்18ஆம்திகதிதீர்த்தத்துடன்முடிவடையவிருக்கின்றது.

உற்சவசிறப்புப்பூசைகள்மற்றும்நிகழ்வுகளில் தினமும் பெருந்தொகையான பக்தர்கள் கலந்துகொண்டு வருகின்றனர்.

**பக்திப் பரவசம் கொள்வோம்**




## இலங்கை வங்கிகள் முன்பாக!

அம்பாறை மாவட்டத்திலுள்ள இலங்கை வங்கிக் கிளைகள் முன்பாக இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தின் சுவரொட்டிகள் காணப்படுகின்றன.

"ஊழியர்நலன்புரியின்மீதுவரியை அறவிடாதே" அரச வங்கிகளின்ஓய்வூதியப்பிரச்சினையைஉடன்தீர்க்குக" என்பன போன்ற வாசகங்கள் இந்தச் சுவரொட்டிகளில் காணப்படுகின்றன.

**போராடுவோம் போராடுவோம்.**

## இலஞ்சம், ஊழலை ஒழிப்போம்

இலஞ்சம் மற்றும் ஊழலை ஒழிப்பது தொடர்பில் விழிப்பூட்டல் செயமலர்வு ஒன்றை 'கபே' அமைப்பு அம்பாறைமாவட்டத்தில்நடத்தியது. கபேஅமைப்பின் அம்பாறைமாவட்ட இணைப்பாளர்எஸ்.எல்.அப்துல் அஸீஸ்தலைமையில் மாளிகைக்காடுபேன்ஸ்மண்டபத்தில் செயமலர்வுநடைபெற்றது.

ஊடகவியலாளர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்ட இந்தச் செயமலர்வில் கபே அமைப்பின் பதில் பணிப்பாளர் மனாஸ் மக்கீன், இலஞ்சஊழல்ஆணைக்குழுஅதிகாரிரி.எம்.ரி.சம்பத் தென்னக்கோன் ஆகியோர் விளக்க உரைகளாற்றினர்.

**ஒழிப்போம்! ஒழிப்போம்.**






## வருமா அந்த மனநிலை?

இணைந்த வடக்கு- கிழக்கில் தமிழர்களுக்கென ஒரு பிராந்திய சபை அமையும்போதுமுஸ்லிம்களுக்கெனவும் ஒரு தனிப் பிராந்திய சபை அமைய வேண்டுமென 1956ஆம் ஆண்டுதிருமலைமாநாட்டில்தந்தை செல்வா சூளுரைத்தார்.

முஸ்லிம்கள்மீதுஅவர்கொண்டிருந்த இத்தகைய பரிவும் பாசமும் கொண்ட மனநிலை இன்றைய தமிழ்த் தலைமைகளுக்கும் வரவேண்டும்.

இவ்வாறு முன்னாள் இராஜாங்க அமைச்சரும் முஸ்லிம் காங்கிரஸின் பிரதித்தலைவருமானஎச்.எம்.ஹரீஸ் ஆதங்கம் வெளியிட்டார்.

2005ஆம் ஆண்டு முதல் 20 வருட காலங்கள் தமிழ்த் தேசியத்தின் உணர்வோடுமுஸ்லிம்கள்ஒன்றித்து செயற்பட்டதாகக்கூறியஹரீஸ்இதன் அறுவடையை முஸ்லிம்கள் இன்று செய்து வருகின்றனர் எனவும் கூறினார். கல்முனை சாகிறாக் கல்லூரி தேசியப் பாடசாலையில் இடம்பெற்ற பொது நிகழ்வு ஒன்றில் உரையாற்றும் போதே அவர் மேற்படி கருத்தை வெளியிட்டார்.

**முன்னுதாரணமாக கல்முனை வடக்கு தமிழ்ப் பிரதேச செயலக விவகாரத்தில் விட்டுக் கொடுப்பொன்றைச் செய்து காட்டுங்களேன்.**



# ஆச்சிக்குட்டிக்கு வாய்ச்ச மாப்பிள்ளை....!

■ யோ.சாதுரியன்

எங்கும் ஒரே பரபரப்பான பேச்சு. எங்கடை ஊர்ச் சனசமூக நிலைய நிர்வாகத் தெரிவு நடக்கப் போகுது. நாங்கள் அம்பது, அறுபது வரியமா படாதபாடு பட்டு உந்தச் சனசமூக நிலையத்தப் பதியப்பட்ட பாடு கடவுளுக்குத்தான் தெரியும். ஒரு மாதிரிச் சனசமூக நிலையம் எங்கடை ஊருக்க இருக்கலாம் எண்டு உடையாரிட்ட இருந்து அனுமதி வந்திருக்கு. எங்கடை ஊரில கந்தர்தான் ஊர்த் தலைவர். மனிசன் பழைய கட்டை. அந்தாள் ஒரு அப்புக்காத்து. நிண்டு, நிதானிச்சு நல்லதா ஒரு முடிவு எடுக்கும் எண்டு கந்தரப்பற்றி ஊருக்க ஒரு கதை இருக்கு. சனசமூக நிலையத்துக்குப் பேர் வைக்க வேணும். அந்த நேரம் ஆச்சிக்குட்டி தான் எங்கடை ஊரிலை சமூக சேவைகள் செய்யிறதாம். அதனால ஆச்சிக்குட்டியின்ர பேரிலையே சனசமூக நிலையத்தைப் பதிவு செய்தாச்சு. இப்ப சனசமூக நிலையத்துக்கு ஒரு தலைவரையும் கொஞ்ச உறுப்பினர்களையும் தெரிவு செய்யவேணும். எங்கடை ஊரில மூன்று கூட்டம் இருக்கு.

ஒண்டு கந்தர்ர கூட்டம்.

இது ஒட்டியும் வெட்டியும் போற கூட்டம். தங்களுக்குத் தேவையானதை சாதிக்க வேண்டுமெண்டா ஒட்டிப் போகும். தங்களுக்குப் பாதகம் எண்டா வெட்டிப் போகும்.

மற்றது பரமானந்தம் கூட்டம்.

இது பாதகமோ, சாதகமோ ஒட்டிக் கொண்டுதான் இருக்கும்.

மூன்றாவது அம்பலத்தார் கூட்டம் (அம்பாலத்தார் காலமாயிட்டார்).

அம்பலத்தார்கூட்டம்நன்மையெண்டாலும்தீமையெண்டாலும் வெட்டித்தான் போவினம். ஒரு காலமும் ஒட்டிப் போக மாட்டினம். இந்த மூன்று கூட்டத்தாரின்ரை சிபாரிசிலை ஆச்சிக்குட்டி சனசமூக நிலையம் வாறது அம்பலத்தார் ஆக்களுக்கு விருப்பமில்லை எண்டு சொல்லி அவை ஒதுங்கி நிற்க, கந்தர் கூட்டத்துக்கும், பரமானந்தம் கூட்டத்துக்கும் இடையிலை ஆச்சிக்குட்டிக்கு மாப்பிள்ளை ஆரெண்டுற (சனசமூக நிலையத் தலைவர்) போட்டி. தலைவரைத் தெரிவு செய்ய பொதுக்கூட்டம் போடுறதா ஊர்ச்சனம் முடிவெடுத்துது. பொதுக்கூட்டத்துக்கு நாளும் குறிச்சாச்சு. தலைவரா யாரைப் பரிந்துரைக்கிறது எண்டு இரண்டு தரப்பும் முனைப்புடன் செயற்பட்டுது. ஆச்சிக்குட்டிக்குத் தலைவராகிறதுக்குப் பரமானந்தத்துக்கு ஆசைதான். பரமானந்தார் தன்ர கனவு ஆச்சிக்குட்டி தான் எண்டு முதல் சொல்லித் திரிஞ்சவர். அதிலை மனிசனுக்கு ஒரு சின்னப் பிரச்சினை இருந்தது. உடையார் இயக்கிற கொலைச் சங்கத்தில இவரும் ஒரு 'மெம்பரா' இருந்ததால அதிலை இருந்து கொண்டு சனசமூக நிலையத் தலைவர் பதவியிலை நிக்க ஏலாது எண்ட காரணத்தால் தன்ர கூட்டாளி பொன்ராசாவை நிப்பாட்டினார்.

கந்தர் இலேசுப்பட்ட ஆள் இல்லைதானே. அந்த மனிசன் தன்ர சார்பா ஊருக்குள்ள தலைவருக்கு ஆள் பிடிக்காம பட்டணத்திலை இருந்து ஆளக் கொண்டு வந்துது. ஆள் யாரெண்டா அவர்தான் கணபதி!

✦ ✦ ✦ ✦ ✦

கணபதி நல்ல லட்சணமான மனிசன். ஞானப்பழம். அந்தாளின்ரை வாயால தேவாரம், திருவாசகம் தான் வரும் எண்டு எங்கடை ஊர் முழுக்கப் பேச்சு சட்டம்பியார் என்றும் அவரைச்சொல்லுகினம். இப்ப எல்லோருக்கும் வலு சந்தோசம். கந்தர் செய்த பரிந்துரை சரியான ஆள்தான் என ஊருக்க ஒரே புழுகு. உந்தாள் ஆச்சிக்குட்டிக்குத் தலைவராகினால் ஊருக்கு நல்லது நடக்கும் எண்டு சனம் நம்பிச்சுது. பொதுக்கூட்ட நாளும் வந்தது. சனமெல்லாம் ஒன்று கூடி வாசிகசாலைத் தலைவரைத் தெரிவு செய்யிறதில மும்முரமா நிண்டு கணபதிச் சட்டம்பியர், ஆச்சிக்குட்டிச் சனசமூக நிலையத்துக்கு தலைவரானார்!

✦ ✦ ✦ ✦ ✦

பொன்ராசாவின்ர ஒரு பகுதி எதிர்க் கதிரையிலையும் கந்தர் பகுதியான சட்டம்பியர் கணபதிப்பிள்ளைப் பகுதி ஆளும் கதிரையிலையும் அமர்ந்தாச்சுது. நாங்கள் உண்மையாகவே பூரிச்சுப்போனம். நாங்கள் கஷ்டப் பட்டுப் போராடினது கிடைக்காட்டிலும் ஆச்சிக்குட்டியாவது கிடைச்சுதே எண்டு சந்தோசப்பட்டம். உடையாரோட கதைச்சு ஊர்ப் பிரச்சினை தீர்ப்பம் என்று கணபதிச் சட்டம்பியார் சொன்னார். மனிசன் வந்த புதுசிலை கொஞ்சம் தடங்கித் தடங்கித் தான் பேசித் திரிஞ்சிச்சு. கொஞ்ச நாள் போகக் கந்தர் கூட்டம் கதைக்கிற கதையைக் கற்பூரம் போல கப்பெண்டு பிடிச்சிச்சு. பேசிற இடங்களிலை கதி கலங்கப்பேசிச்சு. ஊர் மேல அவ்வளவு பற்றா இருந்துது.

ஆரம்பத்தில ஆச்சிக்குட்டிக் கூட்டம் நடக்கேக்க பொன்ராசா தரப்பும் தலைவர் சட்டம்பியர் தரப்பும் தான் மாறி மாறிக் கேள்வி கேட்டுக் குடைஞ்சினம். சட்டம்பியார் தரப்பு (ஆளும் தரப்பில்) பரியாரிமார், வாத்திமார், விதானைமார் இருந்தினம், பொன்ராசா தரப்பில் முதலாளிமார் இருந்தினம்.

ஒரு கூட்டத்தில வாய்க்கால் வெட்டுவம். வரம்பு கட்டுவம். எண்டுவினம். அதை ஒரு ஒற்றையில எழுதித் தீர்மானம் எண்டுவினம். ஒரு பைல்ல போட்டுக் கட்டிப் போட்டு மூடிப்போடுவினம். இப்படி எழுதி எழுதியே காலம் போச்சுது. ஊருக்கு உருப்படிய எதும் நடக்கேல்ல. இதுக்குள்ள ரெண்டு உடையார் மாறி நாலு மணியகாரர் இப்ப வந்து இருக்கிறார். ஊரில ஒரு முன்னேற்றமும் இல்லை ஏன் எண்டு கேட்டா உடையாரிட்ட இருந்து காசு வரல்ல என்பர் சட்டம்பி. அப்ப கந்தர் பகுதி உடையாரின்ரை இடத்திலல செல்வாக்கா இருந்தது. எனவே சட்டம்பி உடையாரக் குறைகூறுவது கந்தரின்ரை வலக்கையான இந்திரருக்குப் பிடிக்கேல. அது நீறு பூத்த நெருப்பா இருந்து. ஒருக்கா முட்டிப் பத்திடிச்சு. இதனால ஆச்சிக்குட்டிச் சனசமூக நிலைய ஆளும்தரப்பே இரண்டா உடைஞ்சிது. இதுவரை காலமும் பொன்ராசா பகுதியால வந்த குடைச்சல் போதாதெண்டு சட்டம்பிக்குத் தங்கட ஆக்களாலயும் குடச்சல் வந்துது. இருந்தும் ஆச்சிக்குட்டியின்ர மாப்பிள்ளை நான்தான் எண்டு நிண்டுதே தவிரச் சட்டம்பிக்கு மாப்பிள்ளை பதவியைவிட மனம் இருக்கேல்ல. எல்லாருமாச் சேர்ந்து போடுற அலப்பாறை தாங்க முடியாத அளவுக்குக் கூடிச்சுது. இதுக்குக் காரணம் இந்திரர் தான் எண்டு சட்டம்பி குற்றம் சாட்டினார்.

ஆனா, எங்களுக்கு ஒரே கவலை என்னவெண்டால், ஆசைப்பட்டு நாங்கள் உருவாக்கிய ஆச்சிக்குட்டி இப்படிப் போச்சுதே!

✦ ✦ ✦ ✦ ✦

ஒரு கட்டத்தில தலைவராக் கணபதிச் சட்டம்பியார் வேண்டாம் எண்டு கந்தர் ஆதரவுப்பகுதியே போய் மணியகரனிட்ட முறையிட்டினம். இதில பெரிய பகிடி என்னெண்டா பரமானந்தாரிண்ட வலது கை பொன்ராசா வும் கந்தர் கூட்டத்தோட சேர்ந்தார். அப்ப இருந்த மணிகாரன் கொஞ்சம் கொழுவிவிட்டுக் கூத்துப் பாக்கிற ஆள் பாருங்கோ. கணபதிச்சட்டம்பியைவரச்சொல்லிக்கூப்பிட்டார். அவரோட சேர்ந்து கந்தரின்ரை ஆக்கள் ரெண்டு மூண்டு பேர் போய்ச்சினம். தாங்கள் ஒரு கூட்டம் என்று மணியகாரரோட கதைச்சினம். இது அப்படி இருக்க ஒதுங்கியிருந்த அம்பலத்தார் தரப்புக் கணபதிச் சட்டம்பிக்கு ஆதரவாகப் பொங்கி எழுந்து சங்கு ஊதிச்சுது. மணியகாரன் பார்த்தார் கொஞ்சநாளிலை சனசமூக நிலையத்தைக் கலைக்கிறது தானே, கணபதிச் சட்டம்பியே தொடர்ந்தும் தலைவராக இருக்கச் சட்டம் இடம் கொடுக்கிறது எண்டு சொல்லித் தான் ஒதுங்கிக் கொண்டார். அந்தக் கொஞ்ச நாள் கணபதிச் சட்டம்பி தான்தான் ஊரின் தலைவர் எண்ட கணக்குக்குக் கதையளக்க ஆரம்பிச்சார். ஷ கந்தர் தரப்பும் (பொன்ராசா உட்பட) சட்டம்பி தரப்பும் மாறி மாறிப் பாம்பும் கீரியுமா நிற்க இடையில பரமானந்தம் ரெண்டு தரப்பையும் எட்டி எட்டிப் பார்த்திட்டு பேசாம இருக்கச் சனசமூக நிலையக் கூட்டத்தை நடத்தினதும் அதில செய்ய முடியாத விசயங்களையெல்லாம் பிரேரணை எண்டு பைல்ல போடுறதுமா ஐஞ்சு வருசங்களைக் கணபதிச் சட்டம்பி அலேய்க்காய்க் கடத்தீட்டார்!

✦ ✦ ✦ ✦ ✦

வாசிய சாலை நிர்வாகமும் கலைஞ்சு போய் ஒரு வருசத்தத்துக்கு மேல ஆச்சுது. திருப்பி நிர்வாகத் தெரிவு நடக்கும் எண்டு கதைக்கினம். கணபதிச் சட்டம்பி தான் தான் திரும்பவும் தலைவர் பதவிக்கு வருவன் எண்டு சொல்லிக்கொண்டு திரியிறார். மனிசன் ஞானப் பழம் தான். அந்தாள் பட்டனத்திலே இருந்து வந்திச்சு. இப்ப என்னெண்டா ஊரிலை உள்ளூராக்கள் பாவிக்கிற கடைசி வார்த்தை எல்லாம் பழகிட்டுது. சேருகிற கூட்டமும் அப்பிடித்தான் எண்டு ஒரு கதை இருக்கு. கணபதியரின்ரை வாயிலை இருந்து இப்ப கண்ட கடியதெல்லாம் வருகுது. அடுத்த தலைவரா கந்தர் எங்க இருந்து, எந்த அப்புக்காத்தைக் கொண்டு வருவாரோ? இல்லாட்டிக்குப் பரமானந்தம் ஆச்சிக்குட்டிக்கு மாப்பிள்ளையாவாரோ? அம்பலங்கூட்டம் ஆதரவோட சட்டம்பி திரும்பி வரு வாரோ? இன்னும் எத்தின விதானைமார், வாத்தி மார், சட்டம்பியர்கள் ஆச்சிக்குட்டியின்ர அரங்கத்தில ஏறி ஆடப்போயினமோ? எல்லாத்தையும் நினைக்க எங்கட ஊர்ச் சனத்துக்கு ஒரே நெஞ்சிடியா இருக்கு. ■





57

# சிறைக் கதவில் எத்தனை கம்பிகள்

■ தாஸ் மாஸ்ரர்

**1985** ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் பூஸாவில் தடுத்து வைக்கப்பட்டிருந்த பொலநறுவையைச் சேர்ந்த ஒருவர் பூஸாவைப் பற்றிக் கூறும்போது, "இப்போதுள்ளது போல அப்போது வழக்கு, கணக்கு எதுவுமில்லை. சிறைச்சாலைக்குள் இராணுவப் பொலிஸ் காவலர்கள் தான் பாதுகாப்பு. சிறைச்சாலையைச் சுற்றி இராணுவப் பாதுகாப்புப் போடப்பட்டிருக்கும். மலம் கழிப்பதற்காக மட்டும் மாலையிலும் காலையிலும் ஒரு மணி நேரம் சிறையிலிருந்து திறப்பார்கள். இடைப்பட்ட நேரத்தில் செப்பிங் பாக்கில் தான் மலம் கழிக்க வேண்டும். சிறுநீர் கழிப்பதற்காகத் தகர வாளிகள் தரப்பட்டிருந்தன. அப்போது புளொட் இயக்கத்தைச் சேர்ந்த நிறையப் பேர் கைதிகளாக இருந்தனர். இராணுவப் பொலிஸார்கள் அதிகாரத்துடன் நடந்து கொள்வார்கள். அதனால் ஒருநாள் கைதிகளுக்கும் அவர்களுக்குமிடையில் கைகலப்பு ஏற்பட்டது. கறாட்டி பழகிய ஜீவ என்ற கைதி ஒருவர் இராணுவப் பொலிஸ் அதிகாரி ஒருவருக்குக் கழுத்தை அடித்து உடைத்து விட்டார். பின்னர் ஜீவாவும் இன்னும் ஏழு பேரும் கொல்லப்பட்டனர்.

இது பூஸாவின் 16ஆம் வாட்டில் நடந்தது. வீட்டில் இருந்து அனுப்பப்படுகின்ற பொதிகளைத் தபாலில் பெறுவதற்கு அனுமதியிருந்தது. பீடி, சிகரெட் தர மாட்டார்கள். பொதிக்குள் என்பலப், முத்திரை இருந்தால் எடுத்துவிடுவார்கள். அவர்கள் தருகின்ற தாளில் கடிதத்தை எழுதிக் கொடுத்தால் பரீட்சித்து விட்டு, எமக்கு வீட்டில் இருந்து அனுப்பப்படும் என்பலப் முத்திரையைப் பயன்படுத்தி எமது கடிதத்தை வெளியே செல்ல வழி செய்வார்கள். 1991. 10.20ஆம் திகதி நம்மில் 35 பேர் பூஸா சிறையிலிருந்து பத்துகம வீதியிலுள்ள பலவத்த என்ற இடத்துக்கு மாற்றப்பட்டோம். அந்த முகாம் பள்ளமான நில அமைப்பில் இருந்தது. அங்கு வவுனியாவில் இருந்து சுற்றி வளைப்பின்போது கைது செய்யப்பட்ட 25 கைதிகள் நாம் போனபோது தடுத்து வைக்கப்பட்டிருந்தார்கள். ஊயரமான பகுதியில் மக்கள் நடமாட்டம் தெரியும். அங்கு பலா மரங்கள் அதிகமாக இருந்தன. அங்கி ருந்து உயிர் தப்பியதே பெரிய விசயம்" என்றார்.

✦✦✦✦✦

பாட்டுப்பாடுவது சிறைக்குள் ஒரு முதன்மையான பொழுதுபோக்கு. நான் சிறைக்குள் சந்தித்த பாடகர்களில் முதல் தரமானவர் சேரன். இயக்கப் பாடல்களை உணர்வு பூர்வமாகப் பாடுவார். 'இன்னுமா விழிகளில் ஈரம்...', 'கோணமலை எங்கள் கோட்டை...', 'தமிழா நீ பேசுவது தமிழா...' ஆகிய பாட்டுக்கள் அவரின் குரலில் மிகச் சிறப்பாக இருக்கும். 'சலோமியா...', 'குறிஞ்சி மலரில் வழிந்த ரசத்தை...' என்ற பாடலும் சிறப்பானது. 'அப்பி கமுவீம தன்வீம தோ ஆதரே' என்ற சிங்களப் பாடலை இத்தனை வருடங்கள் சென்ற பிறகும் கேட்கும் போது சிறைச்சாலைச் சூழலும், சேரனும், பக்க வாத்தியங்களும் ஞாபகத்தில் வந்து போகும்.

பக்கவாத்தியக்காரர்கள் என்று பார்த்தால், ஜோன்சன், மனோ, சந்திரன், மோகன், குனே ஆகியவர்கள் மறக்க முடியாதவர்கள். குனே அறைக்குள் இருந்து டாம்போட்டில் தட்டி ஒலி எழுப்பும்போது பெரிய சத்தம் வரும். ஜோன்சன் ஒரு பிளாஸ்ரிக் கலனையும் தகர வாளியையும் வைத்து மிருதங்கமும் தபேலாவும் போல மிக அழகாக இசையமைப்பார். மனோ, சந்திரன், மோகன் ஆகியோர் கரம்போட் வாத்தியக்காரர்கள். இந்த இசைக்கருவிகளை நான் முதலில் களுத்துறையில் தான் கண்டேன். அங்கு இன்பா என்பவர் கரம்போட்டில் தரமாக இசை எழுப்பினார். எனக்கு இரசிக்க மாத்திரமே தெரியும். வேண்டுமானால், அருகில் அமர்ந்து கை தட்டுவேன்.

✦✦✦✦✦

சூட்டி, பிறேம் ஆகிய இருவர் புலிகள் வெளியிட்ட புதிய இயக்கப் பாடல்களைத் தரமாகப் பாடுவார்கள். 'சிங்கள புத்தாலா ஜெனரல் ஆனது எப்போ' (சிங்கள புதல்வர்கள் ஜெனரல் ஆனது எப்போது) என்ற பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்தையின் இராணுவத் திட்டமிடல்களால் இலங்கை இராணுவம் பறிகொடுத்த இராணுவ முகாம்கள் பற்றிய அந்த நையாண்டிப் பாடலை அவர்கள் பாடும் விதம் அலாதியானது. இவ்வாறு புலிகளுக்கு எதிரான போர்களில் தோல்வி கண்ட இராணுவத் தளபதிகளுக்கு ஜெனரல் பதவி வழங்கி அப்போதைய அரச தலைவர் சந்திரிகா கௌரவித்தது எவ்வளவு பொறுப்பற்ற செயல் என்பது அதன் உள்ளடக்கம். கோகுலன் என்ற கைதி புதிய சினிமாப் பாடல்கள் பாடுவார். 'பூசு மஞ்சள் பூசு மஞ்சள்...' என்ற பாடலும் அவர் வாயால் கோரஸ் போடுவதும் இரசிக்கக் கூடியதாகவிருக்கும். வீரா அண்ணர் சிறப்பாகப் பக்திப் பாடல்கள் பாடுவார். 'நாதர் முடி மேல் இருக்கும் நல்ல பாம்பே...' என்ற பாடலை மிகச் சிறப்பாகப் பாடுவார். அத்தோடு, 'நான் சிரிக்கிறேன் சிரிக்கிறேன்...', 'அண்ணன் என்னடா தம்பி என்னடா...' என்ற பாடல்களையும் உணர்வு பூர்வமாக இரசித்துப் பாடுவார். 'நாதர் முடி...' என்ற பாடலை அவர் தினமும் பாடுவதால் அவருக்கு 'விசர்க்கடி வைத்தியர்' என்ற பட்டப் பெயர் வைக்கப்பட்டது.



✦✦✦✦✦

மட்டக்களப்பைச் சேர்ந்த இராஜ் என்ற நண்பர் ஒருவர் 'என்னடா தம்பி பேசுறாங்கள் சந்தி வழியில' என்ற பாடலைப் பாடி ஆடுவார். அதனால் அவரின் பெயர் 'என்னடா தம்பி' என்று மாற்றப்பட்டது. றைவர் சந்திரன் என்ற ஒருவர் பழைய சினிமாப் பாடல்களை அழகாகப் பாடுவார். அவரது விருப்பப் பாடல் 'பூ மாலையில் ஓர் மல்லிகை...' என்பதாகும். அந்தப் பாடலின் ஆரம்பத்தில் 'ஆ...ஆ......என்று வருகின்ற குரலிசையை அவர் கண்ணை முடிக்கொண்டு ரசித்து மீட்டுவார்:. இவரைச் சந்திரன் என்று அழைக்காமல் ஆஆஆ என்றும் கூறுவதுண்டு. மன்னாரைச்; சேர்ந்த அம்பலவாணர் என்ற கைதி ஒருவர் நாட்டுக்கூத்து நன்றாகப் பாடுவார். சிவா என்பவர் பஜனைப் பாடல் பாடுவார். களுத்துறை 'எவ்' பிரிவில் இருந்த போது அப்பன் என்பவர் 'கடலில் கணலாகி...' என்ற பாடலை அடிக்கடி பாடுவார். பாடிவிட்டு "என்னடா பார்த்துக் கொண்டிருக்கிறியல் பீடியைக் கட்டியாவது எனக்கு மாலை போடுங்கோ' என்று சொல்வார். அவர் நன்றாய் பீடி புகைப்பவர். வாழைச்சேனையைச் சேர்ந்த லூக்காஸ் என்ற என்பவர் ஹிந்தி மொழிப் பாடலை அழகாகப் பாடுவார். பறங்கி இனத்தைச் சேர்ந்த சொக்மென் என்ற நண்பர் ஒருவர் பைலாப் பாடல்களை அதிகம் பாடுவார். மாமா என்பவர் எம்.ஜி.ஆர். பாடல்களை அதிகம் பாடுவார். இவையெல்லாம் சிறை வாழ்க்கை தந்த, எப்போதும் பசுமையாக மனதில் பதிந்திருக்கும் அழகிய அனுபவ நினைவுகள்.

✦✦✦✦✦

29.07.2001 அன்று மீண்டும் நான் போகம்பரைச் சிறைச்சாலைக்கு ஏற்றப்பட்டேன். இத்துடன் பூஸாச் சிறைச்சாலை வாழ்க்கையின் ஒரு பகுதியை முடித்துக் கொண்டேன். பயங்கரவாதத் தடைச்சட்டம் எத்தகையது என்பதை இந்தச் சிறை மாற்றங்கள் உணர்த்தின.

(தொடரும்)

பாட்டுப்பாடுவது சிறைக்குள் ஒரு முதன்மையான பொழுதுபோக்கு. நான் சிறைக்குள் சந்தித்த பாடகர்களில் முதல் தரமானவர் சேரன். இயக்கப் பாடல்களை உணர்வு பூர்வமாகப் பாடுவார். 'இன்னுமா விழிகளில் ஈரம்...', 'கோணமலை எங்கள் கோட்டை...', 'தமிழா நீ பேசுவது தமிழா...' ஆகிய பாட்டுக்கள் அவரின் குரலில் மிகச் சிறப்பாக இருக்கும். 'சலோமியா...', 'குறிஞ்சி மலரில் வழிந்த ரசத்தை...' என்ற பாடலும் சிறப்பானது.

## இருப்பு

நீடித்து நிலைப்பது...?
கல்... மண்...
இரும்பு...
இங்குள்ள கட்டடங்கள்...
உயர் கோபுரங்கள்...
கடலின் ஆட்சி...

நிலையானது...?
மண்...
நீர்...
காற்று...
எல்லாம் சேர்ந்த இந்தப் பூமி...
பூமியைத் தாண்டிய சூரியன்
அல்லது போனால்
அதையும் தாண்டிய
பிரபஞ்சம்...

ஏனிந்தச் சிரிப்பு...?
நிலைப்பில்லை
நிரந்தரமில்லை
ஏனிருப்புக்கு
இவ்வளவு போர்கள்...!



யாழ்ப்பாணப்பல்கலைக்கழகவிலங்கியல்துறை சார் மூத்த விரிவுரையாளரான கலாநிதி அபிராமி சிவரூபன், மற்றும் க. கஜவதனி ஆகியோர் இணைந்து எழுதுகின்ற புதிய தொடர் இது. யாழ்ப்பாணம் தீவுப் பகுதியில் அமைந்துள்ள தீவுகளில் ஒன்றான மண்டைதீவில் பருவகாலங்களுக்கு ஏற்ப பறவைகள் முகாமிடுவதையும், பறவைகளுக்கு உகந்த இடமாக மண்டைதீவின் இனிய இயற்கைச் சூழல் விளங்குவதையும் பற்றிப் பேசுகின்றது இந்த ஆக்கம்.





1

■ க. கஜவதனி
■ கலாநிதி அபிராமி சிவரூபன்

# மண்டைதீவில் தேவ கன்னிகைகளின் ஒன்றுகூடல்

அன்றைய ரேடார் இயக்குநர்கள் தமது திரையில் தோன்றும் குடிபெயர் பட்சிகளின் எதிரொலிகளைத் 'தேவ கன்னிகைகளின் ஒன்றுகூடல்' என அழைத்தனர். 'தேவதைகளின் சங்கமம்' என்றுகூட இதை அழைப்பதுண்டு. பட்சிகளின் குடிபெயர்வைக் குறிக்கும் அழகான சொல்லாடல்கள் இவை!



பண்டைய காலம் தொட்டுப் பட்சிகளுக்கும் தேவதைகளுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. தேவதைகளைப் போன்றே பட்சிகளுக்கும் இறக்கைகள் உண்டு. பட்சிகள் ஆன்மீக ரீதியான தகவல்களையும் கணிப்புகளையும் வழங்க வருவதாக மக்கள் நம்புகின்றனர்.

**பறத்தல் பாதையும் பட்சிகளும்**

இலங்கையானது மத்திய ஆசிய பறத்தல் பாதையில் அமைந்துள்ளது. இந்தப் பறத்தல் பாதையானது ஐரோப்பிய மற்றும் ஆசியக் கண்டங்களையும் அதனுடன் இணைந்த தீவுக் கூட்டங்களையும் உள்ளடக்குகின்றது. ஒப்பீட்டளவில் மிகக் குறுகிய இந்தப் பறத்தல் பாதையை 182 வகையான குடிபெயர் பட்சிகள் பயன்படுத்துகின்றன. இதில் 29 வகையான உலகளாவிய ரீதியில் அழிவடையும் ஆபத்தைஎதிர்நோக்கியுள்ள குடிபெயர் பட்சிகளும் அடங்குகின்றன.

ஏறத்தாழ முந்நூறுக்கும் மேற்பட்ட குடிபெயர் பட்சிகள் தாம் குடி பெயர்வதற்கு மத்திய ஆசியப் பறத்தல் பாதையைப் பயன்படுத்துகின்றன. வட அரைக் கோளத்திலேயே முழுவதுமாக அமைந்துள்ள இந்தப் பறத்தல் பாதையில் இமயமலையானது 8 கிலோ மீற்றர்கள் உயர்ந்தும் வடக்குத் தெற்காக 200 கிலோ மீற்றர்கள் நீண்டுமுள்ளது. ஆர்க்டிக் பகுதியில் இனவிருத்தியிலீடுபடும் பல குடிபெயர் பட்சிகள் இந்த வலிமைமிகு தடையைக் கடக்க முடியாமையால் நீண்ட பாதையினூடாகத் தென்பகுதியை வந்தடைகின்றன. பல குடிபெயர் பட்சிகள் இமயமலையின் இரண்டு முடிவிடங்களிலுமுள்ள பாதைகளினூடாகத் தென்பகுதியை வந்தடைகின்றன. இந்தியாவை வந்தடையும் பட்சிகள் இறுதியில் இலங்கையை மூன்று பறத்தல் பாதைகள் வழியாக வந்தடைகின்றன.



**மேற்குப் பறத்தல் பாதை**


உலகின் வடபகுதியிலிருந்து அதாவது ஐரோப்பா, மேற்கு ஆசியாவிலுள்ள மேற்குச் சைபீரியா, மற்றும் காஷ்மீர் உள்ளிட்ட இமயமலையின் மேற்குப் பகுதியிலிருந்து இந்தியாவின் மேற்குக் கரையோரமாகத் தென்னிந்தியாவை அடைந்து இலங்கையின் மன்னாருக்கும் களுத்துறைக்கும் இடைப்பட்ட கரையோரப் பகுதியை வந்தடைகின்றன.

**கிழக்குப் பறத்தல் பாதை**

உலகின் வட மற்றும் வடகிழக்குப் பகுதியிலிருந்து அதாவது கிழக்குச் சைபீரியா மற்றும் மொங்கோலியா உள்ளிட்ட கிழக்காசிய மற்றும் திபெத் உள்ளிட்ட இமயமலையின் கிழக்குப் பகுதியிலிருந்து இந்தியாவின் கிழக்குக் கரையோரமாகக் கோடியக் கரைக்கும் இராமேஸ்வரத்துக்கும் இடைப்பட்ட கரையோரப் பகுதியைக் கடந்து தென்பகுதியை அடைந்து அங்கிருந்து இலங்கையை வந்தடைகின்றன.

**அந்தமான்தீவுப் பறத்தல்பாதை**

தென்கிழக்காசிய மற்றும் கிழக்காசியப் பகுதியிலிருந்து இந்து சமுத்திரத்தின் அந்தமான் தீவுகளுக்குக் குறுக்காக இலங்கையின் வடகிழக்குக் கரையோரத்தை வந்தடைகின்றன. வருடாந்தம் ஆயிரக்கணக்கான குடிபெயர் பட்சிகள் இடை வெப்ப வலய நாடுகளிலிருந்து தமது குளிர்காலத்தின்போது குடிபெயர்ந்து அயனமண்டல வலயத்திலுள்ள நாடுகளுக்கு வருகை தருகின்றன. இலங்கையைத் தாண்டித் தென்துருவம் வரை வேறெந்த நிலப்பரப்பும் இன்மையால் குடிபெயர்ந்துவரும் பட்சிகளுக்கு இலங்கையே இறுதியான குளிர்காலத் தங்குமிடமாக அமைகின்றது. இவ்வாறு குடிபெயர்ந்துவரும் பட்சிகள் இலங்கையினுள் நுழையும் இடங்களில் ஒன்றாக யாழ். குடாநாடு அமைகின்றது. எனவே குடிபெயர் காலப்பகுதியில் ஆயிரக்கணக்கான குடிபெயர் பட்சிகளை யாழ். குடாநாட்டில் அவதானிக்கமுடியும்.



**மண்டைதீவில் பட்சிகள்**

வடமாகாணத்தில் அமைந்துள்ள குடிபெயர் பட்சிகளுக்கு உகந்த வாழிடங்களில் ஒன்றாக மண்டைதீவைக் குறிப்பிட முடியும். இது யாழ். நகரிலிருந்து 3 கிலோ மீற்றர்கள் தூரத்தில் அமைந்துள்ளது. இங்குள்ள கண்டல் சாகியம், சதுப்பு நிலம், சேற்றுத்தட்டை நிலங்கள் இருப்பதால் இவை பல்வேறு வகையான பட்சிகளின் வாழிடமாக அமைகின்றன. இங்கு நீர்மட்டம் ஏற்ற இறக்கத்தைக் காண்பிப்பதுடன் நீரின் உவர்தன்மையும் நீர்மட்டத்தின் ஏற்ற இறக்கத்துக்கு ஏற்ப மாற்றமடைகின்றது.

(தொடரும்)


---

# மறு(று)க்கப்படுகின்ற காமம்

■ ஜீலி

காற்றில் மிதக்கிறது
வர்ணப் பூச்சு(சி)
மெல்லெனப் பூக்களை
வருடிய பின்
சாய்கிறது பட்டைகளில்
சாவைத் தனதாக்கிய
நிம்மதிப் பெருமூச்சால்
பிரபஞ்சம் நிறைகிறது
பெருமூச்சுக்களால் திணறுகிறது
இயலாமல்போகச் சேர்ந்து சரிகிறது
உடைப்பெடுக்கின்றன புது உயிர்கள்
குடம்பியாகிப் பின் கூட்டுப் புழுவாகி
மீண்டும் காற்றில் சிறகடிக்கிறது
அந்த வண்ணப் பூச்சி

நிம்மதிப் பெருமூச்சு இப்போது
பிரபஞ்சத்துக்கும் உரித்தாகிறது
எட்டுத் திக்கும் வர்ண மாயமாகி
சாவும் வாழ்வும் தொடர்கின்றன
ஏற்றத்தாழ்வின்றிக் கிடைக்கிறது நிம்மதி
சாவடையும்போதும்
கருவடையும்போதும்
இடைப்பட்ட காமம் பேசு பொருளாகவேயில்லை
அது தன் வாய்ப்பை இழக்கிறது
நிலையற்றதாக உணரப்பட்டாலும்
அது தோற்றுவித்த உயிர்
மதிப்புற்றதாக உலாவுகிறது
காமத்தைக் குடித்த உலகு
போதையில் சுற்றிக் கொண்டே இருக்கிறது.



# இந்த வாரம்

**14.07.2019 முதல் 20.07.2019 வரை**

*உங்களுக்கு எப்படி?*

## மேடம்

சூரியன், சுக்கிரன், சந்திரனால் நற்பலன் கிடைக்கும். தாயின் அன்பும், ஆசியும் மனதில் ஊக்கம் தரும். சிறு செயல்களிலும் நேர்த்தி மிகுந்திருக்கும். உடன்பிறந்தவர்களுக்கு உதவுவீர்கள். புதிய வீடு, வாகனம் மனம் விரும்பியபடி வாங்குவீர்கள். பூர்வீகச் சொத்தில் வளர்ச்சியும், பணவரவும் அதிகரிக்கும். வழக்கு விவகாரங்களில் சுமுக தீர்வு கிடைக்கும். மனைவியின் நற்செயல்களை முழுமனதுடன் பாராட்டுவீர்கள். தொழில், வியாபாரத்தில் இடையூறு விலகி முன்னேற்றம் திருப்திகரமாக இருக்கும். பணியாளர்கள் கூடுதல் வேலை வாய்ப்பை ஏற்றுக் கொள்வர். பெண்கள் செலவில் சிக்கனம் பின்பற்றுவர்.

## இடபம்

செவ்வாய், சுக்கிரன், சந்திரன், குரு அனுகூல அமர்வில் உள்ளனர். மனதின் உற்சாகம் செயல்களில் வெளிப்படும். நண்பர், உறவினர்களின் பாராட்டு கிடைக்கும். குடும்பத்தில் சுபநிகழ்வு பற்றிய பேச்சு நடக்கும். வெளியூர் பயணத்தால் எதிர்பார்ப்பு நிறைவேறும். புத்திரரின் ஆர்வம் மிகுந்த செயல் நிறைவேற உதவுவீர்கள். எதிரி சொந்த சிரமங்களால் விலகிச் செல்வர். மனைவி வழி உறவினர்களால் உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி படிப்படியாக உருவாகும். பணியாளர்கள் நிர்வாகத்தின் சட்டதிட்டம் தவறாமல் பின்பற்றவும். பெண்கள் தாய் வீட்டாருக்கு உதவுவர். மாணவர்கள் படிப்பில் ஆர்வம் கொள்வர்.

## மிதுனம்

சுக்கிரன், சந்திரன் நற்பலன் வழங்குவர். மனதில் குழப்பம் ஏற்பட்டு மறையும். பணவரவு அதிகம் பெற புதிய வாய்ப்புகளை தவறாமல் பயன்படுத்த வேண்டும். புத்திரரின்நற்செயல்பெற்றோருக்குபெருமைசேர்க்கும். சொத்து, ஆவணம் பிறர் பொறுப்பில் கொடுக்க வேண்டாம். மனைவி உங்களின் நல்ல குணத்தை உணர்ந்து பாராட்டுவார். அரசு உதவி கிடைப்பதில் தாமதம் ஏற்படலாம். தொழிலில் கூடுதல் உழைப்பால் நன்மை காண்பீர்கள். பணியாளர்கள் கடமையுணர்வுடன் செயல்படுவர். பெண்கள் நகை, பணம் இரவல் கொடுக்க வேண்டாம். மாணவர்கள் படிப்பில் முன்னேற புதிய அணுகுமுறையை பின்பற்றுவர்.

## கடகம்

சுக்கிரன், குரு, சனீஸ்வரர், கேது ராஜயோகபலன் தருவர். உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். திட்டமிட்ட பணிகள் சிறப்பாக நிறைவேறும். நற்பெயரும் புகழும் தேடி வரும். வாகனத்தின் பயன்பாடு அதிகரிக்கும். புத்திரர் படிப்பு, வேலையில் முன்னேற்றம் பெற வழி பிறக்கும். ஆரோக்கியம் பலம் பெறும். வழக்கு, விவகாரத்தில்வெற்றிகிடைக்கும். மனைவிகருத்திணக்கமுடன் நடந்து கொள்வார். குடும்பத்தில் ஒற்றுமை வளரும். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரித்து சேமிப்பு கூடும். பணியாளர்கள் கூடுதல் தொழில்நுட்பம் அறிந்து கொள்வர். மாணவர்கள் படிப்பில் அதிக தேர்ச்சி பெறுவர்.

## சிங்கம்

சூரியன், சுக்கிரன், ராகு, புதனால் வியத்தகு நற்பலன் கிடைக்கும். மனதில் புத்துணர்வு ஏற்படும். உடன்பிறந்தவருக்கு உதவுவீர்கள். தாய்வழி உறவினர்களிடம் கூடுதல் நெருக்கம் ஏற்படும். பூர்வ சொத்தில் வளர்ச்சியும், வருமானமும் கூடும். புத்திரர் நேர்மறை எண்ணங்களுடன்செயல்படுவர். அக்கம்பக்கத்தினர் அன்பு பாராட்டுவர். மனைவியின் நற்செயல்களை பாராட்டுவீர்கள். தொழில், வியாபாரத்தில் இடையூறு விலகும். நிலுவைப்பணம் வசூலாகும். பணியாளர்கள் எளிதாக பணி இலக்கை நிறைவேற்றுவர். மாணவர்கள் நன்றாக படிப்பர்.

## கன்னி

சூரியன், செவ்வாய், சந்திரன் அனுகூலபலன் தருவர். செயல்களில் மனப்பூர்வமாக ஈடுபடுவீர்கள். நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சமூக நிகழ்வு மனதில் புதிய மாற்றம் தரும். பழைய வீடு, வாகனம் வாங்குபவர்கள் ஆவணங்களை கவனமுடன் சரி பார்க்கவும். புத்திரர்கள் படிப்பில் முன்னேறுவர். வெளியூர் பயணம் பயனறிந்து மேற்கொள்ளலாம். நோய் தொந்தரவு குறைந்து உடல் ஆரோக்கியம் சீராகும். மனைவியின் ஆர்வம் நிறைந்த செயல் குளறுபடியாகலாம். தொழில், வியாபாரம் புதிய வாடிக்கையாளர்களின் ஆதரவால் வளரும். பணியாளர்களுக்கு பணியிடத்தில் செல்வாக்கு கூடும்.

## துலாம்

பெரும்பான்மை கிரகங்களால் அதிர்ஷ்ட பலன் கிடைக்கும். சமூக நிகழ்வுகளின் போக்கு புதிய மாற்றங்களைத் தரும். பணிகளை புதிய யுக்தியுடன் செயல்படுத்துவீர்கள். வீடு, வாகனத்தில் நவீன மாற்றம் செய்வீர்கள். புத்திரர் உங்கள் வழிகாட்டுதல்களை முழு மனதுடன் ஏற்பர். உறவினர் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள். மனைவியின் நற்செயலைப் பாராட்டுவீர்கள். தொழில், வியாபாரத்தில் அளப்பரிய லாபம் கிடைக்கும். பணியாளர் விண்ணப்பித்த கடனுதவி கிடைக்கும். மாணவர்கள் படிப்பில் ஆர்வமுடன் ஈடுபடுவர்.

## விருச்சிகம்

புதன், சுக்கிரன், சந்திரன் அளப்பரிய நற்பலன் தருவர். மனதில் உற்சாகம் வெளிப்படும். குடும்பத்தில் ஒற்றுமை சிறக்கும். புத்திரரின் விருப்பங்களை தாராள பணச் செலவில் நிறைவேற்றுவீர்கள். உறவினர் ஆலோசனையால் நன்மை காண்பீர்கள். வழக்கு, விவகாரத்தில் சுமுக தீர்வு கிடைக்கும். மனைவி ஆர்வமுடன் உங்களுக்கு உதவுவார். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்திப்பணி செய்வீர்கள். பணியாளர்கள் கடமையை உணர்ந்து பணிபுரிவர். பெண்கள் கணவர்வழி உறவினர்களை உபசரித்து நற்பெயர் வாங்குவர். மாணவர்களுக்கு படிப்பில் உரிய கவனம் வேண்டும்.

## தனுசு

சந்திரன் நற்பலன் வழங்குவார். எதிர்பார்த்த நன்மை விடாமுயற்சியால் கிடைக்கும். உடன்பிறந்தவர் சொந்த பணியில் கவனம் கொள்வர். வீடு, வாகனத்தில் கூடுதல் பாதுகாப்பு பின்பற்ற வேண்டும். புத்திரர் உடல் நலத்திற்கு மருத்து சிகிச்சை தேவைப்படலாம். நிர்பந்த கடனில் ஒரு பகுதியை செலுத்துவீர்கள். மனைவியின் மனதில் நம்பிக்கை வளர உதவுங்கள். தொழில், வியாபாரத்தில் அளவான பணவரவு கிடைக்கும். பணியாளர்கள் நிர்வாகத்தின் சட்டதிட்டம் தவறாமல் பின்பற்றவும். பெண்கள் பணம் சேமிப்பதில் ஆர்வம் கொள்வர். மாணவர்கள் பாதுகாப்பற்ற இடங்களில் செல்ல வேண்டாம்.

## மகரம்

சூரியன், ராகு, புதன், குரு அதிகளவில் நற்பலன் தருவர். முக்கிய பணிகள் இஷ்ட தெய்வ அருளால் நிறைவேறும். வாழ்வியல் நடைமுறை சிறப்பாக அமையும். நண்பர் கேட்ட உதவியை வழங்குவீர்கள். குடும்பத்தில் ஒற்றுமை நிறைந்திருக்கும். வெளியூர் பயணம் இனிய அனுபவம் தரும். புத்திரருக்கு அறிவுரை சொல்வதில் இதமான அணுகுமுறை வேண்டும். மனைவி விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி திருப்திகரமாக இருக்கும். பணியாளர்கள் குறிப்பிட்ட கால அவகாசத்தில்பணிஇலக்கைநிறைவேற்றுவர். மாணவர்கள் முயற்சியுடன் படித்தால் முன்னேறலாம்.

## கும்பம்

செவ்வாய், கேது, சுக்கிரன், சனீஸ்வரர் அனுகூல அமர்வில் உள்ளனர். மனதில் இருந்த குழப்பம் விலகும். புத்துணர்வுடன் பணிகளில் ஈடுபடுவீர்கள். பணவரவால் முன்னேற்றம் ஏற்படும். வெளியூர் பயணத்தால் இனிய அனுபவம் காண்பீர்கள். புத்திரர் புதிய விஷயங்களை அறிவதில் ஆர்வம் கொள்வர். ஆரோக்கியம் சீராக இருக்கும். பகைவர் சொந்த சிரமங்களால் விலகுவர். மனைவிவழி உறவினர்களின் உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் போட்டி குறைந்து லாபம் கூடும். பணியாளர்களுக்கு சலுகை வந்து சேரும். பெண்களுக்கு தாய் வீட்டு உதவி கிடைக்கும். மாணவர்கள் படிப்புடன் கலைகளும் பயில்வர்.

## மீனம்

புதன், குரு, சுக்கிரன் ஆதாயபலன் தருவர். உங்கள் பேச்சில் ஆன்மிக கருத்து மிகுந்திருக்கும். பணிகளை ஆர்வமுடன் நிறைவேற்றுவீர்கள். உறவினர் சந்திப்புஏற்படவாய்ப்புண்டு. வெளியூர்பயணத்தால் இனிய அனுபவம் கிடைக்கும். புத்திரர் அறிவார்ந்த செயல்களில் ஈடுபடுவர். நண்பருக்கு கடனாக கொடுத்த பணம் கிடைக்கும். மனைவி விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சியும், ஒற்றுமையும் வளரும். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும். பெண்கள் தாய் வீட்டாருக்கு உதவி செய்வர். மாணவர்கள் படிப்பில் சிறந்து பரிசு, பாராட்டு பெறுவர்.


CMYK

■ ஏ.ஜே.ஞானேந்திரன்

25

# சுவிஸ் அழகிய நாடு!



'தாய்மொழி மற்றும் கலாசாரம்' எனும் செயற்றிட்டத்தின் கீழ் வகுப்பறைகள்' ஆசிரியர்களுக்கான அடிப்படைப் பயிற்சிகள் ஆலோசனை மற்றும் உதவிகளைச் சுவிற்சர்லாந்து அரச கல்வித் திணைக்களம் வழங்கி ஊக்குவித்து வருகின்றது. சுவிற்சர்லாந்து தமிழ்க் கல்விச் சேவையால் ஆண்டுதோறும் நடாத்தப்படும் தமிழ்மொழிப் பொதுப்பரீட்சை 25ஆவது தடவையாக 4.5.2019 அன்று நாடளாவிய ரீதியில் 64 பரீட்சை நிலையங்களில் சிறப்புற நடந்தது. முதலாம் வகுப்பு தொடக்கம் பன்னிரண்டாம் வகுப்பு வரையில் கல்வி பயிலும் 5ஆயிரத்து 265 மாணவர்கள் இதில் பங்குபற்றினர். தமிழ்மொழிப் பரீட்சையுடன், சைவசமயம், உரோமன் கத்தோலிக்க சமயம் ஆகிய சமயப் பரீட்சைகளுக்கும் மாணவர்கள் தோற்றினர். 10ஆம் வகுப்பிலிருந்து 334 மாணவர்களும், 11ஆம் வகுப்பிலிருந்து 221 மாணவர்களும், 12ஆம் வகுப்பிலிருந்து 154 மாணவர்களும் தோற்றியமை சிறப்பாகும்.

**புலன்மொழிப் பரீட்சைகள்**

தமிழ்மொழி எழுத்துப் பரீட்சையுடன் புலன்மொழிப் பரீட்சைகளும் நடந்தன. இதன்போது தமிழ்ப் பாடசாலைகளின் முதல்வர்கள், ஆசிரியர்கள் மற்றும் உதவி ஆசிரியர்கள் ஆகியோர் மேற்பார்வையாளர்களாகக் கடமை புரிந்தனர். பழைய மாணவர்களும் இந்தப் பணியில் அக்கறையுடன் பங்கெடுத்தனர். இந்தப் பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்களைத் தமிழ்வித்தியாலயப் பொறுப்பாளர்களிடமும், ;. தமிழ் வித்தியாலயங்களில் கல்வி பயிலாத மாணவர்கள் இதை இணையத்தளத்திலும் பெற்றுக்கொள்ளலாம். தமிழ்க் கல்விச் சேவையை இந்தியா தமிழ்நாடு அண்ணாமலை பல்கலைக்கழகத்துடன் இணைந்து 2016 கல்வியாண்டு முதல் பட்டப்படிப்புகளையும், பட்டப் பின்படிப்புகளையும் தமிழ்மொழி, நுண்கலைகள் மற்றும் யோகா ஆகிய துறைகளையும் சுவிற்சர்லாந்து மேற்கொள்கின்றது.

**தவணைப் பரீட்சைகள்**

இந்தப் பொதுப்பரீட்சையை விட, ஆண்டுதோறும், மூன்று தவணைப் பரீட்சைகள் மாணவர்களுக்கு நடத்தப்படுகின்றன. இதற்கான பாடத் திட்டம் வருட ஆரம்பத்தில், நிர்வாகத்தால் தயாரித்துக் கொடுக்கப்படும். மாணவர்களுக்கான அறிக்கை, தவணைப் பரீட்சை முடிவுகளில் வழங்கப்படும். கல்வியாண்டின் முடிவில்(ஒக்ரோபர் மாதத்திலேயே பொதுவாகக் கல்வியாண்டு முடிவடைவதுண்டு) நடாத்தப்படும் வாணி விழாவில், சிறந்த மாணவர்கள் பரிசளித்து மதிப்புறுத்தப்படுவார்கள். என்னிடம் தமிழ், ஆங்கிலம் கற்ற பல மாணவர்கள் இன்று சுவிஸ் மண்ணில் உயர்நிலையில் வாழ்க்கையைத் தொடர்வது எனக்கு என்றுமே பெருமையளிக்கும் விடயந்தான்.




**முத்தமிழ் விழா - 2018**

2015ஆம் ஆண்டுக்குப் பின்னர் நான் பதவி ஓய்வு பெற்றுச் சுவிசை விட்டு வெளியெறி விட்டபடியால், அழகிய சுவிஸ் நாட்டின் நிகழ்வுகளை ஒரு செய்தியாகவே என்னால் தரமுடிகின்றது. தமிழ்க் கல்விச் சேவை எனும் தலைப்பில் சுவிற்சர்லாந்தின் கீழ் இயங்கிவரும் 107 தமிழ்ப் பாடசாலைகளும் அனைத்துலகத் தமிழ்க்கலை நிறுவகமும், தமிழ் மக்களும் இணைந்து முத்தமிழ் விழாவை 30.9.2018 அன்று சுவிஸின் பேர்ண் நகரில் மிகவும் சிறப்பாகக் கொண்டாடினர். மங்கல விளக்கேற்றலுடன் தொடங்கிய இந்த நிகழ்வில், தாய் நாட்டிலிருந்து வருகை தந்திருந்த பேராசிரியர்கள், சுவிஸ் நாட்டுப் பிரமுகர்கள், தமிழ்ப் பள்ளிகளின் மாநில இணைப்பாளர்கள், பாடசாலை முதல்வர்கள், தமிழாசிரியர்கள், கலையாசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், தமிழ் ஆர்வலர்கள் என 2ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் கலந்து சிறப்பித்தனர்.

நிகழ்வின் சிறப்பாக முத்தமிழ் விழா மலரும், அனைத்துலகத் தமிழ்க்கலை நிறுவகத்தின் மதிப்பளிப்பு மலரும், தமிழ்க் கல்விச்சேவையால் தொகுத்து ஆக்கப்பெற்ற குழந்தைகளுக்கான பாடல்கள் அடங்கிய இறுவெட்டும் வெளியிட்டு வைக்கப்பட்டன. இந்தியா அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் தொலைதூரக் கல்விவழி பட்டப்படிப்பை, பட்டமேற்படிப்பை நிறைவு செய்தவர்களுக்கான பட்டமளிப்பும், 2017/18 கல்வியாண்டிலே தமிழ்மொழிக்கல்வியில் ஆண்டு 12 நிறைவுசெய்த மாணவர்களுக்கான மதிப்பளிப்பும் சிறப்பு நிகழ்வுகளாக நடைபெற்றன. அத்துடன் 2017/18 கல்வியாண்டில் தமிழ்மொழியில் 10 ஆம் ஆண்டில் சித்திபெற்ற மாணவர்களும் 25 ஆண்டுகள், 20 ஆண்டுகள், 10 ஆண்டுகள் சேவை நிறைவு செய்த மாநில இணைப்பாளர்கள், பள்ளிமுதல்வர்கள், ஆசிரியர்களும் மதிப்பளிக்கப்பட்டனர்.

(தொடரும்)

# அதிசயம்....!

■ டே.த.எட்வின்

இறைவன் படைத்த யாவும் மனிதன்
பார்வைக்கு அதிசயமே - அது
குறைவின்றிப் பயன்தரும் அனைத்தும் உயிர்கள்
வாழ்வுக்கு அவசியமே
மறைவாய் இல்லை எனினும் யாவும்
இயற்கையின் இரகசியமே - அதை
நிறைவாய் அறிவாய் ஏனெனில் அதைவிட
இல்லை சுவாரசியமே


மண்ணின் மலைகள் மலையில் அருவி
மனிதன் புத்திக்கு இன்னும்
விண்ணில் காண்பவை விளங்கிட வகையுண்டோ
மானிட சக்திக்கு
கண்ணில் காணும் யாவும் சாட்சி
இறைவன் யுக்திக்கு - எதையும்
எண்ணிப் பார்க்கையில் ஈடிணை உண்டோ
இயற்கையின் சக்திக்கு

கதிரவனும் அதைச் சுற்றும்,கோள்களும்
சீர்மாறாக் கணக்கினில் புரியா
புதிராய் மின்னும் தாரகைக் கூட்டம்
முடியுமா கணக்கிடவே
நதியாய் மலையின் அருவிகள் மாறிப்பெரும்
கடலில் கலந்திடுமே - மீண்டும்
கதிரொளி யால்முகிலாகியே மண்ணில்
மழையாய்ப் பொழிந்திடுமே

மோதிடும் முகில்களால் மின்னலும் முழக்கமும்
தந்திடும் அதிர்ச்சியினை - அதன்
போதினில் பின்வரும் மழையது மனதுக்கு
தரும் நல் மகிழ்ச்சியினை
ஆதவனும் அனல் கக்கும்
வெயிலால் அடிக்கடி
செவி மடுப்பான் இகழ்ச்சியை - தை
மாதமது வந்தாலே பொங்கல் படையலென்று
சந்திப்பான் புகழ்ச்சியினை


பயிர்கள் புல்செடி தாவரங்கள் என்று
பல்லின வகையினிலே - பல்
உயிர்கள் பறவைக்ள் ஊர்வன மிருகம்
மனிதரெனத் தொகையினிலே
மயிரிழை யேனுமினப் படைப்பினில் தோற்றம்
பிசகாத வகையினிலே இயற்
கைனிந்த செயலாகும் மாபெரும் அதிசயம்
உலகுள்ள வரையினிலே

விண்வெளி யில் பல வியத்தகு அதிசயம்
கோடிக் கணக்கிலுண்டு - அவ்விதம்
மண்ணிலும் மண்ணடி நீரிலும் மறைந்துள்ள
நுண்ணுயிர் முதல் கொண்டு
கண்ணுக்குத் தென்படா கற்பனைக்குப் புலப்படா
கணக்கற்ற வகையுண்டு - எனினும்
முன்னுக்குப் பின்
முரணாகக் கூறும் விஞ்ஞானம்
வளர்ச்சிக்கு இடமுண்டு



அன்புராசா அடிகள்

# தண்ணீர் பிரச்சினையை தீர்ப்பதற்கு வழியென்ன?



தற்போது தாங்கமுடியாத வெப்பமாக இருப்பதால் வெப்பத்தைக் குறைத்துக்கொள்ளும்படி ஒருவர் சூரியனுக்கு மின்னஞ்சல் அனுப்பி வைத்தார்! "அன்பின் சூரியன்! தயவுசெய்து உனது 'செற்றிங்ஸ்'க்குப் போய் உன்னுடைய 'பிறைற்நெஸ்'ஐக் கொஞ்சம் குறைத்துக் கொள். இங்கு சரியான சூடாக இருக்கிறது!" என அந்த மின்னஞ்சலில் குறிப்பிட்டார். அதற்குப் பதில் அனுப்பிய சூரியன், "அன்பின் நண்பரே, நான் என்னுடைய 'செற்றிங்ஸ்'இல் எந்தவிதமான மாற்றத்தையும் செய்யவில்லை. நீங்கள் உங்கள் 'செற்றிங்ஸ்'சை மீள் பரீசிலனை செய்வது நல்லது!

மேலும்

1. மரங்களை அதிகமாக நடுங்கள்!

2. காபன் புகை அளவைக் கட்டுப்படுத்துங்கள்!

3. கொங்கிறிற் கட்டுமானங்களைக் குறையுங்கள்!

4. குளங்களின் எண்ணிக்கையை அதிகமாக்குங்கள்! அடிப்படையில், 'ஒட்டமெற்றிக் மூட்' இருந்து மனிதாபிமான 'மூட்'க்கு வாருங்கள்!" என அதில் தெரிவித்தார்!

**'தண்ணீர் விற்பனைக்கு உண்டு!'**

ஒரு மணித்துளி நேர மழைக்காக மாதக்கணக்கில் தவியாய்த் தவித்துத் தவம்கிடக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறோம்! பத்திரிகையில் 'என் கேள்விக்கென்ன பதில்' என்ற தொடருக்குக் கேள்விகளை அனுப்புகிற நண்பர் ஒருவர் பின்வரும் கேள்வியை எழுப்பினார். 'இந்த நாள்களில் மிகக் கொடுமையானது என்ன?' எனக் கேட்டிருந்தார். தண்ணீரை விலைக்கு வாங்கிக் குடிப்பதும், தண்ணீர் விற்பனைக்கு உண்டு என்ற விளம்ப ரத்தைப் பார்ப்பதும்! எனப் பதில் எழுதியிருந்தேன். இன்று, உலகளாவிய ரீதியில் மனிதனின் மிகமிக அடிப்படைத் தேவையான தண்ணீருக்கான, குறிப்பாகக் குடிநீருக்கான அல்லது தூய நீருக்கான தட்டுப்பாடு மிகப் பெரும் சிக்கலாக பிரச்சினையாக உருவெடுத்து வருவதை வைத்துக்கொண்டு நமது அன்றாட அடிப்படைத் தேவையைப் பூர்த்தி செய்வதில் நிலவுகிற நிலைமையைப் புரிந்துகொள்ளலாம்! இறக்குமதி செய்யப்பட்டு விற்கப்படும் பெற்றோலை லீற்றர் ஒன்றுக்கு 136ரூபா கொடுத்து வாங்கிப் பயன்படுத்துகிறோம். ஆனால், நமது கிணற்றில் கிடைக்கக்கூடிய நன்நீரை வெளியில் லீற்றர் ஒன்றுக்கு 70ரூபா கொடுத்து வாங்கிக் குடிக்கப் பழக்கப்படுத்தப்படுகிறோம்! இரண்டு லீற்றர் போத்தல் தண்ணீரின் விலையே ஒரு லீற்றர் பெற்றோலின் விலையாகிறது! பெற்றோலின் விலையாவது இரண்டு, மூன்று ரூபாவால் அவ்வப்போது குறைகிறது. ஆனால், போத்தல் தண்ணீரின் விலையோ தங்கம்போல அடம்பிடித்துக்கொண்டு அதன் தரத்திலேயே நிற்கிறது!

**இந்தியாவில் தண்ணீர் தட்டுப்பாடு**

இந்தியாவில் குறிப்பாகச் சென்னையில் மக்கள் தண்ணீருக்காகப் படும்பாடு பெரும்பாடாக இருப்பதை அறியக்கூடியதாக இருக்கிறது. தண்ணீர் வளங்களைப் பாதுகாத்து, தண்ணீரைச் சேமித்து, இயற்கையைப் பாதுகாக்கவில்லை என்றால் சென்னையில் தண்ணீரின்மையால் ஏற்பட்டிருக்கும் ஆபத்தான நிலைமை எமது மண்ணிலும் நாளடைவில் மிக மோசமான நிலையாக மாறும் என அறுதியிட்டுக் கூறமுடியும்!

**தங்கம்போன்ற தண்ணீர்!**

பூமியின் பரப்பளவில் 70 சதவிகிதத்தில் தண்ணீர் நிறைந்துள்ளது. அனைத்து உயிரினங்களின் தொடக்கம் தண்ணீர் என்று உயிரியலும், தண்ணீர் மனித நாகரிகத்தின் தொட்டில் என்று வரலாறும், இரண்டு பங்கு ஹைட்ரஸ்ன் அணுவும் ஒரு பங்கு ஒட்சிசன் அணுவும் சேர்ந்தது தான் தண்ணீர் என்று இரசாயனவியலும், நிறமும் மணமும் அற்ற தெளிவான திரவம்தான் தண்ணீர் என்று பௌதீகவியலும், உயிரைப் படைக்க காக்க அழிக்க வல்லது தண்ணீர் என்று தத்துவமும் கூறுகின்றன.

**நீரின்றி உயிர்களோ உலகமோ இல்லை!**

'வரம்புயர நீர் உயரும்'
நீர் உயர நெல் உயரும்
நெல் உயரக் குடி உயரும்
குடி உயரக்; கோன் உயரும்' என ஔவையாரின் பாடல் நீரின் முக்கியத்துவத்தையும் நீரால் மக்களின் வாழ்வு எவ்வாறு உயருகிறது என்பதையும் மிகச் சிறப்பாக எடுத்துக் கூறுகிறது. திருவள்ளுவர் தமது குறளில் நீரின் இன்றியமையாப் பண்பை மிகக் காத்திரமான சிந்தனையாக வெளிப்படுத்துகிறார். 'நீர்இன்று அமையாது உலகு எனின் யார்யார்க்கும் வான்இன்று அமையாது ஒழுங்கு' என்று கூறுவதன் ஊடாகத் தண்ணீர் இன்றி உலகில் யாராலும் வாழ முடியாது. அந்தத் தண்ணீர் மழையின்றேல் கிடைக்காது. உயிர்கள் வாழ மழை மிகமிக முக்கியமானது என்ற சிந்தனையை முன்வைப்பதன் மூலமாக தண்ணீர் மனித இருப்புக்கு எவ்வளவு அத்தியாவசியமானது என்பதை உணர்ந்துகொள்ளலாம்.

**உலக தண்ணீர் தினம்!**

1992ஆம் ஆண்டில் பிறேசிலில் இடம்பெற்ற ஐக்கிய நாடுகள்சபையின் சுற்றாடல் அபிவிருத்தி தொடர்பான 47ஆவது பேரவைக் கூட்டத்தில் 193 தீர்மானங்கள் நிறைவேற்றியது. அவற்றில் ஒன்றாக 1993ஆம் ஆண்டிலிருந்து பங்குனித்திங்கள் 22ஆம் திகதி உலக நீர்வள நாளாகக் கொண்டாடத் தீர்மானிக்கப்பட்டது. நீர்வளப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதும் நாளாந்தப் பிரச்சினையாக மாறிவரும் நீர்ப் பற்றாக்குறையை தீர்ப்பதும் இந்த நாளை ஏற்படுத்தியதன் நோக்கமாகும்.

**யாழ். மாவட்டத்துக்கு நீர் விநியோகம்!**

யாழ்ப்பாணக் குடாநாட்டில் மக்களின் பரம்பல் அதிகமாக இருப்பதற்குக் குடா நாட்டினுடைய புவியியல் அமைப்பு முக்கிய காரணமாக இருக்கலாம். குறிப்பாக யாழ்ப்பாணக் குடாநாட்டின் இயற்கையாகக் கிடைக்கக் கூடிய கடல் வளம், விவசாய வளம், தண்ணீர் வளம் என்பவை குடாநாட்டின் தேவைகளைப் பூர்த்திசெய்கிற செல்வந்த பூமியாக வைத்திருந்தது. ஆனால், காலப் போக்கில்இயற்கையான வளங்களில் பாதிப்புக்கள் ஏற்பட்டு யாழ்ப்பாணக் குடாநாடு பல ஆபத்துக்களை எதிர்கொள்ளப் போகிறது என்பது கண்கூடு. அவற்றில் ஒன்றுதான் தண்ணீர்ப் பிரச்சினை! இப்பிரச்சினையைத் தீர்;ப்பதற்கு இரணைமடுவிலிந்து யாழ்ப்பாணத்துக்கு நீர் கொடுப்பதா? இல்லையா? எனப் பல மாதங்களாக வாதங்கள் பிரதிவாதங்கள் நடந்து இப்போது இரணைமடுவிலிருந்து யாழ்ப்பாண மாவட்டத்துக்குத் தண்ணீர் கொண்டுசெல்வதற்கான ஏற்பாடுகள் நடந்தவண்ணமாக இருக்கின்றன. இதற்காக வடக்கு மாகாணசபையில் தண்ணீர்ப் பிரச்சினை சமர்ப்பிக்கப்பட்டு மாற்று யோசனைகள் முன்மொழியப்பட்டனவே தவிர மண்ணின் நீர்வளத்தை எப்படிப் பாதுகாக்கலாம் எனத் தீர்மானங்கள் எடுக்கப்பட்டதாகவோ அன்றேல் அவ்வாறான காத்திரமான சிந்தனைகள் முன்மொ ழியப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டதாகவோ இதுவரையில் தகவல்கள் இல்லை!

**வடக்குக் குளங்களின் நிலை**

யாழ்ப்பாணக் குடாநாட்டின் குளங்களுக்கு ஏற்பட்ட நிலைபோன்றே வடக்கு மாகாணத்தின் ஏனைய பல குளங்களின் நிலைமைகளையும் நோக்கவேண்டி இருக்கிறது! வடமாகாணத்தில் உள்ள குளங்கள் அனைத்தும் சீரமைக்கப்பட்டுத் தொடர்ந்து பாதுகாக்கப்படும் என்றால் வேளாண்மையை இரண்டு போகமும் ஏனைய பயிர்ச்செய்கைகளை வேண்டியது போலவும் நன்நீர் மீன்பிடியை இன்னும் அதிகமாகவும் மேற்கொண்டு வறுமையை நீக்கி வளமான பிரதேசங்களாக நமது பிரதேசங்களை மாற்றமுடியும். ஆனால் நூற்றுக்க ணக்கான குளங்களை வைத்துக் கொண்டு வறட்சியால் வாடுவதும் மக்களை அவலத்துக்குள் தள்ளுவதம் பெரும் பாவம். அது நமது அரசியல் தலைவர்களையும் பொறுப்பானவர்களையுமே சாரும்.

**அழித்தொழிக்கப்பட்டவை ஏராளம்!**

ஈழத்தில் 1970களில் இனங்களுக்கிடையில் உருவான உள்நாட்டு முரண்பாட்டில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கொன்றொழிக்கப்பட்டனர். கோடிக்கணக்கான உடைமைகள், பெறமுடியாத பண்பாட்டுப் பொக்கிசங்கள் இல்லாதொழிக்கப்பட்டன. இதற்கப்பால் வேண்டுமென்றே அழித்தொழிக்கப்பட்டவை ஏராளம் ஏராளம். இதற்குச் சான்றாக 1981இல் இலங்கை அரசினால் நன்கு திட்டமிடப்பட்டு எரிக்கப்பட்ட யாழ். பொது நூலகத்தைக் குறிப்பிட முடியும். ஆனால், ஒரு மக்கள் குழுமத்தினரின் அசட்டையீனத்தால், போதிய அறிவின்மையால் அல்லது சுயநல நோக்கத்தோடு செயற்படுவதால் தங்களின் இருப்புக்கு மிகவும் அத்தியாவசியமானவற்றை நிரந்தரமாக இழந்து போகக்கூடிய நிலையேற்படலாம். அத்தகையவற்றுள் ஒன்றுதான் குளங்கள் ஆகும்! அவற்றைப் பாதுகாக்காமையும் பராமரிக்காமையும் பெரும் துன்பங்களை ஏற்படுத்தவல்லன.

குளங்களை அரசு பாதுகாத்துப் பராமரிக்க வேண்டிய கடப்பாடு இருக்கிறது. அரசு இந்த விடயம் குறிந்து அக்கறை காட்டினாலும் அது போதாததாகவே இருந்திருக்கிறது இருந்துவருகிறது. அத்துடன் இது குறிந்து நம் மக்களின் பிரதிநிதிகள் விழிப்பு ணர்வற்று இருப்பது பேசாதிருப்பது மிகப்பெரும் பின்விளைவுகளை ஏற்படுத்தப்போகிறது

**யாழ். மாவட்டத்தில் 300 குளங்கள் அழித்தொழிக்கப்பட்டுள்ளன!**

யாழ். மாவட்டத்தில் மட்டும் ஏறக்குறைய சிறிதும் பெரிதுமான 300வரையான குளங்கள் அழிந்துள்ளன அல்லது அழிய விடப்பட்டுள்ளன. யாழ்ப்பாண மாவட்டத்தை வளப்படுத்தி வைத்திருக்கக்கூடிய குளங்களின் நிலைமைகள் தொடர்பாக அவர் குறிப்பிட்ட கருத்து அனைவரது கவனத்தையும் இனியாவது ஈர்க்கவேண்டும்!

(அடுத்த பக்கம் பார்க்க)

# தண்ணீர்...

(தொடர்ச்சி)

பொறியலாளர் மா. இராமதாஸின் தகவல்படி, 'யாழ்.மாவட்டத்தில் நிலத்து நீரைச் சேகரிப்பதற்காக உருவாக்கப்பட்டிருந்த ஆயிரத்து 83 குளங்களில் 300 குளங்கள் அடையாளம் தெரியாமல் அழிக்கப்பட்டிருக்கின்றன. இதற்குக் காரணம் குடியேற்றங்கள், நீண்டகால பாராமரிப்பின்மை போன்றவையாகும். குறிப்பாக, யாழ். மாநகரசபை எல்லைக்குள் இருந்த 40 குளங்களில் 34 குளங்கள் மட்டும் இப்போது இருக்கின்றன' என்கிறார் அவர். அவையும் அழிந்தொழிந்து போகும் நிலையில் அல்லல்பட்டு அல்லாடிக் கொண்டிருக்கின்றன என்பதை இந்தக் குளங்களை அக்கறையோடு பார்க்கிறவர்கள் புரிந்துகொள்வார்கள்!

**நிலத்து நீர் வேறு  நிலத்தடி நீர் வேறு!**

நமது நிலத்து நீரைப் பாதுகாக்தே ஆக வேண்டும். இல்லையேல் நமக்கு குடிப்பதற்கு நீர் கிடைக்காத ஒரு சூழ்நிலை ஏற்படுவது உறுதி! இங்குதான் நிலத்து நீர் பற்றியும், நிலத்தடி நீர் பற்றியும் சிறு விளக்கம் அவசியமாகிறது. ஏனெனில்ரூபவ் இவ்விரு விடயங்களையும் ஒன்றெனப் பலர் கொள்ளுகிறார்கள். நிலத்து நீர் வேறு. நிலத்தடி நீர் வேறு. இவை இரண்டினதும் அடிப்படைகளைப் புரிந்து கொண்டால்தான் இவ்விடயம் குறிந்து மக்கள் விழிப்புணர்வு பெறவும் தொடர் செயற்பாடுகளில் இறங்கவும் ஈடுபடவும் முடியும். '...நிலத்தடி நீர் என்பது அறுபது. எழுபது அடி ஆழத்துக்குக்கீழ் சுண்ணாம்புப் பாறைகளுக்குள் உள்ள குகைகள் வழியாக ஓடிக்கொண்டிருக்கும் நீர். நிலத்து நீர் என்பது நிலத்தில் மயிர்த்துளைக் குழாய்களில் தேக்கி வைக்கப்படும் நீர். இந்த நீரே ஆரம்பத்தில் கிணறுகளில் ஊறும் நீர். இப்போது குழாய்க் கிணறுகளில் வரும் நீர் நிலத்தடி நீர் எனச் சொல்லப்படும் சுண்ணாம்புப் பாறைகளுக்குள் இருக்கும் நீரோட்டங்களில் இருந்து எடுக்கப்படும் நீராகும். அது உகந்த நீர் அல்ல. ஆகவே நிலத்து நீரைச் சேகரிப்பதற்காகவே குளங்கள் உருவாக்கப்பட்டிருந்தன' என்கிறார் பொறியியலாளர் மா. இராமதாஸன்.

**குளங்களில் அக்கறை கொள்வோம்**

மக்களின் இருப்புக்கு மிகமிக அவசியமான நிலத்து நீரைப் பாதுகாக்க வேண்டுமென்றால் குளங்கள் கட்டாயமாகப் பாதுகாக்கப்பட வேண்டும், பராமரிக்கப்பட வேண்டும் என்பது தவிர்க்க முடியாத நிதர்சனமாகிறது. இதை யார் முன்மொழிவார்கள்ரூபவ் முன்னெடுப்பார்கள் என்பது பெரும் சமூகத் தேவையாக - எதிர்கால சந்ததிகளுக்கான மிகப்பெரும் வேண்டுதலாக உருவாகியிருக்கிறது. குளங்களை மக்கள் தங்கள் உடமையாகக் கொள்கிறபோதுதான் அவற்றை பாதுகாக்கவும் பராமரிக்கவும் முன்வருவார்கள். இதற்கான ஆலோசனைகள் முன்மொழியப்படவேண்டும். உதாரணமாகக் கிளிநொச்சியில் இரணைமடுக் குளம், வன்னேரிக்குளம், மன்னாரில் கட்டுக்கரைக் குளம், முல்லைத்தீவில் முத்தையன்கட்டுக் குளம் போன்ற பெரும் குளங்கள் அரசின் நேரடிக் கண்காணிப்பில் இருப்பது அவற்றைப் பாதுகாக்கவும் பராமரிக்கவும் உதவியாக இருக்கும். ஆயினும், நமது பிரதேசங்களில் உள்ள சிறுசிறு ஆயிரக்கணக்கான குளங்கள், உதாரணமாகரூபவ் யாழ். மாநகரசபைக்கு உட்பட்ட பிரதேசத்தை எடுத்துக் கொண்டால் நரிக்குண்டுக்குளம், உப்புக் குளம், பிரமங்குளம், இலந்தைக்குளம், ஆரியகுளம், புல்லுக்குளம், நெடுங்குளம் போன்ற சிறுசிறு குளங்களைச் சுற்றியுள்ள மக்கள் இவற்றுக்குப் பொறுப்பாக இருப்பதன் மூலம் அவற்றைப் பர்ாமரிக்க பாதுகாக்க முடியும். எவ்வாறெனில், மக்கள் இந்தக் குளங்களுக்குள் தங்கள் குப்பை கூழங்களைக் கொட்டாதிருப்பதே குளங்களைக் பாதுகாப்பதற்கான, பராமரிப்பதற்கான முதல் முயற்சியாக - வழியாக அமையும்!

## சொற்சிலம்பம் போட்டி இல: 578

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | ■ | 5 | 6 |
| 7 | | ■ | 8 | | 9 | | |
| 10 | | 11 | ■ | 12 | | | ■ |
| | ■ | | 13 | 14 | | ■ | 15 |
| ■ | 16 | | | | ■ | 17 | |
| 18 | | | | ■ | 19 | | |
| 20 | | ■ | 21 | 22 | | ■ | |
| | ■ | 23 | | | ■ | 24 | |

### இடமிருந்து வலம்

1. முகத்துக்கு நேரே புகழ்வது
5. புலவனையும், பாட்டையும் குறிக்கும்
7. புள்ளடி
8. புகழுடம்பு
10. வெளிச்சம் தருவது
12. நிறை
13. திடீரென வரும் பிரமிப்பு
16. யௌவனம்
17. அகந்தையின் எண்ணம்
18. தவளையின் ஓர் நிலை
19.பூவுலகு
20. நோவு
21 தண்டிகை
23. வேள்வித் தீயில் போடப்படும் பல்
24. இறப்பு

### மேலிருந்து கீழ்

1. தொழிலாளியின் எஜமான்
2. கை
3. இரட்டை
4. சுவைகளில் ஒன்று
5. நாட்டை விட்டு வெளியேற இந்தச் சீட்டு அவசியம்
6. முற்கால ஆயுதம்
9. தீர்மானம்
11. புதிய செய்தி
14. கரத்தால் இழைக்கும் தவறு
15.சுய தேவையை பூர்த்தி செய்யும் நிலை
16. முளைவிட்ட பனைகளின் தோட்டம்
17. கவனிப்பு
18. சிறிய பாத்திரம்
19. ஆடத்தெரியாதவனுக்கு இது சரியில்லை
20. வேகம்

அனுப்புபவர் பெயர்:......................................................

முழுமையான தபால் விலாசம்: ..............................

.............................................................................

கையொப்பம்:.......................................................

வாசகர்கள் மத்தியில், குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தி யில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம் 576
இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**

(1) தலைவிதி (4)தமது (7) மானபங்கம் (8) பவனம்
(10) கம்பி (11) திடம் (12) ஆம் (13) வீதி (14) நகை
(15) பாகுபாடு (17) பாகு (18) கராம்பு (20) குளிர்காலம்

**மேலிருந்து கீழ்**

(1) தம்பதி (2) விமானம் (3) தினம் (4) தங்கம் (5) மகம்
(6) தும்பிக்கை (9) வடக்கு (12) ஆதி (13) வீடு (14) நகும்
(15) பாக்கு (16) பாகர் (18) கல (19) புவி

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

**சொற்சிலம்பம் போட்டி இல.578**

பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள் நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட். இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், (24.07.2019 ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாக, தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இல.578 இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 28.07.2019 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே
ரூபா 300/=, ரூபா 250/=,
ரூபா 200=, ரூபா 150/=
ரூபா 100/=
பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

போட்டிகளில் வெற்றியீட்டியவர்களாக அறிவிக்கப்பட்டு, இதுவரை தமக்கான பரிசுக் காசோலைகள் கிடைக்கப்பெறாதவர்கள் வார நாள்களில் உதயன் அலுவலக நிதிப் பிரிவில், போட்டிக் கூப்பன்களில் தாம் குறிப்பிட்ட தமது பெயர், வதிவிட விவரங்களை உறுதிப்படுத்தி தமக்கான கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ள இயலும். போட்டியில் கலந்து கொள்வோர் தத்தமது சரியான, முழுமையான தபால் விலாசத்தையும் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 576 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**

சாரதலீலா சிவபாலன்,
கற்பகப்பிள்ளையார் கோவில் வீதி,
உரும்பிராய் வடக்கு.

**2 ஆம் பரிசு**

யூ.சன்சிகா,
இல.30/48 பூண்டி மாதா வீதி,
எமில் நகர், மன்னார்.

**3 ஆம் பரிசு**

ந.செல்வராணி,
ஜே.4 காரை வட கிழக்கு,
காரைநகர்.

**4 ஆம் பரிசு**

ஐ.தயாபரன்,
கைதடி தெற்கு,
கைதடி

**5 ஆம் பரிசு**

செ.கபிலன்,
தரம் 11, சத்தியசாயி பாடசாலை,
மானிப்பாய்.

### பாராட்டுப் பெறுவோர்

பா.அனிதா,
பிரதேச செயலகம், கரவெட்டி.

ப.பிரித்திகா,
தரம் 4 ஈ.
யா/சென் .ஜோன் பொஸ்கோ, வித்தியாலயம்.

நகுலன் லக் ஷகி,
காளிகோவிலடி, துர்க்காபுரம்,
தெல்லிப்பளை.

**சொற்சிலம்பம் போட்டி 576 இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.**

twitter

பொறுமையாக இருந்து
பூமியாள்வதற்குள் கிழடுதட்டிவிடும்.




**நிம்மதிக்கான இரண்டு வழிகள்**

**விட்டுக் கொடுங்கள்**
**இல்லை**
**விட்டுவிடுங்கள்**




# நயன்தாரா மலையாளத்தில் நடிக்கும் படத்தின் சுவரொட்டி வெளியாகியது

தமிழில் முன்னணி நாயகியாக வலம் வருபவர் நயன்தாரா. இவர் தமிழ்ப் படங்களில் மட்டும் கவனம் செலுத்தாமல், தெலுங்கு, மலையாளம் போன்ற பிற மொழிப் படங்களிலும் நடித்து வருகிறார்.
இவர் தற்போது மலையாளத்தில் நிவின் பாலிக்கு ஜோடியாக 'லவ் ஆக்சன் டிராமா' படத்தில் நடித்துள்ளார். இந்தப் படத்தை தியான் ஸ்ரீனிவாசன் இயக்கியுள்ளார்.
இந்தப் படத்தின் படப்பிடிப்பு அண்மையில் முடிவடைந்தது. படத்தின் பின்னணிப் பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றன. இந்த படம் விரைவில் திரைக்கு வரவுள்ள நிலையில் தற்போது இந்த படத்தின் முதல் சுவரொட்டியைப் படக்குழு வெளியிட்டுள்ளது.







நேற்றுச் செய்ய
வேண்டியதை இன்று
செய்தால்
**சோம்பேறி**

இன்று செய்ய
வேண்டியதை இன்றே
செய்தால்
**சுறுசுறுப்பானவர்**

நாளை செய்ய
வேண்டியதை இன்று
செய்தால்
**வெற்றியாளர்.**




# கவலைகளை தொலைப்போம்




கவலை என்பது ஒரு மனிதனுக்குப் புற்றுநோயைப் போன்றது. புற்று நோய்க் கிருமிகள் எப்படி உடலில் உள்ள மற்ற பாகங்களுக்கு விரைவாகப் பரவுகின்றனவோ அதைப் போன்று கவலை என்பது ஒரு கவலை போய் இன்னொரு கவலையை உண்டாக்கும் சக்தி கொண்டது. தலை வலி போய் திருகு வலி வந்த கதையாக.

கல் தடுக்கி விழுந்து பிழைத்தவனும் உண்டு, புல் தடுக்கி செத்தவனும் உண்டு, என்பது பழமொழி. அதாவது கல் தடுக்கி ஒரு பாறையில் மண்டை மோதி பிழைத்தவனும்உண்டு, புல் தடுக்கி தரையில் விழுந்து இறந்தவனும் உண்டு என்று அர்த்தம். இறப்பு என்பது வர வேண்டிய நேரத்தில் சரியாக வரும், ஆனால் அது எப்போது வரும், எப்படி வரும் என்பது எவருக்கும் தெரியாத ரகசியம். அந்த ரகசியம் மட்டும் மனிதனுக்கு தெரிந்தால் இந்த உலகம் என்னாகும் என்பது சற்று சிந்தித்து பாருங்கள். என்னென்ன கொடுமையான காரியங்கள் நடக்கும் என்று.

கோடி கோடியாகப் பணம் இருக்கலாம். பெரிய பெரிய மருத்துவ மனைகளில் சிகிச்சை பெறுவதற்கு வசதி இருக்கலாம். ஆனால் ஆயுள் முடியும் நிலை வந்தால் கோடிகளாலும் எந்தத் திறமையான மருத்துவராலும் போகின்ற உயிரை தடுத்து நிறுத்த முடியாது. அதுதான் நியதி. இந்த உண்மையை புரிந்து கொண்டால் கவலை என்பதற்கு வேலையே இல்லை.

ஆழ்ந்து சிந்தித்து பார்த்தோம் என்றால் உணர்ச்சிகளின் விளைவால் மனிதர்களால் உருவாக்கபடுகின்ற ஒரு மன நோய் தான் கவலை. உணர்ச்சிகளின் பிறப்பிடம் உறவினர்கள், கூட வேலை பார்ப்பவர்கள், நண்பர்கள் போன்றவர்களுடன் பழகும் போதும், பேசும் போதும் பெரும்பாலும் உருவாகும். பெரும்பாலான உணர்ச்சிகள் நினைவுகளாக உருவெடுத்து, அந்த நினைவுகள் வாக்கு வாதங்களாகவும்,கோபங்களாகவும் மாறி அளவுக்கு அதிகமாக செல்லுபோது அவை கவலைகளாக உருவெடுக்கின்றது.

கவலைகளின் தொழிற்சாலையே ஒருவருடைய மனதுதான். இங்குதான் மனித இனத்திற்கு வேதனையை தரக்கூடிய கவலைகள் உற்பத்தி செய்யபடுகின்றன. இந்த கவலைகளின் மூல பொருள் நினைவுகள்.

நினைவுகள்தான் ஒருவரின் கவலைக்கு முக்கிய காரணம். அந்த நினைவுகளை கட்டுபடுத்தி விட்டாலே கவலை என்ற பேச்சுக்கே இடம் இல்லை.

f

- வெட்டுப் படும் மரத்துக்கு தெரியும், தன் கிளையினால் செய்த கோடாலிப் பிடிகொண்டே தன்னை வெட்டுகிறார்கள் என்பதனை..

- பயந்தவனுக்கு 'வலி' நிறைந்த வாழ்க்கை! துணிந்தவனுக்கோ 'வழி' நிறைந்த வாழ்க்கை!!

- கடைசி தீக்குச்சியில் காட்டும் பொறுமையும்.... பொறுப்பும்... எல்லாவற்றிலும் கடைப்பிடித்தால் வாழ்க்கை மேன்மையே...!!

- இவர்கள் தர்மயுத்தம் நடத்தினார்கள்! ஆனால் இவர்களிடம் 'தர்மமே' யுத்தம் நடத்துகிறது!!



# 200 ஆண்டுகள் தாண்டி பணிபுரியும் அமலமரித் தியாகிகள் துறவறசபை

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை

அமலமரித் தியாகிகள் துறவற சபையினர் தமது சபை ஆரம்பிக்கப்பட்டு 200 ஆண்டுகளைத் தாண்டியும் (1816-2016) ஆற்றிவரும் தொடர் பணிகளைப் பற்றி இவ்வாக்கம் பேசுகிறது.

அமலமரித் தியாகிகள் துறவறசபையினர் தமது சபை ஆரம்பிக்கப்பட்டு 200ஆவது ஆண்டு (1816-2016) நிறைவை 2016ஆம் ஆண்டு ஜனவரியில் யாழ். அடைக்கல அன்னை ஆலயத்தில் யாழ். ஆயர் ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையின் தலைமையில் திருப்பலி ஒப்புக்கொடுத்து கொண்டாடியமை இங்கு நினைவு கூரத்தக்கது.

இவ் ஆக்கம் அமலமரித் தியாகிகளின் யாழ். மாகாண முதல்வர் எட்வின் வசந்தராஜா அ.ம.தி. அடிகளார் மற்றும் றமேஸ் அ.ம.தி அடிகளார் ஆகியோர் வழங்கிய தகவல்களில் இருந்து ஆக்கப்பட்டது.

### 200ஆண்டு கால சரித்திரம்

உலகின் 5 கண்டங்களில் சீனா உட்பட 71 நாடுகளில் இன, மத, மொழி, நிற வேறுபாடுகளைத் தாண்டி கடந்த 200 ஆண்டுகளாக (1816 - 2016) அமலமரித் தியாகிகள் துறவறசபையினர் பணியாற்றி சாதனை படைத்துள்ளனர். குருசுச்சுவாமி என அன்றும், இன்றும் அன்பாக அழைக்கப்படும் அமலமரித் தியாகிகள் துறவற சபையினர் யாழ் மாகாணத்தில் கடந்த 168 ஆண்டுகளாக மேய்ப்புப்பணி கல்விப்பணி சமூகப் பணி மனித நேயப்பணி எனப் பன்முகப்பட்ட பணிகளை ஆற்றிப் பெருமையோடு தலை நிமிர்ந்து நிற்கின்றனர். இவ்வேளையில் முதலில் அமலமரித் தியாகிகளின் உயர் தலைவர் அவர்களையும் அவரோடு இணைந்து பணியாற்றும் அனைத்துலக அமல மரித்தியாகிகள் துறவறசபைக் குருக்களையும் வாழ்த்தி தொடர்பணி சிறக்க ஆசீர் கூறுவோம்.

### அமலமரித் தியாகிகள் துறவறசபை நிறுவுனர்

இயூஜின் டி மசெனட் என்பவர் செல்வம் மிக்க பிரபுக்கள் குடும்பத்தில் பிறந்து (1782) பிரான்சிய புரட்சியில் புடமிடப்பட்டு (1789) திருச்சிலுவையை உற்றுநோக்கி மனமாற்றம் அடைந்து (1807) குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டு (1811) துறவற சபையை நிறுவி (1816) ஆயராகி (1837) இறைவனோடு இணைந்து (1861) புனிதராகி (1995) இன்று 71 நாடுகளில் ஏறக்குறைய 4 ஆயிரம் அமலமரிப் பணியாளர்களினால் இன்றும் வாழ்கிறார்.

### ஏழைகளுக்கு நற்செய்தி என்னும் விருது வாக்கு

ஏழைகளுக்கு நற்செய்தி நவில என்னும் விருது வாக்குடன் மறைபரப்புப் பணியை மகாஞான ஒடுக்க மறைஉரை மூலம் போதிப்பதையே தலையான பணியாகக் கொண்டு பன்முகப்பட்ட பணிகளைச் சமய சமூக மற்றும் வரம்புகளைக் கடந்து மனிதம் என்ற பரந்த பாதையில் பணியாற்றுபவர்கள் இவர்கள். யாழ். அப்போஸ்தலிக்க ஆளுனர் ஆயர் பெற்றக்கினி ஆண்டகையின் அழைப்பை ஏற்று ஆசியாவில் தம் பணியை ஆரம்பிக்கும் முதல் நாடாக இலங்கை காலித்துறை முகத்தில் 1847ஆம் ஆண்டில் கால் பதித்து யாழ். நோக்கி பயணித்தனர் அமலமரித்தியாகிகள். இவர்களைத் தொடர்ந்து ஐரோப்பிய நாடுகளில் இருந்து பல நூற்றுக் கணக்கில் மறைபரப்புத் தாகத்தோடு ஈழ மண்ணை நோக்கி வருகை தந்தனர்.


### தேவை எங்கோ சேவை அங்கே

தேவை எங்கோ சேவை அங்கே என்ற நோக்குடன் மறைபரப்புப் பணியாளர்களாக் கடல் கடந்த பயணம் மேற்கொண்ட இந்த வெள்ளைக்கார சுவாமிமார் தம் தாய் தந்தை உற்றார் உறவினர் சுற்றம் சூழல் சொந்த வீடு தாய் நாடு என அனைத்தையும் துறந்து முன்பின் தெரியாத புதிய பணிக்களம் நோக்கி வந்தனர். புதிய மண் புதிய மக்கள் புதிய மொழி புதிய கலாசாரம் புதிய காலநிலை புதிய உணவு புதிய வாழ்க்கை முறை என அனைத்துமே புதிய தாய் அமைந்த போதும் அர்ப்பணிப்பு மிக்க பணியை ஆற்றத் தொடங்கினர். வளங்களும் வசதிகளும் உள்ள பூமியில் இருந்து அடிப்படை வசதிகளே அற்ற ஒரு பூமிக்கு வந்து அவர்கள் வாழ்ந்த தியாக வாழ்வும் கிறிஸ்தவத்திற்கு சான்று பகரும் அர்ப்பண வாழ்வும் பேசிய கொச்சைத் தமிழும் வீதியில் அவர்களைக்கண்டாலும் முழங்காலில் இருந்து சுவாமி இயேசுக் கிறிஸ்துவைத் துதிக்க என வணக்கம் செலுத்த வைத்தது. அவர்கள் பேசிய அந்த கொஞ்சம் தமிழை பேசிக்காட்டுவோர் இன்னும் நம் மத்தியில் உள்ளனர். அவர்கள் இறந்து போன போது இந்த மண்ணே தம் சொந்த மண் என இங்கேயே புதைக்கப்பட்டபோது துறவறத்திற்கும் அர்ப்பணத்திற்கும் அவர்கள் ஆழ்ந்த அர்த்தம் கொடுத்தார்கள்.

பன்முகவடிவப் பணிகளை ஆற்றியவர்கள் ஆயரின் கட்டளையை சிரமேற் கொண்டு மறைமாவட்டத்திற்கு அடித்தளமிடல் சுதேச குருக்களை உருவாக்கல் புதிய பணித்தளங்களை அமைத்தல் என மேய்ப்புப்பணி கல்விப்பணி சமூகப்பணி மனித நேயப் பணி எனப்பன்முகவடிவப் பணிகளை ஆற்றி யாழ் மறைமாவட்டத்திற்கு முகம் கொடுத்தவர்கள் இவர்கள். இவ்வாறு வாழ்ந்து இறந்துபோன அமலமரித்தியாகிகள் சபையைச் சேர்ந்த இந்த வெள்ளைக்கார சுவாமி மாரையும் அவர்களோடு இணைந்த மற்றைய சுதேச குருக்களையும் மறந்து விட முடியாது. அவர்கள் ஆன்மா அமைதியில் இளைப்பாறட்டும்.



1847ஆம் ஆண்டு இலங்கை மாகாணம் என்ற நிர்வாகக் கட்டமைப்பில் பணியாற்றிய சபை காலப்போக்கில் தமிழ் சிங்களம் என்ற மொழி அடிப்படையில் யாழ்ப்பாணம் கொழும்பு மாகாணங்களாக பிரிக்கப்பட்டது. 1987ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் துணை மாகாணமாக்கப்பட ஜூயி பொன்னையா அ.ம.தி அடிகளார் (1987 - 1991) தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். 2002ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் மாகாண அந்தஸ்துப் பெற முதல் மாகாண




முதல்வராக ஜீவாப்போல்அ.ம.தி அடிகளார் (1999-2005) பொறுப்பேற்றுக் கொண்டார்.

### பரந்து வளர்ந்து பணி

தொடர்ந்து போருக்கு பிற்பட்ட காலப் பகுதியில் இன்று யாழ் அமலமரிதியாகிகளின் பணி பரந்து வளர்ந்து புது வடிவம் பெற்றிருக்கின்றது எனலாம். யாருமற்ற சிறுவருக்கான இல்லமான அன்பகம் முளங்காவிலில் இயங்குகின்றது. கொழும்புத்துறை சிறிய பெரிய குருமடங்களுக்கான கட்டிட வசதிகள் விஸ்தரிக்கப்பட்டு கட்டிட அமைப்பைக் காட்டிலும் பயிற்சியும் உருவாக்கமுமே முக்கியம் என்பதில் கவனம் செலுத்தப்படுகின்றது. அமலமரித் தியாகிகளினால் பாரமரிக்கப்பட்ட பங்குகளில் கவனம் செலுத்தப்பட்டு சாட்டி சிந்தாத்தரைமாதா யாத்திரைத்தலம் விளான் அமதிபுரம் கொக்கிளாய் நாயாறு தர்ச்சனா மருதமடு கனகராஜன் குளம் இலுப்பைக் குளம் நிலாவெளி சாம்பல் தீவு கப்புத்தளை லுனுகலை அக்குறஸ தெனியாய என இவர்களின் பங்குப் பாரமரிப்புப்பணி பரந்து விரிந்திருக்கின்றது. வவுனியாவில் அமதி அகம் எனும் பெயரில் மறை உரைப்பணியை ஆற்ற மறை உரைஞர் குழு உருவாக்கப்பட்டிருக்கின்றது. யாழ்ப்பாண வைத்தியசாலையில் ஆரம்பிக்கப்பட்ட ஆன்மிகப்பணி கிளிநொச்சி, வவுனியா, மன்னார் ஆகிய வைத்தியசாலைகளில் விரிவுபடுத்தப்பட்டிருக்கின்றது. யாழ்ப்பாண வைத்தியசாலை கட்டிட அமைப்பும் பணிமுறையும் வளப்படுத்தப்பட்டிருக்கின்றது. உளவளத் துணைப்பணி முன்னு ரிமைப்படுத்தப்பட்டு யாழ். வன்னி மாவட்டங்களில் புதுவடிவுடன் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது. யாழ்ப்பாணத்தில் சுக வாழ்வு நிலையம் வளர்பிறை பருத்தித்துறையில் அஞ்சலி அகம் முல்லைத்தீவில் அமைதித் தென்றல் என உளவளத்துணைப் பணி பன்முக வடிவமெடுத்திருக்கின்றது.

### சமாதானத்திற்கும் நல்லிணக்கதிற்குமான பணியகங்கள்

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, மன்னார் ஆகிய இடங்களில் சமாதானத்திற்கும் நல்லிணக்கதிற்குமான பணியகம் அமைக்கப்பட்டு சமாதானம் தொடர்பான கல்வி வழங்கப்பட்டு வன்முறையில் இருந்து அமைதி வழிக்குத் திரும்பும் வழிகாட்டற் பணி மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. மன்னாரில் ஞானோதயம் எனும் பெயரில் குருக்கள் துறவியர் பொது நிலையினருக்கான இறையியல் ஆன்மிக உருவாக்கல் பணி தொடங்கப்பட்டிருக்கின்றது. திருகோணமலையில் அமல உதயம் எனும் பெயரில் கல்விப்பணிக்கான களம் அமைக்கப்பட்டிருக்கின்றது. திருகோணமலை புனித சூசையப்பர் கல்லூரி பொறுப்பெடுக்கப்பட்டதோடு யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் ஏறக்குறைய 10 அமலமரித்தியாகிகள் பாடசாலையில் கல்விப்பணி ஆற்ற வழி செய்யப்பட்டிருக்கின்றது. கோப்பாயில் சங்கமம் எனும் பெயரில் ஆன்மிக குணமாக்கல் வழிபாடுகளும் கருத்தரங்குகளும் சிறுவர் மற்றும் இளைஞர்களுக்கான் கல்வியூட்டற் பணிகளும் நடைபெறுகின்றது. கிளிநொச்சியில் ஒப்ரெக் என்னும் பெயரில் தொழில்சார் பயிற்சிகள் மேற்கொள்ள வசதி செய்யப்பட்டிருக்கின்றது. மாங்குளத்தில் அமதிக்கரங்கள் எனும் பெயரில் மாற்று வலுவுள்ளோர்க்கான நல வாழ்வு மற்றும் புனர் வாழ்வுப்பணிகள் மேற்கொள்ள வழிசெய்யப்பட்டிருக்கின்றது. கிளிநொச்சியில் அன்னை இல்லம் கல்விவள நிலையமாக இயங்குகின்றது. இதற்கு ஸொபறா நவீன நூலகம் வலுச்சேர்க்கின்றது. கொக்கிளாய் நாயாறு பங்கில் அமதிக களம் கடல் கமத் தொழில் செய்பவர்களுக்கான கருத்துரைகளையும் வழிகாட்டல் பயிற்சிகளையும் வழங்குகின்றது. மன்னார் தர்ச்சனா மருதமடு பங்கு முள்ளிக்குளத்தில் அமல அருவி வளந்தோருக்கான ஆங்கிலம் கணணி அறிவைக் கொடுக்கின்றது. அமதிபுரப் பங்கு ஸ்கந்தபுரத்தில் அமதி வனம் சமூக மேம்பாட்டை வழங்கும் நிலையமாக இயங்குகின்றது. உள்நாட்டில் மட்டுமல்ல பிரான்ஸ் நோர்வே டென்மார்க் இத்தாலி லண்டன் யேர்மனி போன்ற வெளி நாடுகளிலும் யாழ் அமலமரி தியாகிகளின் பணிக்களங்கள் பரந்திருக்கின்றது.



> ஏழைகளுக்கு நற்செய்தி நவில என்னும் விருது வாக்குடன் மறைபரப்புப் பணியை மகாஞான ஒடுக்க மறைஉரை மூலம் போதிப்பதையே தலையான பணியாகக் கொண்டு பன்முகப்பட்ட பணிகளைச் சமய சமூக மற்றும் வரம்புகளைக் கடந்து மனிதம் என்ற பரந்த பாதையில் பணியாற்றுபவர்கள் இவர்கள். யாழ். அப்போஸ்தலிக்க ஆளு னர் ஆயர் பெற்றக்கினி ஆண்டகையின் அழைப்பை ஏற்று ஆசியாவில் தம் பணியை ஆரம்பிக்கும் முதல் நாடாக இலங்கை காலித்துறை முகத்தில் 1847ஆம் ஆண்டில் கால் பதித்து யாழ். நோக்கி பயணித்தனர் அமலமரித்தியாகிகள். இவர்களைத் தொடர்ந்து ஐரோப்பிய நாடுகளில் இருந்து பல நூற்றுக்கணக்கில் மறைபரப்புத் தாகத்தோடு ஈழமண்ணை நோக்கி வருகை தந்தனர்.

### 200 ஆண்டின் நிறைவின் மகிழ்வில்

யாழ். மாகாண முதல்வர் எட்வின் வசந்த ராஜா அ.ம.தி. அடிகளாரிடம் (2014 முதல்) கேட்டபோது அமலமரித் தியாகிகள் சபையினரின் இந்த மகிழ்வான நேரத்தில் மாகாணத் தலைமைப் பொறுப்பை ஏற்றிருப்பது இறைவனின் செயல் என மகிழ்வோடு ஏற்றுக் கொள்கிறேன் என்றார்.

காலத்தின் தேவைகளுக்கேற்ப நிறுவுனரின் நோக்கை நிறைவு செய்யும் இந்தப்பணியாளர்களின் சாவால்கள்தான் என்ன? உலகளாவிய ரீதியல் மாறிவரும் உலகில் குறிப்பாக லத்தீன் அமெரிக்க நாடுகளின் புதிய ஏழைகளுக்கு தம் நிறுவுனரின் நோக்கிற்கு அமைய தம் பணியை புதிய வடிவங்களில் முனைப்புடன் செயலாற்றவேண்டும். ஈழ மண்ணில் கடந்த 30 ஆண்டு கால யுத்ததின் பின்னர் இவர்கள் இன்று ஆற்றி வரும் சிறப்புப் பணிகள் போற்றுதற்குரியது. இந்தப்பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு இனிவரும் காலத்தில் இன்னும் அர்ப்பணிப்புடன் ஆற்ற வாழ்த்துவோம். அமலமரித்தியாகிகளின் பணி யாழ் மாகாணத்திலும் தமிழ் பேசும் மக்கள் மத்தியிலும் இன்னும் உலகம் முழுவதும் காலத்தின் தேவைகளுக்கேற்ப இறைவனால் வழிநடத்தப்பட இறை வரம் வேண்டுவோம்.

428

# நித்திய சுகம்

உடலே கோயில்

மருத்துவர் ம.மதுமிதா

# சூலகத்தில் நீர்க்கட்டி உருவாகின்றமைக்கு காரணங்களுக்கு அவற்றுக்கான தீர்வுகளும்

சூலகத்தில் நீர்க்கட்டி உடைய பெண்களின் உடற் பருமனானது சிறிது சிறிதாக அதிகரித்துச் செல்வதோடு மாதவிடாய் வட்டத்திலும் மாற்றங்கள் ஏற்படுகின்றன. சில பெண்களுக்கு 2-3 மாதங்களுக்கொரு முறையே மாதவிடாய் ஏற்படுகின்றது. அதேபோல மாதவிடாயின் போது ஏற்படுகின்ற வெளியேற்றமும் குறைவடைய நேரிடுகின்றது. இந்த நோயுள்ள பெண்களுக்கு ஆண்களைப் போன்று முகத்திலும் பிற பகுதிகளிலும் உரோம வளர்ச்சி ஏற்படுவதோடு முகப்பருக்கள் ஏற்படுதல் மற்றும் ஆண்களைப் போன்று தலைமுடி உதிர்வடைதல் போன்றனவும் ஏற்பட நேரிடுகின்றது.

**தவறான உணவுப்பழக்கத்தால் அதிகரிக்கின்றது உடற்பருமன்**

இன்றைய காலகட்டத்தில் தவறான உணவுப் பழக்க வழக்கங்கள், ஆரோக்கியமற்ற வாழ்க்கை முறை மற்றும் தேகப்பியாசம் அற்ற வாழ்க்கை முறை போன்றவற்றால் உடற்பருமன் அதிகரிப்பதானது இந்தப் பிரச்சினை ஏற்படுவதற்கு மிக முக்கிய காரணமாகும்.

சூலகத்தில் சிறிய நீர்க்கட்டிகள் ஏற்படும் போது பெண் "ஹோர்மோன்கள்"ஒழுங்கற்றுச் சுரப்பதன் மூலம் இவ்வாறான பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இவ்வாறான நோய் அறிகுறிகள் இருப்பவர்கள் வைத்திய ஆலோசனையைப் பெறுவது மிகவும் அவசியமானதாகும். பெண் நோயியல் சிகிச்சை நிலையத்திலோ (Gynaecology Clinic) அகஞ்சுரக்கும் தொகுதி சிகிச்சை நிலையத்திலோ (Endocrinology Clinic) இது தொடர்பான சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும். வைத்தியரானவர் தேவையான குருதி மற்றும் ஹோர்மோன் பரிசோதனைகளை மேற்கொண்டு இந்த நோயை இனங்காண்பார். இதேபோல ஸ்கான் பரிசோதனை மூலமும் சூலகத்தில் நீர்க்கட்டிகள் இருப்பதனைக் கண்டறியக் கூடியதாக இருக்கும்.



**ஆரம்பத்தில் இனங்காணுதல் மிகமிக அவசியமான ஒன்று**

இந்த நோயைக் கவனிக்காது தகுந்த சிகிச்சை பெறாதவிடத்து பல பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புள்ளது. நீரிழிவு கொலஸ்ரோல் அளவு அதிகரித்தல் போன்ற பிரச்சினைகள் ஏற்படுவதோடு கர்ப்பம் தரித்தல் தாமதமாதல், கர்ப்பம் தரிக்க முடியாதிருத்தல், மன அழுத்தம் மற்றும் கர்ப்பப்பை புற்றுநோய் போன்றவையும் ஏற்பட நேரிடலாம்.

இவ்வாறான பிரச்சினையுள்ளவர்கள் தங்களுடைய உடற்பருமனைக் குறைத்துக் கொள்வது மிகவும் அவசியமானதாகும். அதிகளவு சீனிச்சத்துச் சேர்ந்த பானங்கள் மற்றும் உணவுகளைத் தவிர்ப்பதோடு மாச்சத்து நிறைந்த உணவுகள், அதிகளவு கொழுப்புச் சேர்ந்த உணவுகள் போன்றவற்றையும் குறைப்பது அவசியமானதாகும்.

இதேபோல, தேகப்பியாசம் செய்வதற்கு நேரத்தை ஒதுக்கி அதில் ஈடுபடுவதும் மிகவும் அவசியமாகும். மாதவிடாயை ஒழுங்குபடுத்துதல், தேவையற்ற உரோம வளர்ச்சியைத் தடுத்தல் போன்றவற்றுக்கு வைத்தியரின் ஆலோசனைப்படி மருந்துகளைப் பெறக்கூடியதாகவிருக்கும். இதேபோல இந்த நோயினால் ஏற்படக்கூடிய நீரிழிவு, அதிக கொலஸ்ரோல் போன்றவற்றையும் கட்டுப்படுத்தக்கூடியதாகவிருக்கும்.

இந்த நோயுள்ள பெண்களுக்கு கர்ப்பம் தரிப்பதில் தாமதமாதல் மற்றும் கரு முட்டை வளர்ச்சிப் பிரச்சினைகள் ஏற்படக் கூடியதாக இருப்பதனால் அதற்கும் உரிய சிகிச்சையைப் பெற்றுக் கொள்வது அவசியமானதாகும். இது தொடர்பான விழிப்புணர்வை பெண்கள் மத்தியில் ஏற்படுத்துவது மிகவும் இன்றியமையாததாகும். சிறு வயது முதலே பெண் பிள்ளைகள் உடற்பருமன் அதிகரிக்காது ஆரோக்கியமான வாழ்க்கை முறையினைக் கடைப்பிடிப்பதன் மூலம் இந்தப் பிரச்சினை ஏற்படுவதைத் தடுக்கக் கூடியதாகவிருக்கும்.

*கட்டுரையாளர்:நீரிழிவு சிகிச்சை நிலையம், யாழ்.போதனா மருத்துவமனை.*

# உயர்குருதி அமுக்கம்

மருத்துவர் க.சுகந்தன்

குருதி அமுக்கம் தொடர்பாக மக்களுக்கு இருக்கும் சந்தேகங்கள், நோய் நிலைமைகள் தொடர்பாகப் பலவேறுபட்ட தகவல்கள் கேள்வி - பதில் வடிவில் இங்கு தரப்படுகின்றன.

**குருதி அமுக்கம் என்றால் என்ன?**

உங்கள் உடலில் குருதிக் குழாய்களில் குருதி சுற்றியோடும் போது ஏற்படும் அமுக்மே குருதியமுக்கம் எனப்படும்.
சாதாரணமாக இது எவ்வளவு இருக்கும்?
சுருங்கல் அமுக்கம் - 120mmHg
விரிதல் அமுக்கம் - 80mmHg
இது இளம் பராயத்தவர்க்கு சற்று குறைவாகவும் முதியோருக்கு சற்று அதிகமாக காணப்படும்.

**உயர் குருதி அமுக்கம் என்றால் என்ன?**

குருதி அமுக்கம் மேற்குறிப்பிட்ட அளவை விட கூடுதலாக இருத்தல் உயர்குருதி அமுக்கம் எனப்படும். பொதுவாக சுருக்கல் அமுக்கம் - 140mmHgஐ விட கூடுதலாகவும் விரிதல் அமுக்கம் 90mmHg ஐ விட கூடுதலாகவும் இருப்பின் அது உயர்குருதி அமுக்கம் என்ற வகையறாவுக்குள் கொள்ளப்படும்.

**யாருக்கு உயர் குருதி அமுக்கம் ஏற்பட வாய்ப்புக்கள் அதிகம்?**

- வயது அதிகரிக்கும் போது
- உடல் நிலை அதிகமானவர்கள்
- சிகரெட் பாவனையாளர்கள்
- நீரிழிவு நோய், சிறுநீரக நோய் போன்ற வருத்தம் உள்ளவர்கள்
- குடும்ப அங்கத்தவரில் பலர் உயர் குருதி அமுக்கத்தால் பாதிக்கப்பட்டிருப்பின்

**குருதி அமுக்கம் கட்டுப்பாட்டில் இல்லாவிடில் என்ன பிரச்சினைகள் ஏற்படும்?**


இருதய நோய், சிறுநீரகச் செயலிழப்பு, பாரிச வாதநோய், குருதிக்குழாய்கள் பாதிப்படைதல்

**குருதி அமுக்க நோயை கட்டுப்பாட்டில் வைத்திருக்க நாம் என்ன செய்ய வேண்டும்?**

- சரியான உணவுப்பழக்க வழக்கங்களை கடைப்பிடிக்க வேண்டும்.
- உடல் நிறையை அளவாகப் பேண வேண்டும்
- தினமும் உடற்பயிற்சி செய்ய வேண்டும்
- புகைப்பிடிப்பதை நிறுத்த வேண்டும்.
- வைத்தியர் தரும் மருந்துவில்லைகளை அவர் கூறிய அறிவுரைக்கேற்ப தவறாது உள்ளெடுக்க வேண்டும்.
- உங்கள் குருதியமுக்கத்தை சரியான கால இடைவெளியில் சோரித்துப் பார்க்க வேண்டும்.

**எவ்வகையான உணவு முறையை கடைப்பிடிக்க வேண்டும்?**

- உப்பு அதிகம் சேர்க்கப்பட்ட உணவுகளைத் தவிர்க்க வேண்டும்.
- புகையூட்டப்பட்ட மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுகளை தவிர்க்க வேண்டும்.
- அதிக கொழுப்பு அடங்கிய உணவுகளைத் தவிர்க்க வேண்டும்.



- பழங்களையும் மரக்கறிகளையும் அதிகம் உள்ளெடுக்க வேண்டும்.
- மீன் உணவுகள் உடலுக்கு நன்று.

**வீட்டில் எவ்வாறு குருதி அமுக்கத்தை சோதித்துப் பார்ப்பது?**

- குருதியமுக்கத்தை சோதிக்க முன் புகைப்பிடிக்க கூடாது.
- கோப்பி, தேநீர் போன்ற பானங்களை உள்ளெடுக்கக் கூடாது.
- 30 நிமிடங்கள் கதையில் இளைப்பாறிய பின்னரே அளவிட தொடங்க வேண்டும்.
- சரியான அளவுள்ள 'cuff' பயன்படுத்த வேண்டும்.
- சோதிக்க முன் கதிரையில் சரியாக அமர வேண்டும். சோதிக்கும் கையை 'உரகக' யை முழங்கைக்கு மேல் கட்ட வேண்டும்
- கையை ஒரு மேசையில் தளர்வாக வைக்க வேண்டும். கை உங்கள் இதயத்தின் மட்டத்தில் இருக்க வேண்டும்.
- அளக்கும் இயந்திரம் மூலம் குருதி அமுக்கத்தை அளந்து சரியாக குறித்துக் கொள்ள வேண்டும்.

*கட்டுரையாளர் :பொது வைத்திய நிபுணர்.*

# தேன் சாப்பிடுவதால் கிடைக்கும் பயன்கள்?



தேன் என்பது நமக்குக் கிடைத்த அருமருந்து என்றும் சொல்லலாம். அதில் எண்ணற்ற பயன்கள் உள்ளன. மலர்களில் உள்ள மகரந்தங்களைக் கொண்டு தேனீக்களால் சேகரிக்கப்படுவதே தேன் ஆகும். தேன் மிக நிறைய மருத்துவ குணங்களைக் கொண்டது. அதனைச் சேகரிக்கப் பல தேனீக்கள் இணைந்து வேலை செய்கின்றன. இவர்களை வேலைக்காரத் தேனீக்கள் என்றும் கூறலாம். தேன் மனிதனின் வயிறு சம்மந்தமான அனைத்து பிரச்சினைகளையும் சரி செய்யும் திறன் கொண்டது.

தேன் பல நோய்களைக் குணமாக்கும் வல்லமை கொண்டது. மற்றும் இயற்கை வளங்கள் நிறைந்து உள்ளதால், தேன் பல்வேறு மருத்துவப் பயன்பாடுகளுக்கு உதவுகிறது. சித்த மருத்துவத்தில் முக்கியமான மருந்து பொருளாக உபயோகப்படுத்தப்படுகிறது. தேனை சேகரிக்கத் தேனீக்கள் உழைக்கின்றன, தேனி உழைப்பாலும் தேனின் மருத்துவ குணத்தாலும் நாம் அதை உபயோகித்து பல்வேறு நன்மைகளை அடைவோம். தேனின் நன்மைகள் நிறைய உள்ளன .

உடலில் மிகவும் முக்கியமானது தோல். அதன் அழகை பெண்களாக இருதாலும் சரி ஆண்களாக இருதாலும் சரி அழகாக வைக்க வேண்டும் என்ற எண்ணம் இருக்கும். தேன் தோலுக்கு ஒரு நல்ல மருந்து ஆகும். ஏனெனில் இதன் மருத்துவ குணம் தோலை ஈரப்பதமாக வைத்திருக்கும் மற்றும் சருமத்தை பொழிவாக்கி, மிருதுவாக்கி அதன் தன்மையை தக்க வைக்கிறது.

தோற் சுருக்கம் தற்போது சிறியவர்களுக்குக் கூட வருகிறது. சுருக்கம் ஏற்பட்டால் அது நம்மை வயதான தோற்றம் கொண்டது போல மாற்றிவிடும். இவ்வாறு சுருக்கம் ஏற்படாமல் இருக்க தேனை உபயோகப்படுத்தலாம். இதில் உள்ள சத்துக்கள் தோலில் உள்ள இறந்த செல்களை மீண்டும் உயிர் பெறச்செய்து சருமத்தை ஆரோக்கியமாக வைத்துக்கொள்கிறது.


தேனில் காயங்கள் மற்றும் சிராய்ப்புகள், தீக்காயங்களைச் சரி செய்யும் குணங்கள் இருக்கின்றன. பக்ரீரியாவுக்கு மற்றும் நுண்ணுயிரிகளுக்கு எதிரான பண்புகள் அதிகம் இருப்பதால் எளிதில் குணப்படுத்துகின்றன. தேன் காயங்களை சுத்தப்ப டுத்தி, நாற்றம் மற்றும் சீழ் உண்டாவதை தடுத்து விரைவில் வலியை குறைத்து காயம் குணமடைவதற்கு உதவுகிறது.

தேன் சேதமடைந்த தோலை சீர்படுத்துகிறது மற்றும் சரும அழற்சி, தோல் பிரச்சினைகளை சரி செய்யும். சொரியாசிஸ், சிரங்கு, படை, போன்றவை தேனில் உள்ள பூஞ்சை எதிர்க்கும் பண்புகள் மூலம் சரி செய்யப்படுகின்றன. சூரியனின் புற ஊதாக்கதிர்களில் இருந்து சருமத்தை தேனில் உள்ள ஆக்ஸிஜனேற்றான்கள் பாதுகாக்கிறது.

தேன் சருமத்தின் உள்ள அழுக்கு, மற்றும் தூசுகளை நீக்கி முகப்பரு வராமல் தடுக்கிறது. இதனால் நோய்த்தொற்று மற்றும் முக பிரச்சினைகளில் இருந்து நிவாரணம் அளிக்கிறது. தேன் வயதான தோற்றம் ஏற்படாமல் பாதுகாக்கிறது. உதடுகள் பட்டுப் போல மிருதுவாக இருக்க தேன் உதவுகிறது.

விற்றமின்கள் பி1, பி2, பி3, சி, பி6 ஆகியவை தேனில் அடங்கியுள்ள சத்துக்களாகும். இவை அனைத்தும் நமக்கு மிகவும் அவசியமான சத்துக்கள் ஆகும். இதில் உள்ள காபோஹைட்ரெட் உடலுக்கு ஆற்றல் அளித்து தசைகளை வலுவாக்குகின்றன.

தேன் தினமும் குடிக்கும் பழக்கம் உங்களிடமிருந்தால் குருதிசோகை நோய் உங்களை அண்டாது. மேலும் கால்சியத்தை உறிஞ்சி ஹீமோகிளோபின் எண்ணிகையை அதிகப்படுத்துகின்றன. 'தேன் நமது உடலில் உள்ள சளியை நீக்குவதில் முக்கிய பங்கு வகிக்கிறது. இதனால் சுவாசப்பிரச்சினை மற்றும் சுவாசக்குழாயில் இருக்கும் நோய்த்தொற்றுகளை சரிசெய்கிறது. உடம்பில் உள்ள தேவையற்ற கொழுப்புகளை நீக்கும் பண்பு தேனிற்கு உள்ளது இதனால் உடல் நிறை குறையும் மற்றும் உடல் சோர்வு ஏற்படாமல் இருக்க காலை தினமும் தேன் குடிக்க வேண்டும்.



# கழுத்தில் ஏற்படும் கருவளையத்தை போக்கும் குறிப்புகள்

பெண்கள் பெரும்பாலும் அழகாக முகத்தைப் பரிமரிக்க தெரிந்தவர்கள் கழுத்தை ஒரு பொருட்டாகவே மதிக்க மாட்டார்கள். இதனால் கழுத்துக் கறுத்துப்போய் முகம் மட்டும் பொலிவாகக் காட்சி தரும்.

இதற்குச் சில வீட்டு வைத்தியத்தின் மூலம் சரிசெய்யலாம். சிறிதளவு றோஸ்வாட்டர், சிறுது வெங்காயச்சாறு, ஒலீவ் எண்ணெய் இரண்டு சொட்டு, இவற்றுடன் சிறிதளவு பயத்த மாவு கலந்து கழுத்தைச் சுற்றி பூசிவிடுங்கள். ஒரு பத்து நிமிடம் கழித்து கழுத்திலிருந்து தாடை நோக்கி இலேசாக மசாஜ் செய்துவிடுங்கள். இவ்வாறு தொடர்ந்து செய்ய நாளடைவில் உங்கள் கழுத்தும் கருமை நிறம் நீங்கிப் பளபளக்கும்.

ஒரு தேக்கரண்டி ஈஸ்ட்டுடன், முட்டைகோசின் இலையில் சாறு எடுத்து, ஒரு தேக்கரண்டி தேன் கலந்து சருமம் எங்கும் பூசி வர சூரிய ஒளியால் கருமை அடைந்த தோலின் நிறம் இயற்கை நிறத்துக்கு மாறிவிடும்.

கருவளையம் என்றாலே கண்ணுக்கு கீழ் உள்ள கருவளையத்தைத்தான் குறிக்கும். கருவளையம் நீங்க இதுதான் சிறந்த வழி. வெள்ளரிக்காய்யைப் பொடி செய்து, அதில் தயிர் சேர்த்து பசைப்போல செய்து கருவளையும் உள்ள பகுதியில் தொடர்ந்து பூசி வர முப்பது நாளில் கருவளையும் இருந்த இடம் காணாமல் போயிருக்கும்.

கறுப்பு திட்டுகள் முகத்தில், மூக்கில், கண்ணாங்கள் என அசிங்கமாக கருப்பு நிற திட்டுகள் காணப்படும். இதை கிராம புறத்தில் "மங்கு" என குறிப்பிடுவார்கள். இவற்றைப் போக்க, ஜாதிக்காய், சந்தனம், வேப்பங்கொழுந்து ஆகியவற்றை நீர் கலந்து நன்றாக அரைத்து கருப்பு திட்டுகள் இருக்கும் இடத்தில் தடவுவதால் மறைந்துவிடும். வேப்பிலை, புதினா, சிறிது மருதாணி மற்றும் குப்பைமேனி இலைகளை காயவைத்து, தூளாக்கி வைத்துக் கொள்ளவும். இதில் சிறிது எடுத்து, பாலில் குலைத்து, முகத்தில் பூசி 20 நிமிடம் ஊற வைத்து குளித்தால், முகம் வியர்க்குரு வராமல், வெளியில் கறுத்துப் போகாமல் இருக்கும்.

# சுரைக்காய் குழம்பு

**தேவையான பொருள்கள்**

சிறிய சுரைக்காய் - 1
பச்சை மிளகாய் -1
பெரிய வெங்காயம் - 1
இஞ்சி பூண்டு விழுது -2 தேக்கரண்டி
மிளகாய்த்தூள் - 2 தேக்கரண்டி
புளி - நெல்லிக்காய் அளவு
தேங்காய் - 2 துண்டுகள்
சீரகம் - ஒரு தேக்கரண்டி
மஞ்சள்தூள் - 1/4 தேக்கரண்டி
மல்லித்தூள் - 11/2 தேக்கரண்டி
எண்ணெய் - தேவையான அளவு
உப்பு - தேவையான அளவு.

**செய்முறை**

சுரைக்காய், வெங்காயம் ஆகியவற்றை சிறு துண்டுகளாக நறுக்கி வைக்கவும்.
புளியைச் சிறிது தண்ணீர் ஊற்றிக் கரைத்து வைக்கவும்.
ஒரு சட்டியில் எண்ணெய் விட்டுக் காய்ந்ததும், அதில் வெங்காயத்தைப் போட்டு பொன்னிறமாக வதக்கவும்.
அதில், கீறிய பச்சை மிளகாய், இஞ்சி பூண்டு விழுதை சேர்த்து, பச்சை வாசனை போகும் வரை வதக்கவும்.
பின்னர் அதில் புளிக் கரைசல், மிளகாய்த் தூள், மஞ்சள்தூள், மல்லித்தூள், அரைத்த தேங்காய், சீரக விழுது சேர்த்து வதக்கவும்.
அதில் நறுக்கி வைத்த சுரைக்காய், உப்பு, தேவையான தண்ணீர் சேர்த்துக் கொதிக்க வைத்து, காய் நன்றாக வெந்ததும் இறக்கவும்.



# தொப்பையை குறைக்க உதவும் யோகாப்பயிற்சி

மனிதர்க்கு உண்ணும் உணவால் பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன. நாம் உண்ணும் உணவு நல்லதாகவும் சரியான நேரத்திலும் எடுத்துக் கொண்டால் அவை நமக்குப் பாதிப்பை ஏற்படுத்தாது. ஆனால் தற்போது உள்ள சூழ்நிலையில் நிறைய பேர் அவ்வாறு உண்பதில்லை. வெளியில் விற்கும் பொருள்களையெல்லாம் ருசிக்காக வாங்கி உண்கின்றனர். இவ்வாறு உண்பதால் வயிறு பெருத்து தொப்பை ஏற்படுகின்றன.

தொப்பையைக் குறைக்க நிறைய வலிகள் இருக்கின்றன ஆனால் அதையெல்லாம் நாம் செய்தல் தான் குறையும். யோகா பயிற்சி மூலம் நாம் தொப்பையைக் குறைக்க இயலும். யோகாப் பயிற்சியில் சலபாசனம் என்கின்ற ஆசனம் மூலம் நம் வயிற்றிலிருக்கும் குடல், இரைப்பை, மற்றும் பித்தப்பை போன்றவைக்குகளுக்கு நன்மை ஏற்படுத்தி தொப்பையை குறைக்க முடியும்.


தொப்பை ஆண்கள் மற்றும் பெண்கள் இருகிவருக்கும் இருக்கின்றன, அவர்கள் உந்த ஆசனத்தை முயற்சி செய்வதால் தொப்பையை குறைத்து வயிறு சாதாரன நிலையை அடையும்.

**சலபாசனத்தை எவ்வாறு செய்வது:**

முதலில் நாம் குப்புறப்படுத்து முகத்தைக் கீழ் தரையில் படும்படி வைத்துக்கொள்ளவேண்டும். பின்னர் கைகளை பின்னே நீட்டிக்கொள்ளவும் மூச்சை உள்ளே இழுத்து அடக்கி வயிற்றை இறுக்கமாக வைத்துக்கொள்ளவேண்டும். காய் மற்றும் கால்களை படத்தில் கட்டியுள்ளவாறு நாங்க விறைப்பாக வைத்து ஒரு 10 முதல் 15 வினாடி வரை இருக்க வேண்டும் இவ்வாறு மூன்று முறை உயரே நம் உடலை தூக்கி இறக்க வேண்டும். முதலில் ஒவொரு காலாக தூக்கி பழக்க முயற்சி செய்யலாம்.

**இந்த ஆசனத்தின் மூலம் பெரும் நன்மைகள்**

வயிற்றில் உள்ள தசைகள் வலுப்பெறும், பெருங்குடல் மற்றும் சிறுகுடல் வலுப்பெற்று நன்கு வேலை செய்யும். மலசிக்கல், கல்லீரல். மண்ணீரல் கணையத்தில் உள்ள பிரச்சினைகளில் நல்ல தீர்வை தரும். முதுகு மற்றும் இடுப்பு வலி சார்ந்த பிரச்சினைகள் நீங்கி வயிற்றில் உள்ள தொப்பை குறைய ஆரம்பிக்கும். இதில் கூறியவாறு ஆசனத்தை முயற்சி செய்து பாருங்கள். இந்த பதிவு உங்களுக்கு உபயோகப்படும் என நம்புகிறேன்.



## விற்பனைக்கு

திருநெல்வேலியில் உள்ள அச்சகத்தில் உள்ள (Computer) கொம்பியூட்டர், மெசின், (China Cutter) சைனா கட்டர் 36" மற்றும் தளபாடங்கள் உடன் விற்பனைக்குண்டு. புதிதாக அச்சகத் தொழில் செய்வதற்கு விரும்புவோருக்கு ஏற்ற இட வசதிகளுடன்.

**076 834 5589, 077 716 5589**

## பணிப்பெண் தேவை

வீட்டில் தங்கி நின்று வேலை செய்ய பணிப்பெண் யாழ்ப்பாணத்தில் தேவை. சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.(21.000/=)

**071 847 4223**

## வீடு விற்பனைக்கு

கொழும்புத்துறை, துண்டி வீதிக்கு அருகில் ஐயனார் கோயிலடியில் வீடு, 2 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு.

**071 856 2098**

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 35 வயது டை.டீ. மத்திய கிழக்கில் உயர் பதவி வகிக்கும் செவ்வாய் குற்றம் கூடிய கிரக பாவம் உள்ள மணமகனுக்கு மணமகள் தேவை. கூட்டிச் செல்வதற்கான வசதி உண்டு.

**076 837 4490**

## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள

**மொறிஸ் மைனர் கார் (10 ஸ்ரீ)** விற்பனைக்குண்டு.

**077 161 0056**

## மணமகள் தேவை

யாழ் வடமராட்சியைச் சேர்ந்த 47 வயதுடைய இந்து மதத்தைச் சேர்ந்த உயரம் 5அடி 2அங்குலம், தாரமிழந்த, சுயதொழில் புரியும் (வியாபாரம்) 7இல் செவ்வாய் உள்ள மணமகனுக்கு மணமகள் தேவை. தாரமிழந்த, குழந்தை இல்லாதவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு: **076 018 1138**








| | |
|---|---|
| கொழும்பு, களுத்தறை, காலி, மாத்தறை | - 077 463 6345 |
| குருணாகல், புத்தளம், பொலன்நறுவை, மாத்தளை | - 077 150 7552 |
| பதுளை, மொன்றாகலை, அம்பாந்தோட்டை, இரத்தினபுரி | - 077 403 2294 |
| கம்பஹா, கேகாலை, கண்டி, நுவரெலியா | - 077 349 7641 |
| அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை | - 077 374 8155 |
| அநுராதபுரம் | - 077 321 5746 |
| யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா | - 077 335 8305 |

www.tvslanka.lk
www.facebook.com/TVSLanka.lk

காட்சியறை - 077 358 0841

துரித எண் : 0114 600 500

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



கல்வயலூர் அருள்மொழி வள்ளல், யாழ். ரத்னா

**அமரர் வேலுப்பிள்ளை கந்தசுவாமி (J.P)**

(ஓய்வுபெற்ற கால்நடை வைத்தியர், போதனாசிரியர்)

தோற்றம் : 09.03.1935 / மறைவு : 07.07.2017

திதி : 15.07.2019

இரண்டு ஆண்டுகள் சென்றாலும் உங்களின் நினைவுகள் எமது மனதை என்றும் விட்டகலாது.
அன்பிற்கும் பாசத்திற்கும் வரைவிலக்கணமாய் அறிவின் சிகரமாய் உயர்ந்து நின்ற அன்புத்தெய்வத்தின் ஆன்மா சாந்தியடைய எந்நாளும் இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் மற்றும் சகோதர, சகோதரிகள்.

Tel : 077 5530302

## மணமகள் தேவை

சைவ கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த லண்டனில் வசிக்கும் 37 வயதுடைய (PRஇல்லை) மணமகனுக்கு வெளிநாட்டு குடியுரிமைபெற்ற மணமகளை எதிர்பார்க்கின்றோம்.

**077 430 9651**

## உடன்தேவை

கணினியில் தமிழ், ஆங்கில ரைப்பிங் செய்யக்கூடிய ஆண், பெண் இருபாலாரும் தேவை. தகுதிக்கேற்ப சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். மற்றும் போட்டோ கொப்பி செய்யக்கூடியவர்களும், பழக விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளவும்.
(மேலதிக விவரங்களுக்கு நேரில் வரவும்)
இராமநாதன் வீதி, திருநெல்வேலி
(யாழ். பல்கலைக்கழகம் அருகில்)

**077 223 1147**

## STUDY in SWEDEN

\+ குடியுரிமை பெறுவதற்கான வாய்ப்பு

- O/L தகைமை போதுமானது
- IELTS தேவையில்லை

குடும்பத்துடன் சென்று படிப்பதற்கான வாய்ப்புப் பெற்றுத்தரப்படும்.

படிக்கும் காலத்திலேயே குடியுரிமை பெறும் வாய்ப்பு

Admissions will be open in September 2019 DIPLOMA DEGREE LEVEL

**NW SKYLINE INTERNATIONAL (PVT) LTD** ☎ 077 33 47 332
22 Srimahabodhi Road, Dehiwala

## பெயர்மாற்றம்

கிளிநொச்சி விநாயகர்புரத்தை சேர்ந்த **பலசிராமன்** ஆகிய நான் இன்று முதல் எனது பெயரை **பரசுராமன்** என மாற்றம் செய்வதோடு இனிவரும் எல்லா ஆவணங்களிலும் பரசுராமன் என்றே கையொப்பமிடுவேன் என இலங்கை சோசலிச ஜனநாயக குடியரசுக்கு அமைவாக உறுதிப்படுத்துகின்றேன்.

**பரசுராமன்.**

## கனடாவில்

குடும்பத்துடன் குடியேறுவதற்கான விசா

**Migrate to Canada with Family**

Marketing, Advertising, Pharmacist... etc
எத்துறையிலாவது 3 வருட அனுபவமுள்ளவர்களா?
அல்லது / BSc. or MSc. முடித்துள்ளீர்களா?
ஆம் எனில் கனடாவில் குடும்பத்துடன் இலகுவாக குடியேற எம்மைத் தொடர்புகொள்ளுங்கள்.

வரையறுக்கப்பட்ட விண்ணப்பங்கள் மாத்திரமே

**NW SKYLINE INTERNATIONAL COLLEGE (PVT) LTD** ☎ 077 33 47 332
22 Srimahabodhi Road, Dehiwala

## மாடி வீடு வாடகைக்கு

வவுனியா வைரவப் புளியங்குளம் பகுதியில் அரச, தனியார் நிறுவனங்களுக்கு மாடி வீடு வாடகைக்குண்டு.

**076 391 9271**

## Canada STUDENT VISA

### VISIT VISA
பல்வேறு சந்தர்ப்பங்களில் கனடா சென்று வருவதற்கான Visit Visa ஏற்பாடுகளை செய்து தருபவர்கள்.

### TOURIST VISA
தனியாகவோ, குடும்பத்தினருடனோ கனடாவிற்கு உல்லாசமாக சென்றுவர Tourist Visa ஏற்பாடுகளை செய்து தருபவர்கள்.

### SPONSOR LETTER
கனடாவிலிருந்து Sponsor Letter ஏற்பாடுகள் செய்து தருபவர்கள்.

### BUSINESS VISA
உங்கள் வர்த்தகத்தினை மேலும் பெருக்கும் நோக்கத்துடன் கனடா சென்று வர Business Visa ஏற்பாடுகளை செய்து தருபவர்கள்.

### WITHOUT IELTS
குறைந்த கட்டணம்
Every Month Intake


AVAILABLE COURSES
- Business Administration
- Computer Service Technician
- Community Service Worker
- Web Designing
- Project Administration
- International Business Administration
- International Hospitality Management etc...

flex Institute
6A, Parakumba Place, Colombo 06.
flexinstitute04@gmail.com
www.flexinstitute.lk
Flex Institute
Hotline: 0777- 761 346

## இலகு கழிவுநீர் சுத்திகரிப்பு முறைமை

**COMPACT SOLUTION FOR SEWAGE & WASTEWATER TREATMENT**

மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் அங்கீகரிக்கப்பட்டது




**Everpure Hi-Tec (Pvt) Ltd.**
No.581, K.K.S Road, Jaffna. (மனோகரா சந்திக்கு அருகாமையில்)
HOTLINE: 075 331 3310
Tel: 021 222 6888

## ஆறாம் மாதத்தில் நினைவு பகிர்கின்றோம்

எமது இசையாசிரியர் கழக அங்கத்துவ ஆசிரியையான **திருமதி வசந்தகுமாரி அமுதபாலன்** அவர்களின் கணவர்

### சண்முகம் அமுதபாலன்

அவர்கள் 26.01.2019 சனிக்கிழமை இறைபதமடைந்தார். அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது அழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்

**யா/ கல்வி வலய இசையாசிரியர் கழகம்**

## கண்ணீர் அஞ்சலி



பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின்
ஆயுள்வேத மருந்து கலவையாளர்
**திருமதி மதிவதனி தேவசீலன்**
அவர்களின் பாசமிகு தந்தையார்

### விநாசித்தம்பி மகாலிங்கம்

அவர்கள் இறைபதமடைந்தார். அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஊழியர் நலன்புரி சங்கம்**
**பச்சிலைப்பள்ளி பிரதேச சபை**

(N 10679) (14.17)

## 10ஆம் ஆண்டு நினைவு




தோற்றம் 20 . 05 . 1965
மறைவு 14 . 07 . 2009

### பரலோகநாதன் செல்வராணி (கலா)

ஐயிரண்டு ஆண்டுகள் ஆனதம்மா
நீங்கள் எம்மை விட்டு சென்று - இன்றும்
எம்மனம் தவிக்கின்றது உங்கள்
நினைவுகளில்
மண்வெட்டி பிடித்து காய்த்து போன கைகள்
கழுத்து வலிக்க பனங்காய் சுமந்து
பனாட்டு, பனங்கிழங்கு, புழுக்கொடியல்
என்று பருவங்கள் தோறும் உழைத்திட்ட போதும்
என்றும் சலித்துக் கொண்டதில்லை.
மனதின் கவலைகளை காட்டியதுமில்லை
எமக்காய் பட்ட கஸ்டங்கள் ஏராளம்
எமக்கு தந்தையுமானவர் - உங்கள்
முகம் பார்த்து மடிசாய முடியாமல்
தவிக்கின்றோம்...

**தாய், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,**

## மரண அறிவித்தல்



### விநாசித்தம்பி மகாலிங்கம்

முகமாலை மடத்தடியைப் பிறப்பிடமாகவும் மீசாலை கிழக்கினை வசிப்பிடமாகவும் கொண்ட விநாசித்தம்பி மகாலிங்கம் 11.07.2019 வியாழக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் தவமணியின் அன்புக் கணவரும், மதிவதனி (பச்சிலைப்பள்ளி பிரதேச சபை - பளை), அருள்லிங்கம் (கனடா), பிரதீபன் (இத்தாலி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தேவசீலன், தேவதர்சினி, பகீரதி ஆகியோரின் அன்பு மாமனும், சரண்ஜன், அரிகரன், டேனுஜா, நிவேதா, யனுஷன், முகிலன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.07.2019) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மீசாலை கிழக்கு,**
**மீசாலை.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

**077 347 3005, 077 667 5669**

## உடல் எடை குறைய வேண்டுமா?

◎ எடை கூடுகிறதா?
◎ வயிறு, மார்பு குறைய வேண்டுமா?
◎ உடல் எடை குறைகிறதேயில்லை என்கின்ற கவலையா?

**பால்மா குளிசை**

15 நாள்களில் அற்புத மாற்றத்தை உணர்வீர்கள்.

## தலைமுடி நீளமாக வளர வேண்டுமா?

➤ தலைமுடி வளரவேண்டுமா? ➤பேன், பொடுகு தொல்லையா? ➤முடிகொட்டுகிறதா? ➤இளநரையா? ➤தலையிடியா? முடி அடர்த்தி இல்லையா? ➤புதிதாக முடி முளைக்க வேண்டுமா?
➤பொன்னாங்காணி? கரிசலாங்காணி, இலாமிச்சை வேர், கருவேப்பிலை, வல்லாரை, நெல்லி சேர்த்துக்காய்ச்சிய எண்ணெய் குளிசை
இந்த எண்ணையைப்பாவித்து பயனடைய

**077 210 6155 221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.**

## S.K. Broking. DS/ NAL / 1442

### வீடுகள், காணிகள் விற்பனைக்கு உண்டு

எம்மிடம் கல்வியங்காடு சந்திக்கு அண்மையில் **2 1/4** பரப்புக் காணியுடன் புதிய வீடும் மற்றும் **உரும்பிராய், அரியாலை, இருபாலை** ஆகிய இடங்களிலும் வீடுகள் விற்பனைக்கு உண்டு. மற்றும் காணிகள் **கோப்பாய் இராச வீதி, நல்லூர். கல்வியங்காடு, அரியாலை, உரும்பிராய், கொக்குவில், திருநெல்வேலி கலாசாலை வீதி** ஆகிய பகுதிகளில் விற்பனைக்கு உண்டு.

**விற்க விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளலாம்.**

**தொடர்பு:- 077 193 3490**
**077 461 3884**

## மரண அறிவித்தல்

### திருமதி சரஸ்வதி பேரம்பலம்



பிறப்பு 08.03.1954
இறப்பு 09.07.2019

நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும், இல.528, பொன்னகரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி பேரம்பலம் 09.07.2019 காலமானார்.

அன்னார் பேரம்பலத்தின் அன்பு மனைவியும், காலஞ் சென்றவர்களான ஐயம்பிள்ளை - வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் - வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மருமகளும், விஜயதர்சினி, நர்மதா (ஆஸ்திரேலியா), கஜந்தன், லாவண்யா (யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், கோவிந்தராசா, முரளிதரன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமியாரும், சஞ்சயன், சாரலன், காருண்யா, விசால் ஆகியோரின் அம்மம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.07.2019) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பாலியாறு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.528,**
**பொன்னகர்**

(CS/)(14.17)

தகவல்:
**குடும்பத்தினர்.**

**0773593766**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 02 . 05 . 1934
ஆண்டவன் அடியில் 25 . 06 . 2018

### திருமதி சிவப்பிரகாசம் பராசக்தி

(புங்குடுதீவு, 4ஆம் வட்டாரம்)

திதி:- 14.07.2019

ஆண்டு ஒன்று ஆனாலும் ஆறாதம்மா எம்துயரம்
விழிகளின் ஓரம் வடிந்த துளிகளின் ஈரம்
காயவில்லை இன்னும்...
எம்மை நீ சுமந்த காலம் போய் - இன்று
உன் நினைவுகளை சுமக்கின்றோம் நாம்...
நிஜமாக இருந்த நீங்கள் நினைவாகப் போனதேனோ....?
என்றும் உங்கள் நீங்கா நினைவலைகளோடு
உங்கள் ஆத்மா சாந்திபெற பிரார்த்திக்கின்றோம்.

**குடும்பத்தினர்.**

## வீடு வாடகைக்கு

கொக்குவில் கிழக்கில் Medical Facultyக்கு அண்மையில் புதிதாக நிர்மாணிக்கபட்ட 4அறைகளையும், 2குளியலறைகளையும் கொண்ட வீடு ரூபாய் **25,000/=** மாதாந்த கட்டண அடிப்படையில் வாடகைக்கு உண்டு.

**076 243 0394**

## அறைகள் வாடகைக்கு

கொக்குவில் கிழக்கில் Medical Facultyக்கு அண்மையில் புதிதாக நிர்மாணிக்கபட்ட 4அறைகளையும், 2குளியலறைகளையும் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.
வாடகை:-**25,000/=**
(Prefer University Female Students)

**021 221 2255**

## போட்டோகொப்பி மெசின் விற்பனைக்கு

றொசிபா 256, 257, 306 (Black and White) ரிக்கோ கலர் மெசின் 2050, 2051 (Recondition)
ஆலடிச்சந்தி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

(CS 26631)(14.17)

**076 025 3714**

## வீடு விற்பனைக்கு

அரியாலை குகன் றோட்டில் இரண்டு பரப்புக் காணியும், வீடும் விற்பனைக்கு உண்டு.

(cs. 23473) (14.17)

**021 222 9065**

## வீடு விற்பனைக்கு

தெல்லிப்பழை வீதி, வட்டுக்கோட்டை தபாலகத்துக்கு அருகில் 2 பரப்பில் அமைந்த காணியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.

**076 080 3636**

## நாகபூஷணி திருமண சேவை

மிகப் பொருத்தமான மணமக்கள் ஜாதகங்கள் உடன் தரப்படும்.

**257, பலாலி வீதி, கந்தர்மடம் யாழ்ப்பாணம்.**
**021 222 9306, 077 138 7596**

## தேவை

இரத்மலானையில் இயங்கும் பாமசி ஒன்றுக்கு அனுபவமுள்ள பாமசி வேலையாள்கள் தேவை. கூடிய சம்பளம் வழங்கப்படும்.

**071 514 7798**

## விற்பனைக்கு

பருத்தித்துறை வீதி, இருபாலைச்சந்திக்கு மிக அருகாமையில் நிலபரப்பு 2 வீட்டுடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:
**077 903 9066, 076 291 1261**

## கடை விற்பனைக்கு

யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதியில் ஸ்ரான்லி வீதிக்கு அருகாமையில் கடை விற்பனைக்குண்டு. அலுவலகத்திற்கோ அல்லது வியாபாரத்திற்கோ உகந்தது.

(ACO 445) (14.17)

**தொடர்பு: 076 742 3639**

## மணமக்கள் தேவை

கனடாவில் நிரந்தரமாக வசிக்கும் 23 வயது முதல் 40 வரையான நற்தொழில் புரியும் படித்த மணமக்களுக்கு, Christian, Hindu, Catholic மதங்களில் வரன்கள் எதிர்ப்பார்க்கின்றோம்.

தொடர்புகளுக்கு:-
**0112 363663 / 0117 221674**

## றெஸ்ரோரன்ற் ஒன்றுக்கு வேலையாள்கள் தேவை

**கொழும்பு 2 இல் அமைந்துள்ள றெஸ்ரோரன்ற் ஒன்றுக்கு சமையலறை உதவியாளர்கள், பரிமாறுபவர்கள்** தேவை.
ஹோட்டலில் அனுபவமுள்ளவர்கள் / பழக விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளலாம்.

**070 333 7133**

## பெயர்மாற்றம்

இளவாலை சேந்தாள்குளத்தில் வசிக்கும் மேரிறோஸ்மலர் ஆகிய எனது பெயரை இன்றுமுதல் மேரிறோஸ் எனப் பெயர்மாற்றம் செய்ய உள்ளதை இத்தால் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத்தருவதுடன் இன்றிலிருந்து சகல ஆவணங்களிலும் மேரிறோஸ் என கையொப்பம் இடுவேன் என்பதை அறியத்தருகின்றேன்.

மேரிறோஸ்

## ஆங்கிலக் கல்வி

இளைப்பாறிய ஆங்கில ஆசிரியரால்
வீடு வந்து கற்பிக்கப்படும்.
தரம்: 05 முதல் தரம் 12 வரையும்
பேச்சு ஆங்கிலம் - சர்வதேச
பாடசாலை மாணவர்களுக்கு
அனைத்து தரப்பினருக்கும்
வீடு வந்து கற்றுத்தரப்படும்.

**077 334 2392**

## St.Mary's Feeds (Pvt) Ltd.க்கு
### வியாபார முகவர் தேவை

St.Mary's Feeds (Pvt) Ltd.க்கு உரித்தான பொயிலர்ஸ் கோழி குஞ்சுகள், மற்றும் பொயிலர்ஸ் உணவு வகைகள், விற்பனைக்கான விற்பனை முகவர்கள் இணைத்துக்கொள்ள உள்ளனர்.



தொடர்புகளுக்கு
சரத் த சில்வா (முகாமையாளர்)
077 883 9513
071 693 5178




விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com,
021 493 1111
உதயன்

# MASSIVE VEHICLES AUCTION SALE



**18th of July**

LOLC VEHICLE FACILITY CENTRE
NO.363, MANNAR ROAD, VEPPANKULAM

## VAVUNIYA

Thimothi - 0766 58 23 29
Nelum - 0245 11 81 81

On View - 15th, 16th & 17th July

(Please refer the Udayan On 15th of July 2019 For the Full List Of Vehicles)

LOLC FINANCE

SCHOKMAN & SAMERAWICKREME
One Country, One Auctioneer. Celebrating 127 Years of Service Excellence.

Head Office & Showroom
24, Torrington Road, Kandy.
Tel: 081 2237593,
Fax: 081 2224371
Email: schokmankandy@sltnet.lk

City Office & Showroom:
No.6A, Fairfield Gardens, Colombo 8.
Tel: 011 2502680, 2585105,
Tel / Fax: 011 2588176
Email: schokman@samera1892.com

Web: www.sandslanka.com



# மரண அறிவித்தல்



## கந்தையா சிவானந்தன்
(Textile Technologist)

மலேசியாவைப் பிறப்பிடமாகவும், சுழிபுரம் மற்றும் தற்போது லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சிவானந்தன் 10.07.2019 புதன்கிழமை அதிகாலை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா பத்மாவதி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தளையசிங்கம் தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், ரஞ்சினியின் அன்புக் கணவரும், ஆனந்தியின் அன்புத் தந்தையும், குமரனின் அன்பு மாமனாரும், சியா, சேயன் ஆகியோரின் அன்புப் பேரனும், கனகாம்பிகை, சிவப்பிரகாசம், காலஞ்சென்ற சிவகுருநாதன் மற்றும் ஞானாம்பிகை, யோகாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் மற்றும் குஞ்சிதலீலாவதி, சத்தியபாமா, காலஞ்சென்றவர்களான சுந்தரேஸ்வரன், பாலகுமார் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 21.07.2019 ஞாயிற்றுக்கிழமை Surrey & Sussex Crematorium, London இல் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: ரஞ்சினி மனைவி (UK)**
**00447792994439**
**த.சிறீராஜ் - மைத்துனர்**
**லயன் த. ஜெயராஜ் - மைத்துனர்**
**077 945 2605**

கோண்ணப்புலம்
மல்லாகம்

# மரண அறிவித்தல்

| அன்னை மடியில் | இறைவன் அடியில் |
|---|---|
| 10 | 09 |
| 08 | 07 |
| 1946 | 2019 |



## அமரர். சிவஞானம் சிவானந்தன்
(ஓய்வு பெற்ற முகாமையாளர் சந்தைப்படுத்தல் திணைக்களம் - யாழ்ப்பாணம்)

உரும்பிராய் வடக்கு திருவீதியை பிறப்பிடமாகவும், கொழும்பு விகாரைலேன் வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. சிவஞானம் சிவானந்தன் அவர்கள் 09.07.2019 அதிகாலை சிவபதமடைந்தார். அன்னார் காலஞ்சென்ற சிவஞானம் - இராசம்மா தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரனும் , காலஞ்சென்ற செல்வநாயகம் - ஜானகி தம்பதியினரின் பாசமிகு மருமகனும், காலஞ்சென்ற கலாமணி (உப அதிபர்- உரும்பிராய் R.C வித்தியாலயம்) அவர்களின் பாசமிகு கணவரும், சிவப்பிரியன் (பிரதேச செயலகம் தெஹிவளை), சிவப்பிரசாந் (திறந்த பல்கலைக்கழகம் நாவல - முகாமைத்துவ கற்கைநெறி) அவர்களின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற கனகரட்ணம் - சிவஞானவதி தம்பதியினரின் அன்பு மருமகனும் ஆனந்த லக்ஷமியின் (ஆனந்தி) அருமைக் கணவரும், ஞானரட்ணம், ஞானமலர், ஞானமணி, சிவலிங்கம், சிவபாலன், காலஞ்சென்ற சிவகுமார் அவர்களின் பாசமிகு சகோதரனும் - பாலசிங்கம் காலஞ்சென்ற சிவபால சுந்தரம்பிள்ளை, மகேந்திரன், லலிதாம்பிகை, ஜமுனா, செந்தாமரை, செல்வ விநாயகர், மஹாலக்ஷ்மி, மகேந்திரரட்ணம், சண்முகநாதன் (கனடா) அவர்களின் அருமை மைத்துனரும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 14.07.2019 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11.30 மணிக்கு கல்கிசை மஹிந்த மலர்ச்சாலையில் இடம்பெற்று தகனக்கிரியைகளுக்காக கல்கிசை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

**பார்வையிடும் நேரங்கள்**
**சனிக்கிழமை – காலை 10.00 மணிமுதல் – மாலை 5.00 மணிவரை.**
**ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிமுதல்**

தகவல் 0776724520
குடும்பத்தினர் 0755082096

# தொழில்சார் கற்கை நெறிகள்

## புதிய பிரிவுகள் ஆரம்பம்

- Ms Office
- Web Design
- DTP
- Hardware
- Mobile Phone Repairing
- CCTV Repairing
- Diploma in IT
- Diploma in Marketing Management,
- Diploma in English

பதிவுகளுக்கு : **DTPE Campus**
இல.925, K.K.S ரோட்
(தட்டாதெருச்சந்தி அருகாமை) யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு : **077 6351865/021 468 0964**

**IVETA (USA)** - சர்வதேச தொழிற்கல்வி மற்றும் பயிற்சி சங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டது.

(J 9045)(4.17)

# WTL CAMPUS (Jaffna, Colombo)

யாழ்ப்பாணம், கொழும்பில் அமைந்துள்ள எமது நிறுவனத்தில் பணிபுரிவதற்கு பின்வரும் வெற்றிடங்கள் உள்ளன. எமது நிறுவனம் Youth empowerment project, Skills Development மற்றும் Professional Education போன்ற திட்டங்களை அறிமுகப்படுத்தவுள்ளது.

1. Center Co - ordinator (ஆண்/பெண்)
2. **திட்ட உதவியாளர்** (ஆண்/பெண்)
3. Secretary (பெண்)
4. **விரிவுரையாளர்கள்** (ஆங்கிலம்/கணினி/Tourism and Hospitality/ Nursing Assistant/Child care/Automobile Engineering)
5. **வெளிக்கள உத்தியோகத்தர்கள்** (ஆண்/பெண்)

நேர்முகப்பரீட்சை 18/07/ 2019 நடைபெறவுள்ளதால் தங்களின் விண்ணப்பங்களை **iipm2666@gmail.com** என்ற மின்னஞ்சல் முகவரிக்கு உடன் அனுப்பவும்.

**WTL Campus/ WTL Group**
**391. Negombo Road, Welisara.**

# தொழில்சார் கற்கைகள் நிறுவனம்
## திருநெல்வேலி, யாழ்ப்பாணம்



*Top up Degree*
*- Fast Track Degree Programme*
*2019/2020 (One Year)*

- *BA in English*
- *B.sc in Psychology*
- *B.sc in Nursing*
- *B.sc in Engineering*
- *BA in Tamil*
- *BA in Education*
- *BA in Fine Arts*
- *B.sc in Computer Science*
- *BBA in Management*

**தகைமைகள்**

01. க.பொ.த (சா/த), (உ/த) தகைமைகள்
02. *NVQ, HND* அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்

குறிப்பு :
- Diploma in Research Methodology, Diploma in SPSS, e-views விரிவுரைகள் ஆரம்பமாகின்றன.
- அலுவலகத்தில் விண்ணப்பப்படிவத்தினை பெற்று விண்ணப்பித்தல் வேண்டும்

- G.C.E(O/L) ➡ Foundation Diploma ➡ Degree
- Classes ones a week
- Class room/online Education
- Every Year Convocation

ஆரம்பம் : **20.07.2019**

**UGC Approved**

**Register**
SMS your Name + Address & Course name to 077 602 1794 to get more details/Discount

தொடர்புகட்கு -
முகாமைத்துவ நிர்வாக சபை
தொழில்சார் கற்கைகள் நிறுவனம்
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
021 450 8489, 077 602 1794
*Email - degreeinfo08@ gmail.com*

# கண்ணீர் அஞ்சலி



புனித அன்னாள் ஆலய முன்னாள் பங்குத்தந்தை ஆகிய

## அருட்தந்தை ஜேம்ஸ் பத்திநாதன்

அவர்களின் மறைவுச் செய்தியை அறிந்து கண்ணீர் அஞ்சலி செலுத்துவதோடு யாழ். மறைமாவட்டத்திற்கும், அன்னாரின் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம். ஜேசுவின் சீடத்துவ வாழ்வை தன்னகத்தே கொண்டு மண்ணுலக வாழ்வில் வாழ்ந்து காட்டியவர். ஏழைகள், பெற்றோரை இழந்த பிள்ளைகளுக்கு நல்ல தந்தையாகவும் வாழ்ந்தவர்.

**புனித அன்னாள் ஆலயம், மானிப்பாய்**
**பங்குத்தந்தையும், பங்கு மக்களும்**

## காணி விற்பனைக்கு
பிறவுண் றோட் கல்வாரி சேர்ச்சுக்கு அருகில் உள்ள லேனில் 5பரப்பு காணி விற்பனைக்கு.
**076 702 3565**

## விற்பனைக்கு
சில்வர் குத்துவிளக்குகள், இரும்பு மேசைகள், டிபிறிசர், கூலர் (Bottle Coller) குளிரூட்டி (A.C) Conferanse Table (கொன்பிரன்ஸ் மேசை)
**077 284 0234**

## தேவை
அறை பராமரிப்பாளர் பெண் தேவை.
சிறிய விடுதி ஒன்றிற்கு
சம்பளம் : 12000/=
**077 735 2165**

## வீடு காணி விற்பனைக்கு
கொக்குவில் கிழக்கு பிரம்படி லேன் கொக்குவிலில் 2பரப்பு காணியில் அமைந்த புதிய வீடு விற்பனைக்கு உண்டு.
**076 702 3565**

## விற்பனைக்கு
உணவகத்துக்குரிய டிபிறிஜ், றொட்டி காஸ் அடுப்பு, பெரிய காஸ் அடுப்பு, Yamaha சபாரி மோட்டார் சைக்கிள், பெரிய கோழிக்கூடு விற்பனைக்குண்டு.
**Mob: 077 375 5429**

## வீடு நாள் வாடகைக்கு
வெளிநாட்டிலிருந்து குடும்பமாக வருவோர் தங்குவதற்கு ஏற்ற சகல வசதிகளையும் கொண்ட புதிய வீடு நாள் வாடகைக்கு உண்டு.
**077 633 3000**

## காணி விற்பனைக்குண்டு
திருநெல்வேலிக்கு அண்மையில் 1பரப்பு காணி உடன் விற்பனைக்குண்டு.
தொடர்புகட்கு : ரகு (076 862 3621)

## வீடு வாடகைக்கு உண்டு
யாழ். சுண்டுக்குளி, பஸ்ரியன்சந்தி, மக்கள் வங்கிக்கு அருகாமையில் இருவர் OR மூவர் அடங்கிய குடும்பம் வசிப்பதற்கு உகந்த பகுதியளவான வீடு (Annex) தனியான சமையலறை, Toilet வசதியுடன் வாடகைக்கு உண்டு.
**T.P - 071 305 5791**

## காணி விற்பனைக்கு
சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலைக்கு அருகாமையில் தாமோதரம்பிள்ளை வீதியில் (A9 வீதியில் இருந்து 30 மீற்றர் தூரத்தில்) பயன்தரு மரங்கள், கிணற்றுடன் கூடிய 4 பரப்பு 4 குழி காணி விற்பனைக்கு உண்டு
தொடர்புகளுக்கு:
**077 3761375, 00447930322336**

## தேவை
யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள எமது கட்டட ஒப்பந்த நிறுவனத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் வேலை செய்யக்கூடிய **மேசன்,** பெயின்ரர் (Mason & Painter) மற்றும் நாள்கூலி மேசன், கூலியாள்கள் தேவை:
தொடர்புக்கு:- **076 316 5734**
**077 592 5371**

# ES Printers

அனைத்தும்
தனித்துவமான
கணினி வடிவமைப்புடன்



021 492 7471,
021 492 7472
esprintersjaffna@gmail.com
357, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

# வடக்கு மாகாணத்தில் வேண்டும் 'சின்தற்றிக்'

## ஆர்வலர்கள் எதிர்பார்ப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 14

காற்பந்தாட்டம், துடுப்பாட்டம் போன்றவற்றில் மட்டுமல்லாமல் தேசியமட்ட தடகளப் போட்டிகளிலும் படிப்படியாக பிரதிநிதித்துவத்தைப் பெற ஆரம்பித்துள்ளது வடமாகாணம். ஆனால் 100 மீற்றர், 200 மீற்றர், 400 மீற்றர் போன்ற குறுந்தூர ஓட்டப்போட்டிகளில் தேசியத்தில் வடக்குக்குப் பதக்கம் கிடைப்பதென்பது மிக அரிதான விடயமாகவும் நிறைவேறாத கனவாகவும் உள்ளது - என்று விளையாட்டு ஆர்வலர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

**எப்போது வரும் சின்தற்றிக்**

உயரம்பாய்தல், கோலூன்றிப் பாய்தல், தடைதாண்டல்போன்றவற்றில் வடபகுதி வீரர், வீராங்கனைகள் சாதித்துக் கொண்டிருக்கிறார்கள். யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் கடந்த வாரம் நடைபெற்ற தடகளத் தொடரும் இதற்குத் தகுந்த சான்றாக அமைந்தது. ஆனால் குறுந்தூர ஓட்டங்களில் தேசியத்தில் பதக்கங்கள் கிடைக்காமை என்ற காரணம் என்று அலசி ஆராய்ந்தால் முதன்மைக் விடயமாக அமைவது சின்தற்றிக் (செயற்கை ஓடுதளம்) இல்லாதமை என்பது அம்பலமாகும்.

தேசியமட்டப் போட்டிகள் சின்தற்றிக் ஓடு பாதையிலேயே நடைபெறுகின்றன. ஆனால் வடபகுதி வீரர், வீராங்கனைகள் தமது பயிற்சிகளை கற்களுக்குள்ளும், புற்களுக்குள்ளுமே மேற்கொள்கின்றனர். அவர்களின் பயிற்சிக்கான வாய்ப்புக்கள் குறிப்பிட்ட எல்லைக்குள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. பயிற்சி மேற்கொள்வது மட்டுப்படுத்தப்பட்ட வசதிகளுடனான சூழ்நிலையிலும் அரங்கேற்றம் நடைபெறுவது கண்ணால் கண்டிராத ஓர் அரங்கிலும் என்றால் குறுந்தூர ஓட்டங்களில் வடக்கு வீரர், வீராங்கனைகளின் கனவுகள் எவ்வாறு மெய்ப்படும்?

இதில் சிரிப்புக்குரிய விடயம் என்னவென்றால், சில வீரர், வீராங்கனைகள் தேசியமட்ட போட்டிகளுக்காகச் செல்கின்ற போதுதான் சின்தற்றிக் ஓடுதளங்கள் என்றால் என்ன என்று அறிந்து கொள்கிறார்கள். தமது போட்டிகளுக்கான நேரத்தில்தான் சின்தற்றிக்கில் கால் பதிக்கிறார்கள். இந்த நிலைமை மாற்றம் பெறவேண்டும் என்றும் மக்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

**மக்கள் பிரதிநிதிகள் கவனம் கொள்வார்களா?**

சின்தற்றிக் தொடர்பில் வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான கடந்த தடகளத் தொடரில் சிலர் கருத்துத் தெரிவித்தமையைக் காணக்கூடியதாக இருந்தது.

எமது வீரர், வீராங்கனைகளுக்கான பிரதிநிதிகள் அரசின் கைக்கூலிகளாகவும் பத்திரிகைகளின் புகைப்படங்களுக்கு முகம் கொடுப்பவர்களாகவும் இராது அவர்களின் தேவைகளை உயர்மட்டத்துக்கு எடுத்துச் சென்று,

எடுத்துக்கூறி அவற்றை நிறைவேற்ற வேண்டும்.

இந்திய அரசின் நிதி உதவியுடன் யாழ். துரையப்பாவிளையாட்டரங்கு அண்மையில் மறு சீரமைப்புச் செய்யப்பட்டு ஒப்படைக்கப்பட்டது. வடிகால் அமைப்புக்கள், மின்னொளி வசதிகள், குளிரூட்டப்பட்ட அறைகள், புற்தரைகளின் பராமரிப்பு என்பன சிறப்பாக அமைந்துள்ளன. மைதானம் சீரமைத்துத் தரப்பட்டமை மிகமிக பாராட்டப்பட வேண்டியதொன்று. ஆனால் புனரமைப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கும் போது பன்னாட்டு தரத்திலான மைதானமே அமைக்கப்படும் என்று அறிக்கைவிடப்பட்டது. முதன்மைக் கட்டுமானத் திட்டங்க ளில் ஒன்றாக சின்தற்றிக் குறிப்பி டப்பட்டது. ஆனால் தற்போதுவரை துரையப்பாவில் சின்தற்றிக் இல்லை.

பன்னாட்டுத் தடகளத் தொடர்களில் புற்களுக்குள்தான் குறுந்தூர ஓட்டம் நடைபெறுகிறதா? மைதானம் தரப்படும்போது முதுகை வளைத்து கரத்தைக்கூப்பி வாங்கிவிட்டார்கள் எம்மவர்கள். தடகளத்துக்குரிய மைதானம் என்ற வகையில் அந்த மைதானத்தில் ஏதாவது உள்ளதா. நீளம் பாய்தல், உயரம் பாய்தல் போன்றவற்றுக்கான பயிற்சியை வீட்டு முற்றங்களிலும்தான் மேற்கொள்ள முடியும். இவ்வாறான ஓர் அரைகுறைப் புனரமைப்பு நடவடிக்கைக்கு இலங்கை, இந்தியா எனும் இரு நாட்டு அரசுகள் தலையிட வேண்டியதில்லையே - என்று குறித்த தடகளத் தொடரைக் காணவந்தவர்கள் கடும் விசனம் தெரிவித்தமையை அவதானிக்க முடிந்தது.

(ம)

**பணிநிலை வேண்டுகை**

யாழ்ப்பாணத்தில் உள்ள Lovely Flowers Center இற்கு
அனுபவமுள்ள பெண் பணியாளர்கள் உடன் தேவை.

Receptionists / வரவேற்பாளர்
* கணினி அனுபவம் இருத்தல் வேண்டும்
* வயதெல்லை - 21 - 31

077 400 5023, 021 221 4235

සංවර්ධන වාසනාව
அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் ▸ 261
சீட்டிழுப்பு திகதி ▸ 13.07.2019 சிவப்பு

ஆங்கில எழுத்து: T
வெற்றி இலக்கங்கள்: 02 16 64
விதி எண்: 08

எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 11,577,836/=

17.07.2019 ம் திகதி புதன் கிழமை நீலம் நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர்.டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 011 333 546-47 துரித அழைப்பு 0114 824 824 www.dlb.lk

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்:3208 திகதி: 2019.07.13 சனிக்கிழமை
ශනිදා වාසනාව SATURDAY FORTUNE
பச்சை

வெற்றி இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து: 40 49 58 65 U
போனஸ் இலக்கம்: 39
அடுத்த திங்கட்கிழமை ஜக்பொட்: 51,283,245/-

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 668
வர்ணம் : இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2019.07.13
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 69,680,105/-
வெற்றி இலக்கங்கள்: 22 50 64 67
ஆங்கில எழுத்து: B

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

**இதயத்தைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்**

**இதயநாடிகளில் நோய் அன்ஜைனா - மார்பு அடைப்பு**

கொழுப்பு படிவதால் நாளங்கள் சுருங்கி சீரான இரத்த ஓட்டத்தைக் குறைக்கிறது. மேலும் இவை மார்புவலி மற்றும் இதயபாதிப்பு ஏற்படுத்தக் கூடியது.

நெஞ்சடைப்புக்கான காரணிகள்
புகைத்தல், உயர்இரத்தஅழுத்தம்,
அதிக கொழுப்புச்சத்து, நீரிழிவு

நெஞ்சுவலி, மார்படைப்பையும் பூரணமாகக் குணப்படுத்தும் எமது ஆயுர் வேதமருத்துவம் உன்னதமானது. நிரூபணமானது




எங்களால் குணப்படுத்தப்படுகிறது
- இருதயநோய்
- நோய் எதிர்ப்பு சக்தி
- புற்றுநோய் தணிப்பு
- ஈரல் பாதிப்புக்கள்
- மூட்டு வாதம்
- மூட்டுவலி / முதுகு வலி
- புரோஸ்டேற் பிரச்சினைகள்
- ஒற்றைத் தலைவலி
- புழையழற்சி
- மனஅழுத்தம்
- இருமல் / சளி
- படுக்கைப்புண்கள்
- நாட்பட்ட காயங்கள்
- நீரிழிவு நோய்கள்
- வைரஸ் தொற்றுக்கள்
- பாலியல் குறைபாடு
- மண்குஷ்டம்

FAIR PHARMA (PVT) LTD
செலிங்கோ ஹவுஸ், ,10ஆம் மாடி, கிழக்கு.
இல.69 ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு - 01
Website : www.ayurveda.lk
E-mail : fairpharmasrilanka@yahoo.com
Hotline: 077 755 5600 / 077770 8310/ 077 770 8330
Office: 011 438 8200 / 4 388 100/ 4 388 101 /4 388 102
APPROVED BY DEPARTMENT OF AYURVEDA,
ஆயுர்வேத மருத்துவசபை, BIO & ISO 9001:2008
அத்தாட்சிப்படுத்தப்பட்ட நிறுவனம்.

### தென்மராட்சி பிரதேசத்தில்

# மீண்டும் டெங்கு அபாயம்

## சுகாதாரத் திணைக்களத்தினர் எச்சரிக்கை

சாவகச்சேரி, ஜூலை 14

தென்மராட்சி பிரதேசத்தில் கடந்த இரு மாதங்களாக இல்லாமல் காணப்பட்ட டெங்கு பாதிப்பு மீண்டும் தலைதூக்க ஆரம்பித்துள்ளமை சுகாதாரத் திணைக்களத்தினரை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. கடந்த வாரம் ஏழு பேர் டெங்கினால் பீடிக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதை யடுத்து சுகாதாரத் திணைக்களத்தினர் அவற்றினைக் கட்டுப்படுத்தும் செயற்டறிட்டங்களை மேற்கொண்டுள்ளனர்.

இந்த 7 பேரும் புலம்பெயர் நாடுகளிலிருந்து சொந்த இடங்க ளுக்குத்திரும்பியவர்களை அழைத்து வரச் சென்றவர்களெனத் தெரிவிக்கப்பட்டாலும் பிரதேச மக்கள் விழிப்புடன் இருப்பதற்கு அறிகுறியாக டெங்குப் பாதிப்பு உணர்த்தியுள்ளதெனத் தெரிவிக்கப்பட்டது.

அடுத்தடுத்த மாதங்களில் மழை பெய்யும் வாய்ப்புகள் உள்ளதால் தென்மராட்சி பிரதேச மக்கள் தமது குடியிருப்புகள் மற்றும் காணிகளை துப்புர வாக வைத்திருக்குமாறு சுகாதாரத் திணைக்களத்தினர் அறிவித்தள்ளனர்.

சுகாதார திணைக்களத்தின் டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவினரால் பிரதேசத்தில் கடந்த 2016, 2017 ஆகிய ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் பிரகாரம் பிரதேசத்தை அபாயமிக்க டெங்குப் பிரதேசமாக பிரகடனப்படுத்தி யிருந்தனர்.

2015 ஆம் ஆண்டு பெய்த பெருமழை மற்றும் வெள்ளம் வழிந்தோடமுடியாமல் காணப்பட்டதால் 500க்கு மேற்பட்டோர் டெங்கினால் பீடிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளனர். பிரதேச செயலகத்தினர் உள்ளூராட்சி சபையினர் மேற்கொண்ட நடவடிக்கைகளின் பயனாக அடுத்த வருடங்களில் வெள்ளம் தேங்கி நிற்காது வெளியேற்ற வடிகால்கள் அமைக்கப்பட்டிருந்தன.

மத்திய சுகாதார அமைச்சு, மாகாண சுகாதார அமைச்சு, யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணியகம் ,தென்மராட்சி பிரதேச செயலகம், சாவகச்சேரி நகரசபை, சாவகச்சேரி பிரதேச சபை, பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பொது மக்கள் ஆகியோரின் பங்களிப்புடன் மேற்கொண்ட டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளினால் 2018 ஆம் ஆண்டு டெங்கின் தாக்கம் வெகுவாகக் குறைந்தது. 2019ஆம் ஆண்டில் முதல் ஆறு மாதத்தில் டெங்குவினால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 20க்கு குறைவாக காணப்பட்டது.

தற்போது புலம்பெயர் நாடுகளிலிருந்து வருவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால் இவர்களை அழைத்து வர கொழும்புக்குச் செல்வோர் டெங்கு நுளம்பு கடிக்காமல் இருக்க பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளுமாறும், அத்துடன் அடுத்த மாதங்களில் மழை பெய்யக்கூடிய சாத்தியக்கூறுகள் காணப்படுவதால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தமது குடியிருப்புகள் மற்றும் காணிகளைத் துப்பரவாக வைத்திருக்குமாறும் அறிவித்துள்ளனர் .

எமது பிரதேசத்தில் டெங்கு இல்லையே என அலட்சியமாக இருக்காமல் டெங்கு நுளம்புகள் எந்தநேரமும் தாக்கலாமென்ற விழிப்புணர்வு டன் செயற்படுமாறும் அறிவித்துள்ளனர்.

(ஐ-9)

# அபிவிருத்தி செய்யப்படவுள்ளது யாழ்ப்பாணம் கல்லுண்டாய் வீதி

## மரண அறிவித்தல்கள்



பிறப்பு . 09 . 06 . 1930

இறப்பு . 11 . 07 . 2019

### திருமதி சுப்பிரமணியம் இலட்சுமியார்

சுழிபுரம் மேற்கைப் பிறப்பிடமாகவும் சுழிபுரம் மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவசுப்பிரமணியம் இலட்சுமியார் கடந்த (11.07.2019) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியத்தின் மனைவியும், காலஞ்சென்றவர்களான புத்திரர் வள்ளியம்மை தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் சின்னாச்சி தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்றவர்களான நாகமுத்து, செல்லத்துரை, கைராசிப்பிள்ளை, சண்முகம், சேதுப்பிள்ளை, தங்கம் ஆகியோரின் சகோதரியும், இராதாகிருஷ்னன், காலஞ்சென்ற சரோஜா மற்றும் விஜயலட்சுமி, அமிர்தரஞ்சினி, பாலகிருஷ்னன் ஆகியோரின் தாயாரும், கலாவதி, கைலைநாதன், தவயோகராஜா, நாகதர்சினி ஆகியோரின் மாமியாரும், தேனுஜா-தெய்விகன், சிந்துஜா-முகுந்தன், புவிவர்மன், மிதிலா, திவ்வியா, யசோதா, பூஜிதா, அபிஷா, அபிலாஷ் ஆகியோரின் பேர்த்தியும், கிருஷ்ணாவின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.07.2019) திங்கட்கிழமை மு.ப. 8.30 மணியளவில் சுழிபுரம் மத்தியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சுழிபுரம் மத்தி, சுழிபுரம்.** **தகவல் - குடும்பத்தினர்.**



தோற்றம் 04 . 08 . 1927

மறைவு 11 . 07 . 2019

### செல்லையா பொன்னம்மா

யாழ்ப்பாணம் புத்தூரைப் பிறப்பிடமாகவும் அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா பொன்னம்மா 11.07.2019 வியாழக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பொடி - சிதம்பரம் தம்பதிகளின் அன்பு மகளும் வயித்தி - பொன்னு தம்பதிகளின் அன்பு மருமகளும் பாலசுப்பிரமணியம் (மணியம்), கோபாலசிங்கம் (கோபால்), காலஞ்சென்ற சின்னமணி மற்றும் தவமணி, நடராசா(ராசன்), தவராசா (செல்வம் - சுவிஸ்), தர்மலிங்கம் (யோகன் சுவிஸ்), காலஞ்சென்ற சதீஸ்குமார் (குமாரன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்றவர்களான கதிரவேலு, நாகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ் சென்றவர்களான சின்னம்மா வைரமுத்து ஆகியோரின் அன்பு மைத்துனியும் ரஞ்சிதம், இரத்தினம்,இந்திராதேவி, சிவஞானம், லலிதநாயகி, சசிகலா(சுவிஸ்), ராஜினி(சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியும் யாழினி (லண்டன்), நீகன் (பிரான்ஸ்), ராசினி (பிரான்ஸ்), றொசான் (ஜேர்மனி),மதீபன் (ஆஸ்திரேலியா), இந்துநேசன்(சுவிஸ்), குகநேசன்(பிரான்ஸ்), இந்துமலர், கிருஷ்ணசுசி (சுவிஸ்), தவநேசன்(கனடா), காலஞ்சென்ற சுஜீவன் மற்றும் பிரதீசன்(டோகா), சஜீவன்(டோகா), வினோத்(பிரான்ஸ்), கார்த்திகா(கனடா), லாவண்யா(கனடா), அஜந்(சுவிஸ்), நரேன்(சுவிஸ்), சுரேன், டினேஸ், சுகந்(சுவிஸ்), சுஜா(சுவிஸ்), சுவர்ணன்(சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் இந்துஜன், சிந்துஜன், ஆகாஷ், அவனீஸ், ஆதீஷ், திலக்சனா, அபிஷன், நிஸ்வன், நிகிஷா, நிஸ்வியா, கானகன், ஆதித்தன், இலக்கியா, யுனிஸ்வன், ஜெனிஸ்வன், தைசினி, தைசான், நிம்சியா,குளோரியா, ஜெசிக்கா, தஸ்விகா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் அடக்க ஆராதனை நாளை (15.07.2019) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் இல 37/1, மலர்மகள் வீதி, அரியாலையில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இருபாலை கானான் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**37/1, மலர்மகள் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.**

**தகவல்
குடும்பத்தினர்.**

*யாழ்ப்பாணம், ஜூலை 14*

நீண்டகாலமாகக் கடும் சேதங்களுக்கு உள்ளாகிய நிலையில் காணப்பட்ட யாழ்ப்பாணம் பொன்னாலை (ஏபி21) வீதி (கல்லுண்டாய் வீதி) அகலிக்கப்பட்டு அபிவிருத்தி செய்வதற்கு தயாராகியுள்ளது. எதிர்வரும் 21 மாதங்களில் அதனுடைய அபிவிருத்திப் பணிகள் நிறைவுறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அந்த வீதியால் கடும் சிரமத்தின் மத்தியில் இதுவரைகாலமும் அனுபவித்த அவலங்கள் வீதி அபிவிருத்தியின் பின்னர் விலகும் என்று மக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.



**அவலம்**

நாவாந்துறை, காக்கைதீவு, அராலி, வட்டுக்கோட்டைச் சந்தி, பொன்னைலைச் சந்தி, காரைநகர் செல்லும் வீதியில் பொன்னாலைச் சந்திவரை உள்ள சுமார் 13 கிலோ மீற்றர் வீதி நீண்ட காலமாகவே கடும் சேதங்களுக்கு உள்ளாகியிருந்தது. வீதியால் பயணிப்போர் விழுந்து எழும்பிப் பயணம் செய்யும் அவல நிலை தொடர்ந்த வண்ணமேயிருந்தது. போர்க்காலத்தில் இருந்து அந்த வீதி சீரமைக்கப்படவேயில்லை. வீதியில் உள்ள கிடங்குகளுக்கு தற்காலிகமான தீர்வாக தார்க்கலவை போட்டு இதுவரைகாலம் வீதி அபிவிருத்தி அதிகாரசபை சரிசெய்து வந்தது. எனினும் சில நாள்களில் மீண்டும் அந்தக் கிடங்குகள் வெளிவரத் தொடங்கிவிடும். அதில் பயணிகளும் வீழ்ந்து எழும்பிச் செல்லும் சம்பவங்களும் இடம்பெற்றன. குறுகிய அகலமுடைய வீதியாக அந்த வீதி காணப்பட்டதால் கனரக வாகங்கள் பயணிக்கும்போது, அந்த வாகனங்களை சாதாரண உந்துருளிகளே விலத்திச் செல்ல முடியாத சூழல் காணப்பட்டது. சீர்குலைந்த வீதிகளில் பயணிப்பதால் உந்துருளி உள்ளிட்ட வாகனங்கள் கடும் சேதங்களுக்கு உள்ளாகின. இத்தகையதொரு பின்னணியில் அந்த வீதியைச் சீரமைத்து தருமாறு பயணிகள் தமிழ் தலைமைகளிடம் கோரிக்கைகளை முன்வைத்திருந்தனர். அரசியல் தலைமைகளும் வீதி அபிவிருத்திக்காக பல முயற்சிகளை எடுத்திருந்தனர். அரசியல் காரணிகளாலும் வீதியின் அபிவிருத்தி தள்ளித்தள்ளியே சென்றது.

மக்களுடைய அவலங்களைக் கருத்தில் கொண்டு வீதி அகலிக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. வீதியின் அருகில் உள்ள மக்களிடம் பிரதேச செயலகம் காணிகளையும் கோரியிருந்தது. வீதி அளக்கப்பட்டு இருமருங்கிலும் எல்லைக் கட்டைகள் அடிக்கப்பட்டன. இவை நடைபெற்று கிட்டத்தட்ட இரண்டு வருடங்கள் கடந்தன. எனினும் வீதி அபிவிருத்தி ஆரம்பிக்கப்படவேவில்லை. இதனால் தொடர்ந்தும் அவலங்களைச் சந்திக்க வேண்டிய நிலையிலேயே மக்கள் பயணத்தைத் தொடர்ந்தனர்.

**அபிவிருத்திகள் ஆரம்பம்**

யாழ்ப்பாணம் பொன்னாலை (ஏபி21) வீதி மூலோபாய நகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கிட்டத்தட்ட ஆயிரத்து 250 மில்லியன் ரூபா நிதியில் சீரமைக்கப்படவுள்ளது. வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான இந்த வீதியின் சீரமைப்புப் பணிகளை மேற்கொள்ள சீரா எனும் நிறுவனம் ஒப்பந்தம் செய்துள்ளது. வீதி சீரமைப்புக்கான ஆரம்பகட்ட வேலைகள் தற்போது இடம்பெற்றுவருகின்றன. எனினும் எதிர்வரும் மாதமளவில் கண்களால் பார்க்ககூடிய அபிவிருத்திகள் ஆரம்பிக்கப்படும் என்று வீதி அபிவிருத்தி அதிகார சபையின் யாழ்ப்பாணக் கிளையினர் தெரிவித்தனர். எதிர்வரும் 21 மாதங்களில் வீதியின் அபிவிருத்தி முழுமையடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பருத்தித்துறை பொன்னாலை யாழ்ப்பாணம் என்று கரையோர முதன்மைவீதியாக அந்த வீதி காணப்படுவதால் வீதி சீரமைக்கப்பட்ட வுடன் கரையோரப் போக்குவரத்துகளுக்கு மிகவும் சிறந்ததாக அமையும், அத்தோடு காரைநகரில் உள்ள சுற்றுலாத் தலங்களுக்குச் செல்வோரும் அதிகமாக அந்த வீதியையே பயன்படுத்துவார்கள். சுற்றுலாத்துறையை ஊக்குவிக்க வேண்டுமானால் முதலில் அதற்கான பாதை சரியாக அமைய வேண்டும். எனவேஇந்தபெரும்வீதிசீரமைக்கப்பட்டால் மக்களுடைய போக்குவரத்துக்கள் இலகுபடுத்தப்படுவதுடன், வருமானங்களையும் ஈட்டுவதற்கு வழி கிடைக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.

**கவனிக்க வேண்டியவை**

வீதி அகலிக்கப்படும்போது, கைதடி மானிப்பாய் வீதியைப்போன்றில்லாது வீதிகளின் அருகே உள்ள வீடுகளின் எல்லைகள் வீதியில் இருந்த சில மீற்றர் தள்ளி இருக்கும்படி வீதி அபிவிருத்தி செய்யப்படவேண்டும் என்று நலன்விரும்பிகள் தெரிவித்து வருகின்றனர். அப்படி இல்லாததால் சிறு ஒழுங்கைகளில் இருந்து வீதிக்கு வருபவர்கள் திடீரென வீதிக்கு வருவதால் விபத்துக்கள் ஏற்படுகின்றன என்றும், அதேவேளை வீதியின் அருகில் மரங்களை நடுவதற்கும், வேறு கம்பங்களை நடுவதற்கும் வசதியும் அமையும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. அத்தோடு கல்லுண்டாய் வீதியின் இரு மருங்கிலும் நூற்றுக்கும் மேற்பட்ட பனைமரங்கள், வடலிகள் முளைத்து நிமிர்ந்து நிழல் தருகின்றன. அந்தப் பனைமரங்களை அழிக்காது, அதற்கான மாற்று ஏற்பாடுகளைச் செய்து வீதியை அகலிக்க வேண்டும் என்றும் சிலர் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-21)

# தாக்குதலைச் சாதகமாக்கி வடக்கில் இலாபம் பெறும் தென்னிலங்கையர்

## கேட்பதற்கு நாதியற்று வடக்கு மக்கள் பரிதவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 14

கடந்த ஏப்ரல் மாதம் மட்டக்களப்பு மற்றும் தென்னிலங்கையில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களைப் பயன்படுத்தி தென்னிலங்கையைச் சேர்ந்த கல்லுடைக்கும் ஆலைகளின் உரிமையாளர்கள் வடக்கில் கொள்ளை இலாபம் பெறுகின்றனர் என்று பெரும் குற்றச் சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.



அவர்களிடமிந்து கருங்கற்கள், மற்றும் சல்லிகளைப் பெற்று தமது தேவைகளை நிறைவேற்றுவதற்கு வடக்கு மக்கள் பரிதவிக்கின்றனர் என்றும் அதைக் கேட்பதற்கு வடக்கில் மாகாண ஆளுநரோ அதிகாரிகளோ முன்வராதது வேதனைதருகிறது என்றும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

**கட்டுமானங்களின் தேவை வடக்கில் அதிகரித்துள்ளது**

தேசிய வீடமைப்பு அதிகார சபை, மற்றும்இந்திய வீட்டுத்திட்டங்களின் கீழ் பெருமளவு வீடுகள் வடக்கு மாகாணத்தில் கட்டப்பட்டு வருகின்றன. இந்தவீட்டுத்திட்டங்களுக்காகத் தெரிவு செய்யப்படுபவர்கள் பெரிதும் வசதியற்றவர்களாகவும் போரால் பாதிக்கப்பட்டவர்களாகவுமே உள்ளனர். அப்படிப்பட்டவர்களுக்கு 7 லட்சத்து 50 ஆயிரம், மற்றும் 10 லட்சம் ரூபாக்கள் வீடுகளைக் கட்டி ம்டிப்பதற்காக வழங்கப்படுகின்றன. அவையும், பகுதி பகுதியாகவே வழங்கப்படுகின்றன. கட்டடப் பொருள்கள் மற்றும் கூலிகளும் இந்த நிதிக்குள்ளேயே அமைகின்றன. இந்த நிலையில் கடந்த ஏப்ரல் 21ஆம் திகதி இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத்தாக்குதல் வீட்டுத்திட்டப் பயனாளிகளைப் பெரிதும் பாதித்துள்ளது. அரசதிணைக்களங்களில் ஒப்பந்த வேலைகளில் ஈடுபட்டுள்ள கட்டட ஒப்பந்தகாரர்களையும் இந்தத் தாக்குதல் சம்பவம் பெரிதும் பாதித்துள்ளது.

**தாக்குதலின் பின்னரான விலை அதிகரிப்புக்கள்**

தற்கொலைக் குண்டுத் தாக்குதலை அடுத்து கல்லுடைக்கும் ஆலைகளில் வெடிபொருள்களைப் பயன்படுத்தி கல்லுடைப்பதற்கும் தடைவிதிக்கப்பட்டிருந்தது. அவ்வாறு தடைவிதிக்கப்பட்டதால் கருங்கற்கள், சல்லிகளின் விலைகளில் மாற்றங்கள் ஏற்பட்டன. அதிகூடிய விலைக்கு அந்தப் பொருள்கள் கொண்டுவரப்பட்டன. வீட்டுத் திட்டங்களுக்கு உள்வாங்கப்பட்ட பயனாளிகள் குறித்த காலத்துக்குள் வீட்டைக் கட்டிமுடிக்க வேண்டிய சூழ்நிலையில் அதிக விலைகொடுத்து கற்களைப் பறிக்க வேண்டிய நிலைக்கு ஆளாகினர். கட்டட ஒப்பந்தக் காரர்களும் நெருக்கடியைச் சந்தித்தனர். தாக்குதல் சம்பவத்துக்கு முன்னர் 35 ஆயிரம் ரூபாவுக்கு பறிக்கப்பட்ட முக்கால் இஞ்சி கருங்கல் சல்லி, தாக்குதல் சம்பவத்தின் பின்னர் 41ஆயிரம் ரூபாவாக்கப்பட்டது.

23 ஆயிரம் ரூபாவுக்கு பறிக்கப்பட்ட ஒரு டிப்பர் கருங்கல் தாக்குதலின் பின்னர் 30 ஆயிரம் ரூபாவுக்கு மேல் விற்பனை செய்யப்படுகின்றது. இவ்வாறான விலையேற்றங்களால் மக்கள் பரிதவிக்கின்றனர்.

வடக்கு மாகாணத்தின் வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களிலேயே கல்லுடைக்கும் ஆலைகள் உள்ளன. அந்த ஆலைகள் தென்னிலங்கையைச் சேர்ந்தவர்களாலேயே நடத்தப்படுகின்றன. வடக்கு மாகணத்தின் வளங்களை அதியுயர் விலைக்கு வடக்கு மக்களுக்கே விற்று அதன்மூலம் தென்னிலங்கையைச் சேர்ந்தவர்களே கொள்ளை இலாபம் அடைகின்றனர். ஆனால் குறைந்த பணத்தில் வீடுகளைக் கட்ட ஆரம்பித்தவர்கள் மூலப்பொருள்களுக்கே அதிக நிதியை ஒதுக்கி, வீட்டை முழுமை செய்யமுடியாது பரிதவிக்கின்றனர்.

**கட்டுமானப் பொருள்களின் விலையில் மாற்றமில்லை**

குண்டுத் தாக்குதலின் பின்னர் வெடிவைத்து கல்லுடைப்பதற்கு அனுமதியளிக்கப்பட்டது. இருந்த போதும், கற்கள், சல்லிகளின் விலைகளில் எந்த மாற்றங்களும் ஏற்படவில்லை.

உயர்ந்தது உயர்ந்ததாகவே உள்ளது. இது மக்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. வீட்டின் ஒரு பகுதி கட்டி முடித்தவுடன் குறிப்பிட்ட பணத்தையே பொறுப்பான அதிகாரி மக்களுடைய கணக்குகளுக்கு வைப்பிலிடுகிறார். எனினும் அந்தப் பணத்துக்கு மேலதிகமான பணத்தைச் செலவு செய்தே மூலப் பொருள்களுக்கான பணத்தை வழங்கவேண்டியுள்ளது என்று மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பம்பற்றி யாரிடம் முறையிடுவது என்ற குழப்பதில் இருப்பதாகவும் மக்கள் தெரிவித்தனர். வடக்கு மாகாண மக்களின் வாழ்வில் ஒளியேற்றுவதற்காகவே இறைவன் தன்னை அனுப்பினார் என்று தன்னைப் புகழ்ந்து தள்ளும் ஆளுநர், இந்த விடயத்தில் வாய்மூடியிருப்பது சந்தேகம் கொள்ளவைக்கிறது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கல்லுடைக்கும் ஆலைகளை வைத்திருப்பவர்கள் தென்னிலங்கையர் என்பதால், அவர்கள் தென்னிலங்கை அரசியல் செல்வாக்குமிக்கவர்கள் என்பதால் ஆளுநர் இவ்வாறு நடந்துகொள்கிறாரா என்று எண்ணத்தோன்றுகிறது என்றும் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதேவேளை நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக கட்டட மூலப்பொருள்களான அனைத்து வகைக் கற்கள் மற்றும் மணல் என்பற்றைப் பெற்றுக் கொள்வதில் ஒப்பந்தக் காரர்களுக்கு ஏற்பட்ட சிக்கல்களால் கட்டட ஒப்பந்தங்களை உரிய தவணையில் நிறைவுபடுத்த முடியவில்லை என்று கட்டட ஒப்பந்தகாரர்களும் தெரிவித்துள்ளனர்.

ஒப்பந்தகாரர்களுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடிகளைச் சுட்டிக்காட்டி வடக்கு மாகாண கட்டட நிர்மானிகள் சங்கத்தினர் வடக்கு மாகாண ஆளுநர் உள்ளிட்ட அதிகாரிகளுக்கு அண்மையில் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்திருந்தனர்.

எனவே பாமர மக்களுடைய நலன்களில் அக்கறை கொண்டு, அவர்கள் மேலும் கடன்படாது, தங்களுடைய வீடுகளைக் கட்டிமுடித்து நிம்மதியாக வாழ்வதற்காக இவ்வாறு அதிக விலையில் விற்பனை செய்யப்படும் கற்கள் மற்றும் கட்டட மூலப் பொருள்களின் விலைகளை நியாயமான முறையில் நிர்ணயிக்க வேண்டும் என்றும் கொள்ளை இலாபமீட்டும் கல்லுடைக்கும் ஆலை உரிமையாளர்களுக்கு கட்டுப்பாட்டை விதித்து மக்களுக்கு நியாயமான விலையில் கற்கள் மற்றும் சல்லிகளை வழங்கக் கோர வேண்டும் என்றும் கோருகின்றனர் மக்கள். (ம-21)

## நாவற்குழியில் புதனன்று விலங்கு விசர் தடுப்பூசி!

தென்மராட்சி, ஜூலை 14

கைதடி நாவற்குழி பிரதேச வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் தடுப்பூசி மருந்து ஏற்றும் பணிகள் எதிர்வரும் புதன்கிழமை ஆரம்பமாகுமென சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தினரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரதேசத்தின் ஏனைய பகுதிகளில் வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசி மருந்து ஏற்றியபோது மக்கள் ஆதரவு வழங்கியதைப்போல கைதடி- நாவற்குழிப் பிரதேச மக்கள் தமது வளர்ப்பு நாய்களை ஒலிபெருக்கி மூலம் அறிவிக்கப்படும் நிலையங்களுக்குகொண்டு வந்து தடுப்பூசி மருந்தை ஏற்றிக் கொள்ளுமாறும் ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ம-9)

## மின்தடை அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 14

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக வடக்கின் பல பகுதிகளில் மின் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி நாளை திங்கட்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை யாழ்ப்பாண மாவட்டத்தில் காளி கோவிலடி, வதிரி, தேவரையாளி, திக்கம், சித்திவிநாயகர், மனோகரா, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, உடுப்பிட்டி வாசிகசாலை, வல்லை, பொக்கணை, கெருடாவில், தொண்டமானாறு, செல்வச்சந்நிதி, வளலாய், மயிலியதனை, சிதம்பராக்கல்லூரி ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## மடு மாதா ஆலயத்துக்கு அடிக்கல்

யாழ்ப்பாணம், ஜூலை 14

இளவாலை வாழ்வகம் மடு மாதா ஆலயத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு கடந்த 6 ஆம் திகதி மாலை 5 மணிக்கு வலிதூண்டல் பங்கு தந்தை அருட்பணி பி.டினேசன் தலைமையில் நடைபெற்றது.

ஆலய அருட்பணி சபையின் செயலாளர் ஏ.கே.கிறிஸ்டோபரின் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்வில் விருந்தினர்களாக இளவாலை மறைகோட்ட குரு முதல்வர் அருட்பணி யேசுரட்ணம் மற்றும் தமிழ் அரசுகட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய மாவை சேனாதிராஜா, வலி.வடக்கு பிரதேச சபை தவிசாளர் சோ.சுகிர்தன், பிரதேச செயலக அலுவலர்கள், ஜே/222 அபிவிருத்தி அலுவலகர் திருமதி அன்ரன் சதீஸ்வரி உட்பட மடுமாதா பக்தர்கள் கலந்து கொண்டனர். இந்த ஆலய கட்டடத்துக்கான கட்டுமான பணிக்கு ஆரம்ப கட்டமாக கிராம எழுச்சித் திட்டம் ஊடாக 5 லட்சம் ரூபாவை நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா ஒதுக்கியிருந்தார். (ஐ)



## தமிழக மீனவர்கள் நால்வர் விடுதலை

யாழ்ப்பாணம், ஜூலை 14

தமிழக மீனவர்கள் நால்வரை விடுதலை செய்யுமாறு ஊர்காவற்றுறை நீதிமன்றம் உத்திரவிட்டுள்ளது.

கடந்த ஜூன் மாதம் 27 ஆம் திகதி இராமேஸ்வரத்தில் இருந்து மீன்பிடிக்க வந்திருந்த நான்கு மீனவர்களை இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன் பிடித்ததாகக் கூறி கைதுசெய்தனர்.

குறித்த மீனவர்கள் மீது வழக்குப் பதிவு செய்து ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் முற்படுத்தினர்.

குறித்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதிபதி யூட்சன் மீனவர்களை விடுதலை செய்யுமாறு உத்திரவிட்டார். (ஐ-ரி3)

# பன்னாட்டு விசாரணை கோரி மட்டக்களப்பில் போராட்டம்!

கொழும்பு, ஜூலை 14



வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதியைப் பெற்றுத்தர பன்னாட்டு விசாரணை கோரி வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்கள் மட்டக்களப்பில் கவனவீர்ப்புப் போராட்டத்தை நேற்று சனிக்கிழமை மேற்கொண்டனர். மட்டக்களப்பு காந்திபூங்காவுக்கு முன்னால் இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகள் தொடர்பில் இதுவரையில் அரசு எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும், தொடர்ந்து தம்மை அரசு ஏமாற்றி வருகின்றது எனவும் ஆர்ப்பாட்டக்காரர்களினால் கோசங்கள் எழுப்பப்பட்டன.

இறுதிப் போரின்போது தமது பிள்ளைகளைக் கைகளினால் படையினரிடம் வழங்கிய போதிலும் இதுவரையில் அவர்கள் தொடர்பில் எந்தப் பதிலும் வழங்கப்படவில்லை எனவும் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்கள் தெரிவித்தனர்.

இன்று தமது பிரச்சினைகள் குறித்து பேசுவதற்கு யாரும் முன்வருவதில்லை எனவும், தம்மை அனைவரும் கைவிட்டதாக தாங்கள் உணர்வதாகவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் மேலும் கூறினர்.

(ஒ.5.22)

# 8 உணவக உரிமையாளருக்கு பருத்தித்துறையில் தண்டம்

பருத்தித்துறை, ஜூலை 14

பருத்தித்துறையில் பிழையான முறையில் உணவு கையாண்ட 8 உணவு கையாளும் நிலையங்களுக்கு ஒரு லட்சத்து 45 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது பருத்தித்துறை நீதிமன்று. ஒரு உணவகத்தை மூடுமாறும் பொதுச் சுகாதார பரிசோதகர்களுக்கு உத்தரவிடப்பட்டது.

பருத்தித்துறை பிரிவு 11 இல் உள்ள உணவு கையாளும் நிலையங்களில் பொதுச் சுகாதார பரிசோதகர்களால் நடாத்தப்பட்ட திடீர் பரிசோதனையின் போது பிழையான உணவு கையாண்ட நிலையங்களுக்கு எதிராக பொதுச் சுகாதாரப் பரிசோதகர். இ.ஜென்சன் றொனால்டினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

உணவுப் பொருள்களின் பேணவேண்டிய வெப்ப நிலையின் கீழ் பேணாது காலாவதியாக திகதியை வலிதற்றதாக்கியமை பதனிழந்த உணவுப் பொருள்களை விற்பனைக்கு வெளிக்காட்டியது, இரசாயன பொருள்களை உணவுப் பொருள்களுடன் சேர்த்து களஞ்சியப்படுத்தியமை, ஏனைய பிராணிகளால் மாசடையக்கூடியவாறு உணவுப் பொருள்களை களஞ்சியப்படுத்தியமை,

புகைப்பொருள் உற்பத்திகளை உணவுப் பொருள்கள் மாசடையக்கூடிய வகையில் களஞ்சியப்படுத்தியமை, பிழையான சுட்டுத் துண்டிடல், தனிநபர் சுகாதாரம் பேசாது உணவுப் பொருள்களை கையாண்டமை, திகதி காலாவதியான உணவுப் பொருள்களை விற்பனைக்காக காட்சிப்படுத்தியமை, சுத்தப்படுத்தும் விதிகளின்படி உணவுப் பொருள்களை கையாண்டமை உள்ளிட்ட 29 குற்றச்சாட்டுகளுடன் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

குற்றச்சாட்டுக்களை நிலைய உரிமையாளர்கள் ஒப்புக் கொண்டதையடுத்து நீதிமன்றத்தில் தண்டம் விதிக்கப்பட்டதுடன் ஒரு உணவகத்தை சீல் வைக்குமாறு உத்தரவிட்டதையடுத்து பொது சுகாதார பரிசோதகர்களால் உணவத்துக்கு சீல் வைக்கப்பட்டது.

(எ-9)

## கீடும்...

சம்புத்தி சுமண விகாரை நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது. தெற்கிலிருந்து எடுத்து வரப்பட்ட தாதுவும், விகாரையில் வைக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் நாவற்குழியில் போருக்குப்பின்னர் மேற்கொள்ளப்பட்ட முதலாவது சிங்களக் குடியேற்றத்தில் மிகப் பெரியளவில் அமைக்கப்பட்ட சம்புத்தி சுமண விகாரையில் புண்ணிய திருவிழா நேற்று இடம்பெற்றது.

இந்த விகாரைக்கான புனித தாது குருநாகல் நெவகட செல்கிரி விகாரையிலிருந்து யாழ்ப்பாணம் வந்திருந்தது. நாவற்குழிச் சந்தியிலிருந்து விகாரை அமைக்கப்பட்டுள்ள இடத்துக்கு பௌத்த மதமுறைப்படி, தீப் பந்தம், பௌத்த கொடி, ஆலவட்டங்களுடன், பிக்குகளின் தலைமையில் புனித தாது பவனியாக கொண்டு செல்லப்பட்டது. சிங்கள பாரம்பரிய முறைப்படி பவனி இடம்பெற்று, புண்ணிய திருவிழா நடைபெற்றது.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாண மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் தர்சன ஹெட்டியாராச்சி உள்ளிட்ட இராணுவ அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள் என்று பெருமளவிலான பாதுகாப்பு தரப்பினர் கலந்து கொண்டிருந்தனர். அதே போன்று பெருமளவிலான சிங்கள மக்களும் பல இடங்களிலில் இருந்தும் வந்திருந்தனர். இதற்கும் மேலாக அதிகளவிலான பிக்குகளும் இந் நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர்.

(ஒ.5.106)

## விடுவிக்கப்படாத...

ஒன்று அமைக்கும் பணி முன்னெடுக்கப்பட்டுள்ளது. அது விகாரையை ஒத்ததாக இருப்பதாக நேரில் பார்வையிட்ட மக்கள் தெரிவிக்கின்றனர். தனியார் காணியை ஆக்கிரமித்து பிரமாண்டமான முறையில் அந்த விகாரை அமைக்கப்பட்டு வருவதாக அவர்கள் குறிப்பிட்டனர்.

வலி.வடக்கில் நேற்றுமுன்தினம் 27 ஏக்கர் காணி, இராணுவ ஆக்கிரமிப்பிலிருந்து மீளளிக்கப்பட்டது. விடுவிக்கப்பட்ட காணிகளை மக்கள் உடனேயே சென்று பார்வையிட்டனர். விடுவிக்கப்படாமல் இராணுவத்தினரின் ஆக்கிரமிப்பில் உள்ள தனியார் காணி ஒன்றில் மிகப் பிரமாண்டமான முறையில் கட்டடம் அமைக்கும் பணியில் இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர். அவர்கள் அமைக்கும் கட்டடம் விகாரையை ஒத்ததாக இருப்பதாக மக்கள் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்தில் போருக்குப் பின்னர் நாவற்குழியில் இடம்பெற்ற முதலாவது சிங்களக் குடியேற்றத்தில் கட்டப்பட்ட விகாரை நேற்றுத் திறந்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(ஒ.5.21.26)

## கிளிநொச்சி...

நேருக்கு நேர் மோதியதில், சிறிய ரக வாகனத்தைச் செலுத்திச் சென்ற சாரதியே விபத்தில் உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் குறிப்பிட்டனர். டிப்பர் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

(ஒ.5.6)

## காங்கேசன்துறையில்...

சிப்பாயும், தரையிறங்குவதற்காக அருகிலிருந்த மின்கம்பத்தை உதவிக்குப் பிடித்துள்ளார். இதன்போது மின்சாரம் தாக்கி அவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த கடற்படைச் சிப்பாயின் இறப்பு விசாரணையை, யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார்.

(ஒ.5.105)

## மக்களைக்...

பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு எதிராக நாம் வாக்களித்தோம் அதனைத் தோற்கடித்தோம். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

அரசுக்கு எதிராக சமர்ப்பிக்கப்பட்டிருந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 14 நாடாளுமன்ற உறுப்பினர்களினதும் எதிர்ப்பால் தோற்கடிக்கப்பட்டது. கூட்டமைப்பின் இந்த நடவடிக்கை தொடர்பில் அதன் தலைவர் இரா.சம்பந்தன் 'உதயன்' பத்திரிகையிடம் கருத்துத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நம்பிக்கையில்லாத் தீர்மானம் மூலம் ஒரு அரசு தோற்கடிக்கப்பட்டால் இன்னொரு அரசு ஆட்சிக்கு வரும். அப்படியானால் தற்போதைய நிலைமையில் எந்த அரசு ஆட்சிக்கு வரும் என்று எமக்கு நன்றாகத் தெரியும். அந்த அரசு கடந்த காலத்தில் ஆட்சி செய்த அரசாகத்தான் உள்ளது. அந்த ஆட்சியில் தமிழர்களுக்கு நன்மைகள் ஏற்பட்டதா? அல்லது தீமைகள் ஏற்பட்டதா? என்பதை நாம் சிந்தித்துப் பார்த்தோம்.

அந்த அரசின் ஆட்சியில் தமிழர்கள் வார்த்தைகளில் சொல்ல முடியாத துயரங்களை அனுபவித்தார்கள்.

தமிழ் மக்களை அடிமைப்படுத்தி துன்புறுத்திக் கொடூரமான முறையில் கொன்றழித்தவர்கள் மீண்டும் ஆட்சிக்கு வர நாம் இடமளிப்பதா? மீண்டுமொரு சர்வாதிகார நாசகார ஆட்சிக்கு நாம் ஒத்துழைப்பதா? இதனைக் கருத்தில்கொண்டுதான் தற்போதைய அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு எதிராக நாம் வாக்களித்தோம் - அதனைத் தோற்கடித்தோம்.

தற்போது ஆட்சியிலுள்ள அரசு மீது எமக்கும் எமது மக்களுக்கும் நம்பிக்கையில்லை. இந்த அரசு மீது பல விமர்சனங்கள் உள்ளன. எனினும், கடந்த அரசைவிட இந்த அரசு எமது மக்களுக்கு சில நன்மையளிக்கும் கருமங்களைச் செய்து வருகின்றது.

அதேவேளை, எமது மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என்பதில் இந்த அரசின் தலைமை உறுதியாக உள்ளது. சில விடயங்களைத் தீர்த்துவைப்பதாக இந்த அரசின் தலைமை எமக்கு நேரில் உறுதிமொழிகளைத் தந்தது.

இன்னமும் ஒரு வருடத்துக்குள் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ளது. அதற்குள் இந்த அரசின் ஊடாக தமிழர் நலன் சார்ந்த கருமங்களை செய்து முடிக்க வேண்டும். இதனையும் கருத்தில்கொண்டுதான் இந்த அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை தோற்கடித்தோம் என்றார்.

(ஒ.5.22)

## மீண்டும்...

வெளிநாட்டு ஊடகத்தின் கொழும்புச் செய்தியாளருக்கு வழங்கிய செவ்வியிலேயே மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த அரசை எவராலும் கவிழ்க்கவே முடியாது. மீண்டும் இந்த நாட்டை நாசம் செய்ய எவருக்கும் நாம் இடமளிக்க மாட்டோம். எந்தத் தேர்தல் நடைபெற்றாலும் நாமே வெல்வோம். இது ஜனநாயக நாடு.

இந்த நாட்டில் மீண்டுமொரு காட்டாட்சியை தமிழ் மக்கள் விரும்பவில்லை. அதனால்தான் அவர்களின் பிரதிநிதிகளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எம் மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு எதிராக வாக்களித்தார்கள்.

தமிழ் மக்களின் தேவைகளை நாம் பூர்த்தி செய்வோம். வடக்கு, கிழக்கில் எமது அபிவிருத்தி வேலைகள் துரிதகதியில் நடைபெறுகின்றன.

சிங்களவர்கள், தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள் என்று மூவின மக்களும் இந்த நாட்டில் ஒற்றுமையாக வாழ வேண்டும். இனவாதிகளின் கருத்துக்களுக்கு நாட்டு மக்கள் செவிசாய்க்கக்கூடாது. ஏப்ரல் 21 தாக்குதல் போன்று இனி மேலும் ஒரு தாக்குதல் இந்த நாட்டில் இடம்பெற நாம் இடமளிக்கமாட்டோம் - என்றார்.

(ஒ.5.22)

## கூட்டமைப்பு...

யாது. அதனால்தான் கூட்டமைப்பின் 14 உறுப்பினர்களும் ரணிலின் தலையை மீண்டும் காப்பாற்றியுள்ளனர். இவ்வாறு தெரிவித்தார் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுக்கும் முடிவில்தான் அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் வெற்றி, தோல்வி தங்கியுள்ளது என்று நான் ஏற்கனவே தெரிவித்திருத்தேன். அதற்கமைய எல்லாம் நடந்து முடிந்துள்ளது.

தீர்மானம் தொடர்பில் ரணிலுடன் அவரின் செல்லப்பிள்ளைகளான கூட்டமைப்பினர் பல தடவைகள் பேச்சுகள் நடத்துவது போல் பாசாங்கு செய்துவிட்டு அவரின் தலையை மீண்டும் காப்பாற்றிவிட்டனர்.

தீர்மானத்தை கூட்டமைப்பினர் எதிர்ப்பார்கள்என்றுதான் நாம் நினைத்திருந்தோம். அதன்படி அவர்கள் செய்துள்ளார்கள். அவர்களை நாடாளுமன்றத்துக்கு அனுப்பிய தமிழ் மக்கள் இது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். தீர்மானம் தோற்றாலும் இந்த அரசு கவிழ்வது உறுதி. அது விரைவில் நடக்கும் - என்றார்.

(ஒ.5.22)

## தமிழ்க்...

என்றே கூற வேண்டும்' எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

(ஒ.5)

## சிவசக்தி...

ளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனுக்கும் வழங்கப்பட்டுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சி அரசின் இந்த நிதி ஒதுக்கீட்டில், நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் சமர்பித்த திட்டங்களுக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

2018ஆம் ஆண்டு உள்ளூராட்சிமன்றத் தேர்தல் காலப் பகுதியில், நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது குற்றச்சாட்டு முன்வைத்திருந்தார். 2017ஆம் ஆண்டு இடம்பெற்ற வரவு செலவுத் திட்ட வாக்கெடுப்பில் அரசுக்கு ஆதரவாக வாக்களிக்க கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு 2 கோடி ரூபா இலஞ்சம் வழங்கப்பட்டதாகத் தெரிவித்திருந்தார். அபிவிருத்தித் திட்டத்துக்கே அந்த நிதி வழங்கப்பட்டதாக கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெளிவுபடுத்தியிருந்தனர்.

இந்த நிலையில், ஆளும் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராக நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தொடர்ச்சியாக விமர்சனங்களை முன்வைத்து வருகின்றார். அத்துடன் இந்த அரசை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாதுகாப்பதாகவும் தெரிவித்திருந்தார். கடந்த வியாழக்கிழமை நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மான வாக்கெடுப்பில் சிவசக்தி ஆனந்தன் பங்கேற்றிருக்கவில்லை.

இந்த நிலையில், கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஆட்சியில் ஒதுக்கப்படும் நிதி ஒதுக்கீடு, கூட்டமைப்பில் போட்டியிட்டு அந்தக் கட்சியிலிருந்து வெளியேறிய ஈ.பி.ஆர்.எல்.எவ். நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனுக்கும் கிடைத்துள்ளது.

(ஒ.5.105)

## போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜூலை 14
வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் மாவட்டங்களுக்கு இடையிலான கால்ப் பந்தாட்டத் தொடரில் கிளிநொச்சி மாவட்ட தெரிவு அணி வெற்றி பெற்றது.
நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் மன்னார் மாவட்ட தெரிவு அணியை எதிர்த்து கிளிநொச்சி மாவட்ட தெரிவு அணி மோதியது. ஆட்ட நேர முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் கிளிநொச்சி மாவட்ட தெரிவு அணி வெற்றி பெற்றது. நேற்று சனிக்கிழமை இடம் பெற்ற ஆட்டத்தில் முல்லைத்தீவு மாவட்ட தெரிவு அணியை எதிர்த்து வவுனியா மாவட்ட தெரிவு அணி மோதியது. இதில் முல்லைத்தீவு மாவட்ட தெரிவு அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (23)

*** *** ***

யாழ்ப்பாணம், ஜூலை 14
மன்னார் கால் பந்தாட்டச் சம்மேளத்தினால் நடத்தப்படும் மன்னாரின் முதல்வன் வெற்றிக் கிண்ணத்துக்கான கால் பந்தாட்ட சுற்றுத்தொடரின் ஆட்டங்கள் மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.
இதில் நேற்று நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் எமில் நகர் இருதயநாதர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஸ்ரார் லைன் எருக்கலம்பிட்டி விளையாட்டுக் கழக அணி மோதியது.
இதில் 3:0 என்ற கோல் கணக்கில் எமில் நகர் இருதயநாதர் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது. எமில் நகர் இருதயநாதர் விளையாட்டுக் கழக அணி சார்பாக ஜோய் 2 கோல்களையும், தம்பா ஓர் கோலையும் பெற்று கொடுத்தனர்.
மற்றுமொரு ஆட்டத்தில் பள்ளிமுனை சென். லூசியா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புனித சவேரியார் கல்லூரி விளையாட்டுக் கழக 'பி' அணி மோதியது. இதில் 2:1 என்ற கோல் கணக்கில் பள்ளிமுனை சென். லூசியா விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது. பள்ளிமுனை சென். லூசியா விளையாட்டுக் கழக அணி சார்பாக உதயன், அசோக் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலை பெற்று கொடுத்தனர். (23)

*** *** ***

யாழ்ப்பாணம், ஜூலை 14
கைதடி மத்தி வளர்மதி சனசமூக நிலையத்தின் 60ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ்ப்பாண மாவட்ட ரீதியாக நடத்தும் கரப்பந்தாட்டத் தொடரில் ஆவரங்கால் இந்து இளைஞன் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.
கழக மைதானத்தில் நேற்று முன்தினம் மின்ஒளியில் இரவு 7.30 மணிக்கு இடம் பெற்ற ஆட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழக 'பி' அணி மோதியது. மூன்று சுற்றுகளைக் கொண்டதாக ஆட்டம் இடம் பெற்றது. இதில் முதலாவது, இரண்டாவது சுற்று ஆட்டத்தை ஆவரங்கால் இந்து இளைஞன் விளையாட்டுக் கழக அணி 25:20, 25:19 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது. (23)

*** *** ***

யாழ்ப்பாணம், ஜூலை14
மற்றுமொரு போட்டி இரவு 8.30 மணிக்கு இடம் பெற்றது. இதில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழக அணி மோதியது. இதில் முதலாவது, சுற்று ஆட்டத்தில் மட்டுவில்மோகன்தாஸ் விளையாட்டுக் கழக அணி சிறப்பாக விளையாடி 28:26 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது. ஆவரங்கால் மத்தி விளையாட்டுக் கழக அணி தனது அனுபவ ஆட்டத்தின் மூலம் இரண்டாவது, மூன்றாவது சுற்று ஆட்டத்தை 25:21, 25:17 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றி வெற்றி பெற்றது. (23)

### உலகக் கிண்ண

# வலைப்பந்தாட்டத்தில் இலங்கை படுதோல்வி



இங்கிலாந்தின் லிவர்பூலில் நேற்று ஆரம்பமான 15ஆவது உலகக் கிண்ண வலைப்பந்தாட்டப் போட்டியில் குழு 'ஏ' இல் இடம்பெறும் இலங்கை அணி தனது முதல் போட்டியிலேயே சிம்பாவேயிடம் 30 கோல்கள் வித்தியாசத்தில் படுதோல்வி அடைந்தது.

16 நாடுகள் பங்குபற்றும் உலகக் கிண்ண வலைப் பந்தாட்டத்தின் இந்தப் போட்டியில் சிம்பாப்வே 79 : 49 என்ற கோல்கள் அடிப்படையில் வெற்றி பெற்றது.
பல்வேறு தவறுகளுக்கு மத்தியிலும் போட்டியின் முதல் மூன்று ஆட்டநேர பகுதிகளில் சிம்பாவேக்கு சவால் விடுத்து விளையாடிய இலங்கை, இறுதி நேர ஆட்டத்தில் தடுமாற்றத்துடன் ஆடியமையே தோல்வியைத் தழுவியது.
இந்தத் தோல்வி குறித்து அணித் தலைவி சத்துரங்கி தெரிவிக்கையில்;
சிம்பாப்வே அணியுடன் சிறப்பாக விளையாட முடியும் என்ற நம்பிக்கையுடனேயே நாங்கள் இந்தப் போட்டியை எதிர்கொண்டோம். எனினும் நேருக்கு நேர் மோதும் போது கடுமையாகப் போராட வேண்டியிருந்தது. எவ்வாறாயினும் பந்துப் பரிமாற்றங்களில் நாங்கள் பல சந்தர்ப்பங்களில் தவறுகளை இழைத்தோம். கோல் போடுவதிலும் அவ்வப்போது தவறுகளை விட்டோம். எங்களது உயரத்தை அனுகூலமாகக் கொண்டு நாங்கள் திறமையை வெளிப்படுத்த முயற்சித்தோம். ஆனால், அவ்வப்போது விட்ட தவறுகளால் ஆட்டம் கைநழுவிப்போனது- என்றார்.
இலங்கை அணி மொத்தமாக 49 கோல்களைப் பெற்றது. இதில் 44 கோல்களை தர்ஜினி சிவலிங்கம் போட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.





யாழ். இளவாலை கன்னியர் மடம் மகா வித்தியாலயம் உடற் பயிற்சி போட்டியில் மூன்றாவது முறையாகவும் மாகாண மட்டத்தில் சம்பியனாக மகுடம் சூடியது.

## டோனி இல்லாதவிடத்து ஆட்டம் முடிவதில்லை

### சச்சின் தெரிவிப்பு

நடப்பு உலகக் கிண்ணத்தில் முதலாவது அரையிறுதிப் போட்டியில் இந்தியா - நியூசிலாந்து அணிகள் மோதின. இதில் நியூசிலாந்து அணி அபார வெற்றி பெற்றது. இந்தப் போட்டியில் டோனி ரன்அவுட் முறையில் ஆட்டமிழந்து வெளியேறினார். அந்த ஆட்டமிழப்பின் பின்னர் டோனி தனது ஓய்வு குறித்து அறிவிப்பார் என்று எதிர்பார்க்கப்பட்டது.
இது தொடர்பாக இந்திய அணியின் முன்னாள் வீரர் சச்சின் தெரிவிக்கையில்;
டோனி பன்னாட்டு கிரிக்கெட் போட்டியிலிருந்து ஓய்வு பெறுவது, அவரது தனிப்பட்ட விருப்பம். அதில், நாம் யாரும் தலையிடக்கூடாது.
அவரது முடிவுக்கு மற்றவர்கள் மதிப்பு தரவேண்டும். அவருக்கான இடத்தைக் கொடுக்க வேண்டும். அனைவரும் அவரவர் யூகங்களை தவிர்த்து விட்டு, டோனி இந்திய அணிக்கு ஆற்றிய பங்களிப்பை எண்ணிப் பார்க்க வேண்டும். அணிக்கு இவ்வளவு பங்களிப்பு செய்த, அவர் தான் முடிவு எடுக்க வேண்டும். இன்னும் மக்கள் அவர் ஆட்டத்தை வெற்றிகரமாக முடித்து தருவார் என நம்புகின்றனர். அவர் வெளியில் இருக்கும் வரை ஆட்டம் முடிவதில்லை -என்றார்.




### ரிசப் பந்த் குறித்து

## பீட்டர்சனின் கருத்துக்கு யுவராஜ் சிங் பதிலடி



இந்திய அணியின் இளம் வீரர் ரிசப் பந்த் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நடப்பு உலகக் கிண்ணத் தொடரின் முதலாவது அரையிறுதியில் ஆட்டமிழந்தமை குறித்து இங்கிலாந்தின் முன்னாள் வீரர் கெவின் பீட்டர்சன் வெளியிட்டுள்ள கருத்துக்கு யுவராஜ் சிங் பதிலடி கொடுத்துள்ளார்.
ரிசப் பந்த் முக்கியமானதொரு போட்டியில் ஆட்டமிழந்த விதம் குறித்து முன்னாள் வீரர்களும் ரசிகர்களும் ஏமாற்றம் வெளியிட்டு வருகின்றனர்.
இதனை கெவின் பீற்றர்சன் கடுமையாக விமர்சித்துள்ளார்.
ரிசப் பந்த்தின் அந்த தேவையற்ற அடியை எத்தனை தரம் நாம் பார்த்திருக்கின்றோம். இதன்காரணமாகவே அவர் அணியில் இணைக்கப்படாமல் இருந்தார் - என்றார்.
இதற்கு இந்திய அணியின் முன்னாள் வீரர் யுவராஜ் சிங் பதிலளிக்கையில்; அவர் புதியவர் தற்போதுதான் பன்னாட்டுப்போட்டிகளில் விளையாடுவது எப்படி என்பதை கற்றுக் கொண்டிருக்கின்றார். அவர் 8 ஒருநாள் போட்டிகளில் மாத்திரமே விளையாடியுள்ளார். இது அவரின் தவறில்லை. அவர் இன்னமும் கற்றுக்கொண்டு முன்னேற்றம் காண்பார் - என்றார்.
இதற்கு பதில் அளித்துள்ள பீற்றர்சன் ரிசப் பந்த் எவ்வளவு சிறப்பான வீரர் என்பதன் காரணமாகவே நான் விரக்தியில் இந்தக் கருத்தை பதிவுசெய்தேன் - என்றார்.

உலகக் கிண்ணத் தொடர்;

# வரலாறு படைக்க போகும் அணி எது?

நடப்பு உலகக் கிண்ணத் தொடரின் இறுதிப் போட்டி இன்று லண்டனில் உள்ள லோர்ட்ஸ் மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இதில் இங்கிலாந்து - நியூசிலாந்து அணிகள் மோதுகின்றன.

**கிரிக்கெட் வரலாற்றில் புதிய சம்பியன்!**

தமது முதல் கிண்ணக் கனவை நனவாக்க இரு அணிகளும் போட்டிபோடும் என்பதில் சந்தேகமில்லை. இரு அணிகளும் வரலாற்றில் கிண்ணம் வென்றதே இல்லை. இதனால் பலத்த எதிர்பார்ப்புக்கு மத்தியில் களமிறங்குகின்றனர். நியூஸிலாந்தைவிட இங்கிலாந்து பலம் பொருந்திய அணியாக இருக்கிறது. ஏனெனில் லீக் ஆட்டத்தில் இங்கிலாந்து அணி நியூசிலாந்து அணிக்கு எதிராக 300 ஓட்டங்களுக்கு மேல் குவித்து நியூசிலாந்து அணியை 186 ஓட்டங்களுக்குள் கட்டுப்படுத்தி அபார வெற்றி பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது. ஆனால் இங்கிலாந்து அணி பாகிஸ்தான், இலங்கை அணிகளிடம் தோல்வியுற்றுறிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

**கிடைத்த சந்தர்ப்பத்தை பயன்படுத்துமா இங்கிலாந்து!**

1992ஆம் ஆண்டுக்குப் பின்னர் இங்கிலாந்து அணி இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளது. பல வருடங்களாக லீக் போட்டியுடன் வெளியேறிய இங்கிலாந்து அணி இறுதிக்குள் நுழைந்துள்ளது. 27 வருடங்களின் பின்னர் கிடைத்த சந்தர்ப்பத்தை அந்த அணி நழுவ விடாது என்பதில் சந்தேகமில்லை. அத்தோடு இந்தப் போட்டி அவர்களின் சொந்த நாட்டில் இடம்பெறுகின்றது. அதனால் கிண்ணம் வெல்லும் வாய்ப்பு இங்கிலாந்து அணிக்கே அதிகமாகக் காணப்படுகின்றது. கடந்த காலங்களை எடுத்துக் கொண்டால் இந்தியா, ஆஸ்திரேலியா அணிகள் போட்டியை நடத்திய போது அவர்களே அதில் வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இங்கிலாந்தின் தற்போதைய அணி மிகப் பலம் வாய்ந்த அணியாகக் காணப்படுகின்றது. அவர்களின் பலமே இறுதி வீரர் வரை துடுப்பெடுத்தாடக் கூடியவர்கள். அத்தோடு ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் ரோய், பெயர்ஸ்ரோ அணிக்கு மிகப் பெரிய அத்திவாரம் இருவரது இணைப்பாட்டத்தை பிரிப்பதில் எதிரணிக்கு மிகப் பெரிய சவால் காணப்படும். இருவரும் களத்தில் நிலைத்து விட்டால் எதிரணியால் ஓட்டங்களைக் கட்டுப்படுத்தவே முடியாது. அத்தோடு மத்திய வரிசையும் பலம் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் தடுமாறினால் மத்திய வரிசை வீரர்கள் ஆட்டத்தின் போக்கை மாற்றக் கூடியவர்கள். பந்து வீச்சசைப் பொறுத்தமட்டில் ஆர்ச்சர் அணியின் முதுகெலும்பு, அவருக்கு பலம் சேர்க்க ரசிட், வோக்ஸ், ஸ்ரோக்ஸ், பிளங்கெட் ஆகியோர் உள்ளனர். இங்கிலாந்தைப் பொறுத்த வரைக்கும் இந்தச் சந்தர்ப்பத்தை தவற விட்டால் இவ்வாறனதொரு சந்தர்ப்பம் மீண்டும் அமைய பல வருடங்கள் ஆகும்.

**பதிலடி கொடுக்குமா நியூசிலாந்து!**

நியூசிலாந்து அணியைப் பொறுத்த வரை துடுப்பாட்டம், பந்து வீச்சு, களத்தடுப்பு எல்லாவற்றிலும் பலம் பொருந்தியவர்கள். அவர்கள் அரையிறுதியில் பலம் வாய்ந்த இந்திய அணியை நிலைகுலையச் செய்து இறுதிக்குத் தெரிவாகியிருக்கின்றனர். இவர்களின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் குப்தில், நிக்கோலஸ் இணை இந்த உலகக் கிண்ண லீக் போட்டிகளில் பெரியளவிலான ஓட்டங்களை எட்டவில்லை. எனினும் அவர்களின் குறையை மத்திய வரிசை வீரர்களான வில்லியம்சன், ரெய்லர், நிசாம் மாற்றக் கூடியவர்கள். பந்து வீச்சைப் பொறுத்தமட்டில் ஹென்றி, போல்ட் எதிரணியின் ஆட்டத்தை தங்களது கட்டுப்பாட்டில் வைத்திருக்கக் கூடியவர்கள். அவர்களோடு கிரான்ஸ்ஹோம், சன்நெர், பிறிகுசன் ஆகியோர் அணிக்கு பலம். ஆனால் இதே வரிசை வீரர்களை உள்ளடக்கிய அணிதான் லீக் போட்டியில் இங்கிலாந்து அணியிடம் வாங்கிக் கட்டியது என்பதும் குறிப்பிடத்தக்கது. லீக் போட்டியின் தோல்விக்கு நியூசிலாந்து அணி பதிலடி கொடுக்குமா? என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

நியூசிலாந்து அணி 2015ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டியிலும் இறுதிக்கு முன்னேறி ஆஸ்திரேலியாவிடம் தோல்வியடைந்தது. இவர்கள் இறுதிக்கு நுழைந்தது இரண்டாவது முறை என்பது குறிப்பிடத்தக்கது. நியூசிலாந்து அணி 8 தடவைகள் அரையிறுதிக்கு தகுதி பெற்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

**ஆசிய ரசிகர்கள் யாருக்கு ஆதரவு!**

எது எப்படி இருப்பினும் ஆசிய நாடுகளின் ரசிகர்களில் இந்திய ரசிகர்கள் நியூசிலாந்து அணி வெற்றி பெற வேண்டும் என்றும், இலங்கை ரசிகர்கள் இங்கிலாந்தின் பக்கமும் தங்களது ஆதரவை தெரிவித்து வருகின்றனர். எது எவ்வாறாயினும் இரு அணிகளும் வரலாற்றில் கிண்ணம் வென்றதில்லை என்பதால் எந்த அணி தோற்றாலும் அவர்கள் பரிதாபமே.

**இங்கிலாந்தில் சூப்பர் சன் டே!**

இந்த ஞாயிறு இங்கிலாந்தில் 'சூப்பர் சன் டே' ஏனெனில் உலகக்கிண்ண இறுதிப்போட்டி, விம்பிள்டன் ஆண்கள் இறுதிப்போட்டி, பிரிட்டிஷ் ஜீபி ஃபார்முலா 1கார்ரேஸ் பந்தயம் என மூன்று முக்கிய போட்டிகள் நடைபெறவுள்ளன.

உலகக் கிண்ண

## இறுதிப் போட்டிக்கான ரிக்கெட் விலை எகிறியது

நடப்பு உலகக் கிண்ணப் போட்டிகள் முடிவுக்கு வருகின்றன. இன்று இடம்பெறும் இறுதிப் போட்டியில் இங்கிலாந்து - நியூசிலாந்து அணிகள் மோதுகின்றன. இந்தப் போட்டிக்கான ரிக்கெட் விற்பனை விலை அதிகரித்துள்ளது என ரசிகர்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

உலகக் கிண்ண கிரிக்கெட் வரலாற்றில் 27 ஆண்டுகளுக்குப் பின்னர் இங்கிலாந்து அணி இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளது. சொந்த மண்ணிலேயே இங்கிலாந்து அணி விளையாட உள்ளதால் உள்ளூர் கிரிக்கெட் ரசிகர்கள் நேரில் காண ஆர்வத்துடன் உள்ளனர். இந் நிலையில் இதனைப் பயன்படுத்தி பலர் மக்களிடம் பணம் பறிக்க முயன்று வருகின்றனர். ஐசிசியின் அதிகாரபூர்வ இணையத்தளப் பக்கத்தில் ரிக்கெட்டுக்கள் விற்கப்பட்டாலும், ஐசிசி அங்கீகரித்த முகவர்களும் ரிக்கெட் விற்பனையில் ஈடுபட்டு வருகின்றன.

இவை ரூ.11 இலட்சம், ரூ.13 இலட்சங்களுக்கு விற்பனை செய்யப்படுகின்றன. இதனால் கிரிக்கெட் ரசிகர்கள் பலரும் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

இதற்கிடையே, ரிக்கெட் மறுவிற்பனையை பொறுத்தவரை தங்களால் அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள் மூலம் மட்டுமே ரிக்கெட்டுக்களை வாங்க வேண்டும் என்றும், அப்படி இல்லை என்றால் மைதானத்துக்குள் அனுமதிப்பதில் சிக்கல்தான் எனவும் ஐசிசி, ரசிகர்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## மீண்டும் அணியில் இடம்பிடிக்க முயற்சி செய்யவில்லை

வில்லியர்ஸ் தெரிவிப்பு



தென்னாபிரிக்கா அணியின் அதிரடி துடுப்பாட்ட வீரர் வில்லியர்ஸ் இங்கிலாந்தில் நடைபெற்று வரும் உலகக் கிண்ணம் வரை விளையாடுவார் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் தென்னாபிரிக்கா மண்ணில் இந்தியா- ஆஸ்திரேலியா அணிகளுக்கு எதிரான டெஸ்ட் தொடரை தென்னாபிரிக்கா அணி கைப்பற்றிய பின்னர் வில்லியர்ஸ் திடீரென கடந்த ஆண்டு தனது ஓய்வை அறிவித்தார்.

அப்போது நீங்கள் ஓய்வு பெறக்கூடாது. உலகக்கிண்ணம் வரை அணியில் நீடிக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கப்பட்டது. ஆனால் டி வில்லியர்ஸ் தனது முடிவை மாற்றிக் கொள்ளவில்லை. உலகக்கிண்ணப் போட்டியில் தென்னாபிரிக்கா அணி 9 ஆட்டங்களில் மூன்றில் மட்டுமே வெற்றி பெற்று லீக் சுற்றோடு வெளியேறியது.

இந்த நிலையில் வில்லியர்ஸ் மீண்டும் அணிக்கு திரும்ப விரும்பினார். ஆனால் அதற்கான கால அவகாசம் இல்லை என்று தென்னாபிரிக்கா கிரிக்கெட் சபை அவரது வேண்டுகோளை நிராகரித்துவிட்டது. இது குறித்து வில்லியர்ஸ் தெரிவிக்கையில்;

உலகக் கிண்ண கிரிக்கெட் தொடருக்கு முன் அவரைத் தொடர்பு கொண்டு நான் பேசினேன். ஐ.பி.எல். தொடரில் நான் ஓரளவுக்கு சிறப்பாக விளையாடினேன். நான் ஓய்வு பெறும்போது அணியில் இருக்க வேண்டும் என்ற கோரிக்கை எழுந்தது. தற்போது அதுபோன்று கோரிக்கை இருந்தால் நான் விளையாடுகிறேன். ஆனால், கோரிக்கை இருந்தால் மட்டுமே என்றேன்.

உண்மையிலேயே நான் கட்டாயப்படுத்தவில்லை. உலகக் கிண்ணத் தொடருக்கு முன் அணியில் இடம் பிடிக்க வேண்டும் என்று முயற்சி செய்தது இல்லை. அணியில் இடம் கிடைக்கும் என்று எதிர்பார்த்ததும் கிடையாது. என்னுடைய பக்கத்தில் இருந்து குற்றம்சாட்ட ஏதுமில்லை - என்றார்.

உலகக் கிண்ண எதிரொலி;

## அணித் தலைவராக ரஷித்கான் நியமிப்பு

நடப்பு உலகக் கிண்ணத் தொடரில் ஆப்கான் அணி எல்லாப் போட்டிகளிலும் தோல்வியடைந்து பரிதாபமாக வெளியேறியிருந்தது.

அந்த அணியின் தலைவராக அஸ்கர் ஆப்கன் தலைமையில் களமிறங்கியது. உலகக் கிண்ணத் தொடர்ஆரம்பமாவதற்கு முன்னரே யாரும் எதிர்பார்க்காத வகையில் அஸ்கர் ஆப்கன் நீக்கப்பட்டு, குல்பதின் நைப் அணித் தலைவராக நியமிக்கப்பட்டார்.

இதற்கு அந்த அணி வீரர் ரஷித் கான் கடும் கண்டனம் தெரிவித்திருந்தார். இந்த நிலையில் ஏற்பட்ட சர்ச்சையால் குல்பதின் நைப் அணித் தலைவர் பதவியில் இருந்து நீக்கப்பட்டார். மேலும் டெஸ்ட் போட்டிக்கான அணித் தலைவராக அறிவிக்கப்பட்டிருந்த ரஹ்மத் ஷாவும் நீக்கப்பட்டார்.

இந்த நிலையில் டெஸ்ட், ஒருநாள் மற்றும் ரி-20 என மூன்று வகை கிரிக்கெட் அணிக்கும் தற்போது ரஷித் கான் அணித் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.




விம்பிள்டன் ரென்னிஸ் தொடர்;

## ஜோகோவிச் - பெடரர் இன்று பலப்பரீட்சை

விம்பிள்டன் ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் ஜோகோவிச் - பெடரர் இன்று மோதுகின்றனர்.

லண்டனில் நடைபெற்று வரும் விம்பிள்டன் கிராண்ட் ஸ்லாம் ரென்னிஸ் தொடர் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது. ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் முதன் நிலை வீரரான ஜோகோவிச் ஸ்பெயினைச் சேர்ந்த பாடிஸ்ட்டா அகுட்டை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.

சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர், ஸ்பெயின் வீரர் ரபேல் நடாலை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறினார். இதன்மூலம் 12ஆவது முறையாக விம்பிள்டன் இறுதிப் போட்டிக்கு பெடரர் முன்னேறியிருக்கிறார். ரோஜர் பெடரர் 8 முறையும், ஜோகோவிச் 4 முறையும் விம்பிள்டன் கிண்ணத்தை வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இரண்டு சிகரங்கள் மோதுவதால் போட்டியில் விறுவிறுப்புக்கு பஞ்சம் இருக்காது.

## ஊரெழு றோயல் அசத்தலாட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 14
உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக்கழகம் நடத்தும் சோபநாத் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.
திருக்குமரன் விளையாட்டுக்கழக மைதானத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து புத்தூர் எவரெஸ்ட் விளையாட்டுக்கழக அணி மோதியது. இதில் 6:0 என்ற கோல் கணக்கில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.
ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணி சார்பாக பிரசன்னா 2 கோல்களையும் கோபன், நிதர்சன், ரகுநாத், தனுசன் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலையும் பெற்றுக் கொடுத்தனர். (23)

## டோனியின் ஆட்டமிழப்பு எங்களுக்கு அதிர்ஷ்டம்

### மார்ட்டின் குப்தில் தெரிவிப்பு

உலகக்கிண்ணத்தில் முதலாவது அரையிறுதியில் டோனியை 'ரன் அவுட்' முறையில் ஆட்டமிழப்பு செய்த குப்தில் தெரிவிக்கையில்;
டோனிக்குப் போடப்பட்ட பந்து என் கையில் வரும் என நினைக்கவில்லை. என்னை நோக்கி வருவதை கண்டு அதனை பிடிக்க தயாராக இருந்தேன்.
பந்து கைக்கு வந்தவுடன் ஸ்டெம்பை நோக்கி வேகமாக வீசினேன். எங்கள் நேரம், அது நேராக ஸ்டெம்பில் பட்டுவிட்டது. இதனால் டோனி 'ரன் அவுட்' ஆனது எங்கள் அணிக்கு அதிர்ஷ்டம் - என்றார்.


**வேலையாள் தேவை**
நல்லூரில் அமைந்துள்ள காட்சியறை ஒன்றுக்கு ஆண் ஒருவர் தேவை.
077 025 6640

**வீடு விற்பனைக்கு/வாடகைக்குண்டு**
யாழ் நகரின் மத்தியில் பஸ் தரிப்பிடத்தில் இருந்து 100m தூரத்தில் பாதுகாப்பான சூழலில் 4¾ பரப்பில் சகல வசதிகளும் கூடிய விசாலமான மேல்மாடி வீடு விற்பனைக்கு அல்லது வாடகைக்கு உண்டு. தரகர் தேவையில்லை.
(IN 10684)(4.17)
076 722 7418

**யாழ்நகரில் இயங்கும் அச்சகம் ஒன்றிற்கு பின்வரும் வேலையாள்கள் தேவை**
* சாரதி
* பணவசூலிப்பாளர்கள்
* பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்
* சுத்திகரிப்பாளர்கள்

ஆர்வம் உள்ளவர்கள் உங்கள் சுயவிவரக்கோவையுடன் 15.07.2019 திங்கட்கிழமை கீழ் உள்ள முகவரிக்கு காலை - 9.30 - பி.ப. 2.00 வரை நேரில் சமுகம் தரவும்.
**ES Printers**
இல.359, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

**மகாராஜா வெளிநாட்டு கார்கோ ஏற்றுமதி சேவை [Cargo]**
250kg/1 CBM க்கு மேல் உங்கள் பொருட்களை விமானம் மற்றும் கப்பல் மூலம் மிகக்குறைந்த கட்டணத்தில் அனுப்ப முடியும்
Door to Port | Port to Port | Door to Door
GTV Express SRI LANKA
எமது விஷேட தன்மைகள்
* சகல ஆவணங்களும் அல்லது அனுமதிப்பத்திரங்களும் பெற்றுத்தரப்படும்.
* வீட்டுத்தளபாடங்கள், கோவில் தேர்கள், கோவில் வாகனங்கள் என்பன ஏற்றிக்கொடுக்கப்படும்.
* இலங்கையின் எப்பாகத்திலும் உங்கள் இடத்திற்கே வந்து சகல விபரங்களும் தரப்படும்.
* விஷேட பொதிகள் சேவை.


இல. 25 கந்தசாமி கோவில் வீதி, வவுனியா 024 4930200
இல. 225 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் 021 4925024/076 6908986

**விஸ்டம் தொழில் நுட்பக் கல்லூரி**
இல63, சிவன் வடக்கு வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். 077 248 7774
2019 தொழினுட்ப மாணவர்களுக்கான
**மாபெரும் விசேட செயலமர்வு**
காலம் : ஜூலை 15 , 16 — காலம் : ஜூலை 19 , 20, 21
தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம் — ICT, விவசாய விஞ்ஞானம், புவியியல், கணிதம்(7), ஊடகக்கல்வி
☆ அனைத்துப் பாடங்களுக்கும் இம்முறை பரீட்சையில் எதிர்பார்க்கும் வினாக்கள் அடங்கிய மாதிரி வினாத்தாள்கள் விடைகளுடன் வழங்கப்படும்.
☆ எதிர்பார்க்கை பாடப்பரப்புக்களின் விடயங்கள் அடங்கிய கையேடுகள் வழங்கப்படும்.
☆ பாடப்பரப்புக்கள் அனைத்தும் துரித மீட்டல் செய்யப்படும். முற்பதிவுகளுக்கு:- ✆077 248 7774

**VACANCIES FOR SECRETARY & RECEPTIONIST**



We are one of the leading Institute in Jaffna. We are looking for a committed and enthusiastic individual with the ability to work independently to join our team.

**Secretary**
* Minimum 1 year experience in similar position
* An excellent command of written and spoken English
* Good knowledge of MS Windows/Excel & e-mails
* The Willingness & eagerness to learn and pursue a career in the future
* Retired secretary also will be considered

**Receptionist**
* Minimum 1 year experience in similar position
* An excellent command of spoken English
* Ability to work under pressure

Those who are interested, Send your CV along with details of two non-related refrees within 7 days to:
jaffnavacancy@gmail.com

**துரித தபால்கள் பொதிகள் சேவை**
DHL மூலம் அனுப்பப்படும் பொதிகள் 3 வேலை நாள்களில் ஒப்படைக்கப்படும்
திருமுருகன் கொம்நெற்
321, K.K.S Road, Jaffna
கிளை: திருநெல்வேலி, நெல்லியடி
077 755 4528

**விசேட கருத்தரங்கு AL/2019**
LOGIC
16/7 செவ்வாய் 9am-3pm
23/7 செவ்வாய் 2pm-6pm
27/7 சனி 9am-2pm
கொழும்பு, யாழ். வளவாளர்கள்.
வளவாளர்கள்: M.W. காண்டீபன் BA, T. மோன்ராஜ் MEd, T. துரை MEd, P. கமல்
நாவலர் கல்வி நிறுவனம்-ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 077 552 6511

**காணி விற்பனைக்கு**
சுன்னாகம் இலவியன் கலட்டியில் 10 பரப்பு வெற்றுக்காணி விற்பனைக்கு உண்டு. தோட்டம் அல்லது வீடு கட்ட உகந்தது.
076 845 9725

**வேலையாள்கள் தேவை**
இருபாலைச் சந்தி டச்சு வீதியில் இயங்கி வரும் கல் அரியும் ஆலைக்கு கல் அரிவதற்கு வேலையாள்கள் தேவை. வாகன சாரதியும் தேவை.
தொடர்புகளுக்கு:
077 4775 158, 077 8575 158

**வேலையாள்கள் தேவை**
ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள வாகன உதிரிப்பாக விற்பனை நிலையத்துக்கு வேலை பழகக்கூடியவர்கள் மற்றும் அனுபவம் உள்ளவர்கள் ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். மற்றும் கணக்கு வேலை தெரிந்தவர்களும் தேவைப்படுகின்றனர்.
076 717 3234, 021 221 4605

**Parcel.lk**
**வெளிநாட்டு பொதிகள் சேவைக்கு முகவர்கள் தேவை**
யாழ் மாவட்டத்தில் உள்ள பிரபல பொதிகள் சேவைகள் நிறுவனமான பார்சல் லங்கா க்கு சேவை முகவர்களை வழங்க எண்ணி உள்ளோம் ஆகையால் உங்கள் பெயர் வியாபாரத்தின் பெயர் முகவரி தொலைபேசி இலக்கம் என்பவற்றை கீழ்காணும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.
agency@parcel.lk

**வேலையாள்கள் தேவை**
நீங்கள் O/L தகைமை உடையவரா?
எமது DNMC நிறுவனமானது தனது புதிய கிளைகளை கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் ஆரம்பிக்கவுள்ளது.
தகைமை இருப்பின் தொடர்பு கொள்ளவும்
வயதெல்லை 18 - 33
தொடர்புகளுக்கு
076 719 4867, 076 459 7725

**வேலையாள்கள் தேவை**
யாழ்.நகரில் உள்ள மணிக்கூட்டு கடைக்குப் பின்வருவோர் தேவை.
❖ கசியர்
❖ விற்பனையாளர் (ஆண், பெண்)
❖ கணினி அறிவுடையவர் - ஆண்
❖ வேலைபழக விரும்புவோர் - ஆண், பெண்
070 304 3633, 070 304 3635

**கார் விற்பனைக்கு**
வங்கி பெண் உத்தியோகத்தரின் பாவனையிலுள்ள Toyota, Premio 2018 உற்பத்தி, CBD - XXXX விலை பேசித்தீர்மானிக்கப்படும்.
077 764 2908

**பணியாளர் தேவை**
எழுதுவினைஞர்
கிளாக்
கணக்காளர்
கேபிள் TV திருத்துனர்
மின்இணைப்பாளர்
சுத்திகரிப்பாளர் (இருபாலாரும்)
தொழிலாளர்
விற்பனையாளர்
(ஹாட்வெயர்அனுபவமுள்ளவர்கள்)
பூச்சாடி / பூக்கல் தயாரிப்பாளர்
வர்ணப்பூச்சாளர்
தொடர்புகளுக்கு
076 079 6075

**ஆடிப் பிறப்பை முன்னிட்டு**
**பனை அபிவிருத்திச் சபையின்**
கற்பகம் விற்பனை நிலையங்களில் தரமான கலப்படமற்ற பனை வெல்லத்தினைப் பெற்றுக்கொள்ள முடியும்.
செவ்வாய்க்கிழமை [16.07.2019] அன்று கற்பக விற்பனை நிலையங்கள் திறந்திருக்கும்




பனை வெல்லத்தினைப் பெற்றுக்கொள்ள நாட வேண்டிய இடங்கள்
★ பருத்தித்துறை வீதி, நல்லூர் ஆலய முன்.
★ இல. 129 D கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
★ பேருந்து தரிப்பிடம். யாழ்ப்பாணம்.
★ இல.645, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சிங்கள மகாவித்தியாலயம் முன்பாக)
★ சாவகச்சேரி வீதி, மந்திகை, புலோலி.
★ இல.67-68 பசார் வீதி, வவுனியா.
★ மதவாச்சி வீதி, மடு, மன்னார் நகரம், மன்னார்




இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 14.07.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.